
கல்கி
மணியம்
KALKI ஏப்ரல் 3. 1955
4 அணா


"லக்ஸ் டாய்லட் சோப்பிலுள்ள புது மணம் எவ்வளவு கவர்ச்சியானது என்று உங்களுக்குத் தெரியுமா?"
— நிகார்
★ சினிமா நட்சத்திரங்களின் சுத்தமான, வெண்மையான, அழகுதரும் சோப் ★
LUX TOILET SOAP
இந்தியாவில் தயாரித்தது.
LTS. 438-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 14 | இதழ் 36 — ஏப்ரல் 3 — ஜய ௵ பங்குனி 21

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸீஸ், 18, ராயப்பேட்டை ஹைரோடு
கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டு: B. பாலபட்டாபி செட்டியார், கோயமுத்தூர்.



240 வியாதிகளுக்குக் கைகண்டது

ஆர். எஸ். பதி மருந்து

(ரிஜிஸ்டர்டு)

இது வீட்டிலிருந்தால் ஒரு டாக்டர் இருப்பது போலாகும்
தலைவலி, ஜலதோஷம், ஜன்னி, வாய்வுக் குத்து, கைகால் வலி, காலரா முதலிய
அநேக வியாதிகளைக் குணமாக்கும்

புட்டி 1-க்கு விலை அணா 10

(தபால் செலவு வேறு)

எச்சரிக்கை: போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். எங்கள் ஆறுமுக முத்திரையையும் டாக்டர் போட்டோவையும் கவனித்துப் பார்த்து வாங்குங்கள்.

P. B. No. 99

ஆர். எஸ். பதி அண் கோ.

(REGD.)

214 & 215, மேல மாசி வீதி : மதுரை

இலங்கை ஏஜண்டு: M. C. A. ஹமீதா அண்டு கோ., 20, டாம் தெரு, கொழும்பு
பர்மா ஸ்டாக்கிஸ்ட்: தேவர் கதம்ப நிலையம், 316, மொகல் வீதி, ரங்கூன்
சிங்கப்பூர் ஸ்டாக்கிஸ்ட்: ஸ்ரீ பகவான் கம்பெனி, 38, மார்க்கெட் தெரு, சிங்கப்பூர்-1
மலேயா ஸ்டாக்கிஸ்ட்: இந்தியன் ஸ்டோர், 43, கேம்ப் ரோடு, போர்ட் சுவட்டன்ஹாம்

மலர் 14 இதழ் 36



தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

விழா முடிந்தது; ஆனாலும்—

நெசவுத் தொழில் விழா முடிந்தது. எல்லாரும் மிக்க மகிழ்ச்சியுடன் கொண்டாடி விட்டார்கள். ஆயினும் நிலைமையை ஆராய வேண்டிய அவசியம் இருந்தே வருகிறது.

கைத்தறிக்காரர்களுக்குள் சரியானபடி கூட்டுறவு இல்லாததால் அவர்கள் கஷ்ட தசையில் இருக்கிறார்கள் என்று, விஷயம் தெரியாத சிலர் எண்ணி வருகிறார்கள். இப்படி அபிப்பிராயப் படுகிறவர்கள் தறிக்காரர்களுக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துத் தந்து விட்டால், அவர்களுடைய குறைகள் தீர்ந்து விடும் என்று கருதுகிறார்கள். நூலை வாங்கும் திறமையிலாவது, துணி விற்கும் சாமர்த்தியத்திலாவது, தொழிலில் சிரமப்படுவதிலாவது கைத்தறிக்காரர்கள் எவ்விதத்திலும் குறைந்துவிடவில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் வைத்து விட்டதனால் இந்தத் துறையில் புதிய நன்மை ஒன்றும் அவர்களுக்கு ஏற்பட்டு விடாது. மில் துணிகளின் போட்டியினால்தான் அவர்களுடைய கஷ்டம். கூட்டுறவுச் சங்கங்களுக்கு, அதாவது மொத்தக் கைத்தறிகளில் மூன்றில் ஒரு பங்குகூட முற்றிலும் அடங்காத கூட்டுறவுக் கைத்தறிச் சங்கங்களுக்குச் சர்க்காருடைய பண உதவி ஏற்பட்டதனாலே மட்டும் சிக்கல் தீராது. தாற்காலிகமாகச் சங்கத்தில் சேர்ந்த கைத்தறிக்காரர்கள் நெய்த துணிகளைச் சங்கத்துக்கு விற்று விட்டு, அந்தத் துணிகள் சங்கத்தில் விற்பனையாகாமல் கிடந்தால் சிக்கல்கள் அதிகமாகிக் கொண்டே போகும். இதுதான் இப்போதைய நிலைமை. ஏராளமாகத் துணிகள் விற்பனை ஆகாமல் சங்கத்தில் தேங்கி நிற்கிறது என்று சொல்லப்படும் குறையைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

சிக்கல் ஒன்றுக்குத் தீரும் வழி ஒன்றைக் கண்டால், அதைத் துணிச்சலுடன் செய்து தீரவேண்டும். வேஷ்டியும் பெண்கள் கட்டும் புடவையும் கைத்தறிக்கு ஒதுக்கி வைத்து விட்டு, மில்கள் இந்தத் இனுசுகளில் பிரவேசிக்காமல் தடை உத்தரவு போட்டுவிட வேண்டும் என்று ராஜாஜி சொன்னதை, விஷயம் தெரிந்தவர்கள் அனைவரும் ஆமோதிக்கிறார்கள். துணிச்சல் இன்மைதான் குறுக்கே நிற்கிறது. சென்னை சட்டசபையில் ஏகோபித்து எல்லாக் கட்சியினரும் வேஷ்டியும் புடவையும் கைத்தறிக்காரர்களுக்கே விட்டுவிட வேண்டும் என்று ஒப்புக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதைச் சென்னை சர்க்காரும் ஒப்புக்கொண்டு வற்புறுத்தினார்கள். இதை மத்திய சர்க்கார் ஏன் செய்யாமல் இருக்கிறார்கள்? மில்காரர்களிடம் சிறு வரி போட்டுப் பணம் சம்பாதித்து, அதைக் கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுத்து, அவர்களைத் திருப்தி செய்வதில் லாபம் ஒன்றும் இல்லை. கூட்டுறவு அதிகாரிகளுக்குத் தங்கள் சங்கங்கள் விருத்தியானதைக் கண்டு சந்தோஷமாக இருக்கலாம். ஆனால் துணி தேங்கித்தான் கிடக்கும். மில்காரர்களைக் கண்டு பயந்தோ அல்லது மொத்தத்தில் தைரியக் குறைவினாலேயோ அல்லது ராஜாஜி சொன்னதை ஏன் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றோ, உறுதியாகக் கண்ட வழி, விஷயந் தெரிந்தவர்கள் அனைவரும் ஒப்புக் கொள்ளும் வழி,—அதைச் செய்யாமல் இருப்பது தவறு. கோடிக்கணக்கான மக்கள்-குடும்பங்களின் நன்மைக்கும் அன்புக்கும் அவசியமான ஒரு காரியத்தைச் செய்யாமல் ஒரு சர்க்கார் தயங்கிக் கொண்டு இருக்கலாமா? குடிசைத் தொழில்கள் என்று ஒரு புதுச் சொல்லைக் கண்டுபிடித்து அதை ஜபம் செய்துகொண்டு இருப்பதில் என்ன பயன்? தென்னிந்தியாவில், ஏன், அகில இந்தியாவிலுமே, குடிசையில் நடந்து வரும் மிகப் பெருந் தொழில், முதல்தரமான தொழில், நெசவுத் தொழில்தான். இதற்கு ஏற்பட்டிருக்கும் பெரிய ஆபத்தைக் காலம் கடந்து போவதற்குள் தீர்த்தால் அதுவே குடிசைத் தொழில்களுக்குச் செய்த பெரும் உதவியாகும்.

மில்காரர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருளைத் தாராளமாக விலை குறைத்தாலும் அவர்களுக்கு அது கட்டுபடியாகும். குறைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்ய முடியும். அவர்கள் தொழிலுக்கு இதனால் ஆபத்து ஒன்றும் கிடையாது.

தென்னாட்டு நெசவுக்காரர் குடும்பங்கள் வடநாட்டு நகரங்களில் பெண்களும் குழந்தைகளுமாகப் பிச்சை யெடுப்பதைக் கண்ணிருந்தவர்கள் பார்க்கலாம். ஈரம் உள்ள உள்ளங்கள் கரையும்.

விஷயம் தெரியாதவர்கள்,—மற்றத் துறையில் படிப்பு அடைந்தவர்கள், மேஜை நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கைத்தறித் தொழிலைப் பௌதிக சாஸ்திர முறையில் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்று பத்திரிகைகளில் எழுதலாம். இது பொருள் இல்லாத பிதற்றல். பௌதிக சாஸ்திர அறிவை உபயோகித்தால் ஒரு தனி மனிதன் முன்னை விட அதிகமாக உற்பத்தி செய்யலாம். அல்லது இப்போது செய்யும் துணிகளைவிட நல்ல அழகான துணிகளை உண்டாக்கலாம். முதலில் சொன்னது ஏற்பட்டால், அதாவது இப்போதைவிட இயந்திர சாதனங்களினால் அதிக உற்பத்தியானால், இப்போது இருக்கிற சிக்கல் இருமடங்கு ஆகும். இரண்டாவதாகக் குறிப்பிட்ட விஷயத்துக்கு அவசியமே இல்லை; ஏனென்றால் இப்போது உண்டாகும் கைத்தறித் துணிகளின் அழகை யாரும் குறை சொல்லவில்லை. மில் துணிகளின் மலிவான விலையே கைத்தறிகளின்சங்கடத்துக்குக் காரணம். இதை அறியாமல், அல்லது அறிந்தும் மறந்து விட்டு வேறு விஷயங்களைப் பேசுவது பயனற்ற காரியம்.

மில் துணிகளின் போட்டியை ஓரளவு குறைப்பதற்காக, சென்னைச் சட்டசபையின் அநுமதி பெற்று மில் துணிகளின் பேரில் சென்ற வருஷம் புது விற்பனை வரி போடப்பட்டது. மத்தியதரத் துணிகளின் பேரில் அந்த வரியை அமுலுக்கு வராமல் தில்லி சர்க்காரின் ஆட்சேபணையினால் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதுவும் கைத்தறிக்காரர்களுக்குச் செய்ய வேண்டிய உதவியைச் சர்க்கார் மறுதளித்ததாகும்.

தறிகாரர்கள் வீட்டில் தேங்கி நிற்பதற்குப் பதிலாகக் கூட்டுறவுச் சங்கங்களின் கிடங்குகளில் துணி தேங்கி நிற்கிறது. தறிகளிலோ வேலை நிற்காமல் நடந்து வருகிறது. சிக்கல் தீரவில்லை. வளர்ந்துகொண்டு போகிறது. சங்கங்கள் எடுத்த கடன் பணம் துணியாக முடங்கி நிற்கும். இதில் கடைசியாக சர்க்காருக்குத்தான் நஷ்டம். இது எவ்வளவு நாள் நடைபெறக் கூடும்? இதையெல்லாம் ஆராய்ந்து யோசித்துத்தான் நோயைத் தீர்க்கும் மருந்தை ராஜாஜி சொன்னார்.

'நோய் நாடி, நோயின் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி, வாய்ப்பச் செயல்' என்று தெய்வப் புலவர் சொன்னபடி, ராஜாஜி செய்ய வேண்டியதைச் சொல்லியிருக்கிறார். கைத்தறித் தொழிலைப் பிடிக்கும் நோயின் 'முதல்' எது? மில்காரர்களின் போட்டியே நோயின் காரணம். அதை விட்டு விட்டு வேறு எங்கேயோ தைலம் பூசி ஒத்தடம் போடுவதால் நோய் தீராது.

பேய்க் குண்டுகளின் போக்கு

சென்ற யுத்தத்தின் முடிவில் அமெரிக்கா ஜப்பானின் தலை மீது அணுகுண்டைப் போட்டு அதன் நாசகரத் தன்மையைக் கண்டு உலகம் கதிகலங்கச் செய்தது!

அத்துடன் நிற்கவில்லை. மேலும் மேலும் விதம் விதமான அணுகுண்டுகளை உற்பத்தி செய்தது. இதைக் கண்டு ருஷ்யாவும் உற்பத்தி செய்தது. இப்போது பிரிட்டனும் உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டது.

அணுகுண்டுடன் ஜலஜகுண்டு என்றோர் பூதம் கிளம்பியிருக்கிறது. அமெரிக்கா இதை உற்பத்தி செய்தவுடனே ரஷ்யா 'என்னிடமும் இருக்கிறது' என்றது. பிரிட்டன் 'இதோ நானும் தயார் செய்கிறேன்' என்கிறது.

இப்படி வல்லரசுகள் வெகு தீவிரமாக அணுகுண்டுகளின் உற்பத்தியில் போட்டி போட்டு வருகின்றன!

உலக மக்கள் யுத்தம் எங்கு மூண்டு விடுமோ என்று பயந்து வருகிறார்கள்.

'சமயம் வந்தால் உபயோகிக்கத் தயங்க மாட்டோம்' என்று அமெரிக்க வெளிநாட்டு மந்திரி டல்லஸ் வேறு சமீபத்தில் கூறினார்.

அணுகுண்டு போட்டு யுத்தம் மூள்வதற்கு முன்னமேயே இந்த அணுகுண்டுகளின் சோதனை வெடிகளினால் உலகம் பெரிதும் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற திகில் விஞ்ஞானிகளிடையேயும் மக்களிடையேயும் பலமாக ஏற்பட்டிருக்கிறது.

'யுத்த பீதி', 'அணுகுண்டு யுத்த பீதி' இவற்றையெல்லாம் விட 'அணுகுண்டு பரிசோதனை பீதி' தான் பெரும் பீதியாக இருந்து, இப்பொழுது மக்கள் மனத்தைக் கலக்கி வருகிறது.

பிரதி தினமும் பத்திரிகையைப் பிரித்தால் 'நிவாடாவில் ஒரு பரிசோதனை குண்டு வெடிக்கப்பட்டது. கரும் திரளான மேகம் வான மண்டலத்தில் எழுந்தது. காற்றடித்துப் பிறநாடுகளுக்கும் புறப்பட்டது' என்று படிக்கிறோம்.

இதற்கு இரண்டு நாள் கழித்து 'சமுத்திரத்துக்குள் மற்றோர் குண்டு வெடிக்கப்பட்டது' என்று படிக்கிறோம். அடுத்த நாள் 'மழை பெய்து, மழை நீரில் அணுசக்தி ஏறியிருப்பதாக விஞ்ஞானிகள் கண்டார்கள்' என்று செய்தி வருகிறது.

இப்படி தினமும் பல செய்திகள் வந்த வண்ணமாக இருக்கின்றன. மற்றோர் பக்கத்தில் தங்கள் லட்சியம் 'உலக சமாதானமே' என்று பெருங் கர்ஜனையும் முழங்குகிறது!

நாம் அமெரிக்காவை மட்டும் குற்றம் சாட்டுகிறோம் என்றோ, பிரிட்டனைத்தான் சொல்லுகிறோம் என்றோ அல்லது ரஷ்யாவைத்தான் சொல்லுகிறோம் என்றோ எண்ண வேண்டாம்.

சென்ற வருஷம் பஸிபிக் மகாசமுத்திரத்தில் அமெரிக்கா பரிசோதனைக்காக வெடித்த அணுகுண்டினால் பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஜப்பானிய மாலுமிகள் பாதிக்கப்பட்டார்கள். கடலிலிருந்த லக்ஷக்கணக்கான மீன்கள் அழிந்தன. அந்த மீன்கள் கருகிப்போய் மிதந்தன. அவற்றை உண்டவர்கள் நோய்களுக்கு ஆளாயினர். அணுகுண்டு வெடித்து, அந்த விஷ வேகத்தினால் பல மாலுமிகள் கடும் நோய்களுக்கு ஆளாயினர்.

அணுகுண்டுப் பரிசோதனை வெடிகளின் பயனாக விஷ வேகம் பரவி உலகில் பல கொடிய நோய்களும், உடற் குறைகளும் ஏற்பட்டு விடும்.

இதெல்லாம் விஞ்ஞானிகள் கண்ட உண்மை. எனினும் இவ்வுண்மைகளுக்குத் திரை போட்டு மூடும் முயற்சியும் நடப்பதுதான் பரிதாபமாக இருக்கிறது.

அணுகுண்டு விஷத்தால் தாக்குண்ட ஜப்பானிய மாலுமிகளில் ஒருவன் உயிர் துறந்தான்.

அந்த மாலுமி உயிர் துறந்ததற்குக் காரணம், அமெரிக்கா செய்த அணுகுண்டுப் பரிசோதனையல்லவென்றும் மஞ்சள் காமாலையின் காரணமாகத்தான் இறந்தான் என்றும் அமெரிக்காவிலிருந்து செய்தி வந்தது.

இதற்கு மறுநாளே அவனைப் பார்த்து வந்த ஜப்பானிய டாக்டர் வேறு அபிப்பிராயத்தைச் சொன்னார். அணுகுண்டு விஷமே மரணத்துக்குக் காரணம் என்றார்.

பிரிட்டனில் உண்மையை நாடி, ஆராய்ச்சி நடத்தும் விஞ்ஞானிகள் இல்லாமற் போகவில்லை. மனித குலத்தின் நன்மையில் சிரத்தை கொண்ட ஆராய்ச்சியாளர் சிலர் இருந்து வருகிறார்கள். பௌதிக ஆராய்ச்சி நிபுணரான ஜோஸப் ரோட்பிளாட் என்பவர், ஒரு அறிக்கை எழுதி வெளியிட்டார். அதில் வெகு தெளிவாக இந்தப் பரிசோதனை வெடிகளினால் ஏற்படக்கூடிய தீமைகளை மிகவும் பயங்கரமாகவும் விளக்கமாகவும் கூறியிருக்கிறார்.

அத்துடன் அமெரிக்க அணுசக்தி கமிஷன் அணுகுண்டு பரிசோதனைகளினால் ஏற்படும் தீய விளைவுகளின் தன்மையை முழுதும் கூறாமல் மூடி மறைத்திருப்பதையும் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

"எந்த அளவுக்கு நமது பின் சந்ததிகளின் உடலமைப்பு பாதிக்குமென்று அளவிட இயலாது!... யுத்தம் வராமலே இப்பொழுது நடப்பதுபோல் அணுகுண்டுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டால் சந்ததி உற்பத்திக் கோளாறு ஏற்படுமோ என்று பயமாக இருக்கிறது!" என்கிறார்.

மனித சமூதாயத்துக்கு ஏற்படக்கூடிய ஊறுகள் எப்படி எப்படியிருக்குமோ, நம்மால் கற்பனை செய்யக்கூட முடியவில்லை.

அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன் ஆகிய மூன்று வல்லரசுகளும் சேர்ந்து இதுவரை 66 குண்டுகள் உலகின் பல பகுதிகளில் வெடித்துள்ளன. அவற்றில் 51 அமெரிக்காவும், 12 ருஷ்யாவும், 3 பிரிட்டனும் வெடித்திருக்கின்றன!

பத்து ஆண்டுகளுக்குள் இத்தனை குண்டுகள் வெடித்தால் உலகத்தின் கதி என்ன ஆவது! இந்த விகிதத்தில் குண்டுகள் வெடித்துக் கொண்டு போனால் உலகம், மற்றொரு யுத்தம் வராமலே அழிந்து போகும்!

உலகம் அழிந்து போனாலும் பரவாயில்லை. உடல் நலம் குன்றி, கால் நொண்டியாகவும், கை நொண்டியாகவும், கண் இழந்தவர்களாகவும், காது இழந்தவர்களாகவும், மூளை நரம்புக் கோளாறுகள் கொண்டவர்களாகவும், ஸந்தானசக்தியில் நோயும் குறையும் அடைந்தவர்களாயும் மக்கள் சமூதாயத்தைச் செய்து விடுவார்கள்போல் தோன்றுகிறது! இது தான் இன்றைய வல்லரசுத் தலைவர்கள் தங்கள் சந்ததியாருக்கு வைத்து விட்டுப் போகும் உடைமையா!

சமீபத்தில் நம்முடைய தேசத்துப் பத்திரிகை ஒன்று அணுகுண்டு ஹைட்ரஜன் குண்டு போட்டாப் போட்டி நடத்துவதைத் தடுக்க முடியாது என்று எழுதிற்று.

சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த ஆஸ்திரேலிய விஞ்ஞானி பேராசிரியர் ஆலிபாண்ட் என்பவர் பரமாணு குண்டுகளினால் ஏற்படக்கூடிய தீங்குகளை மறைக்காமலும் குறைக்காமலும் தெளிவாக எடுத்துக் காட்டினார்.

ராஜாஜி கூறியபோது மௌனம் சாதித்த பத்திரிகை, பேராசிரியர் ஆலிபாண்டின் இக் கருத்தைக்கேட்டு நல்ல தலையங்கமே எழுதி விட்டது!

உலகின் பல பாகத்தில் இந்தப் பேய்க் குண்டுகளை ஒழிக்கும் யோசனைக்கு நல்ல ஆதரவு கிடைக்கத் தொடங்கி விட்டது!

விரைவிலேயே பீதியிலிருந்து உலகம் விடுபடும் என்று நம்புகிறோம்!

பாகிஸ்தான் நெருக்கடி

பாகிஸ்தானில் அடிக்கடி நடக்கும் சம்பவங்களைப் பற்றி நாம் பரிகாசம் செய்ததாக வைத்துக் கொள்ளக் கூடாது. வருத்தத்தைத்தான் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பக்கத்து நாட்டில் கலவரமோ குழப்பமோ நடந்தால் அது நம்மையும் பாதிக்கும்.

பாகிஸ்தான் பிரதம மந்திரியும் மாகாண மந்திரிகளும் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டார்கள். சமீபத்தில் அரசியல் நிர்ணய சபையைக் கலைக்கும்படி பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் உத்தரவிட்டார். அது சம்பந்தமாக நடந்த வழக்கில் அரசியல் நிர்ணய சபையைக் கலைக்க கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் இல்லை என்று சிந்த் கோர்ட்டார் தீர்ப்புக் கூறினர். ஆனால் அப்பீலில், பாகிஸ்தான் சுப்ரீம் கோர்ட்டார் சிந்த் கோர்ட்டாரின் தீர்ப்பை மாற்றி கவர்னர் ஜெனரல் செய்தது சரி என்று தீர்ப்பு அளித்து விட்டார்கள்; பிறகு சிந்து மாகாணத்தில் கவர்னருக்கும் சட்ட சபைக்கும் தகராறு ஏற்பட்டுநெருக்கடி மூண்டது.

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் பாகிஸ்தானில் இப்போது நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருப்பதாகப் பிரகடனம் செய்து, சகல அதிகாரங்களையும் தாமே ஏற்றுக் கொண்டுள்ளார். புதிய அவசரச் சட்டத்தின்படி, பாகிஸ்தான் அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்கான சகல முறைகளையும் எடுத்துக் கொள்ள கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் ஏற்பட்டிருக்கிறது.

பாரத நாட்டிலிருந்து பாகிஸ்தான் பிரிந்து ஏழு ஆண்டுகளுக்கு மேலாகியும் அந்த நாட்டில் நிலையான அரசாங்கம் ஏற்பட முடியவில்லை என்பதையே அச்சம்பவங்கள் காட்டுகின்றன. இந்தியாவுக்கு விரோதமாகப் பாகிஸ்தான் அமெரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்தியாவின் உயர்வை நன்கு அறிந்து, இந்தியாவுடன் நல்லுறவு வைத்துக் கொண்டுள்ள பர்மாவும், இந்தோனேஷ்யாவும் அந்தந்த நாடுகளில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புகளையும் பொருளாதார நெருக்கடிகளையும் சமாளிப்பதில் வெற்றி பெற்றுள்ளன.


பாகிஸ்தானில் நெருக்கடிகள் தீர்ந்து நிலையான சர்க்கார் ஏற்பட வேண்டுமாயின், அது இந்தியாவின் உறவையும் ஒத்துழைப்பையும் பெற வேண்டும்: துவேஷப் பிரசாரம் முதலியவற்றைக் கைவிட்டு விடவேண்டும்; ஜனநாயக முறைகளைப் பின்பற்ற வேண்டும். பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தீர்ந்து அமைதியான அரசியல் நிலை சீக்கிரம் ஏற்பட வேண்டும் என்பது நம்முடைய ஆசை. அந்த நாட்டில் குழப்பங்கள் வளரவேண்டும் என்று விரும்புகிற கட்சி இந்தியாவில் இல்லை.

தாயைத் துரத்தலாமா?




இலங்கையின் செழுமைக்காகப் பாடுபட்ட இந்தியர்களை வெளியேற்ற இலங்கை சர்க்கார் புதிய புதிய முறைகளைக் கைக்கொண்டு வருகிறார்கள்.

உயர்ந்த சந்திப்பு!



அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவரும் ரஷ்யப் பிரதம மந்திரி புல்கானினும் ஒருவரையொருவர் சந்திக்கத் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர்.

நினைவுச் சின்னம்!



பாகிஸ்தான் நெருக்கடியில் சிக்கியிருப்பதாக பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் பிரகடனம் செய்துள்ளார்.

என்ன சேதி?

பாண்ட்டுங் மகாநாடு

இந்தோனேஷ்யாவைச் சேர்ந்த பாண்ட்டுங்கில் ஏப்ரல் மாதம் 18-ந் தேதி கூடும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் மகாநாட்டுக்கு இந்தியாவிலிருந்து நேருஜியின் தலைமையில் ஒரு பெரும் கோஷ்டி செல்லுகிறது. அந்த மகாநாட்டில் கலந்து கொள்ளும்படி இருபத்தைந்து நாடுகளுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. மத்திய ஆப்பிரிக்க பெடரேஷனைத் தவிர மற்ற இருபத்திநாலு நாடுகளும் அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளன. உலக ஜனத்தொகையில் பாதிக்கு மேல் அந்த நாடுகளில் இருப்பதால், உலகில் உள்ள ஜனங்களில் பெரும்பாலோரின் பிரதிநிதிகள் அம் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள். மேற்படி மகாநாடு முக்கியம் பொருந்தியது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

மேல்நாடுகளுக்கு விரோதமாகவே ஆசியா, ஆப்பிரிக்க நாடுகள் பாண்ட்டுங்கில் மகாநாடு கூடுகின்றன என்ற அபிப்பிராயம் ஐரோப்பிய நாடுகளிடையே நிலவி வருகிறது. அந்த அபிப்பிராயம் முற்றிலும் தவறு என்பதைச் சென்ற வாரம் தில்லிக்கு விஜயம் செய்த பர்மா பிரதமர் ஸ்ரீ நூ சுட்டிக் காட்டினர்.

ஆசியப் பிரதேசங்களில் இருந்து வரும் அரசியல் நிலைமைகளைப் பற்றியும் உலக மக்களைப் பீதியில் ஆழ்த்தியுள்ள அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகளைப் பற்றியும் அம் மகாநாட்டில் விவாதிக்கப் போவதாக அவர் குறிப்பிட்டார்.

பாண்ட்டுங் மகாநாட்டின் பயனுக ஆசிய மக்களின் வருங்கால வாழ்க்கை நன்மை அடையும் என்று ஆசியா தேசத்துத் தலைவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

துருப்பிடித்த ஆயுதங்களும் சுதந்திரப் போரும்

கோவா மக்களின் சுதந்திரப் போர் தீவிரமான கட்டத்தை அடைந்து வருகிறது. கோவா தேசிய காங்கிரஸ் முன்னுள் காரியதரிசி ஸ்ரீ அந்தோணி டிசௌசா சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டதற்காகப் போர்ச்சுகல் அதிகாரிகள் அவருக்கு இருபத்தெட்டு வருஷம் கடுங்காவல் தண்டனை விதித்ததாகச் செய்தி வந்திருக்கிறது. இன்னும் பலருக்கு நாலிலிருந்து எட்டு வருஷங்கள் வரையில் சிறைத் தண்டனை விதித்திருக்கிறார்கள். அவர்களை நாடு கடத்தி விடுவதாகவும் சொல்லப்படுகிறது. அடக்கு முறைகள் அதிகமாக ஆகத் தேசபக்தர்களின் அஞ்சா நெஞ்சமும் ஆண்மையும் ஆத்ம பலமும் வளரும். சுதந்திரத்துக்காகப் பாடுபடும் வீரர்கள் போர்ச்சுகல் அதிகாரிகளின் அடக்குமுறைகளைக் கண்டு பயந்துவிட மாட்டார்கள். பிரிட்டிஷார், பிரஞ்சுக்காரர்கள் இவர்களைப் பின்பற்றிப் போர்ச்சுகலும் கோவா மக்களுக்குச் சுதந்திரமளித்து விட்டு, அப் பிரதேசத்திலிருந்து கௌரவமாகவும் நல்ல முறையிலும், வெளியேறி விடுவது தான் விவேகமாகும்.

உண்மைக்குப் பல சாட்சிகள்

வேறு விஷயங்களில் பல அபிப்பிராய பேதங்கள் இருப்பினும், கைத்தறி விஷயத்தில் ராஜாஜி சொன்ன யோசனையே சரியானது என்று தாம் வற்புறுத்துவதாகத் தி. மு. க. தலைவர் அண்ணுத்துரை சமீபத்தில் தக்க சமயத்தில் மறுபடியும் கூறியிருக்கிறர். இது எல்லா விதத்திலும் பாராட்டத்தக்கது. உண்மைக்குப் பல சாட்சிகள் சொன்னுலும் மத்திய சர்க்கார் கண் திறப்பதில் ஏன் தயக்கம்? பொது நன்மைக்காக நிலத்தையும் சொத்தையும் பறிமுதல் கூடச் செய்யலாம் என்கிற கொள்கையை மக்கள் சபையில் பிரதம மந்திரி அவர்கள் தீவிரமாக விளக்கியிருக்கிறர். அப்படியிருக்க, மில்காரர்களுடைய லாபத்தில் மட்டிலும் எந்த ஒரு பாகமும் குறையக் கூடாது என்பது அவசியமா? மில்காரர்களுடைய லாபம். தொடக்கூடாத ஒரு தனி உரிமையா? அப்படியில்லையென்ருல் கைத்தறிக்காரர்களைக் காப்பாற்றுவதற்காக அனைவரும் ஒப்புக்கொண்ட முறையைக் கையாள வேண்டும் அல்லவா?

கடமையை உணர வேண்டும்

உரிமையைக் கோரும் ஒவ்வொருவரும் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமையை மறக்கக்கூடாது. கடமையை மறந்து விட்டால் உரிமை பறி போய் விடும். உதாரணமாக ரயில் வண்டிகளில் செல்லும் மூன்ருவது வகுப்புப் பிரயாணிகள் தங்களுக்குப் பல வசதிகள் வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறர்கள். அன்னியர் ஆட்சிக் காலத்தில் ரயில் வண்டிகளில் மூன்ருவது வகுப்புப் பிரயாணிகள் ஆடுமாடுகளைப் போல் அடைக்கப்பட்டிருந்தார்கள். சுதந்திர இந்தியாவில் ரயில்கள் பொது மக்களின் சொத்தாகி விட்டது. மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்வோருக்கு முன்பிருந்ததைக் காட்டிலும் பல வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பல வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று ஜனப் பிரதிநிதிகள் வற்புறுத்தி வருகிறர்கள்.

இவ்வாருகப் பல வசதிகளைக் கோரும் பிரயாணிகள் தாங்கள் கடைப்பிடிக்க வேண்



ராம நவமி

பல ஊர்களில் இவ் வருஷம் மிக உற்சாகமாக ஸ்ரீராம நவமி கொண்டாடுவதற்காக ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு ஊராரும் தங்களுடைய ஊரிலேதான் ராமன் பிறந்ததாக வைத்துக் கொண்டு கொண்டாடுவார்கள். மிகவும் நல்ல விழா. ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகளின் ஆசியும் உத்தரவும் பெற்றுப் பலர் இந்தக் காரியத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டு வேலை செய்து வருகிறார்கள். அனைவருக்கும் என்னுடைய அன்பு நிறைந்த ஆசி. என் உடல் நிலை இடங் கொடுக்க வில்லை: அந்தத் தடை இல்லாதிருந்தால் எல்லா ஊருக்கும் போய்க் கலந்து கொண்டு பதினைந்து நாட்கள் நன்றாகக் கழித்திருப்பேன். வடை. பருப்பும் பானகமும் பிரசாதமாக வாங்கி அனைவரும் ஆனந்தமாய் அன்று அனுபவிக்க வேண்டும். சீதா தேவியாகிய நாராயணியை அன்று வேண்டிக் கொள்வோம். அறிவும் அன்பும் ஆற்றலும் சித்த அமைதியும் தருவாளாக. அனைவருக்கும் தருவாளாக என்று பிரார்த்திப்போம்.



ஒவ்வொருவனும் தன்னை ஒரு ராவணனாக பாவித்துக் கொண்டு தேவியை மன்னிக்கும்படி பிரார்த்திப்பார்களாக. நமக்குள் ராவணன் இருக்கிறான் அல்லவா? அவன் அடங்க வேண்டும்.

28—3—55 *இராஜகோபாலாச்சாரி*

டிய கடமைகள் என்ன என்பதையும் உணர்ந்து அதன்படி நடக்க வேண்டும்.

நூற்றைம்பது மைலுக்கு மேல் பிரயாணம் செய்யும் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் தங்கள் இடத்தைப் பதிவு செய்து கொள்ளுவதற்கு வசதி செய்திருக்கிறார்கள். இதனால் நெடுந்தூரம் பிரயாணம் செய்யும் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் கஷ்டமின்றிப் பிரயாணம் செய்வதற்கு எவ்வளவோ வசதியாக இருந்து வருகிறது.

இதுபோல் 'ரிஸர்வ்' செய்துள்ள பெட்டியில் பதிவு செய்யாத வேறு ஒரு பிரயாணி ஏறிக்கொண்டு இறங்க மறுத்து விட்டார். பிரயாண டிக்கட்டையும் ரயில்வே சிப்பந்திகளிடம் காட்ட மறுத்து விட்டார். போலீஸார் துணைகொண்டு அவர் வண்டியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

ரயில்வே சட்டத்துக்கு முரணாக நடந்து கொண்டதற்காக மேற்படி நபர்மீது வழக்குத் தொடர்ந்து அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

ரயில்வே சட்டத்தை மீறிய அந்த மனிதர் வசதி படைத்தவர் போலும்! தம்முடைய பண பலத்தைக் கொண்டு தம்மைத் தண்டித்தது சட்ட விரோதமானது என்று செஷன்ஸ் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண்டார். செஷன்ஸ் நீதிபதிகளும் அவர் முறை பிசகாக நடந்து கொண்டதாக முடிவு செய்து விட்டனர்.

சுதந்திர நாட்டில் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடந்தால்தான் நாம் பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியும்; நாட்டில் அமைதியை நிலைநாட்ட முடியும். அதற்குப் படித்தவர் பாமரர், செல்வந்தர் ஏழை என்று

வித்தியாச மில்லாமல் தங்கள் கடமையை ஆற்ற ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

வரவேற்கிறோம்

உலகில் அதர்மம் என்னென்ன தீங்குகளையெல்லாம் செய்கிறது என்பதைப் பற்றிய எண்ணத்தையே மறந்து விட்டு, தர்மப் பாதையில் ஆக்க வேலைகளைச் செய்வதுதான் நமது நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் உகந்த காரியமாகும். கேடு விளைவிக்க முனையும் சக்திகளைப் பற்றிக் கவலைப்படுவதோ, அவற்றைப் பெரிதாக்கிப் பேசுவதோ அர்த்தமில்லாத காரியம். இந்த வகையில் நமது ஆஸ்திக தர்மத்தை நிலைநாட்ட முனைந்துள்ள பெரியவர்களில் குன்றக்குடி அடிகளார் மிக மிக முக்கியமான முனிவர்.

மடத்தின் ஒடுக்கத்தில் தனிமையில் இருப்பதைவிட மக்கள் கூட்டத்தில் முனைந்து நின்று, அவர்களுக்கு அறத்தை உபதேசிப்பதே சிறந்த சேவையாகும் என்று கண்டு, அடிகளார் அல்லும் பகலும் உழைத்து வருகிறார். சமீபத்தில் அவர் கடல் கடந்து சென்று மலாயா, இந்தோசீனா, இந்தோனேஷ்யா முதலிய தூர தேசப் பகுதிகளில் வாழும் தமிழர் சமுதாயத்துக்கு நமது அறக் கோட்பாடுகளை எடுத்துச் சொல்லி சமய வளர்ச்சிக்குப் புது விழிப்பு ஊட்டிய செய்திகளைப் பத்திரிகைகளில் பார்த்துமகிழ்ந்தோம். அடிகளார் இந்தப் புனித யாத்திரையை முடித்துக் கொண்டு நாளது மார்ச்சு மாதம் 25-ந் தேதி சென்னை திரும்பி யிருக்கிறார்.

"நம்பினோர் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பு"

என்ற அறக் கொள்கையை நிலைநாட்டுவதிலேயே தமது நேரத்தைக் கழித்து வரும் அடிகளார்க்குத் தமிழ்ப் பெருமக்களின் சார்பில் நல்வரவு தந்து நன்றி கூறுகிறோம்.

பிற்பட்டவர் யார்?

மத்தியப் பிரதேசத்தின் முன்னாள் கவர்னர் மங்கள்தாஸ் பக்வாஸா ஒரு அரிய உண்மையை அருமையாக வெளியிட்டிருக்கிறார். ஆதிவாசிகளைப் "பிற் போக்கானவர்கள்" என்று குறிப்பிடுவது தவறு என்றும், உண்மையில் நகரத்தில் வாழ்ந்து பொய் புனைசுருட்டு முதலிய அதர்மங்களில் சிக்குண்டு உழலும் மக்களே "பிற்போக்கானவர்" என்ற சொல்லுக்குப் பொருத்தமானவர்கள் என்றும் குறிப்பிட்டார் அவர்.

சமீபத்தில், சூரத் ஜில்லாவில் ஒரு ஆதிவாசிப் பெண்மணி ஒரு அற்புதமான காரியத்தைச் செய்தார். கொலை வழக்கு ஒன்றில் கணவனையும்விட உண்மைதான் பெரிதானது என்று மதித்து, அந்தப் பெண்மணி தன் கணவன் செய்த குற்றத்தை நீதி சபையில் வெளிப்படுத்தினள். இதை உதாரணமாகக் குறிப்பிட்டு ஆதிவாசிகளின் உள்ளத்தில் உண்மைக்கும், நேர்மைக்கும் எத்தகைய மகத்தான மதிப்பு இருக்கிறது என்பதை வியந்தார் மங்கள்தாஸ் பக்வாஸா.

பனித்துளி

"போலீஸ்காரன் போல் நடித்துக் களவு!"
—செய்தி

திருடன் வேஷத்தில் போலீஸ்காரர் போய்ப் பிடித்திருக்கலாமே!

★

"மனித வர்க்கத்தில் பேர்பாதியினரான பெண்கள் சமீப காலமாக எங்கும் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கின்றனர்."
—மாதர் மகாநாட்டில்

ஆண்கள் அடுக்களைக்குப் போக வேண்டும் என்று இதன் உள் அர்த்தம் போலும்!

★

ரயில்வே கார்டுகள் மகாநாடு.
—பத்திரிகைத் தலைப்பு

"அட! தபால் கார்டுகளுக்குக்கூட இப்பொழுது மகாநாடு கூட்டுகிறார்களா!" என்று வியக்கிறார் சொல்லிலே சிக்கும் ஒருவர்!

★

"காஷ்மீரில் கடும் நில நடுக்கம் ஏற்பட்டது!"
— செய்தி

இதற்கும் பாகிஸ்தானியர் உரிமை கொண்டாட வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

"வாயில் வெற்றிலையுடன் பதிலளித்த விளைவினால் அசெம்பிளியிலிருந்து மந்திரி வெளியேறினார்."
—பத்திரிகைச் செய்தி

"மந்திரி எதற்காக வெளியேற வேண்டும்! எதிரி விருப்பவரல்லவா வெளியேறியிருக்க வேண்டும்!" என்கிறார் வெற்றிலைப் பிரியர்.

★

"ரூபாய் 800 கோடியில் 400 மைல் புதிய பாதை."
—செய்தி

"எங்கள் கோடி வரை எட்டுமா!" என்று தென் கோடியிலுள்ளவர் ஒருவர் கேட்பது காதில் விழுகிறது!

★

"தமிழ் வருஷப் பிறப்பை ஏழைக் குழந்தைகளுக்குப் பால் விநியோகிக்கும் தினமாகக் கொண்டாட வேண்டும் என்று சென்னை மந்திரி விரும்புகிறார்."
—செய்தி

ஏழைக் குழந்தைகளின் பால் அவருக்கு ஏற்பட்டிருக்கும் இரக்கம் பாராட்டத் தக்கது என்கிறார் ஒரு புலவர்.

இலங்கையும் மதுவிலக்கும்

ரஜனி

கொழும்பு, மார்ச் மீ 26உ

இலங்கையில் மதுபானத்தையும் குதிரைப் பந்தயத்தையும் ஒழிக்க வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி நாடு முழுவதும் தீவிரமான சர்ச்சை நடந்து வருகிறது. இவ்விரு பழக்கங்களையும் தடுக்க வேண்டுமென்று முன்னாள் பிரதம மந்திரி ஸ்ரீ டட்லி சேனநாயகா கொண்டு வந்த தீர்மானம் சர்க்கார் பார்லிமெண்டரிக் கட்சியில் நிறைவேறிய பின்னர் சர்க்கார் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டம் இவ்வாரம் நடந்தது. அதில் மதுபானம், குதிரைப் பந்தயம் ஆகிய இரண்டையும் சட்ட பூர்வமாக ஒழிப்பதற்கு வழி வகைகளை ஆராய்ந்து சொல்ல ஸ்ரீ சேனநாயகா ஒரு நபர் கமிஷனை நியமிக்கப்பட்டார். இதற்கிடையில் மீண்டும் சர்க்கார் பார்லிமெண்டரிக் கட்சி கூடும்பொழுது அதன் பழைய தீர்மானத்தை ரத்துச் செய்யத் தீவிரமான முயற்சிகள் நடந்து வருகின்றன.

இதர சில நாடுகளைப் போலில்லாமல் இலங்கையில் சாராய வியாபாரத்தை அரசாங்கமே நடத்தி ஏராளமான லாபம் பெற்று வருகிறது. அரசாங்கம் நேரடியாக நடத்தும் பல தொழில்களில் நஷ்டமில்லாமல் நிறைய லாபம் கொடுக்கும் தொழில் சாராய வியாபாரம்தான். மதுவை ஒழிக்க வேண்டுமென்று தமது கட்சி தீர்மானித்த மறுவாரமே, பிரதமர் ஸர் ஜான் நடத்திய ஒரு விருந்துபசாரத்தில் விஸ்கியும் பிராந்தியும் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடின. சுத்தச் சைவர்கள், பழுத்த பௌத்தர்கள், தீவிர இலங்கையர்களிடையில் மதுபானமில்லாமல் கல்யாணங்கள் நடப்பதை எங்கும் காண முடியாது. இத்தகைய ஒரு தேசத்தில் மதுபானம் தடுக்கப் பட்டால், அது உலக அதிசயங்களில் ஒன்றாகச் சரித்திரத்தில் இடம் பெறும்!

* * *

சென்ற மூன்று ஆண்டுகளாக இலங்கை ஜனநாயக காங்கிரசின் தலைமைப் பதவியைத் திறமையுடன் தாங்கி வந்த ஸ்ரீ எஸ். தொண்டைமான் அப்பதவியிலிருந்து இவ்வருடம் ஓய்வு பெறுகிறார். தலைமைப் பதவி குறிப்பிட்ட ஒரு நபரின் ஏகபோக உரிமையாயிருக்கக் கூடாதென்றும், மற்றவர்களுக்கும் சந்தர்ப்பமளிக்கவேண்டுமென்றும் அவர் விருப்பம் தெரிவித்து விட்டு ஒதுங்கிக் கொண்டதற் கிணங்க, ஜனாப் அப்துல் அஸீஸ், ஸ்ரீ எஸ். சோமசுந்திரம் ஆகிய இருவருடைய நியமனப் பத்திரங்கள் தலைமைப் பதவிக்குத் தாக்கலாகியிருக்கின்றன. ஜனாப் அஸீஸ் 1942 முதல் 1944 வரை மூன்று வருட காலமும் பிறகு 1949-லும் காங்கிரஸ் தலைமைப் பதவியை வகித்தவர்.

ஸ்ரீ சோமசுந்திரம் காங்கிரசின் தொழிலாளர் ஸ்தாபனமாகிய தொழிலாளர் காங்கிரசின் பொதுக் காரியதரிசியாயிருப்பவர்.

தலைவரைப் போட்டியில்லாமல் தேர்ந்தெடுப்பதுதான் காங்கிரசின் சம்பிரதாயம். இதை அனுசரித்து மேற்படி இருவரில் ஒருவர் தமது அபேட்சையை வாபஸ் பெற்று விடுவாரென்று எதிர்பார்க்கப் படுகிறது. காங்கிரஸின் 14 வது வருடாந்திர மகாநாடு ஏப்ரல் மாதம் 22, 23, 24-ம் தேதிகளில் அட்டன் நகரில் நடைபெறும்.

நூற்றுக்குத் தொண்ணூற்று நாலு பிரஜாவுரிமை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு விடுவதோடு, மற்ற ஆறு பேர்களுக்குக் கிடைக்கும் பிரஜாவுரிமையும் நிலைத்திருக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை. அளித்த பிரஜாவுரிமையை ரத்துச் செய்ய உலகில் வேறு எங்குமில்லாத மாதிரியான சட்டத்தை அரசாங்கம் சமீபத்தில் இயற்றியிருப்பதனால் பிரஜாவுரிமைச் சட்டத்தில் இந்தியர்களுக்கு இருந்த சொற்ப நம்பிக்கையும் போய் விட்டது. பெரும் பணச் செலவு செய்து பிரயாசைப்பட்டுத் தற்போதைய சட்டத்தின் கீழ் பிரஜா உரிமை பெற முயற்சிப்பதை விட எல்லா பிரஜாவுரிமை மனுக்களையும் வாபஸ் செய்துவிட்டுத் தர்ம நியாயமான புதிய பிரஜாவுரிமைச் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்றும், இல்லாவிடில் இதற்காக ஒரு பெரிய போராட்டம் நடத்திப் பார்க்க வேண்டுமென்றும் காங்கிரஸ் வட்டாரங்களில் அபிப்பிராயம் பலப்பட்டு வருகிறது. அடுத்த மாதம் நடக்கும் வருடாந்திர மகாநாட்டில் இது சம்பந்தமாக ஒரு முக்கியமான தீர்மானம் விவாதத்துக்கு வரும் என்று தெரிகிறது.

* * *

கொழும்பிலும் இலங்கையின் இதர பாகங்களிலும் ஒரு வாரகாலம் சென்னைக் கவர்னர் திரு ஸ்ரீபிரகாசா சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்புகையில் இலங்கை மகாஜனங்களுக்கு வானொலி மூலம் ஒரு பிரியாவிடைச் செய்தியை விடுத்தார். அப்பொழுது இலங்கை-இந்திய உறவு எவ்வளவு பழமையான தென்பதைச் சுட்டிக் காட்டி, இருதரப்பிலும் நம்பிக்கையும் நல்லெண்ணமும் இருக்குமானால் இலங்கை இந்தியத் தகராறுகளுக்கு நிச்சயம் ஒரு சுமுகமான தீர்வு கண்டு விடலாம் என்று அவர் சொன்னார். திருநெல்வேலி (யாழ்ப்பாணத்திலுள்ளது) பரமேஸ்வராக் கல்லூரியில் பேசியபொழுது, இலங்கையையும் இந்தியாவையும் ஒரு குறுகிய கடல் பிரித்தாலும் கலாசாரமும் பண்பாடுகளும் ஒன்று சேர்ப்பதாக அவர் கூறினார். யாழ்ப்பாணம் முனிசிபல் சபை அளித்த வரவேற்பு உபசாரத்தில் பேசுகையில், யாழ்ப்பாண நூல் நிலையத்துக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடை வழங்குவதாக உறுதி கூறினார். கட்சி வகுப்பு வேற்றுமையில்லாமல் சகல பிரிவினரும் சென்னைக் கவர்னருக்கு உற்சாகமான வரவேற்பு அளித்து உபசரித்தார்கள்.

* * *

தனுஷ்கோடிக்குப் பதிலாக இந்தியாவில் எந்த இடத்தைத் துறைமுகமாக்க வேண்டும் என்பதைப் பற்றி இலங்கை இந்தியர்கள் இங்குள்ள பத்திரிகை வாயிலாகப் பல யோசனைகள் சொல்லி வருகிறார்கள். திருப்பல்லாணி, கோடிக்கரை, தேவிப்பட்டணம் முதலான இடங்களை ஆதரித்துத் தினந்தோறும் இங்குள்ள பத்திரிகைகளில் ஆசிரியருக்குக் கடிதங்கள் வெளியாகி வருகின்றன. சாவகச்சேரி இந்தியர்கள் சென்னைக் கவர்னரிடம் அளித்த ஒரு மகஜரில் தேவிப்பட்டணத்தைத் துறைமுக மாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அமரதாராவில் வரும் ஒரு காட்சியை இவ்விதழ் அட்டைப் படமாகச் சித்திரிக்கிறார் ஓவியர் மணியம்.



தலைநகரில் விருது விழா

✧ சுப்புடு ✧

முடியரசுகளின் காலம் முடிந்து விட்டது. குடியரசுகள் எங்கும் கும்மாளம் போடுகின்றன. ஆனால் முடிசூடா மன்னர்கள் சிலர் இன்னும் மக்களின் இதயத்தில் ஆட்சி செலுத்தித்தான் வருகிறார்கள்.

நமது நாட்டின் இசையுலகில் நாதஸ்வரச் சக்கரவர்த்தி ராஜரத்தினம் பிள்ளையவர்களும், சங்கீத பூபதி மகாராஜபுரம் விஸ்வநாதய்யரும் சிறந்த உதாரணங்கள்.

மார்ச் 27-ம் தேதி தேசிய பௌதிக ஆராய்ச்சி மஹாலில், திரு ராஜரத்தினம், திரு விஸ்வநாதய்யர், திருமதி பாலஸரஸ்வதி, மற்றும் பல வட இந்திய வித்வான்களுக்கு சங்கீத நாடக அகாடமியின் ஆதரவில் விருதுகள் வழங்கப்பட்டன.

ஒரே கோலாகலமான வைபவம்.

உப ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் தலைமை வகித்து விருதுகளை வழங்கினார். ராஷ்டிரபதியின் உடல் நிலை அன்னார் வர இயலாமல் செய்து விட்டது.

ராதாகிருஷ்ணன் அற்புதமான கற்பனையுடன் பேசினார்: "மக்களை உத்தாரணம் செய்யும் அபார சக்தி வாய்ந்தது கலை. வாழ்க்கையின் தத்துவத்தை உள்ளத்தில் பதிய வைத்து மக்களைப் பரவசப் படுத்தும் இந்தக் கலைகளுக்கு ஆதரவு அளிக்கும் முறையில் சங்கீத நாடக அகாடமியார் விருதுகள் வழங்கும் ஏற்பாடு சாலச் சிறந்தது. சென்ற ஆண்டில் சங்கீத வித்வான்களுக்கு மாத்திரம் விருதுகள் வழங்கினார்கள். இவ்வருடம் ஒரு படி முன்னேறி நாட்டியம், நாடகம் முதலிய கலைகளில் உள்ள விற்பன்னர்களுக்கும் விருதுகள் அளிக்க முன் வந்தது மெச்சத் தகுந்தது."

ஒவ்வொருவரைப் பற்றியும், அவர்களின் சாதனைகளைக் குறித்தும் காரியதரிசி திருமதி நிர்மலா ஜோஷி அவர்கள் விவரங்கள் வாசிக்க, உப ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் விருதுகள் வழங்கினார்.

முதலாவது, திரு ராஜரத்தினம் அவர்கள் பலத்த கரகோஷங்களுக்கு இடையே விருது பெற்றார். இரண்டாவதாக மகாராஜபுரம் விஸ்வநாதய்யர் அவர்கள் பிரசன்னமாகி விருது பெற்றார். பின்னர் பல வட இந்திய வித்வான்களின் முறை வந்தது. திருமதி பாலசரஸ்வதியின் முறை வந்தபோது வானளாவிய கரகோஷம் எழுந்தது. அது ஒவ்வ தற்கே ஒன்றரை நிமிஷங்கள் பிடித்தன.

இந்த வைபவத்தின் பின் விற்பன்னர்கள் தங்கள் திறமையைச் சபையோருக்குக் காட்டும் சந்தர்ப்பம் கிட்டியது.

எல்லாவற்றிற்கும் சிகரமாய் அமைந்த பாலசரஸ்வதியின் நாட்டிய கனிஷத்தைப் பற்றிச் சில வார்த்தைகள்.

இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு நமது கலைப் பொக்கிஷமாகிய பரதநாட்டியம் தலைசிறந்து ஒப்புயர்வற்று விளங்கும் என்பதற்குச் சான்றாக அமைந்தது அன்னாரின் நாட்டியம்.

"கிருஷ்ணா நீ பேகனே பாரோ" என்ற பண்; பண்பாடைந்த பண். திருமதி ஜெயம்மாளின் இசையைச் சொல்லவா! பாலசரஸ்வதியின் சகோதரர் ஸ்ரீ விஸ்வநாதனின் வேணுகானத்தைச் சொல்லவா! ஸ்ரீ ராதாகிருஷ்ணனின் கொரினட்டைச் சொல்லவா! ஸ்ரீ எல்லப்பாவின் குரல் இனிமையைச் சொல்லவா! "வேகமாய் வா" என்ற கருத்துள்ள இடத்தில் பிடிக்கப்பட்ட அபிநய ஜாலங்களைச் சொல்லவா! எதைச் சொல்ல!

நயனங்களும் அங்கங்களும், முகத்தில் ஒவ்வொரு அசைவும் என்ன மகேந்திர ஜாலங்கள் செய்கின்றன என்று சபையோர் அனைவரும் பூரித்துப் போனார்கள்.

சுமார் அரைமணி நேரம் வேறு ஏதோ கற்பனை லோகத்தில் பிருந்தாவனத்தில் சஞ்சரித்து, கண்ணனின் லீலைகளைக் கண்ணாரக் கண்டு களித்தோம் என்று ரத்தினச் சுருக்கமாய்ச் சொல்லி விடலாம்.

மோகன ராகத்தில் 'எவருரா' பாடிய ஸ்ரீ விஸ்வநாதய்யருக்கும், கல்யாணி ராகத்தில் 'சிவகுருபரனே' கீர்த்தனையைப் பொழிந்த மேதை ஸ்ரீ ராஜரத்தினத்துக்கும், இந்தக் கல்யாணி கீர்த்தனத்தை "தோடி" என்று அறிவித்த அகாடமி காரியதரிசி திருமதி நிர்மலா ஜோஷிக்கும் நன்றி கூறிக் கட்டுரைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

விருது பெற்ற கலைஞர்கள்



மகாராஜபுரம்
விஸ்வநாதய்யர்




திருவாவடுதுறை
டி. என். ராஜரத்தினம்



பாலசரஸ்வதி

காலணா



கு. கோதண்டராமன்

எதிரே போய் நின்ற என்னைக் கூடக் கவனிக்காமல் எதிர் வீட்டு வாசற்படியையே பார்த்துக் கொண்டிருந்தார் என் நண்பர்.

எதிர் வீட்டுத் திண்ணையில் ஒரு சிறுவன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு ஆறு வயது இருக்கும். எதிர் வீடு பெரிய தனவந்தர் வீடு போலக் காட்சி யளித்தது. அந்தப் பையன் கந்தல் உடை உடுத்தி யிருந்ததால், அவன் அவர்கள் வீட்டு வேலைக்காரப் பையனாக இருக்கலாமோ என்று எண்ணினேன்.

நண்பர் என்ன நினைத்துக் கொண்டாரோ, என்னமோ, வேகமாகச் சென்று அந்தச் சிறுவனை அழைத்துக் கொண்டு வந்தார். அவன் தேம்பிக் கொண்டே வந்தான். அழுது அழுது அவன் கண்கள் சிவந்திருந்தன. அவனிடம் ஒரு கால் ரூபாயை எடுத்துக் கொடுத்தார். அவன் வேண்டாம் என்று தலையை ஆட்டினான்.

"பணம் வேண்டாமா! வேறு என்னதான் வேண்டும்!"

"வேண்டும்......பம்பரம் வாங்கக் காலணா!"

"இது காலணா......"

"வேண்டாம்!......எனக்குக் காலணாதான் வேண்டும்......"

நண்பர் காலணாவை எடுத்துக் கொடுத்தார். அவன் முகம் மலர்ந்தது; வேகமாக ஓடினான். நண்பர் பெருமூச்செறிந்தார்.

நான் ஒன்றும் புரியாமல் அவர் முகத்தைப் பார்த்தேன்.

"சிறுவன் காலணாவுக்காக இன்றெல்லாம் அழுதான். காலணா கொடுப்பதற்கு ஆள் இல்லை. எதிர் வீட்டில் உள்ள பணக்காரரின் சொந்த அக்காள் மகன். தம்பியை நம்பி, அக்காள் தன் பையனை அனுப்பி யிருக்கிறாள். இங்கே இவரோ சிறுவனை வேலைக்காரனிலும் கேவலமாக நடத்துகிறார். கணவனும் மனைவியும் சினிமாவுக்குப் போயிருக்கிறார்கள். குழந்தை இல்லாத இந்தத் தம்பதிகள் இவனை எவ்வளவோ அன்பாக வளர்க்கலாம். உறவினனாக இருப்பினும் ஏழையாகப் பிறந்து விட்டதால் அலட்சியப்படுத்துகிறார்கள்!" என்றார் நண்பர்.

சொல்லிக் கொண்டு வரும்பொழுதே நண்பரின் தொண்டை கம்மியது. அதை மறைக்க இருமலை வரவழைத்தார். அவர் கண்கள் கலங்கி யிருந்தன.

"நீங்கள் ஏன் இப்படிக் கலங்குகிறீர்கள்!"

"நானா!......இல்லையே!......" என்று இழுத்தவாறே துண்டால் தம் கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டார்.

"நீங்கள் மறைக்கிறீர்கள். உங்கள் அகத்தை முகம் காட்டுகிறது."

நண்பர் பேசவில்லை. அவர் நெஞ்சின் ஆழத்திலிருந்து நெடு மூச்சு ஒன்று வெளிவந்தது.

"இதோ பாருங்கள், பம்பரம். நன்றாக ஆடுகிறது!" என்று கத்திக்கொண்டே ஓடி வந்தான் சிறுவன். அவன் கையில் புதுப் பம்பரமும் சாட்டையும் இருந்தன.

நண்பர் அவனை இறுகத் தழுவிக் கொண்டார்.

"போய் விளையாடு" என்று அனுப்பினார். குதித்துக் கொண்டு அவன் ஓடினான். தெருவில் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த பொழுது மாலை வெய்யிலில் அவன் முகம் பிரகாசித்தது.

"ஏன் இந்தப் பையனிடம் இவ்வளவு அன்பு செலுத்துகிறீர்கள்!"

"ஏழை, ஏழையை விரும்புவதில் தவறில்லையே!" என்றார் அவர்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்! எனக்கு ஒன்றும் புரிய வில்லையே! நீங்கள்தான் பெரும் பணக்காரராயிற்றே!" என்றேன்.

"இன்று பணக்காரன். ஆனால் அன்று...! இந்தச் சிறுவனைப் போலிருந்த அன்று......! பரம

ஏழை. பிறர் வாசற்படியைக் காத்தவன். சோற்றுக்காகப் படாத பாடுபட்ட ஏழை" என்றார். அவர் கண்களில் நீர் சுரந்தது.

நண்பர் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுத் தமது சிறு வயதில் நடந்த நிகழ்ச்சி ஒன்றைச் சொன்னார்.

அந்தச் சிறுவனைப் போன்று, அவரும் ஒரு காலத்தில் காலணாவுக்காகக் கஷ்டப்பட்டிருக்கிறார். அதனால்தான் ஏழைகளின் கஷ்டத்தை உணர்ந்த அவர் அந்தப் பையனுக்குக் காலணா கொடுத்துப் பிஞ்சு உள்ளத்தின் வேதனையை நீக்கியிருக்கிறார். அவர் கதை வருமாறு:

செல்வன் என்னும் சிறப்புப் பெயர் பெற்று ஏழைக் குடும்பத்தில் பிறந்த சிறுவனுக்கு ஆறு வயது முடிவதற்குள்ளேயே தாயும் தந்தையும் பரலோகம் சென்று விட்டனர்.

அதன் பலனாக இரண்டே மாதம் பள்ளியின் படி வாசலை மிதித்து விட்டுச் செல்வன் படிப்பை நிறுத்தி விட்டான். தாயின் அடக்கத்துக்கு வந்திருந்த அவன் மாமா அவனைச் சென்னைக்கு அழைத்துச் சென்றார். அவரும் அப்படி ஒன்றும் செல்வரல்ல. நூறு ரூபாய் வருமானம் சம்பாதித்த ஒரு குமாஸ்தா.

சென்னை சென்ற செல்வனை அவன் அத்தை வரவேற்ற விதமே வெகு அற்புதம்! "வந்து சேர்ந்தது சனியன். இதற்கெல்லாம் தண்டச் சோறு போட வேண்டுமாக்கும்!" என்ற வசை புராணத்தோடுதான் அவள் அவனுக்கு முகமன் கூறினாள்.

மாமாவோ மனைவி தாசர். அவள் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டார்.

சிறுவனைப் பள்ளியில் சேர்ப்பதற்கு அவளிடம் எவ்வளவோ கெஞ்சினார், கூத்தாடினார். பயனில்லை.

"இந்த மூகரக்கட்டைக்குப் படிப்பு ஒன்றுதான் குறை. குழந்தையை வைத்துக் கொள்ள ஆள் கிடையாது. இவன் ஒன்றும் படித்து நமக்குச் சம்பாதித்துக் கொட்ட வேண்டாம். போடும் தண்டச் சோற்றுக்குக் குழந்தையை வைத்துக் கொண்டிருந்தாலே போதும்!" என்று சொல்லி அவரை அடக்கி விட்டாள்.

மாட்டுக் கொட்டில் சாணம் பொறுக்குவது முதல், வீட்டு வேலை ஒன்றுகூட விடாமல் செய்யும் பொறுப்பு செல்வன் மீது சுமந்தது. சின்னஞ்சிறு வயதில் அவன் கதி அப்படியா ஆக வேண்டும்! வேலைக்காரனுக்காவது சிறிது ஓய்வு கிடைக்கும். அண்டிப் பிழைக்கும் அவனுக்கு ஓய்வு ஏது!

மாமாவின் குழந்தையை அழாமல் பார்த்துக் கொள்ளும் போதுதான் சிறிது உட்கார ஓய்வு கிடைக்கும். இரவில் அடித்துப் போட்ட பாம்பு போலத் தூங்குவான்.

ஒரு நாள் தம்பதிகள் இருவரும் அவனை வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு வெளியே போனார்கள். தெருவில் அவன் வயதுள்ள சிறுவர்கள் 'ஆய்......ஙய்' என்று கத்திக் கொண்டு பம்பரம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். செல்வன் திண்ணையில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கும் அவர்களுடன் பம்பரம் ஆட வேண்டும் என்று ஆசை. ஆனால் அவனிடம் பம்பரம் இல்லையே! என்ன செய்வது! இருந்தாலும் ஆசை, கேட்கவில்லை. அதனால் திண்ணையை விட்டு அசையாமல் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த செல்வன் அவர்கள் அருகில் நெருங்கிச் சென்றான்.

"டேய் சீனு, பம்பரம் கொடுடா. ஒரு தடவை ஆடி விட்டுக் கொடுத்து விடுகிறேன்" என்று ஒரு பையனைப் பார்த்துக் கெஞ்சிக் கேட்டான். அந்தச் சிறுவன் தர மறுத்து விட்டான். ஒருவனை விடாமல் எல்லாரையும் கேட்டான். எல்லாரும் 'முடியாது' என்றே மறுத்துக் கூறி விட்டார்கள்.

"காலணா கொண்டு வா, உனக்கே என் பம்பரத்தைக் கொடுத்து விடுகிறேன்!" என்றான் ஒரு சிறுவன்.

"காலணாவா!"

"ஆமாம்."

செல்வன் காலணாவுக்கு எங்கே போவான்!

தொங்கிய முகத்துடன் வேறு ஒன்றும் பேசாமல் திரும்பவும் அவன் தன் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டான். அவன் கண்களைக் கண்ணீர் மறைத்தது. இருந்தாலும் வைத்த கண் வாங்காமல் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

வெளியே சென்ற மாமாவும் அத்தையும் இருட்டிய பிறகு வந்தார்கள். அத்தையின் தாயார் கிராமத்திலிருந்து வந்திருந்தாள். அந்தக் கிழவியை அழைத்துக் கொண்டு வரவே அன்று அவர்கள் வெளியே போயிருந்தார்கள் என்பது அவனுக்குப் பின்னால்தான் தெரிய வந்தது.

மறு நாள் மாமாவை எப்படிக் காலணா கேட்பது என்று தெரியாமல் செல்வன் விழித்துக் கொண்டிருந்தான். நடுங்கிக் கொண்டே மாமாவை நெருங்கி, "மாமா......" என்று இழுத்தான். அவன் குரலில் நடுக்கம் தொனித்தது.

"என்னடா!"

"கா...ல...ணா...!"

"எதற்கு!"

"பம்பரம் வாங்க."

மாமாவிடம் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே அவன் அத்தை வந்து விட்டாள்.

"என்ன! இன்னொரு தரம் சொல்லு! பம்பரமா வேண்டும்!" என்று கோபத்தோடு கத்தி முடிப்பதற்குள் 'பளார்' என்று முதுகிலே அடித்தாள். அலறித் துடித்தான் செல்வன்.

அன்றெல்லாம் அழுதான் செல்வன். அவன் அழுகையைப் போக்கக் காலணா கொடுப்பதற்கு ஆள் இல்லை.

அன்று மாலை யாரோ உறவினர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் சினிமாவுக்குப் போக வேண்டும் என்று சொல்லவே தம்பதிகள் சிறுவனையும் கிழவியையும் விட்டு விட்டுப் போவதெனத் தீர்மானித்தார்கள். சமையல் பொறுப்பு கிழவியின் மேல் விழுந்தது.

'சினிமாவுக்குப் புறப்படும் நேரத்தில் மகிழ்ச்சியாக இருப்பார்கள். உறவினர்கள் மத்தியில் காலணா கேட்டால் இல்லை என்று சொல்லாமல் கொடுத்து விடுவார்கள்' என்று எண்ணிப் புறப்படும் பொழுது செல்வன் மாமாவை அணுகினான்.

"மாமா......காலணா!"

அவன் வாய் அந்தச் சொற்களை உதிர்த்ததோ இல்லையோ, அவன் அத்தை செல்வனைப் பார்த்துப் புருவங்களை நெரித்தாள்.

அப்பப்பா......அந்தப் பார்வை!

"பம்பரம்தானே! நாளைக்கு நான் வாங்கித் தருகிறேன். போ!" என்றார் மாமா நிதானமாக.

சிறிது தூரம் போனதும், "ஐயா......சாமி......காலணா......தருமம்......" என்ற குரல் மாமாவை மேலே போக வொட்டாமல் தடுத்தது. உறவினர்களுக்கு மத்தியில் பிச்சைக்காரனுக்கு இல்லை என்று சொல்வது கௌரவக் குறைவாகப் பட்

டதோ என்னவோ, சட்டைப் பையில் இருந்து பணம் எடுத்தார். கையில் அரையணா வந்தது.

"காலணா கொடு" என்று பிச்சைக்காரனிடம் காலணா வாங்கிக் கொண்டு அரையணாவைக் கொடுத்தார்.

பிச்சைக்காரன் நகர்ந்தான். பையன் ஓடினான்.

"மாமா, காலணா!"

"தொந்தரவு பொறுக்க முடியவில்லை. கொடுத்து அழுங்கள்!" என்றாள் அத்தை எரிச்சலாக.

பிச்சைக்காரன் கொடுத்த காலணா செல்வனின் கைக்கு மாறியது. கால் சட்டைப் பையில் பத்திரப் படுத்திக் கொண்டான்.

இரவு எட்டு மணிக்குச் செல்வனுக்குத் தூக்கம் கண்களைச் சுற்றியது. அத்தையின் தாயாரைச் சோறு போடும்படி கேட்டான்.

"எனக்குத் தெரியாது. எல்லாம் அவள் வந்து போடுவாள்" என்று கூறி அந்தக் கிழவி சோறு போட மறுத்து விட்டாள்.

இரவு பத்து மணி வரை விழித்துக் கொண்டிருக்க முடியாமல் தூங்கி விட்டான் சிறுவன். அவன் தூங்கிய பிறகு அவள் மட்டும் சாப்பிட்டாள்.

மாமா வந்ததும் வராததுமாக, "டேய் செல்வா, எழுந்திரு! சாப்பிட்டு விட்டுத் தூங்கலாம்!" என்று எழுப்பினார்.

"அவன் சாப்பிட்டாயிற்று. நான் போடுவதற்கு முன்னர் அவனே போட்டுக் கொண்டு சாப்பிட்டு விட்டான்" என்றாள் கிழவி. அவளுக்கு என்ன எண்ணமோ! தான் சாப்பிட்ட சாப்பாட்டுக்குக் கணக்குக் காட்ட எண்ணினாளோ!

"இல்லை மாமா, பாட்டி போடமாட்டேன் என்று சொல்லி விட்டார்கள். நான் இன்னும் சாப்பிடவில்லை. எனக்குப் பசிக்கிறது!"—குழந்தை உண்மையைக் கூறினான்.

அதைக் கேட்ட அவன் அத்தைக்குக் கோபம் அடக்க முடியவில்லை.

"நீ கெட்ட கேட்டுக்குப் பொய் வேறு! இனி மேல் பொய் பேசாதே! பொய் பேசாதே!" என்று கத்திக் கொண்டே ஆத்திரம் தீர அவனை அடித்தாள். மாலையில் அடக்கி வைத்திருந்த கோபத்தை யெல்லாம் அப்பொழுதுதான் பரிபூரணமாகக் காட்டிக் கொண்டாளோ, என்னவோ! செல்வன் சுருண்டு விழுந்தான்.

"டேய் குத்துடா......!"

"பிளந்து விடுகிறேன், பார்......"

"சிறுதாண்டா பம்பரத்தைக் கோட்டிலே வைக்க வேண்டும்!"

"தெருவில் சிறுவர்கள் போட்ட கூச்சல் மறுநாள் காலையில் செல்வனை எழுப்பியது.

சிறுவர்கள் பம்பரம் ஆடும்பொழுது போட்ட கூச்சல் தானா முதலில் அவன் செவிகளைத் தாக்க வேண்டும்! 'இன்று எப்படியாவது சிறுவர்களுடன் பம்பரம் ஆடவேண்டும்' என்று எண்ணிய செல்வன் கால் சட்டைப் பையில் கையை விட்டுத் தடவினான்.

"நான் எங்கும் போகவில்லை. இங்கேயே இருக்கிறேன்!" என்று சொல்வது போல் அவன் கையில் தட்டுப்பட்டது காலணா.

'பம்பரம் விளையாட வேண்டும்' என்ற ஆசையின் முன் உலகமே மறந்து விட்டது அவனுக்கு. அவன் அத்தையின் கோபத்தைக் கூட மறந்தான்.

வீட்டை விட்டு வெளியே வந்தான். பம்பரம் விற்கும் கடை அவனுக்குத் தெரியும். அவன் அந்தக் கடைக்கு ஓடினான்.

"பம்பரம் கொடு!" என்று சொல்லிக் காலணாவைக் கொடுத்தான் கடைக்காரனிடம்.

காசைக் கையில் வாங்கிய கடைக்காரன் காலணாவையும் பையனையும் மாறி மாறிப் பார்த்தான்.

உடனே அந்தக் காலணாவைச் செல்வன் முன்னால் வீசி எறிந்தான்.

செல்வன் அந்தக் காசைக் கையில் எடுத்துக் கொண்டான். அதை விட்டால் அவனுக்கு வேறு காலணா எங்கே கிடைக்கும்!

கடையின் எதிரில் நின்றபடி செல்வன் தேம்பித் தேம்பி அழுதான்.

மனிதர்களே செல்வனிடம் இரக்கம் காட்டவில்லை. அந்தச் செம்பு நாணயம் என்ன செய்யும்? அதற்கென்ன ஓர் உள்ளமா இருக்கிறது!

அந்தக் காலணா......!

ஒரு செல்லாத காலணா!

கபிஸ்தலம் மூப்பனார்

இந்த உலகில் உண்மையும், இரக்கமும் இல்லாமல், "இல்லை" "போ" "நாளை வா" என்ற பதில்களைப் பகர் பல சமயங்களில் உபயோகிப்பது லௌகீகார்த்தமாக மாறிக் கொண்டு வருகிறது. ஆனால், தஞ்சை மாவட்டம், காவேரியின் வடகரையிலுள்ள கபிஸ்தலத்தில் பிறந்து, தென்கரையிலுள்ள சுந்தரப் பெருமாள் கோவிலில் வாழ்ந்து வந்த திரு ஆர். கோவிந்தசாமி மூப்பனார் மட்டும் இந்த மூன்று பதில்களில் ஒன்றையாவது ஒரு தடவையாவது உபயோகப்படுத்தியதில்லை. எனக்குத் தெரிந்த முப்பது வருஷ அனுபவத்திலிருந்து இதைச் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட வள்ளல், கபிஸ்தலம் மூப்பனார் என்று புகழ்பெற்ற உத்தமர் திரு ஆர். கோவிந்தசாமி மூப்பனார் அவர்கள் மார்ச் பதினேழாந் தேதி இந்த மண்ணுலகை விட்டு மறைந்து விட்டார். இரக்கமற்ற காலன் ஐம்பத்துமூன்றே வயது நிரம்பிய மூப்பனாரை அழைத்துச் சென்று விட்டான்.

தஞ்சை மாவட்டத்தில் பெருநிலம் படைத்த பண்ணையார்களில் கபிஸ்தலம் மூப்பனார் முக்கியமானவர். கும்பகோணம் கல்லூரியில் படிக்கும் போதே 'எல்லோருக்கும் நல்லவன்' என்ற பட்டத்தைப் பெற்றார்.

இனிய சாரீரத்தில் நல்ல பாட்டுகளை அழகாக மிக நெருங்கிய நண்பர்களுக்கு இடையில் மட்டும் பாடி ஆனந்தப்படுவதுதான் இவருடைய பொழுது போக்கு. ஆஸ்திகர். தஞ்சை மாவட்டத்தில் உள்ள பெரிய கோவில்களில் முக்கிய உத்ஸவங்களை யெல்லாம் மிகத் திறமையுடன் நடத்தி வந்த பக்தர். சென்ற நூற்றைம்பது வருஷமாக நடந்து வரும் கபிஸ்தலம் மூப்பனார் பண்ணை சத்திரத்தில் தினந்தோறும் சுமார் இருநூறு பேர்களுக்கு அறுசுவை அன்னம் வழங்கி வருகிறார்கள். இவரது நிலக் குத்தகைத்தொகை மிகவும் குறைவானது. தர்மக் குத்தகை என்று சொல்லுவார்கள்.

காங்கிரஸ் மகாசபையினிடத்தும் காந்தி மகாத்மாவினிடத்தும் பேரன்பு கொண்டவர். பொது ஸ்தாபனங்களில், கௌரவ பதவிகளில் அறவே ஆசை யில்லாதவர்.

இப்படி யெல்லாம் குணசீலராக இருந்து மறைந்த கபிஸ்தலம் திரு கோவிந்தசாமி மூப்பனாரின் ஆத்மா சாந்தி அடைவதாக!—எல். நடராஜன்

FAMOUS *throughout* INDIA

The Qutb Minar, Delhi

குதுப் மினார் காலத்தின் சோதனைகளை வென்று அழகுக்குப் புகழ் பெற்று நெடுங்காலமாக நிற்கிறது.

"வெஸ்ட் எண்ட்" கடிகாரங்களும் இதைப்போலவே நெடுங்காலமாகப் புகழுடன் விளங்குகின்றன. நல்ல கடிகாரங்களுக்குரிய—அதாவது சரியான மணி காட்டுவது, நீடித்த உழைப்பு, கவர்ச்சியான தோற்றம்; இவை யாவும் ஒருங்கே கொண்டது "வெஸ்ட் எண்ட்" கடிகாரங்கள் என கடந்த 80 வருடங்களுக்கு மேலாக நன்கு நிரூபிக்கப் பட்டுள்ளது. அதற்குக் காரணம்—சிறந்த பொருள்களைக் கொண்டு இந்தியாவுக்குகந்த கடிகாரத்தை மிகத் தேர்ச்சி பெற்ற தொழில் நிபுணர்களால் தயாரிக்கப் படுவதே.

நீங்கள் ஒரு கடிகாரத்தை வாங்கும் பொழுது அதன் டயல் மேல் உள்ள 'வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.' என்ற பெயரை எப்போதும் கவனியுங்கள்.


West End Watch Co.

BOMBAY · CALCUTTA

Write for FREE Catalogue.

SOWAR PRIMA SPECIAL
CENTRE SECOND

Patent Everbright Steel Rs. 105



உண்டுகளித்த உண்மையை
உவந்து சொல்கிறான் அந்தரங்கமாய்



"ஜே. பி. மங்காராமின் **ராயல் க்ரீம்** பிஸ்கட்டுகளை வாங்கித் தரச் சொல்லி அப்பாவைக் கேள். இந்த பிஸ்கட்டுகளில் இருக்கும் நேர்த்தியான க்ரீமின் வாசனையை நீ விரும்புவாய்!"

தரத்தில் உயர்ந்தது
விடமின் சத்து நிறைந்தது

அழகிய வர்ண வேலைப்பாடுகளமைந்த காற்றுப்புகாத பாக்கெட்டுகளில் உள்ள மங்காராமின் **ராயல் க்ரீம்** பிஸ்கட்டுகள் பரிசுக்கு உகந்ததாக விளங்குகின்றன!

ஜே. பி. மங்காராம் & கோ., குவாலியர்

சென்னை ஆபீஸ்: 35/37, தம்பு செட்டித் தெரு, சென்னை - 1

NATIONAL M. 2.

ஆற்றங்கரையினிலே

பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை

13. குகப் பெருமாள்

அரக்கர் என்பவர் இரக்கம் அற்றவர்; அகிலமெல்லாம் ஆளும் ஆசை உற்றவர். முன்னொரு காலத்தில் அவர் இவ்வுலகத்தில் ஆதிக்கம் பெற்றனர். அறம் வாடிற்று. மறம் எங்கும் தலை விரித்து ஆடிற்று. அப்போது அயோத்திமா நகரில் அவதரித்தான் இராமன்.

"வித்தகர் செய்த
வெவ்வியதீ வினையாலும்
அருங்கடையில் மறையறைந்த
அறம்செய்த அறத்தாலும்
இருங்கடகக் கரதலத்திவ்
எழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க்
கவுசலையென் பாள்பயந்தாள்"

என்று இராமாவதாரத்தின் பெருமையைப் பாடினார் கம்பர். நல்லோர் செய்த நல்வினையாலும், தீயோர் செய்த தீவினையாலும் கோசலையின் திருமகனாய்த் தோன்றினான் இராமன்; நாடாளும் உரிமையை இழந்து கானகம் நோக்கி நடந்தான். அப்பெருமானொடு சீதையும் இலக்குவனும் சென்றார்கள்.

தேனடைந்த சோலைத் திருநாடு துறந்து மூவரும் கங்கையாற்றின் கரையை வந்தடைந்தார்கள். அங்கே அருந்தவம் முயன்ற முனிவர்கள் அறமே உருவாகிய மூவரையும் கண்டு அகமகிழ்ந்தனர்: ஆனந்தக் கண்ணீர் சிந்தினர்; அழகிய சொல்மாலை அணிந்து போற்றினர்; அன்பென்னும் அமிர்தத்தை ஊட்டினர்.

"பொழியும் கண்ணில்
புதுப்புனல் ஆட்டினர்
மொழியும் இன்சொலின்
மொய்ம்மலர் சூட்டினர்
அழிவில் அன்பெனும்
ஆரமுது ஊட்டினர்
வழியில் வந்த
வருத்தத்தை வீட்டினர்"

அம்முனிவர்களுடன் ஒரு தவச் சாலையில் ஆனந்தமாக உரையாடிக் கொண்டிருந்தான் இராமன்.

அப்போது அங்கு வந்தான் ஒரு வேடர் தலைவன். அவன் கன்னங்கரிய மேனியன்; செம்மை சான்ற மனத்தினன். கங்கை யாற்றிலே பிடித்த மீனை ஒரு கையிலும், கொம்பிலே வடித்த தேனை மற்றொரு கையிலும் கொண்டு, இராமன் தங்கியிருந்த தவச் சாலையின் முன்னே நின்று,

"தேவா! நின் கழல் சேவிக்க வந்தனன்
நாவாய் வேட்டுவன் நாயடியேன்"

என்று கூவினான். அவனை ஐயனிடம் அழைத்துச் சென்றான் இலக்குவன்.

வேடர் பெருமானாகிய குகன் இராமனைக் கண் குளிரக் கண்டான்; உள்ளம் தழைத்தான்; மீனையும் தேனையும் அவன் முன்னே வைத்தான்; திருவடியில் விழுந்து வணங்கி எழுந்தான். "தேவரீர் திருவமுது செய்வதற்காக இவற்றைத் திருத்திக் கொணர்ந்தேன்" என்று அன்பு ததும்பப் பேசினான்.

வேடன் செயல் கண்ட முனிவர்கள் வெறித்து நோக்கினர். "குலத்தளவே ஆகும் குணம்" என்பதை மெய்ப்பித்து விட்டானே குகன் என்று எண்ணி மனம் குழம்பினர். அந்நிலையில் அவரை நோக்கிப் புன்னகை புரிந்தான் இராமன். "அகத்தில் அமைந்த அன்பின் சின்னங்கள் ஆகும் இப் பொருள்கள்: ஆதலால் இவை அமிழ்தினும் சிறந்தன" என்று நல்லுரை பகர்ந்தான்.

சடை முடியும் மரவுரியும் தரித்துத் தவச் சாலையில் இருந்த இராமன் கோலத்தைக் கண்டு குகன் உள்ளம் உருகிற்று. "ஐயோ! மண்ணுலகம் செய்த பாவத்தால் அன்றோ இம் மன்னன் மணிமுடி துறந்தான்? ஏற்றமும் தோற்றமும் இழந்து இவ் ஆற்றங்கரையிலே அமர்ந்தான்; எத்துணைச் சிறப்பாகக் காண வேண்டிய கமலக் கண்ணனை இந்தக் கோலத்தில் காண்கின்றேன்? என் கண் செய்த பாவம் கடலினும் பெரிது" என்று மனங் கரைந்து நின்றான்.

அந்நிலையில் அந்தி மாலை வந்தது. ஐயன் குகனை நோக்கி "நாளைக் காலையில் கங்கையைக் கடப்பதற்கு நீ உதவி புரிதல் வேண்டும். ஆதலால் இன்று உன் ஊருக்குச் சென்று இடம் கொண்டு நாளை வருக" என்று விடை கொடுத்தான். அச் சொல் வேடன் உள்ளத்தில் அம்பு போல் தைத்தது. 'என்னைப் போய் வா என்றானே! நான் எவ்வாறு போவேன்? எங்கே போவேன்?' என்று அங்கலாய்த்தான்.

"கார்குலாம் நிறத்தான் கூறக்
காதலன் உணர்த்து வான், இப்
பார்குலாம் செல்வ! நின்னை
இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன் யான்
இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் ஆன தைய
செய்குவன் அடிமை என்றான்"

"உலகெலாம் ஆளப் பிறந்த உத்தமனே! கள்ள முடைய என் உள்ளத்தை நீ கண்டு கொண்டாய்! என் போலித் தன்மையை

எப்பொழுதும் உபயோகியுங்கள்

சாஸ்திரீயமான

TT MISKY

டி.டி. மிஸ்கி

பெருங்காயம்

ரவீந்த் ஜெம்ஷெட் சன்ஸ் & கோ.

H. O. பம்பாய் - 3

கிளைகள்: மதராஸ், மதுரை, கும்பகோணம் சூரத், அஹமதாபாத்

N.B: இலவச பரிசு கூப்பன்களை எதிர்பாருங்கள்

சுலேகா

பௌண்டன் பேனா இங்க்
("எஸ் - 100" ஸால்வென்ட் கூடியது)

உலகத்திலுள்ள இதர மைகளுக்கு ஓர் அறைகூவல்

தரத்தில் உயர்ந்தது

உயர் ரக பொருள் வாங்கி சுதேசியை ஆதரியுங்கள்



SULEKHA WORKS LTD.
SULEKHA PARK :: CALCUTTA - 32
Branches: DELHI - BOMBAY - MADRAS
மதராஸ் ஆபீஸ்: 5, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை-1

அறிந்துதான் 'இன்று போ' என்று பணித்தாய். உண்மையில் நான் அன்புடையவனாயின் இந்தக் கோலத்தில் உன்னைப் பார்த்த கண்களைப் பறித்து எறிந்திருக்க மாட்டேனா? ஆயினும், என் அப்பனே! உன்னை விட்டு எங்கே போவேன்? இன்ப நிலையை விட்டு இன்னலின் உன்னை போவேனோ? நிரம்பிய அன்பு என்னிடம் இல்லையென்றாலும் இயன்ற சேவை செய்து கொண்டு இங்கேதான் இருப்பேன்" என்றான் குகன்.

அவன் சொல்லிய சொற்களைக் காதாரக் கேட்டான் இராமன். கருமையான உருவத்தில் அமைந்த அருமையான அன்பின் சுவையை நுகர்ந்தான். அவன் உள்ளத்தின் செம்மையைச் சீதையும் தம்பியும் கண்டு கொண்டார்களா என்று அறிய விரும்பி இருவர் முகத்தையும் நோக்கினான். தம்பியின் முகத்தில் ஓர் இன்ப ஒளி படர்ந்திருந்தது. மாசற்ற மனமுடையான் ஒருவன் வேடர் குலத்தில் உள்ளான் என்று எண்ணிக் களிப்புற்ற தம்பியின் முகம் 'திருமுக'மாய் இலங்கிற்று.

"கோதைவிற் குரிசில் அன்னான்
கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி
திருமுகம் நோக்கித் தீராக்
காதலன் ஆகும் என்று
கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நண்ப
இருத்தீஈண்டு எம்மொடு என்றான்"

கருணை நிறைந்த கண்களால் குகனைப் பார்த்து "யாதினும் இனிய நண்பா! எம்மொடு நீயும் இரு" என்று இன்னுரை கூறினான்.

அவ்வுரை கேட்ட குகன் ஆனந்த வாரியில் மூழ்கினான்; அரைகுறை அன்பினரையும் ஆட்கொண்டருளும் அண்ணலின் அடியினை பணிந்தான்; வேடப் பெரும் படையைக் கூவி அழைத்தான்; தவச் சாலையைச் சுற்றி நின்று காவல் புரியக் கட்டளை இட்டான்.

அப்போது இலக்குவன் நாணற் புல்லைப் பாயலாக விரித்தான். அதன் மீது பள்ளி கொண்டனர் இராமனும் சீதையும். வில்லேந்திய கையனாய் விடியும் அளவும் கண்ணயராமல் இருவரையும் காத்து நின்றான் இலக்குவன். புல்லிலே படுத்திருந்த தன்னிகரில்லாத் தலைவனையும், தன் நலம் மறந்து நின்ற தம்பியையும் மாறி மாறிப் பார்த்து மனம் உருகிக் கண்ணீர் சொரிந்தான் குகன்.

"தும்பியின் குழாத்தில் சுற்றும்
சுற்றத்தன் தொடுத்த வில்லன்
வெம்பிவெந்து அழியா நின்ற
நெஞ்சினன் விழித்த கண்ணன்
தம்பிநின் றானை நோக்கித்
தலைமகன் தன்மை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீர்
அருவிசோர் குன்றின் நின்றான்"

பொழுது புலர்ந்தது; கங்கையைக் கடப்பதற்கு ஆயத்தமானான் கமலக் கண்ணன். அப்போது குகன் அவன் அடி பணிந்து, "ஐயனே! அண்மையிலே உள்ளது அடியேன் இருப்பிடம். அங்கே தேனும் தினையும் உண்டு; மெல்லிய தோலாடை உண்டு; ஏவல் புரிய வேடர் பலர் உண்டு. ஒருநாளேனும் மூவரும் அங்கே தங்கி அருள் புரிய வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தான்.

அது கேட்ட இராமன் "அன்பனே! இன்னும் சில காலம் புனித மாதவரோடு உறவாடி, புண்ணியத் துறைகளாடித் திரும்பி வரும்பொழுது அங்கு வருவோம்" என்று வாக்களித்தான். குகனுடைய உள்ளம் குளிர்ந்தது. உடனே ஓடத்தை வரவழைத்தான். மூவரும் முறையாக ஏறிய பின்பு அவ்வோடத்தைத் தானே ஆனந்தமாகச் செலுத்தினான்.

"பாலுடை மொழியாளும் பகலவன் அனையானும்
சேலுடை நெடுநன்னீர் சிந்தினர் விளையாடக்
கோலுடை நீமிர்கோலில் துழவிய நெடுநாவாய்
காலுடை நெடுஞெண்டில் சென்றது கடிதம்மா"

இவ்வாறு கங்கை யாற்றைக் கடந்த பின்னர், "சித்திரகூடத்துக்கு வழி எது?" என்று வினவினான் இராமன். "ஐயனே! வழி காட்டிக் கொண்டு அடியேனும் உம்மோடு வருவேன். பாதை செய்வேன்; பர்ணசாலை கட்டுவேன், பாதுகாத்து நிற்பேன்" என்று பணிவுடன் கூறினான் குகன்.

கங்கை வேடனது கங்குகரையற்ற அன்பு இராமன் உள்ளத்தைக் கவர்ந்தது. அகமும் முகமும் மலர்ந்து அன்பனை நோக்கி "என் உயிர் அனையாய் நீ; என் தம்பி உன் தம்பி; என் மனையாள் உன் தோழி" என்று இணையற்ற மொழி பகர்ந்தான் இராமன்.

குலத்தாலும் நலத்தாலும் வேறுபட்ட குகனைத் தன் குடும்பத்தில் சேர்த்துக் கொண்ட தலைவனது பெருங் கருணையை நினைந்து உருகினாள் சீதை. தன்னந் தனியளாய் அசோக வனத்தில் சிறையிருந்தபோது,

"ஆழ நீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பிநின் தம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்."

"ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது" கங்கை வேடனைச் சரிநிகர் சமானமாகக் கருதிய அரும் பெருங் கருணையை வியந்து,

"ஆழிவண்ண நின் அடியிணை அடைந்தேன்
அணிபொழில் திரு அரங்கத்து அம்மானே"

என்று பாடினார் திருமங்கை ஆழ்வாரும். பயன் கருதாப் பேரன்பின் பயனாக வேறு யாரும் பெறாத பேறு பெற்ற கங்கை வேடனைக் 'குகப்பெருமாள்' என்று வைணவ உலகம் போற்றி வழிபடுகின்றது.



தென் இந்தியா ஆபீஸ்:
6/149, பிராட்வே, மதராஸ்-1

வள்ளி குகை வள்ளி



'குடும்பத்தோடு திருச்செந்தூர் போகப் போகிறோம். நீங்களும் வர வேண்டும்' என்று என் தங்கை புருஷர் கூப்பிட்டபோது, அழகின் இருப்பிடத்தைக் காணும் ஆவலில்தான் புறப் பட்டேன். அங்கே அழகான கதை யொன்றும் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

சமுத்திர ஸ்நானம் முடிந்து, கந்தவேளைத் தரி சித்த பிறகுதான் எனக்கு அந்த நினைவு எழுந்தது. புறப்படும்பொழுது குடியிருக்கும் வீட்டுப் பெண் பூமா, "அங்கே ஒரு குகையில் ஒளிந்து கொண் டிருக்கும் வள்ளியைத் தரிசனம் செய்ய மறந்து



விடாதீர்கள்" என்று சொன்னதை நினைத்துப் புறப்பட்டோம், குகையைத் தேடி.

கடற்கரையில் எழுந்துள்ள சிறு கோயிலில் சிலை வடிவில் நிற்கும் வள்ளியைக் காட்டி, "இவர் தான் குகையில் ஒளிந்திருந்த வள்ளி" என்றான் எங்க ளுடன் வந்த ஆள். நான் பெரும் ஏமாற்ற மடைந்து, "குகை!" என்றேன். "அதைத்தான் கோயிலாக்கி விட்டார்கள்" என்று அவன் பதில் சொன்னதும், கோயில் வாசலில் கடலைப் பார்த்த படி உட்கார்ந்திருந்த ஒரு கிழவர் நிமிர்ந்து, "இல்லை; இல்லை. குகை இருக்கிறது. நான் காட்டு கிறேன், வாருங்கள்!" என்று எழுந்து நடந்தார். எல்லாரும் அவரைப் பின் தொடர்ந்தோம்.

அந்தச் சின்னக் கோயிலின் பிராகாரத்தைச் சுற்றிக் கொண்டு வந்த கிழவர், இருட்டாக இருந்த மத்திய பாகத்துக்கு வந்ததும் நின்று தம் இடுப்பில் இருந்த நெருப்புப் பெட்டியை எடுத்துக் குச்சியைக் கிழித்துத் தூக்கிப் பிடித்தார். என்ன ஆச்சரியம்! அங்கே குகை யொன்று இருந்தது! வெளிச்சத்துக்காகக் குச்சியைக் கிழித்தபடியே கிழவர் குகைக்குள் செல்ல ஒவ்வொருவராக நாங் களும் குகைக்குள் நுழைந்து இரண்டு திருப்பங் களையும் கடந்து கடைசியில் வேடனுக்காகப் பயந்து பதுங்கி நிற்கும் வள்ளியைக் கண்டு மகிழ்ந்தோம்.

வள்ளி தரிசனம் முடிந்து குகையை விட்டு வெளி வந்ததும் கிழவர் சொன்னார்:—"அந்த நாளில் எனக்கும் இங்கு குகை இருப்பது தெரியாது. 'வள்ளிக் குகை வள்ளி' தான் இதை எனக்குக் காட் டினாள்" என்றதும் எங்கள் ஆவல் அதிகரித்தது.

அலைமோதும் கடலைப் பார்த்தபடி உட்கார்ந்த கிழவர் எங்கள் வற்புறுத்தலுக்குப் பின் வள்ளிக் குகை வள்ளியைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

“அந்த நாளில் வள்ளியும், முருகனும் இந்த வெண் மணலிலேதான் வீடு கட்டி விளையாடுவார்கள்; இந்தச் சமுத்திரத்தின் அலைகளோடு ஆடி அலைந்து நீந்துவார்கள்; கட்டைகளை மரக்கலமாக மிதக்க விட்டு அதில் ஏறி அலைகளுடன் போராடி மகிழ்வார்கள். அந்தச் சின்ன வயதிலேயே அவர்களுக்கு நீரில் மூழ்கி நீந்தும் கலை நன்றாக வந்து விட்டது.

ஒரே தெருவில் அடுத்தடுத்து உள்ள வீடுகளில் பிறந்து ஒன்றாக இந்தக் கடற்கரையில் விளையாடி வளர்ந்த அவர்களுக்கு, கடலில் உள்ள ஒவ்வொரு அலையும், மலைகளில் உள்ள ஒவ்வொரு குகையும் நன்றாகப் பழகி விட்டன. குகைக்குள் ஓடி ஒளியும் வள்ளியை முருகன் தேடிப் பிடித்து விடுவான். அலைகளில் மூழ்கி மறையும் முருகனை நீந்திப் பிடித்து விடுவாள் வள்ளி. இப்படி அவர்களது இளமைப் பருவம் இன்ப அலைகளுடன் துள்ளிக் கொண்டு ஓடியது.

முருகன் வாலிபனான போது, வள்ளியும் மங்கைப் பருவத்தை அடைந்தாள். அக் குடும்பத்திலே உள்ளவர்கள் அவர்களுக்குப் ‘பருவம்’ என்று எவ்விதத் தடையும் விதிக்கவில்லை. அதனால் அவர்கள் என்றும் போலவே கூடிப் பேசி, விளையாடி மகிழ்ந்தார்கள்.

இந்த மணற்பரப்பிலே உட்கார்ந்து முருகன் அன்றுதான் வேலை செய்த இடத்திலே நடந்ததையெல்லாம் விவரிப்பான். வள்ளி தன் வீட்டிலே நடந்தவற்றை வர்ணிப்பாள். இடையிடையே மற்றும் பல பையன்களும், பெண்களும்கூட அவர்களுடன் கலந்து கொள்வார்கள். இப்படித்தான் அன்று புதிதாக வந்த வேலன் என்ற வாலிபனும் அவர்களுடைய பேச்சில் கலந்து கொண்டான்.



வேலன் முருகனைவிட அழகில் ஒரு படி மேலாக இருந்தான். ஆனால் வள்ளிக்கு அது ஒரு பொருட்டாகப் படவில்லை. முருகன் பேச்சைக் கேட்பதில் அவளுக்கு உள்ள ஆர்வம், வேலன் பேச்சைக் கேட்பதில் இல்லை. வேலனுக்கோ வள்ளியின் பேச்சுத் தேனாக இனித்தது. அலை மோதும் கடலிலும், அசையாத கல்லிலும் வேலன் வள்ளியின் எழில் முகத்தைத்தான் கண்டான். சிரிக்கும் அவள் விழிகளும், ஒளி வீசும் வெண் பற்களும், வங்காள மஞ்சளை உரைத்துப் பூசியதால் தங்க மெருகேறி ஒளி வீசும் அவள் கதுப்புக் கன்னங்களும் வேலனின் உள்ளத்தையே கொள்ளை கொண்டு விட்டன.

முருகனைத் தேடி வள்ளி வெளிவரும்போதெல்லாம் வள்ளியைத் தேடி நிற்கும் வேலனும் வந்தான். வள்ளி வேலனை வெறுக்கவில்லை. விரும்பவில்லை. சீக்கிரமே வள்ளி வேலனை வெறுக்கும்படியான சம்பவம் ஒன்று நடந்தது.

அன்று முருகன் மட்டுமே கடற்கரைக்கு வந்தான். தூரத்தில் வள்ளி வருவதைக் கண்ட அவன் வள்ளியை ஏமாற்றும் எண்ணத்துடன் வள்ளிக் குகைக்குள் வந்து ஒளிந்து கொண்டான். அவன் ஒளிந்து கொண்ட சிறிது நேரத்துக்கெல்லாம் பிராகாரத்தில் பலருடைய பேச்சுக் குரல் கேட்டது. திடுக்கிட்ட முருகன் வெளியில் வர முயன்றதும் அவன்மீது, ‘டார்ச்’ விளக்கின் வெளிச்சம் விழுவதும் சரியாக இருந்தது. அதைத் தொடர்ந்து, “திருட்டுப் பயலே! இங்கே ஒளிந்து கொண்டு என்னடா செய்கிறாய்!” என்ற கேள்வியுடன் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் தம் இரும்புக் கரத்தை அவன் கழுத்தில் கொடுத்து வெளியே இழுத்து நிறுத்தினார். அவருக்குப் பின்னால் வள்ளி தரிசனத்துக்கு வந்த மற்றவர்களும் பிரமிப்புடன் நின்றனர்.

முருகன் முதலில் நடுங்கி விட்டான். பிறகு சற்றுச் சமாளித்துக் கொண்டு, “இல்லை, எஜமான்! ஒரு பிள்ளைக்காகப் பராக்குக் காட்ட இங்கே ஒளிந்து கொண்டேன்” என்றான். அவனுடைய வணக்கம் இன்ஸ்பெக்டரைச் சாந்தமாக்கியது. “பராக்குக் காட்ட ஒளியும் இடம் இதுவாடா! தடிமாடு! போடா, வெளியே!” என்று அதட்டி அவனை விட்டுவிட்டுக் குகைக்குள் டார்ச்சுடன் நுழைந்தார். நுழைந்தவர் இரண்டாவது அடியை எடுத்து வைக்கவில்லை. அடங்காத கோபத்துடன், “அடே, நாத்திரண்டு! அந்தப் பயலை விடாதே! பிடி! பிடி!” என்று சத்தமிட்டார். அப்படி அவர் சத்தமிடக் காரணமாக இருந்தது குகையினுள் கிடந்த ஒரு தங்கச் சங்கிலியேதான்.

முருகன் குகைக்குள் ஒளிந்து வெளி வந்ததும், அங்கே அந்தச் சங்கிலி கிடந்ததும் இன்ஸ்பெக்டருடைய சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்து விட்டது. முருகன் என்ன சொல்லியும் அது அவர் காதில் ஏறவேயில்லை. முருகன் போலீஸ் தாணாவுக்குள் தள்ளப்பட்டான்.

முருகனைத் தேடி வந்த வள்ளிக்கு விஷயம் எட்டியதும் திடுக்கிட்டாள். உலகமே இருண்டு விட்

டது போல இருந்தது. குகை வாசலில் திகைப்புடன் உட்கார்ந்து விட்ட அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. திகைப்பு சற்றுக் குறைந்த பிறகு தான் அவளுக்கு யோசனை ஏற்பட்டது. 'திருட்டு, புரட்டு, பொய், சூது இவைகளுக்கும் முருகனுக்கும் வெகுதூர மாயிற்றே! இது எப்படி நேர்ந்திருக்கக் கூடும்!'

யோசனையில் ஆழ்ந்த வள்ளிக்கு வேலனின் நினைவு வந்தது. அதோடு சந்தேகமும் எழுந்தது.

'கண்ணைத் திருப்பாமல் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் வேலனுக்கு முருகன்மீது ஏன் பொறாமை ஏற்படாது! பொறாமையால் முருகனை ஒழிக்க அவன் செய்த சதியாக இது இருக்கலாம் அல்லவா! போலீஸ் இன்ஸ்பெக்டர் இங்கே வரப் போவது தெரிந்து அவன் இத்தகைய காரியம் செய்திருக்கலாம் அல்லவா! தினமும் இந்தப் பக்கமே சுற்றும் அவன் இன்று இந்தப் பக்கமே இன்னும் தலைகாட்டவில்லையே!' இவ்விதமெல்லாம் எண்ணிப் பார்த்த வள்ளிக்கு வேலன்மீது ஏற்பட்ட சந்தேகம் வலுப்பட்டது.

வேலன் பொறாமைக்காரன், அயோக்கியன் என்று வள்ளியின் மனத்தில் ஆழ்ந்து பதிந்து விட்டபின் முருகனிடத்திலே அவளுக்குள்ள மதிப்பு மேலும் அதிகமாகி விட்டது.

ஒரு பாவமும் அறியாத அவன் சிறையிலே கல் உடைப்பதா! அதைச் சகித்துக்கொண்டு அவள் உயிரோடு இருப்பதா! முடியவே முடியாது. என்ன செய்தாவது முருகனைச் சிறையிலிருந்து மீட்டாக வேண்டும். மனத்தைத் திடம் செய்து கொண்டு எழுந்த வள்ளிக்கு முன்னே பொத்தென்று ஒரு பொன் காசு விழுந்தது. காசைக் கையிலெடுத்துப் பார்த்த வள்ளிக்குத் தன் தீர்மானத்தைக் கோயிலிலுள்ள வள்ளியம்மையும் அங்கீகரித்து விட்டதாகத் தோன்றியது. அதனால் அவள் உறுதியோடு வேலனின் வீட்டை நோக்கி விடுவிடு என்று நடந்தாள்.

வள்ளி தன் வீட்டை நோக்கி வருவதைக் கண்டு வேலன் அதிசயித்தான்.

வேகமாக வந்த வள்ளி நடந்த விவரங்களை வேலனிடம் சொல்லி, "ஒரு பாவமும் அறியாத முருகனை ஆபத்தில் மாட்டி விட்டு நீ வேடிக்கை பார்ப்பது நன்றாயில்லை" என்றாள். அதைச் சொன்னவள் வேலன் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். திகைத்து நின்ற வேலன் ஏதோ சொல்ல ஆரம்பித்தான். வள்ளி அவனை முந்திக் கொண்டு, "இதோ பார்! இந்தக் கோயிலில் இருக்கும் வேல் முருகன் சாட்சியாகச் சொல்லுகிறேன், நான் சொல்கிறபடி நீ கேட்டாயானால் நான் உன்னைக் கலியாணம் செய்து கொள்கிறேன்!" என்றாள்.

துள்ளிக் குதித்தான் வேலன். "வள்ளி! குகைக் கோயிலில் இருக்கும் வள்ளியம்மை சாட்சியாகச் சொல்கிறேன். நீ எது சொன்னாலும் அதை இப்பவே செய்து முடிக்கிறேன். என்னைக் கலியாணம் செய்து கொள்வதாகச் சொன்னாயே, அதை மட்டும் இன்னொருமுறை உன் வாயால் சொல்லு" என்றான் அவன்.

வெறுப்பால் துடித்த வள்ளி மெள்ளத் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "இதோ பாரு! சத்தியம் செய்தபின் பின் வாங்கக் கூடாது. நினைவு வைத்துக் கொள். நீ இப்பொழுதே போய்ப் போலீஸாரிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டு முருகனை விடுதலை செய்ய வேண்டும். தண்டனைக் காலம் முடிந்து நீ வெளிவந்தவுடன் நான் உன்னைக் கலியாணம் செய்து கொள்கிறேன்!" என்றாள்.

வேலன் திடுக்கிட்டான். "வள்ளி! ஆறுமாசமில்லை; ஆறு வருஷம் கூட உனக்காக நான் சிறையில் வசிக்கத் தயார். ஆனால், இது என்ன! நான் செய்யாத குற்றத்தை எப்படிச் செய்ததாகச் சொல்வது!......" என்று அவன் தொடருமுன் வள்ளி குறுக்கிட்டாள்.

"இதோ, பார்! சும்மாச் சுற்றி வளைத்துப் பேசுவதில் புண்ணியமில்லை. இஷ்டம் இருந்தால் ஒப்புக் கொள்; இல்லாவிட்டால் விட்டு விடு. நீ ஒப்புக் கொண்டால் எத்தனை வருஷமானாலும் காத்திருந்து முருகன் சாட்சியாக நான் சொன்னதை நிறைவேற்றுகிறேன்" என்றாள்.

வேலனுக்கு உடல் சிலிர்த்தது. வள்ளி உறுதியுடன் சொல்லும் வார்த்தைகளைக் கேட்ட போது அவனது மனத்திலே எழுந்த சந்தோஷ அலைகளின் முன், குற்றமற்ற தன்னை அவள் குற்றவாளியாக நினைக்கும் துன்பம் சிறு துரும்பாகிவிட்டது. ஆகவே அப்பொழுதே போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லத் தயாரானான்.

புறப்பட்டுக் கொண்டே வேலன், "வள்ளி! அவர்கள் என் வார்த்தையை நம்புவார்களா! சாட்சி ஏதாவும் வேண்டாமா!" என்றான்.

வள்ளிக் குகையில் கிடைத்த தங்கக் காசை அவன் கையில் வைத்து, அது கிடைத்த விவரத்தையும் சொல்லி, "'இதுவும் சங்கிலியோடு சேர்த்துத் திருடியது' என்று சொல்லு. இந்தக் காசின் முகப்பு சங்கிலியுடன் சேர்ந்து விடுமானால் சாட்சியமே வேண்டாம். சேராவிட்டால் இதன் சங்கிலியை மட்டும் விற்று விட்டதாகச் சொல்லு" என்று யோசனையும் சொல்லி அனுப்பினாள்.

வள்ளியின் சாதுரியத்தை நினைத்து வியந்தபடியே வேலன் நடந்தான்.



பிறகு என்ன ஆயிற்று! வள்ளி எதிர் பார்த்த படியே முருகன் விடுதலையாகி விட்டான். வேலனுக்கு எட்டு மாதத் தண்டனையும் கிடைத்தது. நிம்மதியாகப் பெருமூச்சு விட்ட வள்ளிக்கு, முருகன் விடுதலையாகி வந்ததை நினைக்கும் போது சந்தோஷம் பொங்கியது. ஆனால் அடுத்த கணமே எட்டு மாதங்களுக்குப் பிறகு திருடனான வேலனுக்கு மனைவியாக வேண்டுமே என்பதை நினைத்த போது அவளுக்கு மயக்கமாக வந்தது. முன் போல் உற்சாகமாக இருக்க முடியவில்லை.

விடுதலையாகி வந்த முருகனும் முன்போல் உற்சாகமாக இல்லை. வேலனுடன் பழகியுள்ள முருகனுக்கு அவன் குணம் நன்றாகத் தெரியும். 'வேலன் தன் மீது உள்ள அன்பினால்தான் வேண்டுமென்றே தவற்றைத் தன் மேல் இழுத்துப் போட்டுக் கொண்டு சிறையில் வாடுகிறானோ!' என்று சந்தேகித்தான். அதனால்தான் அவன் உற்சாக மற்றுக் கலங்கினான். எப்படியும் குகையில் சங்கிலி கிடந்தவரை உண்மைத் திருடன் ஒருவன் இருந்தேயாக வேண்டும் என்று முருகனுக்குப் பட்டது. ஆகவே அவன் உண்மைத் திருடனைக் கண்டு பிடித்து விட்டால் வேலனுக்கு விடுதலை கிடைத்து விடும் என்ற நம்பிக்கையில் வேலை செய்யத் தொடங்கினான். மாலை நேரத்தில் குகையின் பக்கத்தில் பதுங்கியிருந்தும், பகலில் குகைகளைச் சோதனை போட்டும் பலவிதங்களில் முயற்சித்து உண்மைத் திருடனைக் கண்டு பிடிக்க முனைந்து விட்டான்.



பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கோயமுத்தூரில் ஸ்ரீராம நவமி உற்சவத்தைக் கொண்டாட ஆரம்பித்தார், திரு ஆர். சுப்பராவ். அதுமுதல் ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ ராம நவமி உற்சவத்தைத் தொடர்ந்து சிறந்த முறையில் நடத்தி வருகிறார். இந்த ஆண்டு ஸ்ரீராம நவமி உற்சவத்தைத் திருப்புகழ் மணி திரு டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் சென்ற இருபத்தைந்தாம் தேதி ஆரம்பித்து வைத்தார். உற்சவம் பதினொரு தினங்கள் நடைபெறும். உற்சவத்தை ஆரம்பித்து வைத்த திருப்புகழ் மணி அவர்களுக்கு திரு ஆர். சுப்பராவ் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதையும், ஸ்ரீராம நவமி உற்சவத்தில் கலந்து கொண்ட ஆஸ்திகத் தமிழ்ப் பெருமக்களின் ஒரு பகுதியையும் படத்தில் காணலாம். ★★★★

இப்படி வெவ்வேறு திசைகளில் மனத்தைச் செலுத்தி வந்ததால் முருகனும், வள்ளியும் முன் போலச் சந்தித்துக் கலகலப்பாகப் பழகி மனம் விட்டுப் பேச முடியவில்லை. முருகனின் நிலை வள்ளிக்குப் புரியாத புதிராக இருந்தது. வள்ளியின் நிலையைக் காண முருகனுக்குச் சிறிதும் அவகாசமே இல்லை.

விடாமல் முயற்சித்த முருகன் கடைசியில் ஒரு நாள் வெற்றி கண்டான். மணிக்கணக்காக வள்ளி குகைக்குள் உட்கார்ந்து தியானம் செய்வதாகப் பாசாங்கு செய்து கொண்டிருந்த சாமியாரைச் சந்தேகித்த முருகன் ஒரு நாள் சாமியார் உடைக்குள் மறைந்து கொள்ளும் திருடனைக் கையும் களவுமாகக் கண்டு பிடித்தே விட்டான். போலீஸாரும் வந்து திருடனை அடித்து உதைத்துக் கேட்ட போது பல விஷயங்கள் வெளிப்பட்டன. அப்படி வெளிப்பட்ட விஷயங்களில் முருகனும் வேலனும் சிறைக்குள் நுழையக் காரணமாக நின்ற அந்தச் சங்கிலியும் அவன் திருடியது தான் என்பதும் ஒன்று. விஷயம் அறிந்த போலீஸார் வேலனை வற்புறுத்தி உண்மையை அறிந்து கொண்டு அவனை விடுதலை செய்தனர். அத்துடன் சிறைவாசத்தால் உடல் நலம் கெட்டுச் சுரமாகக் கிடந்த வேலனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பித் தக்க வைத்தியம் செய்யவும் ஏற்பாடு செய்தனர்.

விஷயத்தைக் கேட்டதும் வள்ளி திகைத்து விட்டாள். 'வேலனும் நல்ல பிள்ளை' என்று எண்ண எண்ண அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. "பாவம்; அவன் மீது கொண்டுள்ள ஆசை காரணமாக அவன் எவ்வளவு பெரிய காரியத்தைச் செய்தான்!" இதை நினைத்துப் பார்த்த வள்ளிக்கு உள்ளம் நெகிழ்ந்தது. உடல் சிலிர்த்தது. சற்று முன் வரை வள்ளிக்கு வேலனைப் பற்றி நினைக்கும்போது மனத்தில் வெறுப்பும், கசப்பும்தான் வந்து நிறைந்து கொண்டிருந்தன. ஆனால் இப்போதோ அவன் பெயரை நினைக்கும் போதே தனது மனத்தில் ஒரு பூரிப்பும், இனிப்பும் வந்து நிறைவதைக் கண்டாள்.

ஆஸ்பத்திரியிலே வேலனைக் கண்டு பேசி விட்டு வந்திருந்த முருகனின் முகத்தில் குதூகலம் பொங்கிக் கொண்டிருந்தது. முருகனைப் பழையபடி கண்ட வள்ளிக்கும் உற்சாகம் பிறந்தது. வள்ளியைக் கண்ட முருகன், "வள்ளி! வேலன் விடுதலையாகி விட்டானே! தெரியுமா உனக்கு! பாவம்;

அவன் எனக்காக எவ்வளவு பெரிய கஷ்டத்தை ஏற்றுக் கொண்டான் !'' என்றான். அதைச் சொல்லும்பொழுது அவனுடைய கண்களில் நீர் முட்டி நின்றது.

வள்ளிக்கு உதடு துடித்தது. நிகழ்ந்ததைச் சொல்லி விடலாமா என்று எண்ணினாள். முருகன் அதற்கு இடம் கொடாமல் "வள்ளி, நான் ஒரு முடிவு செய்து விட்டேன். வேலனுக்கு என் அருமைத் தங்கச்சியை மணம் முடித்துக் கொடுத்து எப்பொழுதும் என் கூடவே வைத்துக் கொள்வது என்று தீர்மானித்து விட்டேன் !'' என்றான்.

அளவற்ற ஆச்சரியத்தால் வள்ளியின் அழகிய விழிகள் அகன்றன. "உன் தங்கச்சியா ! அது யாரு!'' என்று அடங்காத வியப்போடு கேட்டாள்.

கலகலவென்று சிரித்த முருகன், "அவளை உனக்குத் தெரியாதா ! எப்பொழுதும், இந்தக் கடலிலும், கரையிலும் என் கூடவே விளையாடிக் கொண்டு நிற்குமே; எனக்கு நினைவுபட்ட நாள் முதல் என்னைப் பிரியாத பிரியமுள்ள தங்கச்சி வள்ளியை உனக்குத் தெரியாதா !'' என்றான்.

கும்பிருட்டைக் கிழித்துக் கொண்டு சூரியன் உதயமானதுபோல வள்ளிக்கு விஷயம் இப்பொழுது பளிச்சென்று விளங்கியது. முருகனுக்குத் தன் மீதுள்ள அன்பை வள்ளி இப்போது நன்கு புரிந்து கொண்டாள். அவள் நினைவு உடனே வேலன்மீது தாவியது.

வள்ளியின் மௌனத்தைக் கண்ட முருகன், "என்ன யோசனை, வள்ளி ! 'வேலன் மனசு எப்படியோ !' என்று யோசிக்கிறாயா ! அவனுக்கு உன் பெயரைச் சொன்னாலே எவ்வளவு சந்தோஷம் உண்டாகிறது, தெரியுமா ! ஆஸ்பத்திரியிலே நான் அவனைக் கண்டதும் முதலில் உன்னைப் பற்றித்தான் கேட்டான் !'' என்று சொன்னது வள்ளிக்குத் தேனாக இனித்தது.

இன்று, நாளை உடம்பு குணமாகி வந்து விடுவான் வேலன் என்று இன்பமும், ஆவலும் பொங்கக் காலங் கழித்த வள்ளி அன்றும் வழக்கம் போல முருகனிடம், வேலனைப் போய்ப் பார்த்து வந்த விவரம் கேட்கச் சென்றாள்.

வள்ளியைக் கண்ட முருகன், "வேலனை வீட்டுக்கு அழைத்து வந்து விட்டோமே. அதோ பார் !'' என்று சுட்டிக் காட்டினான். அவன் காட்டிய திசையில் ஆவலுடன் திரும்பிய வள்ளி திடுக்கிட்டுத் திகைத்து விட்டாள். ஏற்றக் கிணற்றின் மேடைமீது உட்கார்ந்திருந்த வேலனுக்கு அருகில் ஒரு அழகான பெண்ணும் உட்கார்ந்திருந்தாள். அவள் கலகலவென்று வேலனுடன் பேசிச் சிரிப்பது வள்ளியின் மனத்தைப் படபடக்கச் செய்தது. வேறு கவனமாக இருந்த அவர்கள் வள்ளி நின்ற பக்கம் திரும்பவில்லை.

வள்ளியின் திகைப்பைக் கண்ட முருகன், "சொல்ல மறந்து விட்டேன், வள்ளி ! வேலனுடைய அத்தை மகள்தான் அந்தப் பெண்ணு. நேற்றுத்தான் இங்கே வந்திருக்கிறாள். வந்ததும் வேலனின் நிலையைக் கண்டு கதறி விட்டாள். நேற்று முழுவதும் அவன் கூடவே இருந்து கவனித்துக் கொண்டாள். வேலனுக்கும் அந்தப் பெண் தேவானையிடத்தில் ரொம்பப் பிரியம்'' என்று சற்று நிறுத்திய முருகன் மீண்டும், "ஏன், வள்ளி ! தேவானை நல்ல அழகியில்லே !'' என்று கேட்டு ஆவலுடன் வள்ளியைப் பார்த்தான்.

வள்ளிக்குத் தலையைச் சுற்றி மயக்கமாக வந்தது. "அந்தப் பெண்ணை ......'' என்று மீண்டும் ஏதோ கூற வந்த முருகன் சட்டென்று நிறுத்தி விட்டான். வள்ளியின் முகம் அப்போது பார்க்கப் பயங்கரமாக இருந்தது. கலவரத்துடன் அவளை முருகன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே விடுவிடென்று போய்விட்டாள் வள்ளி.

ஆத்திரமும், அழுகையும் குமுறிக் கொண்டு வந்தன வள்ளிக்கு. 'என்மேல் வைத்த ஆசையால் தானே, தான் செய்யாத குற்றத்துக்காகச் சிறையிலே கிடக்கச் சம்மதித்தான் வேலன் ! அப்படிப் பட்ட என் ராஜாவை ஒரு நொடியிலே கவர்ந்து கொண்டு விட்டாளே, கள்ளி !' என்று எண்ணி எண்ணிக் குமுறினாள் வள்ளி. அவள் ஆத்திரம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகி இரவில் அது உச்சத்தை அடைந்து விட்டது.

சட்டென எழுந்த வள்ளி அப்பனுடைய பனை மட்டை சீவும் கத்தியைக் கையிலெடுத்து மறைத்தபடி மெள்ள அடிமேல் அடி வைத்து வீட்டுக்கு வெளியே வந்தாள். அவள் தகப்பன் விழித்துக் கொள்ளவில்லை என்பதை அறிந்து கொண்டு மெள்ளக் கதவைச் சாத்திவிட்டு விடு விடு என்று நடந்தாள், வேலனது வீட்டை நோக்கி.

பொறாமை என்னும் சூறாவளியில் தாக்குண்டு பேயாக மாறிய வள்ளியின் மனம் வேலன் வீட்டை நெருங்க நெருங்கப் படபடத்தது. சாளரத்தின் மூலம் தெரிந்த விளக்கு வெளிச்சம் அவள் படபடப்பை அதிகமாக்கியது. மெள்ள அடிமேல் அடி வைத்துக் கதவருகில் நெருங்கி வந்த வள்ளியை உள்ளே நடந்த பேச்சு மேலே ஒரு அடி கூடப் பெயர்த்து வைக்க முடியாமல் செய்தது. வியப்பில் ஆழ்ந்து நின்ற வள்ளியின் செவிகளில் பின் வரும் சம்பாஷணை அமிர்தமாக விழுந்தது:—

"......அதெல்லாம் சரி ; 'வள்ளி உன்னைக் கட்டிக் கொள்ள இஷ்டப்படவில்லை' என்று நீ எதைக் கொண்டு தீர்மானித்தாய் ! அதைச் சொல், முதலில் !'' என்றாள் தேவானை.


"நீயும், முருகனும் ஒருவரை யொருவர் பார்த்ததுமே எவ்வளவு சந்தோஷமாகக் கலியாணத்தைத் தீர்மானித்து விட்டீர்கள் ! என் விஷயம் அப்படியில்லையே ! வள்ளி அன்று என்னைக் கட்டிக் கொள்வதாகச் சத்தியம் செய்தவுடன் நான்தான் சந்தோஷப்பட்டுக் குதித்தேன். வள்ளி என்னவோ முகத்தை, விளக்கெண்ணெய் குடித்த மாதிரிதான் சுளுக்கிக் கொண்டாள். 'இப்படி இஷ்டம் இல்லாதவளைச் சத்தியத்திலே சிக்க வைத்தது தப்பு' என்று எண்ணி எண்ணி ஏங்கித்தான் எனக்குக் காய்ச்சலும் கண்டது. விடுதலையானதும் தீர்மானித்து விட்டேன், இஷ்டம் இல்லாதவளைக் கட்டிக்கொள்வதில் புண்ணியமில்லை ; இஷ்டப்படும் ஒருவனுடன் அவள் சுகமாக இருப்பதைப் பார்ப்பதே புண்ணியம் !'' என்று நிறுத்திப் பெருமூச்சு விட்டான் வேலன்.

வள்ளியின் மனம் துடித்தது. கண்களில் கண்ணீர் முட்டியது. அப்படியே உள்ளே நுழைந்து வேலனது காலிலே விழுந்து கதறி விடலாமா என்று துடித்தது அவள் நெஞ்சு. நெஞ்சை அடக்கிக் கொண்ட வள்ளி வந்த சுவடு தெரியாமல் திரும்பி விட்டாள்.

மறுநாள் மாலை கடற்கரையில் தன்னந் தனியாக உட்கார்ந்திருந்த வேலன் தோள்மீது இரு மென் கரங்களின் ஸ்பரிசம் படவே வியப்புடன் திரும்பினான். கண்களில் அன்பு மிதக்க நின்ற வள்ளியைக் கண்ட வேலன், "ஆ ! வள்ளி ! இது நிசந்தானா!'' என்று ஆச்சரியம் தாங்காமல் கேட்டான்.

கலகலவென்று சிரித்த வள்ளி, "இது நிசமே தான் !'' என்று சொல்லிக் கொண்டே புள்ளி மானைப் போல் துள்ளி ஓடினாள்.

அவளைத் தொடர்ந்து ஓடிய வேலன் வள்ளி கோயில் பிராகாரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தான்.



ஸரஸ்வதி வித்யாலய இசை விருந்து

தமிழ் நாட்டிலிருந்து உத்தியோக நிமித்தம் நெடுந் தூரம் சென்று வாழ்கிற தென்னிந்திய மத்தியதரக் குடும்பத்துக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டி, அரும் சேவை செய்து வருகிறது புனா ஸரஸ்வதி வித்யாலயம். இந்த வித்யாலயத்துக்கு என்று சொந்தமாக ஒரு கட்டடம் இல்லாத குறையைப் போக்கப் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார், பம்பாய் மாகாணச் சுகாதார இலாக்கா டைரக்டரும் வித்யாலயத்தின் தலைவருமான ஸ்ரீ டி. கே. விசுவநாதன். இதன் பலனாக, மார்ச் 6ந் தேதி இந்தக் கட்டட உதவி நிதிக்காக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் ஒரு இன்னிசைக் கச்சேரி செய்தார். திருவாலங்காடு சுந்தரேசய்யர் (வயலின்), தஞ்சாவூர் மூர்த்தி (மிருதங்கம்), உமையாள்புரம் கோதண்டராமய்யர் (கடம்) ஆகியோரின் பக்கவாத்தியங்களுடன் வெகு சிறப்பாக நடைபெற்ற இந்த அருமையான இசை விருந்தைச் சுமார் நாலாயிரம் ரஸிகர்கள் திரளாக வந்திருந்து கேட்டு மகிழ்ந்தார்கள். மொத்தம் ரூ. 23,000/- வசூலாயிற்று. வித்யாலயத்திற்கு மற்றும் சில பிரமுகர்கள் வழங்கிய நன்கொடை விவரம் வருமாறு;— மதுரை ஸ்ரீ டி. எஸ். ராஜம் 1001/-; ஸ்ரீ பிட்டி 501/-; ஸ்ரீ கோவிந்த மோடி ரூ. 501/–; சபார்டினேட் அக்கௌண்ட்ஸ் ஸர்வீஸ் ஆசிரியர்கள் ரூ. 501/-; வடபாதிமங்கலம் ஸ்ரீ தியாகராஜ முதலியார் 301/–; பம்பாய் வக்கீல் ஸ்ரீ நாராயணஸ்வாமி ரூ. 301/-; ஹிந்து அதிபர் ஸ்ரீ கே. ஸ்ரீனிவாசன் ரூ. 250/-; 'கல்கி' மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ சதாசிவம் ரூ. 500/-

இந்த நன்கொடைகளை அறிவித்துப் பேசும்போது டாக்டர் டி. கே. விசுவநாதன் அவர்கள் வித்யாலயத்தின் வளர்ச்சியை விவரித்துக் கூறி ஸ்ரீமதி எம். எஸ். அவர்களுக்கும் மற்ற நன்கொடையாளருக்கும் நன்றி செலுத்தினார். பொது நலப் பணியில் இத்தனை ஊக்கத்தோடு தொண்டாற்றி வரும் ஸ்ரீ விசுவநாதன் போன்ற அன்பர்களின் முயற்சியினால் இந்த வித்யாலயம் மேலும் மேலும் வளர்ந்தோங்குமாக!

அவனுக்கு முன்னால் ஓடி வந்த வள்ளியைக் காணாமல் திகைத்தான். கண்களைக் கசக்கிக் கொண்டான்; கைகளை உரசிப் பார்த்துத் தான் கண்டது கனவில்லை என்று நிர்மாணித்தான். அப்படியானால், 'வள்ளி எங்கே!' என்றுதான் பதறினான். 'வள்ளி! வள்ளி!' என்று அவன் கூப்பிட்டதும், 'கலுக்' கென்ற சிரிப்பொலி கேட்டது. இந்தச் சின்னப் பிராகாரத்தில் வள்ளி ஒளிந்து நிற்க இடமே இல்லையே என்று அவனுக்கு வியப்பாக இருந்தது.

வேலனை அதிகம் சோதிக்க விரும்பாத வள்ளியும் பெரும் வியப்புடன் ஒளிந்துள்ள இடத்திலிருந்து வெளி வந்தாள். வந்தவள், "இந்தக் குகையை நீ எப்படி மறந்தாய்!" என்றாள்.

அவள் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்ட வேலன் வியப்போடு, "குகையா! அது எங்கே இருக்கிறது வள்ளி!" என்றான்.


வள்ளியின் கண்கள் அகல விரிந்தன. அவளை அழைத்து வந்து இந்தக் குகையைக் காட்டியவள் குழைவோடு, "குகையிருப்பதே அறியாத உன்னைப் போய்......" மேலே பேச முடியாமல் வள்ளியின் மனத்தைத் துக்கம் சூழ்ந்தது.

ஆவலோடு அவளைப் பார்த்த வேலன், "வள்ளி! வள்ளி! நிசமாகவே உன் அன்பு எனக்குக் கிடைத்து விட்டதா! இதை என்னால் நம்ப முடியவில்லையே!" என்றான்.

அளவற்ற சந்தோஷத்தால் வள்ளிக்குப் பேச முடியவில்லை. அகல விரிந்த அவள் கண்கள்தான் வேலனுடன் கணக்கின்றிப் பேசிக் கொட்டின. அவளது அந்த அழகிய விழிகளுக்கு அன்று அடிமையான வேலன் இன்றளவும் மீள வழியின்றி நிற்கிறான்" என்று கதையை முடித்து விட்டுக் கிழவர் கைத் தடியை எடுத்துக் கொண்டு எழுந்தார்.

வள்ளியின் உலகத்திலிருந்து மீண்ட நாங்களும் திடுக்கிட்டு எழுந்தோம். என் தங்கை ஸரோஜா, "அப்படியானால் அந்த வேலன் நீங்கள்தானா!" என்று கேட்டாள்.

இலேசாகச் சிரித்த கிழவர், "ஆம், அம்மா, இல்லா விட்டால் வள்ளியின் மனத்திலே புகுந்து பார்த்த மாதிரி எப்படியம்மா, விஷயங்களைச் சொல்ல முடியும்!" என்று கூறி விட்டு விடுவிடென்று நடந்தார். மெள்ள, மெள்ள அவர் உருவம் மறைந்து விட்டது. ஆனால், அவர் சொன்ன அந்த, 'வள்ளிக் குகை வள்ளி'யைப் பற்றிய கதையோ எங்கள் எல்லாருடைய மனத்திலும் நின்று விட்டது.



முறை அதிக குணமுள்ளது.

ஏனெனில்


1 கொயினா, காப்பீன், பினாஸிடின், அஸிட்டில் ஸாலிஸிலிக் ஆஸிட் முதலிய நான்கு மருந்துகள் சாஸ்திரிய முறைப்படி அனாஸினில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

2 அனாஸின், நரம்பு கூட்டத்தில் பிரவேசித்து வேதனைகளிலிருந்து துரிதமாக நிவாரணம் தருகிறது.

3 அனாஸின், ஒரு டாக்டரின் மருந்துக் குறிப்பைப் போன்றது.

4 அனாஸின், தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, தசைவலி, நீர் வாயு இவைகளிலிருந்து துரிதமாகவும், அபாயமின்றியும் நிச்சயமாகவும் நிவாரணம் அளிக்கிறது.





எப்பொழுதும்

அனாஸின்

வில்லைகள்

வேண்டுமென்றே கேளுங்கள்

புதுச்சேரி விழா

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ராஜாஜி தமது வாழ்நாளில் எத்தனையோ காரியங்கள் சாதித்திருக்கிறார். எத்தனையோ திட்டங்கள் வகுத்து வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார். நம் நாட்டுக்கு எத்தனையோ கஷ்டமான நிலைகள் ஏற்பட்ட போதெல்லாம், அருமையான யோசனைகள் கூறியிருக்கிறார். இத்தனையிருந்தும் அவற்றைப் பற்றிப் பேசும் வாய்ப்பு பிறரேதான் எடுத்துக் கொண்டிருந்தார்கள். தம்மைத் தாமே பாராட்டி மகிழ்ந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்கு இதுவரை யாருமே அளித்ததில்லை. இந்த அருமையான வாய்ப்பைச் சென்ற மார்ச்சு 20-ம் தேதி புதுச்சேரியில் ஆரம்பித்த பிரஞ்சு பண்பாட்டு சங்கத்தினர்தான் வழங்கினார்கள்! அந்தக் கழகத்தின் வரவேற்புரையும் திறப்பு விழாப் பிரசங்கமும் சுமார் முக்கால் மணி நேரத்துக்கு மேல் பிரஞ்சு மொழியில் இச்சங்கத்தின் டைரக்டர் டாக்டர் பிலியாஸட்டும், பிரஞ்சு அம்பாஸிடர் கவுண்ட் ஆஸ்த்ரராகுவும் நிகழ்த்தினார்கள். இவர்களுக்குப் பிறகு பேசத் தொடங்கிய ராஜாஜி, "இத்தனை நாழிகை இவர்கள் பேசிய பேச்சில் ஒரு எழுத்துக்கூடப் புரியவில்லை. ஆடுபோல் ஆடாமல் உட்கார்ந்திருந்தேன். இந்த என் பொறுமையைக் கண்டு என்னை நானே பாராட்டிக் கொண்டேன்!" என்றார்.

இவ்வாறு ராஜாஜி பொறுமையுடன் ஒரு கூட்டத்தில் இருக்க நேரிட்டது என்றால் அந்தக் கூட்டம் உண்மையிலேயே விசேஷம் பொருந்திய கூட்டமாகத்தானே இருக்க வேண்டும்!

சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் தேதி புதுச்சேரியிலிருந்து பிரஞ்சு அரசாங்கம் வாபஸ் பெறப்பட்டது. புதுச்சேரி பாரத நாட்டுடன் இணைந்தது. அப்போது பாரத அரசாங்கம், பிரஞ்சு நாட்டுக் கலை-கலாச்சாரத் தொடர்பு இந்நாட்டில் என்றும் இருக்க வேண்டும் என்றும், அதற்காகப் புதுச்சேரியிலுள்ள பிரஞ்சுக் கல்லூரியையும், பிரஞ்சு உயர்தரப் படிப்பில் ஆராய்ச்சிகள் நடத்த ஒரு கட்டடத்தையும் பிரஞ்சு சர்க்காருக்குக் கொடுப்பதாக வாக்களித்திருந்தனர். அதன் படி தான் இப்பொழுது பிரஞ்சுக் கழகம் தொடங்கப் பட்டுள்ளது.

எஸ்.வி.எஸ்

இக்கழகத்தில் மூன்று பிரிவுகள் இருக்கும். மேல் படிப்புக்காக பிரான்சு தேசத்துக்குச் செல்லும் மாணவர்களுக்கு பிரஞ்சு மொழிப் பயிற்சி யளிப்பது, பாரத நாட்டிலுள்ள பிரஞ்சு ஆசிரியர்களுக்காக பிரஞ்சு இலக்கிய சம்பந்தமான சொற்பொழிவுகள் முதலியவற்றை ஏற்பாடு செய்வது, பிரான்சிலுள்ள பெரிய பல்கலைக் கழகங்களின் 'பட்டங்களைப் பெறப் பாரத நாட்டு ஆராய்ச்சியாளருக்கு வசதியளிப்பது முதலியன.

இரண்டாம் பகுதி பாரத நாட்டுக் கலாச்சாரத்தையும் கலைகளையும் சரித்திரத்தையும் ஆராய வசதி யளிப்பது. பிரான்ஸில் பாரத நாட்டுக் கலைச் செல்வத்தை எத்தனையோ மேதைகள் நூறு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆராய்ந்து பல உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்கள். அங்கு கீழ் நாட்டுக் கலாச்சார ஆராய்ச்சிக் கழகங்கள் பல தனிப்படவும், பல்கலைக் கழகங்களுடன் இணைந்த முறையிலும் இருக்கின்றன. இப்போது புதுச்சேரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கழகத்தின் இப் பகுதி, பாரத நாட்டுக் கலைப் பண்பை அந்நாட்டவர்களுக்கு உணர்த்த முயற்சிகள் எடுத்துக் கொள்ளும்.

மூன்றாம் பகுதி விஞ்ஞானத்திலும், தொழில் துறையிலும் மேல் நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற முறைகளைப் பாரத நாட்டு இளைஞர்களுக்குக் கற்பிக்கவும், அம் முறைகளில் மேலும் ஆராய்ச்சிகள் செய்யவும் வசதி தரும்.

இந்தக் கழகத்தின் ஆரம்ப விழா, கழகமிருக்கும் தெருவிலேயே போடப்பட்ட பந்தலில் வெகு கோலாகலமாக, பாண்டு வாத்தியம் பிரஞ்சு தேசிய கீதத்தையும், நம் தேசிய கீதத்தையும் முழங்க, ஆரம்பமாகியது!

மேடையில் இரு அரசாங்கப் பிரதிநிதிகள், பிரான்ஸ் தேசத்து அம்பாஸிடர், தலைவர் ராஜாஜி, புதுக் கழகத்தின் டைரக்டர், புதுச்சேரி பிரதம கமிஷனர் ஆகியோர் அமர்ந்திருந்தனர். அவர்களுக்குப் பின்னால் லக்ஷ்மி தேவியின் படம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது.

வெகு நேரம் வரை அதைப் பார்த்து யோசித்துக் கொண்டிருந்தேன்,—இந்த லக்ஷ்மி படத்துக்கும் இந்த விழாவுக்கும் என்ன சம்பந்தம் என்று!

கல்வி, கலை, கலாச்சாரத் தொடர்புள்ள கழகமல்லவா! இங்கு சரஸ்வதி தேவி படமிருந்தால் பொருத்தமாக இருக்கும். லக்ஷ்மி தேவியின் படம் இருப்பானேன்! இதைப் பற்றி யாரிடமாகிலும் கேட்கலாமா என்று யோசித்தேன். பிறகு இதைப் பற்றிப் பேசவே கூடாது என்று தீர்மானித்தேன். ஏனெனில் "யார் சொன்னது லக்ஷ்மிதேவியின் படமென, இது சரஸ்வதி தேவியின் படம்தானே!" என்று சொல்லி விட்டால் என்ன செய்வது என்றுதான் சும்மா இருந்தேன்!

விழாவின் வரவேற்புரை நிகழ்த்திய டாக்டர் பிலியாஸட்தான் பிரான்ஸிலிருந்து புதிதாக வந்துள்ள இக் கழகத்தின் தலைவர். இவர் தமிழ் நன்கு அறிந்தவர் என்றும், தமிழ் மொழியில் ஆராய்ச்சிகள் செய்திருப்பவர் என்றும் அறிந்தேன். என் அருகில் இருந்த ஒருவர், "டாக்டர் பிலியாஸிட், நம்மைப் போல எல்லாம் கொச்சையாகத் தமிழ் பேசமாட்டார்! ரொம்பவும் 'உயர்ந்த தமிழ்' பேசுவார்!" என்றார். அவர் உயர்ந்த தமிழ் என்றவுடன் எனக்குப் பாப்பிலி துரையைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த ஒரு சம்பவம் ஞாபகம் வந்தது. பாப்பிலி துரை தமிழில் மிக்க ஆராய்ச்சியுள்ளவர். அவரை ஒரு முறை மாணிக்கவாசக



ராஜாஜி பிரஞ்சுப் பண்பாட்டு சங்கத்தில் பேசுகிறார்.

ரைப் பற்றிப் பேச அழைத்திருந்தார்களாம்! அங்கு அவர் எழுந்திருந்து பேசிய முதல் வாக்கியம் இதுதான்:

'மாணிக்கவாசகர் ஏழாம் நூற்றாண்டில் எழும்பினார்!''

நம் சாதாரணத் தமிழில், பிறந்தார், தோன்றினார் என்று சொல்லி யிருப்போம். துரையவர்களின் 'உயர்ந்த தமிழ்' 'எழும்பினார்' என்று சொல்லச் செய்தது!

டாக்டர் பிலியாஸட் அருமையான வரவேற்புரை நிகழ்த்தினார். அதில் இரு நூற்றாண்டுகளுக்கு முன்பே பாரத நாட்டுக்கும் பிரான்சுக்கும் நெருங்கிய கலாச்சாரத் தொடர்பிருந்ததாகவும், நமது பஞ்ச தந்திரக் கதைகளை ஆதாரமாகக் கொண்டே அந் நாட்களில் லா பாண்டைன் என்ற பிரசித்தி பெற்ற பிரஞ்சு ஆசிரியர் தமது கதைகளை எழுதினார் என்றும் கூறினார். 1739-ம் ஆண்டில் பாரிஸ் மா நகரத்தில் பாரத நாட்டு இலக்கிய அட்டவணை தயாரித்து வெளியிடப் பட்டதாம். ரெவரண்ட் பான்ஸ் என்பவர் 'அமர கோசம்' என்னும் சமஸ்கிருத நிகண்டு நூலை பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்து வெளி யிட்டாராம். இப்படிப் பல தகவல்களைக் கூறினார்.

பிறகு கழகத் திறப்பு விழாப் பிரசங்கம் செய்தவர் தில்லியிலிருக்கும் பிரஞ்சு அம்பாஸிடர் கவுண்ட் ஆஸ்த்ரராகு என்பவர்.

"இரு நாடுகளுக்கிடையே தொடர்பு பலாத்கார முறையிலும், சமாதானமான கலாச்சார முறையிலும் ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால் பலாத்கார முறையில் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பு அதிக நாள் நீடிப்பதில்லை. அலெக்ஸாண்டர் பலாத்கார முறையில் போரிட்டுப் பல ராஜ்யங்களை வென்று கிரேக்க சாம்ராஜ்யத்தை நிறுவினான். ஆனால் அவன் இறந்தவுடன் அந்த சாம்ராஜ்யம் நிலைகுலைந்து விட்டது. அவனுடன் சென்ற பண்பாடு, கலாச்சாரம், இருபது நூற்றாண்டுகளாயினும் இன்னும் நின்று நிலவி வருகிறது. அப்படியேதான் நெப்போலியனும் ஐரோப்பா முழுவதையுமே தன் குடைக்கீழ் கொண்டு வந்தான், தனது பலாத்கார முறையில்! ஆனால் அந்த சாம்ராஜ்யம் அழிந்து விட்டது. அங்கெல்லாம் பரவிய பிரஞ்சு பண்பாடு இன்றும் நின்று நிலவுவதைக் காணலாம்! பாரத நாட்டை விட்டு பிரஞ்சு ஆட்சி நீங்கினாலும் பிரஞ்சு கலாச்சாரம் இந்த நாட்டில் நிலவ, இக் கழகம் துணை புரியும்!'' என்றார்.

ஆம்! பிரஞ்சு மொழியில்தான் பேசினார். அப்பொழுது ஒன்றும் புரியவில்லை. இல்லை! ஒரு வார்த்தை புரிந்தது. கவுண்ட் ஆஸ்த்ரராகு பேசும்போது "ராஜாஜி'' என்று கூறி விட்டு ராஜாஜியைத் திரும்பிப் பார்த்தார். ராஜாஜி தமக்கு ஒன்றும் புரியவில்லை என்ற பாவனையில கையை விரித்தார். ஆனால் என் பக்கத்திலிருந்தவருக்கு பிரஞ்சு மொழி தெரிந்திருந்தது. அவரை "ஆஸ்த்ரராகு இப்பொழுது என்ன சொன்னார்!'' என்று கேட்டேன்.

"இரண்டு ஆண்டுகளுக்கு முன் தில்லியில் ராஜாஜியைச் சந்தித்தாராம். அப்போது ராஜாஜி, 'நாமிருவருமாக ஒரு முறை புதுச்சேரி போவோம்' என்று கூறினாராம். அன்று அவர் கூறியது இன்று உண்மையாகி விட்டது என்கிறார், ஆஸ்த்ரராகு!'' என்றார்!

இதிலிருந்தே கவுண்ட் ஆஸ்த்ரராகு ராஜாஜியிடம் எவ்வளவு அன்பும் மதிப்பும் வைத்திருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது.

ஆனால் ஆஸ்த்ரராகுவின் பேச்சு புரிந்தவர்களுக்கல்லவா இது புரியும்! அங்கே கூடியிருந்தவர்கள் பெரும்பாலும் பிரஞ்சு மொழி தெரியாதவர்களே. ஆகவே ராஜாஜி தமக்கும் ஆஸ்த்ரராகுவுக்கும் உள்ள தொடர்பைப் பின் வருமாறு வெகு தெளிவாகக் கூறி விட்டார்.

"நான் தில்லியிலிருந்தபோது எனக்கு உற்ற நண்பர்களாகக் கிடைத்தவர்களில் ஒருவர் கவுண்ட் ஆஸ்த்ரராகு. அவரிடம் எனக்கு அன்பும் மதிப்பும் அதிகம். அவர் புதுச்சேரிக்கு 'வா' என்றார், வந்து விட்டேன்!''

அன்றையப் பிரசங்கத்தில், ராஜாஜி பிரிட்டிஷ்காரர்கள் பிரெஞ்சுக்காரர்களின் கடனைத் தீர்த்து வைத்தது பற்றிக் கூறியது ரஸமாக இருந்தது!

அன்று காலை டூப்ளே சிலை பார்க்கச் சென்றோமல்லவா! அதன் பயனாக இந்த ரஸமான கதை பிறந்தது!

"முதன் முதலில் நாடு பிடிக்கும் கலையை பிரஞ்சு கவர்னரான டூப்ளேதான் கண்டு பிடித்தார். இந்நாட்டு மக்களைப் பிடித்து, அவர்களுக்கு உடை அணிவித்து, துப்பாக்கி கொடுத்து, சிப்பாய் என்று பெயரைச் சூட்டி, அவர்களையே இந்நாட்டு மக்கள்மீது ஏவிச் சண்டை போடச் செய்தார். அவ்வாறு நாட்டைப் பிடிக்கும் தந்திரத்தைக் கண்டு பிடித்தவர் டூப்ளேதான்! இந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்ட பிரிட்டிஷ்காரர்கள் பிரஞ்



டாக்டர் பிலியாஸட், கவுண்ட் ஆஸ்த்ர ராகு, ஸ்ரீமதி ஜோஷி, ராஜாஜி முதலியவர்களைப் படத்தில் காணலாம்.


சுக்காரர்களை விட வெகு வேகமாக இந்தியா முழுவதையும் பிடித்துக் கொண்டார்கள். ஆனால் பிடித்த நாட்டைத் திருப்பிக் கொடுக்கும் கலையை பிரிட்டிஷார் பிரஞ்சுக்காரர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். குறித்த தேதியில் தேசத்தைப் பாரத மக்களிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று நாள் பார்த்துக் கொண்டு வந்த லார்ட் மௌண்ட் பாட்டன் இந்நாட்டை விட்டு விட்டுப் போக ரொம்பத் துடித்தார்! நாளை எண்ணிக் கொண்டிருந்தார். இந்தப் பாடத்தை பிரஞ்சுக்காரர்கள் பிரிட்டிஷ்காரர்களிடம் படித்துக் கொண்டு, அதே சமாதான முறையில் புதுச்சேரியை விட்டுச் சென்றார்கள்!'' என்றார்.

இதைக் கேட்டு அங்கு கூடியிருந்த மக்கள் கரகோஷம் செய்து உண்டாக்கிய கலகலப்பு அடங்கச் சற்று நேரமாயிற்று!

புதுச்சேரிப் பொதுமக்களுக்கு அந்தப் பிரசங்கத்தில் ஒரு விஷயத்தை வெகு தெளிவாகக் கூறினார்:

“கல்யாணம் செய்து கொள்ளுமுன் காதலர்கள், மண வாழ்க்கையைப் பற்றி இன்பக் கனவு கண்டு கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று துடிக்கின்றனர். ஆனால் கல்யாணமான பிறகு தொல்லைகளும் பொறுப்புகளும் ஏற்பட்டு விட்டனவே என்று கவலையுறுகின்றனர். அம்மாதிரி நீங்கள் சுதந்திரம் அடைய வேண்டும் என்று துடித்தீர்கள். ஆனால் சுதந்திர மடைந்த பிறகு குறைகள்தான் பெரிதாகத் தென்படும். முன்பெல்லாம் விற்பனை வரி, வருமான வரி கிடையாது. சுதந்திரமடைந்த பிறகு இனி வந்து விடும் போலிருக்கிறதே என்று கவலையுறுகிறீர்கள். ஆம்! ஒரு நிலை அடையுமுன் அந்நிலையிலுள்ள நல்ல அம்சங்களே கண்ணில் படுகின்றன! அந்நிலை அடைந்த பின் குறைகளே கண்ணில் படுகின்றன! ஏற்பட்டுள்ள நல்ல காரியங்கள் படுவதில்லை. முன்பு இல்லாத ஆஸ்பத்திரிகளும், வைத்திய வசதிகளும் இப்பொழுது சுதந்திர நாட்டில் ஏற்பட்டிருப்பதோ, முன்பில்லாத பள்ளிக் கூடப் படிப்பு வசதி இப்பொழுது ஏற்பட்டிருப்பதோ படுவதில்லை! அதனால் எதிலும் நல்ல அம்சங்களைக் கண்டு சந்தோஷமாக - வாழப் பழகிக் கொள்ளுங்கள். வாழ்வின்—சுதந்திரத்தின் லட்சியமே சந்தோஷ வாழ்க்கைதான்!'' என்று கூறினார்.

“நாம் பல துறைகளில் பெரிதும் முன்னேறி யிருக்கிறோம். ஆனால் நமது சரித்திரத்தை அறவே புறக்கணித்து விட்டிருக்கிறோம். மேல் நாட்டினரிடம் போய்த்தான், நமது சரித்திரத்தைக் கொஞ்சம் சொல்லுங்கள் என்று கேட்க வேண்டியிருக்கிறது! இந்தக் கழகம், ஏற்பட்டிருப்பது பெரிதும் பயன் அளிக்கும். இது வெற்றிக்கு மேல் வெற்றி பெற்றுச் சிறந்து விளங்குவதாக!'' என்று ஆசி கூறினார்.



புதுச்சேரி அரமனையின் உட்புறம் உள்ள விஷ்ணு சிலை. செஞ்சியிலிருந்து கொண்டு வரப்பட்டது.

பாரதப் பிரதமர் நேருவின் வாழ்த்துச் செய்தியை திரு ஏ. பக. சந்தா வாசித்தார். பின்னர் செய்தி இலாக்கா மந்திரி டாக்டர் கேஸ்கர் வாழ்த்துச் செய்தி படிக்கப்பட்டது. டில்லி கல்வித் துறை உதவிக் காரியதரிசி ஸ்ரீமதி இ. பி. ஜோஷி கல்வி இலாகா காரியதரிசி அனுப்பிய செய்தியைப் படித்து, இரு நாடுகளுக்கிடையே பல ஆண்டுகளாக இருந்து வரும் இலக்கியத் தொடர்பை விளக்கினார். டாக்டர் வே. ராகவன் தமிழில் பிரஞ்சுப் பேராசிரியர்கள் பலர் வடமொழி இலக்கியத்துக்குச் செய்துள்ள தொண்டுகளைக் கூறினார்.

தேசத்தின் பல பகுதிகளிலிருந்து, பல பல்கலைக் கழகங்களின் தலைவர்கள் அனுப்பி யிருந்த வாழ்த்துச் செய்திகளும் பிரான்ஸ் தேசத்து கல்வி மந்திரியும் மற்றும் பல ஆராய்ச்சிக் கழகப் பேராசிரியர்களும் அனுப்பி யிருந்த பாராட்டுத் தந்திகளும் ஆங்கிலத்திலும் பிரஞ்சு மொழியிலும் மாறி மாறி வாசிக்கப்பட்டன! கடைசியாக பிரஞ்சு தேசிய கீதமும் பாரத தேசிய கீதமும் முழங்கக் காலை பன்னிரண்டரை மணிக்கு விழா முடிந்தது!

★

புதுச்சேரியை விட்டுப் புறப்படுமுன் ஒரு விஷயம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. அதனால் மத்தியதர வகுப்பைச் சேர்ந்த ஒருவரைப் பார்த்து, “ஐயா, புதுச்சேரி பாரத நாட்டுடன் சேர்ந்ததில் உங்களுக்கு ஏதாகிலும் சௌகரியம் ஏற்பட்டிருக்கிறதா!'' என்று கேட்டேன்!

“நிறைய ஏற்பட்டிருக்கிறது. உணவுப் பொருளின் விலைவாசிகள் எல்லாம் பெரிதும் குறைந்திருக்கின்றன. அதனால் இப்பக்கத்து மக்கள் எல்லாம் சந்தோஷமாக இருக்கிறார்கள்!'' என்று கூறினார்.

இதைக் கேட்டதும் எங்களுக்கு நன்றாகப் பசித்து விட்டது. மத்தியான உணவை முடித்துக் கொண்டு புதுச்சேரியிலிருந்து புறப்பட்டோம்.



திருக்குற்றாலம்
21—9—44

நமஸ்காரம்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கடவூரி லுள்ள வீரட்டான ஆலயத்துக்குள் சென்றார். மூர்த்தியை வழிபட்டார். என்றும் இல்லாத தெளிவு மனசுக்கு ஏற்பட்டு விட்டது. இறைவனது உண்மையான தத்துவம் விளங்கி விட்டது. அடடா! இதுவரை விளங்காமல் போயிற்றே என்று ஆற்றாமைப்படுகிறார். ஆற்றாமையைவிட உண்மையில் எக்களிப்பு பாவம் அதிகம் என்பது பாடலில் தெளி வாய்த் தொனிக்கும்.

மையார் கண்டத்தி னாய்—மத
மாவுரி போர்த்தவ னே!

பொய்யா(து) என்னுயி ருள்—புகுந்
தாய் முன்னம் போந்தறி யாய்!

கையார் ஆடர வா—கட
வூர்தனுள் வீரட்டத்(து) எம்

ஐயா! என் அமு தே—எனக்(கு)
ஆர்துணை நீயல தே.

அருமையான பாடல். உணர்ச்சியிலிருந்து எழுந்த பாடல். மெள்ள (Pause) இடை கொடுத்து உணர்ச்சியுடனேயே பாடினால் சுந்தரமூர்த்தினது உணர்ச்சி அப்படியே நம் இதயத்துக்குள் பாய்ந்து விடும். நமக்கு வேறென்ன வேண்டும் என்று சொல்லத் தோன்றும். இனிக் கொஞ்சம் செய்யுள் விளக்கம்.

'மதமா வுரி போர்த்தவனே' என்று பாடி பாவத்தைக் குலைத்து விடக்கூடாது. 'மத' என்று தாழ்த்திச் சொல்லி விட்டுப் பிறகு அழுத்தமாக 'மாவுரி-போர்த்தவ-னே' என்று முடிக்க வேண்டும்.

'புகுந்தாய்' என்று பாடக்கூடாது. 'புகுந்-தாய்' என்று பாட வேண்டும். தாய் என்பதில் அழுத்தம் விழுந்தால்த்தான் உணர்ச்சி வெளியாகும்.

'ஐயா' என்று அலற வேண்டும்; 'எம் மையா" என்று பாடக் கூடாது. 'ஆர்துணை' என்பதில் 'ஆர்' என்பதை உணர்ச்சியோடு பேச வேண்டும்.

தலைவலி போதும் அல்லவா! ஆனாலும் ஒரு விஷயத்தைச் சொல்லி ஆகவேண்டி யிருக்கிறது. 'எழுதினவன் ஏட்டைக் கெடுத் தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' என்ற வழக்கு இருக்கத்தானே செய்கிறது? ஆகவே ஒரு நல்ல பிழை பாடலுக்குள் சௌகரியமாகப் புகுந்து கொண்டது.

இரண்டாவது அடியிலுள்ள விஷயம்: "உண்மையாகவே இப்போது என் உள்ளத் துக்குள் புகுந்து கொண்டாய் கடவுளே: ஏமாற்றமான காரியம் அல்ல. ரொம்ப ரொம்ப சந்தோஷம், இதற்குமுன் வர வழி தெரியாமல்த் தானே போயிற்று" என்ப தான ஹாஸ்யமும் எக்களிப்பும் கலந்த பாவத்தில் நிற்பது.

"முன்னம் போந்தறியாய்" என்பதின் பொருள் தெரிகிறதல்லவா? இதைக் காணா மல் "இன்னம் போந்தறியாய்" என்று பிழையாய் எழுதிவிட்டார் Copyist. இந்தப் பாடத்துக்குப் பொருள் ஏது? "பொய்யா தென்னுயிருள்-புகுந்-தாய்" என்பதோடு பொருந்தவில்லை அல்லவா? பிழைபட்ட பாடத்தோடு சங்கடப்பட்டுக் கொண்டிருப் பதில் பிரயோஜனம் என்ன? Copyist முக்கியமா, ஜட்ஜ் முக்கியமா? ஜட்ஜ் அபத்தமாக எழுதுவார் என்று சொல்லு வதில் என்ன புண்ணியமோ? பாடல் உண்மையான உணர்ச்சியிலிருந்து எழுந் தது. ஆயிரத்துச் செல்வான் வருஷங்களுக் குப் பின் வந்த நமக்கு உண்மையைக் காட்டு கிறது. ஆனந்தத்தை அளிக்கிறது!

டி. கே. சிதம்பரநாதன்


காமினியா அழகு சாதனங்கள்
பட்டுப் போன்ற கூந்தலையும், சோபை யுள்ள வதனத்தையும், மென்மை யான மேனியையும் அளிக்கும் என்கிறார் :
வைஜயந்திமாலா
பரதநாட்டியமே உருவானவர்
* அழகிய ஸ்திரீகள் இயற்கையாகவே காமினியா அழகு சாதனங்களையே விரும்புகிறார்கள். ஈடு இணையில்லாத இந்த அழகு சாதனங்களினால் எளிதில் வசீகரம் பெறமுடியும்.
*
காமினியா ஹேர் ஆயில்
தில்பஹார் டாய்லட் சோப்
ஆட்டோ தில்பஹார்
காமினியா ஸ்னோ
KAMINIA OIL
KAMINIA SNOW
DILBAHAR
DIL BAHAR
TOILET SOAP
ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., BOMBAY 2.
சென்னை, மைசூர், திருவாங்கூர்-கொச்சி ராஜ்யங்களுக்கு சோல் ஏஜண்டுகள் :
ஸ்ரீ வி. ரெங்கராஜு நாயுடு, கோயமுத்தூர்



பின்னி சேலைகள்

அலையலையான
மடிப்புகளுடன் அணிவதற்கு
தனி அழகு தருபவை

நேர்த்தியான ஆடையணி சிங்காரத்துடன் எச்சமயத்திலும் எழிலரசிகளாகத்திகழ விரும்பும் நங்கையர்கள் பின்னியின் சுத்தப் பட்டுச் சேலைகளைத்தான் பெரிதும் விரும்புகின்றனர்.

இந்தச் சேலைகள் தங்களுடைய அழகை பன்மடங்கு சோபிக்கச் செய்யுமென்று அவர்கள் அறிவர். தவிர, இழை நேர்த்தி மற்றும் நெருக்கமான நெசவின் காரணமாக இவை நலுங்காமல், கசங்காமல் நெடு நாள் உழைக்கவும் செய்கின்றன.

பின்னியின் சுத்தப் பட்டுச் சேலைகள் ரம்மியமான வெளிர் நிறங்களில் மட்டுமின்றி, கண்ணைப்பறிக்கும் பகட்டான வர்ணங்களிலும் கிடைக்கின்றன. தங்க ஜரிகை பார்டர்கள் அல்லது முகப்புகளுடன்கூடிய மோஸ்தர்களும் வாங்கலாம்.

அசல் பின்னிச் சேலைகள் அனைத்திலும் இந்த அடையாளம் பொன்னிறத்தில் அச்சிடப்பட்டிருக்கும்.

பின்னி பட்டுகள்

பெங்களூர் வுல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிட்.,
பெங்களூர் 2


ஏஜண்டுகள், காரியதரிசிகள், பொக்கிஷதாரர்கள்:
பின்னி & கம்பெனி (மதராஸ்) லிட்.

B.V. 717

★★★ மார்ச்சு 25, 26, 27 தேதிகளில் பூரி – ஜகந்நாத்தில் சர்வோதய மகாநாடு விநோபாஜியின் தலைமையில் கூடிற்று. அங்கு வரும் தொண்டர்களைக் கருதி திரு சுரேஷ் ராம் அவர்களால் எழுதப்பட்ட இக்கட்டுரை தமிழ்ப் பொது மக்களுக்கும் பயனளிக்கும் என்று இங்கு வெளியிட்டிருக்கிறோம்.

உன்னையே நீ எண்ணிப் பார்!

சுரேஷ் ராம்



"உங்கள் கிராமத்தின் பொதுக்கூட்டம் எப்பொழுதெல்லாம் கூடுகிறது!"

"அமாவாசை யன்றும், பௌர்ணமி யன்றும்."

"நல்ல நாட்களைத் தேர்ந்தெடுத்தீர்கள்! ஒரு நாள் ஒரே இருட்டு; இன்னொரு நாள் ஒரே வெளிச்சம்! வேடிக்கையாகத்தான் இருக்கிறது!"

"ஐயா, கடவுளின் ஆட்சியில் ஒரு நாளுக்கும் மற்றொரு நாளுக்கும் வித்தியாசம் ஏது! எல்லாமே ஒளி பொருந்திய நாட்கள் அல்லவா!"

"உங்களுக்கு வேலையில் கஷ்டம் ஒன்றும் இல்லையே!"

"ஒன்று மில்லை!"

"உங்கள் வாழ்க்கையில் சோகமும் துயரமும் தரக் கூடியவை ஒன்றுமில்லையா!"

"யாவும் 'அவன்' விருப்பப்படி நடக்கின்றன. நாங்களோ அவனால் ஆட்டுவிக்கப்படும் பொம்மைகள். எங்களுக்கு அவனுடைய அருளும், உங்களுடைய ஆசியும் பரிபூரணமாக இருக்கின்றன. பின் எங்களுக்கு என்ன துயரம் ஏற்பட முடியும்! ஒன்றுமில்லைதான்!"

மேற்கண்டவாறு கூறிக்கொண்டு வந்தபோது, அந்தக் கிராம வாசியின் கண்களிலும் அவனுக்குப் பக்கத்திலிருந்த கிராமவாசிகளின் கண்களிலும் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகிற்று!

இந்த இதயம் கலந்த சம்பாஷணை, ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் கட்டாக் ஜில்லாவிலுள்ள மான்பூர் கிராமத் தலைவனுக்கும், விநோபாவுக்கு மிடையே சென்ற பிப்ரவரி மாதம் 26-ந் தேதி நிகழ்ந்தது.

இந்தக் கிராமத்தைப் பற்றி ஒரு தகவல் கூறவேண்டும். 1953-ம் ஆண்டு ஜனவரி மாதம் இக் கிராமம் முழுதும் பூதான யக்ஞத்துக்கு, இக் கிராமவாசிகளால் வழங்கப் பட்டது. அந்த நிலங்கள், வயலில் வேலை செய்யும் குடியானவர்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டது. இப்படிப் புது முறையில் நிலத்தைப் பெற்றுப் புது வாழ்க்கை தொடங்கியுள்ள மான்பூர் கிராம வாசிகளின் தலைவனுக்கும் விநோபாவுக்கும் இடையே தான் மேற்கண்ட சம்பாஷணை நிகழ்ந்தது.

* * *

தெலுங்கானா! அதை நினைத்தாலே மனம் பரிதாபப்படுகிறது! அரசியல் கட்சிகள் தங்கள் மிகச் சிறந்த முறைகளையும் படுமோசமான முறைகளையும் கையாண்டு அப்பகுதி மக்களைப் படுத்தி வைத்த பாடு சொல்லி முடியாது! அம் மக்களைக் காப்பாற்ற அரசாங்கம் கோடிக் கணக்கில் பணத்தைச் செலவழிக்க வேண்டி யிருந்தது! இப்படி மக்கள் பயந்து செத்துக் கொண்டிருந்த அப் பகுதியில் ஒரு கிராமத்துக்கு, தெய்வத்தினிடம் பரிபூரண நம்பிக்கை வைத்த ஒருவர் நடந்து போய்ச் சேர்ந்தார். அக் கிராமத்தை நடந்து சுற்றிப் பார்க்கச் சென்றார். அப்போது கிராம ஹரிஜனங்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். தங்கள் சோகம் நிரம்பிய கதைகளை அவரிடம் கூறினார்கள். தங்களைப் படுத்தும் வறுமையி லிருந்தும் துன்பத்தி லிருந்தும் மீளத் தங்களுக்கு எண்பது ஏக்கர் நிலம் வேண்டும் என்று கேட்டார்கள்.

கடவுளுக்குப் பயந்த அந்த வழிப் போக்கர், "உங்கள் கஷ்டத்தைப் போக்க, உள்ளூர் கிராம மக்களால் உதவ முடியாதா!" என்று கேட்டார்.

இதைக் கேட்டதும், அங்கிருந்த ஒரு மனிதர் எழுந்திருந்தார்: "நான் உங்களுக்கு நிலம் தருகிறேன். நூறு ஏக்கர் நிலம் இப்பொழுதே உங்களுக்குத் தானமாகத் தருகிறேன்!" என்றார்.

எல்லாரும் திக்பிரமை பிடித்தாற்போல் மௌனமாக நின்றார்கள்.

அவர் மீண்டும், "நான் சொல்லுவதை யாரும் நம்பவில்லை போல் தோன்றுகிறது. ஆகவே இப்பொழுதே இங்கேயே நான் நூறு ஏக்கர் நிலம் தானம் செய்வதாக எழுதித் தருகிறேன்" என்றார். அப்படியே செய்தார்.

இது 1951ம் ஆண்டு ஏப்ரல் 18ம் தேதி நலகொண்டா ஜில்லாவிலுள்ள போச்சம்பள்ளி கிராமத்தில் நிகழ்ந்தது.

அங்கே நடந்து போய்ச் சேர்ந்தவர் விநோபா தான் என்று சொல்ல வேண்டியதில்லை.

இப்படி முதன் முதலில் நிலதானம் செய்தவர் தான் ஸ்ரீ ராமசந்திர ரெட்டி என்பவர்.

* * *

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு சம்பவங்களும் 1951, ஏப்ரல் 18-ந் தேதி முதல் இன்றுவரை "பூதானம்" என்னும் கங்கை எப்படி முன்னேறி யிருக்கிறது என்பதை வெகு நன்றாக எடுத்துக் காட்டும். இதுவரை பூதானத்துக்கு 37 லக்ஷம் ஏக்கர் நிலம் கிடைத்துள்ளது. கிராமமாகக் கணக்குச் சொல்லப் போனால் மொத்தம் 150 கிராமங்கள் கிடைத்துள்ளன.

இந்தப் பூதான யக்ஞத்தைக் கங்கையோடு ஒப்பிடலாம். அந்தப் புனித கங்கை யாற்றுடன் கலந்த சின்ன நதிகளைப்போல, இந்தப் பூதான யக்ஞம் என்னும் கங்கையிலும் பல சின்ன நதிகள் சேர்ந்துள்ளன. ஜீவன் தான யக்ஞம் என்னும் யமுனை நதியும், சம்பத்தி தானம் என்னும் கோமதியும், புத்திதான யக்ஞம் என்னும் சோப்ரா நதியும், பிரேமதான யக்ஞம் என்னும் கந்தக் நதியும், சிரமதான யக்ஞம் என்னும் கோசி நதியும், பூதான மெனும் இக் கங்கையில் சேர்ந்து, இப்பொழுது இது பெருங்கடலில் கலக்க வெகு வேகமாக முன்னேறிக் கொண்டு வருகிறது.

தேசத்தின் சென்ற நான்கு ஆண்டுகளின் சரித்திரம் ஒரு விஷயத்தை நன்றாக உணர்த்திவிட்டது. நம்மைப் பெரிதும் பாதிக்கும் பிரச்னைகளில் மிக மிக முக்கியமானது நிலப் பிரச்னைதான் என்பதை நமக்கு வெகு தெளிவாக விளக்கி விட்டது. இந்த நிலப் பிரச்னைக்கு ஏதோ ஒரு மாதிரி பரிகாரம் கண்டு விட்டால் மட்டும் போதாது. விவசாய அபிவிருத்தி செய்து விட்டால் மட்டும் போதாது. அத்துடன் கிராமக் குடிசைத் தொழில்களும் விருத்தியடைய வேண்டும்.

நிலப் பிரச்னையைச் சமாளிப்பதாகக் கூறிக் கொண்டு ஜமீன்தாரி முறையை ஒழித்துக் கட்டுவதாலும், இவ்வளவு ஏக்கர் நிலம்தான் ஒவ்வொருவரும் உடைமையாக வைத்துக் கொள்ளலாம் என்று நிர்ணயிப்பதாலும் விசேஷ பயன் ஒன்றும் ஏற்பட்டு விடாது. பணக்காரர்கள், தங்கள் செல்வத்தை இழக்கச் செய்வதல்ல நமது முக்கியமான லக்ஷ்யம். ஏழைகளுக்குத் தேவைப்பட்டதை, அவர்கள் எதைப் பெறத் தகுதி பெற்றிருக்கிறார்களோ அதை அளிக்க முயல்வதுதான் லக்ஷ்யம்.

பணக்காரர்கள் விட்டுக் கொடுத்தால்தான் ஏழைகள் சுபிட்ச வாழ்வு பெற முடியும். ஆனால் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையிலிருப்பவர்களின் காரணமாகப் பல நல்ல காரியங்களின் பயன் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களைப் போய்ச் சேராமலே இருந்து விடுகின்றது. அப்படி நடுவிலிருப்பவர்கள், கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களாகவும் இருக்கலாம், அல்லது அரசாங்கக் குமாஸ்தாக்களாகவும் இருக்கலாம். அவர்களையும் கடந்து ஏழைகளைப் போய் அடைய வேண்டும், செய்யப்படும் நற்காரியங்களின் பயன்.

உத்தரப் பிரதேசத்தில் ஜமீன்தாரி முறை ஒழிந்தாகி விட்டது. ரொம்ப சரி. இப்பொழுது நில உரிமை அரசாங்கத்துக்கும், பஞ்சாயத்துச் சபைகளுக்கும் போய்ச் சேர்ந்து விட்டது. ஆயினும் நிலமில்லாதவர்கள் லட்சக்கணக்கில் இன்னும் அங்கே இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஒவ்வொரு நிலச் சொந்தக்காரரும் அதிகபட்சம் இவ்வளவு ஏக்கர் நிலம்தான் வைத்துக் கொள்ளலாம் என்று மேற்கு வங்கத்தில் சட்டமியற்றியாகி விட்டது. நிலமில்லாத உழவன், இச் சட்டத்தின் பொருளை இன்னும் பூரணமாக உணர்ந்தபாடில்லை. அவன் வாழ்க்கையில் எவ்வித மாறுதலும் இதுவரை ஏற்படவில்லை !

இந்தப் பூதான கங்கை, இவ்வாறு குறுக்கே நிற்கும் மலைகளையும், பாறைகளையும் குடைந்து கொண்டு சென்று, நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழுது பயிர் செய்யும் நிலமில்லாத விவசாயியை அடைகிறது. அவன் கனவில்கூட ஒரு சாண் நிலம் தனக்குச் சொந்தமாகக் கிடைக்கும் என்று எண்ணியிருக்க மாட்டான். அவனுக்கு நிலம் உடைமையாக்குகிறது பூதானம்.

பூதானத்தின் லட்சியம் இது மட்டுமல்ல. அது புது சமுதாயத்தை நிர்மாணிக்கவும், தற்போதைய பொருளாதார அடிப்படையை மாற்றியமைக்கவுமே முயல்கிறது. அதனுடைய முக்கிய கோட்பாடுகள் இவைதான் :

1. நிலம் அல்லது சொத்து எதுவானாலும் எந்தத் தனி மனிதனும் சொந்த உடைமையாகக் கொள்ள முடியாது : கிராமப் பொதுச் சொத்தாகத்தான் இருக்க வேண்டும்.

2. உற்பத்திசெய்பவனுக்கு அவனுக்கு உரியசாதனங்கள் வழங்கப்படவேண்டும். நாவிதருக்கு க்ஷவரகத்தியும், தையற்காரருக்குத் தையல் இயந்திரமும் வழங்கப்பட வேண்டும். (ஆம், நாம் க்ஷவரக் கத்தியைத் தையற்காரருக்கும், தையல் மிஷினை நாவிதருக்கும் கொடுப்பதில்லையல்லவா!) அம்மாதிரி நிலத்தில் வேலை செய்பவர்களுக்கே நிலம் சொந்தமாக இருக்க வேண்டும்.

3. உடலுழைத்து வேலை செய்பவர்களுக்கும், மூளையை உபயோகித்து வேலை செய்பவர்களுக்குமுள்ள வித்தியாசம் போக வேண்டும்.

4. தினப்படி செய்யும் வேலைகளில் குளிப்பதும் ஒன்றல்லவா ! அப்படியே தினப்படி உடல் உழைப்பும் அவசியமாகக் கொள்ள வேண்டும்.

5. தங்களுக்கு ஏது இருக்கிறதோ அதை அண்டை அயலில் உள்ளவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து நுகர வேண்டும்.

நம் நாட்டில் தனி நபர்கள் ஆத்மீகத் துறையில் மிக உன்னதமான அனுபவ நிலையை அடைந்திருக்கிறார்கள். அது போல் உலகில் வேறு எங்கும் யாரும் அடையவில்லை. ஆயினும், ஆத்மீகத்துறையில் எய்திய அந்த உயர் நிலை நாளடைவில், நம் சமுதாயத்தில் மூடத்தனமான அசப்பாவமாக உருவெடுத்து விட்டது. அத்துடன் சோம்பேறித்தனமும் கூடிக் கொண்டது.

நாட்டில் சுபிட்ச வாழ்க்கைக்கான எத்தனையோ திட்டங்கள் உருவாகி வருகின்றன. அவைகள் வெற்றிகரமாகக்கூட நடத்தப்படலாம். ஆனால் அவைகளால் நமது சமயங்கள் இழி நிலையை நோக்கிச் செல்லும் வேகத்தைத் தடுத்து நிறுத்த முடியாது போல் காண்கிறது.

உண்மையான சமய உணர்ச்சி, நமது பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு இடையூறு செய்வதல்ல. அதற்கு உதவியே செய்யும். மேலும், நமது ஆன்மீக வளர்ச்சியை இழந்து விட்டு, பொருளாதார முன்னேற்றத்தை அனுபவிக்க முடியாது. நம் பொருளாதார சுபிட்ச நிலை ஒவ்வொன்றிலும் நம் உள்ளப் பண்பின் உயர்வும் பிரதிபலிக்க வேண்டும். அது பூதானம் சாதிக்கிறது. அதனால்தான் வினோபா பூதான இயக்கத்தை 'தர்மசக்ர பரிவர்த்தன்' என்று குறிப்பிடுகிறார்.

இன்று மக்களின் உள்ளப் பண்பிலே மாறுதல் ஏற்பட்டு வருகிறது. அதன் வெளியீடே, மக்கள் பூதான இயக்கத்துக்கு இவ்வளவு அபரிமிதமாக நிலம் வழங்குவதும். ஆகவேதான் பூதான இயக்கத்தின் சிறப்பையும் ஆழத்தையும் வார்த்தைகளால் கூற முடிவதில்லை! இதிலிருந்தே இத்தகைய மாறுதலை ஏற்படுத்த முயல்பவர்களின் உணர்ச்சி வேகத்தை ஊகித்துக் கொள்ளலாம். அவர்கள் உள்ளம் தர்மத்துக்காகச் சண்டை போடும் வீர உணர்ச்சி பெற்றது. எப்பொழுதும் அதே நினைவாகவும் பக்தியோடும் இருப்பது.

இப்படிப் பட்ட தன்மை நாம் பெற்றிருக்கிறோமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போது மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு நாம் உயரவில்லை என்பதைக் காண்போம்.

1. உடலுழைப்பின் உயர்வில் நமக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறதா ? தினப்படி வேலையைக் கிரமமாகச் செய்துகொண்டிருக்கிறோமா ?


2. நம்மை எப்படிப் பிறர் நடத்த வேண்டும் என்று விரும்புகிறோமோ அப்படி நம்முடன் வேலை செய்பவர்களிடமும், நண்பர்களிடமும் நாம் நடந்து கொள்ளுகிறோமா?

ஜீவன் தானம் புரிந்தவர்களுக்கு ஒரு கேள்வி :

3. நமது வாழ்க்கையில் இதுகாறும் எந்த எந்தக் காரியங்களில் எல்லாமோ மனதைச் செலுத்தி வந்தோமே அதையெல்லாம் விட பூதான இயக்கத்தைப் பற்றியே இப்போதெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோமா !

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில், ''இல்லை'' என்றோ ''ஆமாம்'' என்றோ அரைகுறையாகச் சொல்ல நேரிடும் வரை, பூதான யக்ஞத்தில் நமக்குள்ள சிரத்தை மிக மிகக் குறைவு என்றுதான் அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். ஜகந்நாத-பூரி சம்மேளனம் பூதான இயக்கத்தில் வேகமாக முன்னேற நம்மை ஊக்குவிப்பதாக !

JB. 993



அப்பாவுடன் விளையாடும் நேரம்

குளிப்பாட்டும் நேரம் வந்துவிட்டால் குழந்தையின் குஷியை பார்க்க வேண்டுமே! ஜலத்தைக் கண்டதும் அவனுடைய ஆனந்தக் கூச்சலும் கும்மாளமும் உங்களுக்கும் சந்தோஷமும் தருகிறது.

இருந்தாலும் அவனது சகாயமற்ற நிலையில் எதற்கெடுத்தாலும் பிறர் உதவிதான் அவனுக்கு தேவையாகிறது. தளிர் போன்ற மேனி, பூப் போன்ற மென்மையான சருமம்! ஜான்ஸன்ஸ் பேபி பௌடர் அவனுடைய சருமத்தை மிருதுவாகவும் மழமழப்பாகவும் வைத்திருந்து எரிச்சலின்றி பாதுகாக்கும்.

டாக்டர்கள் ஜான்ஸன்ஸ் பேபி பௌடரை 70 ஆண்டுகளுக்கு மேலாக சிபார்சு செய்து வருகின்றனர். இன்றே ஒரு டின் வாங்குங்கள்!



Johnson's BABY POWDER

Regd. Trade Mark

ஜான்ஸன்ஸ் பேபி பௌடர்

சருமத்திற்கு ஹிதமளிப்பதில் உலகிலேயே நிகரற்ற பௌடர்

இலவசம் குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவச பிரதிக்கு எழுதுங்கள்—குழந்தையை சரியான முறையில் எப்படி பேணி வளர்ப்பது, பல் முளைக்கும்போது என்ன செய்யவேண்டும், அவனை குளிப்பாட்டும் முறை, எப்படி நல்ல பழக்க வழக்கங்கள் கற்றுக்கொடுப்பது முதலிய, பெற்றோருக்கு இன்றியமையாத, அநேக விஷயங்கள் இதில் அடங்கியிருக்கிறது. இவ்விலாசத்திற்கு எழுதவும்:

ஜான்ஸன் & ஜான்ஸன் (கிரேட் பிரிட்டன்) லிட்.

டிபார்ட்மெண்டு (21 எ), த. பெ. 1976, பம்பாய்.

கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி
நினைவுச் சிறுகதைப் போட்டி
2000 ரூபாய் பரிசு

தமிழில் அருமையான பல கதைகள் எழுதி அழியாப் புகழ் பெற்ற கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நினைவாக இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது.

தேர்ந்தெடுக்கும் கதைகளுக்குப் பரிசுத் தொகை ரூ. 2000 கீழ்க் கண்டவாறு வழங்கப்படும் :

முதல் பரிசு ரூ. 500/- :: இரண்டாம் பரிசு ரூ. 250/-
மூன்றும் பரிசு ரூ. 125- வீதம் பத்துக் கதைகளுக்கு.

இந்தப் போட்டியின் முடிவுத் தேதி 30—6—1955

நிபந்தனைகள் :

1. போட்டிக்கு அனுப்பப்படும் கதைகள் எழுதியவரின் சொந்தக் கற்பனையாக, தமிழ்நாட்டின் வாழ்க்கைக்கும் பண்பாட்டுக்கும் இசைந்த முறையில் இருக்க வேண்டும்.
2. 'கல்கி' இதழில் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாத அளவில் அமைய வேண்டும்.
3. நல்ல காகிதத்தில் இடைவீடுகள் விட்டு ஒரு பக்கத்திலேயே எழுத வேண்டும்.
4. முதலாவது பக்கத்தின் தலைப்பில் 'கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிட்டு, "ஆசிரியர், கல்கி, சென்னை - 10" என்ற விலாசத்துக்கு 1955 ஜூன் 30-ந் தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.
5. முடிவுத் தேதிக்குப் பின் வந்து சேரும் கதைகள் இந்தப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டா.
6. ஒரே எழுத்தாளர் இந்தப் போட்டிக்கு என்று மூன்று கதைகள் வரை அனுப்பலாம்.
7. கதை அனுப்பும்போது, அத்துடன் எழுதியவர் தமது கைப்பட இக் கதை சொந்தக் கற்பனை என்றும், தமிழிலோ அல்லது வேறு மொழியிலோ இந்தக் கதை அல்லது இதுபோன்ற கதை தம்மாலோ அல்லது வேறொருவராலோ எழுதப்படவில்லை என்றும் ஒரு உறுதி மொழி அனுப்ப வேண்டும்.
8. பரிசுக்குத் தேர்ந்தெடுத்த கதைகளைக் 'கல்கி' இதழில் வெளியிட்ட பிறகு, இக் கதைகளை வேறு மொழிப் பத்திரிகைகளிலோ அல்லது புத்தகமாகவோ வெளியிடுவதற்கு உரிய எல்லா உரிமைகளும் கதை எழுதிய ஆசிரியரையே சாரும்.
9. தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர், கதைகளுடன் போதிய தபால் பில்லைகள் அனுப்ப வேண்டும். கதைகள் திரும்ப அனுப்பப்படும் என்று உறுதி கூறுவதற்கில்லை.
10. பரிசுக்குரிய கதைகள் தவிர, பிரசுரத்துக்கு என்று தேர்ந்தெடுக்கப் படுபவை, 'கல்கி' இதழ்களில் வெளியாகும். அவற்றிற்கு வழக்கம் போல் சன்மானம் அளிக்கப்படும்.
11. பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்க ஒரு பரிசிலனைக் குழு நியமிக்கப்படும்.
12. இந்தப் போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் 'கல்கி' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

கல்கி காரியாலயம்
சென்னை - 10

சதாசிவம்
மானேஜிங் டைரக்டர்


கல்கியின்
அமரதாரா
ஆனந்தி
இரண்டாம் பாகம்
நக்ஷத்திர உதயம்
மணியம்

கல்கியின்

அமரதாரா

பூர்வகதை

காசிலிங்கம் ஒரு சர்க்கஸ்காரர். அவர் சந்திரமணியைக் காதலித்தார். சந்திரமணியின் தாயாருக்கு நிறையச் சொத்து இருந்தது. ஆகவே அவளுடைய மாமன்மார்கள் அவளைத் தங்களில் யாராவது மணந்து கொண்டு அந்தச் சொத்தையெல்லாம் அடைந்துவிட வேண்டுமென்று நினைத்தனர். ஆனால் காசிலிங்கம் சந்திரமணியின் தாயாரிடம் சம்மதம் பெற்று, அவளை அழைத்துக் கொண்டு அவர் கொடுத்த நகைகளுடன் போய் விடுகிறார்.

பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது ஒரு விபத்து நேரிடுகிறது. சந்திரமணியின் கால் முறிந்து விடுகிறது. அதே பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த மந்திரமூர்த்தி என்னும் உத்தமர் அவர்களுக்கு உதவி செய்கிறார்.

வெகு நாட்கள் கழித்து மந்திரமூர்த்தியின் சொந்த ஊரான குங்குமத்துறையில் மறுபடியும் இவர்கள் சந்திக்கிறார்கள். அங்கே சந்திரமணிக்கு இந்துமதி என்னும் குழந்தை பிறக்கிறது. மந்திரமூர்த்தியின் வீட்டிலேயே எல்லோரும் இருக்கின்றனர்.

அந்த ஊர் ஜமீன்தாரிடம் காசிலிங்கம் நட்புக் கொள்கிறார். இருவரும் வேட்டைக்குப் போவது வழக்கம். ஒரு நாள் காசிலிங்கமும் ஜமீன்தாரும் வேட்டைக்குப் போயிருந்தார்கள். மாலையில் ஜமீன்தார் கொலையுண்ட செய்தி வருகிறது. காசிலிங்கத்தின் மீது அந்தக் குற்றம் சாட்டப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் காசிலிங்கம் திருநந்திபுரத்தில் எஸ். என். சகவரமூர்த்தி என்பவர் வீட்டில் புகுந்து கலாட்டா செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு ரிமாண்டில் இருக்கிறார். ஆகவே கொலைக் குற்றத்திலிருந்து தப்பிய போதிலும் கலாட்டா வழக்கில் சிறைத் தண்டனையடைகிறார். சகவரமூர்த்தி, சந்திரமணியின் மாமன்மார்களுடன் சேர்ந்து இவர்களுக்கு இன்னல்கள் விளைவித்தவர்.

சிறையிலிருந்து திரும்பிய காசிலிங்கம் ஒரு நாள் நிறையப் பணம் சேர்த்துக் கொண்டு வருவதாகக் கூறி விட்டுப் போகிறார். ஒன்றிரண்டு தடவை வந்து சந்திரமணியைப் பார்த்து விட்டுப் போகிறார். ஆனால் போலீஸுக்குப் பயந்து தலைமறைவாகத் திரிகிறாரென்று மந்திரமூர்த்திக்குத் தெரிய வருகிறது. சந்திரமணியும் இந்துமதியும் மந்திரமூர்த்தியின் ஆதரவில் இருக்கிறார்கள்.

இந்துமதிக்குப் பதினைந்து வயதாகிறது. ஒருநாள் காலஞ்சென்ற ஜமீன்தாருடைய புதல்வன் தங்க பாண்டியனுடன் ரங்கதுரை என்னும் கல்லூரி மாணவன் வருகிறான். சந்தர்ப்பச் சூழ்நிலையினால் ரங்கதுரையும் இந்துமதியும் ஒருவரையொருவர் நேசிக்கத் தொடங்குகிறார்கள்.

சந்திரமணி திடீரென்று இறந்து விடுகிறாள். ரங்கதுரை இந்துமதியைத் தேற்றுகிறார். அவர் மேல் படிப்புக்காகச் சீமை செல்ல வேண்டியிருக்கிறது. அவர் ஊருக்குப் புறப்படும் தினத்தில் ஒரு விபரீத சம்பவம் நடக்கிறது.

சில அசந்தர்ப்பங்களினால் ரங்கதுரை இந்துமதியை அன்று சந்திக்க முடியவில்லை. அதை அறிந்த 'சொக்கையா அதைப் பயன்படுத்திக் கொண்டு ரங்கதுரை எழுதியது போல் கடிதம் எழுதி அனுப்புகிறான். இந்துமதி அதை நம்பிக் குறிப்பிட்ட இடத்துக்குச் செல்கிறாள். சொக்கையாவைக் கண்டு அவள் திகைத்து நிற்கும் போது யாரோ அவனைக் குத்திக் கொன்று விடுகிறார்கள். இந்து வீட்டுக்கு ஓடி விடுகிறாள். தன் மேல் பழி ஏதும் வரக் கூடாதே என்று கவலைப்படுகிறாள். மந்திரமூர்த்தி அவளைத் தேற்றுகிறார்.

மறு நாள் தான் விஷயம் வெளியாகிறது. அய்யாக்குட்டி என்னும் மந்திரமூர்த்தியின் உறவினன் குங்குமத்துறையில் இருக்கிறான். அவன் இந்துமதியிடம் அவள்தான் கொலை செய்தாளென்று தனக்குத் தெரியுமென்று கூறி அவளைப் பயமுறுத்துகிறான். அவன் இந்துமதியைக் கல்யாணம் செய்து கொண்டு மந்திரமூர்த்தியின் சொத்தை அடைய வேண்டுமென்று நினைக்கிறான்.

இந்துமதியின் மனம் மாற வேண்டுமென்று மந்திரமூர்த்தி அவளை விஜயாராமபட்டினத்துக்கு அழைத்துச் செல்கிறார். அங்கே வக்கீல் பத்மநாபன் குடும்பத்தினரைச் சந்திக்கின்றனர். அவர் மகள் சுலோசனாவும் இந்துவும் நெருங்கிய தோழி

களாகின்றனர். இந்துமதிக்கு ரங்கதுரையிடமிருந்து கடிதமே வருவதில்லை. இதனால் கவலை யடைகிறாள்.

இந்துமதி பத்மநாபன் குடும்பத்தினருடன் சென்னை செல்கிறாள். சென்னையிலிருந்து திரும்பி வரும்போது மந்திரமூர்த்தியின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது. வக்கீல் பத்மநாபனை இந்துமதிக்குக் கார்டியனாக நியமித்து, அவளுக்கு ஆறாயிரம் ரூபாய் பணமும் எழுதி வைத்து விட்டு மந்திரமூர்த்தி இறந்து விடுகிறார். கைலாசனும் வக்கீல் பத்மநாபனும் இந்துமதியைத் தங்களுடனே சென்னைக்கு அழைத்துச் செல்கின்றனர்.

அத்தியாயம் 1

நெஞ்சம் விம்மியது

சிறையில் தனியே உட்கார்ந்திருக்கும்போது பலவிதமான கேள்விகள் மனத்தில் எழுகின்றன. வேதாந்த விசாரணைகளில் மனம் ஈடுபடுகிறது. ஆனால் என்னுடைய சந்தேகங்களுக்குப் பதில் சொல்ல இங்கே யாரும் இல்லையாதலால் நானே கேள்விக்குப் பதிலும் சொல்லிக் கொள்கிறேன்.

நானும் ரங்கதுரையும் யாருக்கு என்ன தீங்கு செய்தோம்? எங்களுக்கு இவ்வளவு துன்பமும் அவமானமும் வந்து சேருவானேன்? இப்படி எண்ணும்போது கடவுளுடைய திருவருளின் மீதே ஒரு அவநம்பிக்கை ஏற்படுகிறது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

கடவுள் எதற்காக மனிதர்களைப் படைக்க வேண்டும்? இதெல்லாம் அவருக்கு விளையாட்டு என்றால், ஏன் அது இன்பகரமான விளையாட்டாக இருக்கக் கூடாது? எறும்பைப் பிடித்து அதைக் கொன்று விளையாடும் முரட்டுச் சிறுவனைப் போன்றவரா இறைவன் என்றெல்லாம் எண்ணுகிறேன். இந்தக் கேள்விகளுக்கு எந்தப் புத்தகத்தில் பதில் இருக்கிறதோ, எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று தெரிகிறது. இறைவன் எல்லோரையும் ஒன்றாகத்தான் படைக்கிறார். ஆனால் விருப்பு வெறுப்புக்களை நாமாக உண்டு பண்ணிக் கொண்டு துன்பத்தையும் இன்பத்தையும் வரவழைத்துக் கொள்ளுகிறோம்.


ஆனந்தி

தாயின் மடியில் அமைதியாகத் தூங்கும் சின்னஞ் சிறு குழந்தையின் களங்கமற்ற முகத்தை எப்போதாவது பார்த்தோமானால் நமக்கு மிக்க வியப்புண்டாகும். தாயின் அன்பு, பசி இதைத் தவிர வேறு ஒன்றுமே அறியாத நிர்மலமான அதன் உள்ளத்தில் காலம் எத்தனை மாறுதல்களைச் செய்து விடுகிறது? அன்பையும் தெரிந்து கொள்ளுகிறது. குரோதத்தையும் தெரிந்து கொள்ளுகிறது. சிலர் அன்பை வளர்த்து அமரர்களாகின்றனர். சிலர் குரோதத்தை வளர்த்து அனைவருக்கும் இன்னல்களை விளைவிக்கிறார்கள். அவர்களுக்கு அதில் என்ன இன்பம் ஏற்படக் கூடும் என்பது எனக்குப் புரியவில்லை.

சில சமயங்களில் எனக்கும் ரங்கதுரைக்கும், என் பெற்றோருக்கும் கொடுமை இழைத்தவர்கள் எல்லாம் நாசமாய்ப் போக மாட்டார்களா என்று எண்ணுவதுண்டு. சே! என்ன முட்டாள்தனம்! அப்படி நினைப்பதற்கு எனக்கு என்ன பாத்தியதை இருக்கிறது? இறைவனுடைய லீலை பொருள் காண முடியாத விஷயம் என்று அப்பா எத்தனை தடவை எனக்குச் சொல்லியிருக்கிறார். "ஈசுவரா! யாருக்கும் தீங்கு வரவேண்டும் என்று நினைக்கும் கேவலமான இதயத்தை மட்டும் எனக்குக் கொடுத்து விடாதே. அன்பு ஒன்றையே அறியும்படியான மேன்மையான உள்ளத்தை எனக்கு அருள்வாய்" என்று வேண்டிக் கொள்கிறேன்.

தாமரை மலர் அழகாகப் புன்னகை புரிந்து எதற்காக ஆதவனைப் பார்த்து மகிழ்கிறது? காட்டிலுள்ள கோடிக் கணக்கான புஷ்ப வகைகளுக்கு விதவிதமான வர்ணங்கள் எதற்காகத் தீட்டப் பட்டிருக்கின்றன? அந்தி நேரத்தில் குண்டு மல்லிகையும், முத்து முல்லையும் முகை அவிழ்ந்து எதற்காக மணம் வீசுகின்றன? வெண்ணிலா தண்ணிலவைப் பொழிகிறதே ஏன்? அதே போல் அன்பு தழைப்பதற்கும் சரியான காரணம் சொல்ல முடியாது.

கண்ணைக் கவரும் வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் காடுகளில் நெருஞ்சி



முட்செடிகளும் படர்ந்திருக்கின்றன. பெரிய மீன்கள் சிறிய மீன்களை விழுங்கி விடுகின்றன. ஒன்றுமறியாத குருவிகள் கூடு கட்டி இட்ட முட்டைகளைக் கொடிய பாம்பு உடைத்துக் குடித்து விடுகிறது. அழகிய மானைப் புலி கொன்று தின்கிறது. இதெல்லாம் ஏனென்று சொல்ல முடியுமா?

இதை யெல்லாம் "இறைவன் லீலை" என்று கூறும் போது ஏதோ ஒரு திருப்தி ஏற்படுகிறது. இல்லாவிட்டால் இவைகளைப் பார்த்துச் சகிக்க முடியுமா? நானும் என் வாழ்க்கையில் ஏற்பட்ட பல சம்பவங்களை இறைவனின் லீலை என்று எண்ணி மனத்தைச் சமாதானப் படுத்திக் கொள்கிறேன். இந்த சமயத்தில் அப்பா பாடும் திருவாசகம் எனக்கு நினைவுக்கு வருகிறது.

வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி

ஊனாகி உயிராகி
உண்மையுமாய் இன்மையுமாய்

கோனாகி யான் எனதென்று
அவரவரைக் கூத்தாட்டு

வானாகி நின்றாயை
என்சொல்லி வாழ்த்துவனே?

இந்தப் பாடல் அலையும் என் மனத்துக்கு அமைதி யளிக்கிறது.

* * *

துயரம் நிறைந்த உள்ளத்துடனும், அன்புக்காக ஏங்கும் இதயத்துடனும் நான் பத்மநாபன் வீட்டுக்குச் சென்றேன். மீராதான் என் துயரத்தை

மறக்க உதவினாள். அன்பைச் சொரிந்தாள், என்மீது. ஆயினும் அது எனக்குப் போதவில்லை. அந்த இடத்தை நிறையச் செய்யும் சக்தி ஒருவருக்குத்தான் இருந்தது. அவர்தான் எங்கேயோ இருந்தாரே!

கோமள வல்லி அம்மாள் நடந்து கொண்டது மாத்திரம் விசித்திரமாக இருந்தது. மூச்சு விடாமல் பேசுபவர் என்னிடம் அதிகமாகப் பேசுவதை நிறுத்திக் கொண்டார். "வாடியம்மா!" என்று அழைத்ததோடு நிறுத்திக்கொண்டார். அப்பாவைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் கேட்க வில்லை. ஒரு வேளை அதைப் பற்றிப் பிரஸ்தாபித்தால் நான் வருத்தப்படுவேன் என்பதனால் கேட்க வில்லை போலிருக்கிறது என்று எண்ணிச் சமாதானப் படுத்திக் கொண்டேன். ஆனாலும் அவர் என்னை அலட்சியம் செய்வது போலத் தோன்றியது.

சுலோசனா எனக்காக முன்னமேயே ஒரு அறையை அழகாக அலங்கரித்து வைத்திருந்தாள். "எனக்கு எதற்கு சுலோ இத்தனை அழகிய அறை? நான் இத்தனை நாள் இப்படிப்பட்ட அறையிலா வசித்து வந்தேன்?" என்று அவளிடம் கேட்டேன்.

"இந்து! நீ இப்படி வித்தியாசப் படுத்தியே பேசுவது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. ரொம்ப வருத்தமாக இருக்கிறது."

"சுலோசனா! உனக்கு என் நிலைமை புரிய மாட்டேனென்கிறது. நான் இங்கே இருப்பது சரியல்ல. தூரத்துப் பச்சைதான் கண்ணுக்கு அழகு. நான் வேறு எங்கேயாவது இருந்தால் என் மீது உங்களுக்கு அன்பு நிரந்தரமாக இருக்கும். இங்கிருந்தால் சலித்துப் போய் விடும்" என்று நான் கோமளவல்லி அம்மாளை நினைத்துக் கொண்டு பேசினேன்.

சுலோசனாவும் அதைப் புரிந்து கொண்டிருந்திருக்க வேண்டும். மௌனமாக இருந்தாள். "சுலோ! நான் சொல்வதைக் கோபித்துக்கொள்ளாமல், கேள். என்னை ஏதாவது ஒரு பெண்கள் விடுதியில் சேர்த்து விடச் சொல்லு. என் கையால் உழைத்துப் பிழைக்க ஏதேனும் ஒரு வழி செய்து கொள்கிறேன்" என்றேன்.



சுலோவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "நீ இப்படிப் பேசுவது கொஞ்சங்கூடச் சரியில்லை. அப்பாவிடமே நீ பேசிக் கொள்" என்றாள்.

வக்கீல் பத்மநாபன் தற்செயலாக நாங்கள் பேசிக் கொண்டிருந்த வராண்டாவுக்கு வந்தார்.

"என்ன அப்பாவிடம் பேச வேண்டும்?" என்று கேட்டார்.

"நீங்களே சொல்லுங்கள், அப்பா! இந்து ஏதாவது அனாதை ஆசிரமத்தில் தன்னைச் சேர்த்து விடச் சொல்கிறாள். அது சரியா?"

"ஏன் இந்து அப்படிச் சொல்கிறாய்? நாங்களெல்லாரும் இருக்கும் போது நீ எதற்காக அனாதை ஆசிரமத்தில் சேர்வது?" என்று கேட்டார்.

"அப்படிக் கேளுங்கள், அப்பா!"

"நான் இங்கே இருப்பது உங்களுக்குத் தொந்தரவாகி விடலாம். வருவார் போவார்களுக்கெல்லாம் நான்யாரென்று சொல்ல வேண்டும். மாமிக்கு அது கொஞ்சம் உபத்தரவமாக இருக்கும்."

முதல் நாள் மாலை யாரோ வீட்டுக்கு வந்திருந்தார்கள். நான் அந்தப் பக்கம் சென்றேன். "இவள் யார்?" என்று ஒரு அம்மாள் கேட்டது காதில் விழுந்தது. கோமளவல்லி அம்மாள், "அவருக்குத் தெரிந்தவர் வீட்டுப் பெண். அவள் அப்பா இறந்து போய் விட்டார். அதனால் இங்கே இருக்கிறாள்" என்றார். "மாட்டுப் பெண்ணாக்கிக் கொள்ளலாம் என்று உத்தேசமோ?" என்றார் அந்த அம்மாள்.

"சே, சே! அதெல்லாம் ஒன்றுமில்லை. என் பிள்ளைக்கு உலகத்தில் பெண்தானா கிடைக்காது!" என்று அவர் கூறியது காதில் விழுந்தது. எனக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது. அப்பாவுக்கு நிறையச் சொத்து இருந்தது என்றுநினைத்துக்கொண்டிருந்த போது என்னை மருமகளாக்கிக் கொள்ளலாம் என்று நினைத்தார். இப்போது "சேச்சே!" என்கிறார். பணத்தைக் கொண்டுதான் மனிதர்களை மதிப்பார்கள் போலிருக்கிறது என்று எண்ணினேன். அதை நினைத்துக் கொண்டுதான் அவ்வாறு சொன்னேன்.

பத்மநாபன் "என்ன இந்து, இப்படிச் சொல்கிறாய்? உன்னால் ஒரு நாளும் எங்

களுக்குத் தொந்தரவு ஏற்படாது. உன் தந்தைக்கு உன்னை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்வதாக வாக்களித்திருக்கிறேன். என் குழந்தையாகப் பாவிப்பேன் என்று சொல்லி யிருக்கிறேன். ஆகவே உன்னைச் சரியாகப் பார்த்துக் கொள்வது என் கடமை. அதனால் நான் சொல்வதை நீ கேட்டுத்தான் ஆக வேண்டும்'' என்றார்.

"கேட்டுக்கோ, இந்து! நான் சொல்வதைக் கேட்க வேண்டாம். அப்பா சொல்வதுபோல் நடந்து கொள்."

"உன்னை ஒருவரும் வேற்றுமையாக நினைக்க மாட்டார்கள். அது என் பொறுப்பு'' என்றார்.

சில நாட்களில் எனக்கும் அங்கே இருப்பது பழகி விட்டது. ரங்கதுரை திரும்பி வரும் வரையில் எனக்கும் ஒரு ஆதரவு வேண்டியதுதானே என்று எண்ணத் தொடங்கினேன். பத்மநாபன் மிகவும் பிரியமாக இருந்தார். சுலோசனாவும், மீராவும் கேட்கவே வேண்டியதில்லை. ரமேஷும் சரியாக நடந்து கொண்டார். கலகலப்பாகச் சிரித்துப் பேசுவார். ஆனால் வரம்பு மீறி ஒரு போதும் பேசுவதில்லை. சுலோசனா சொல்லியிருந்தாள் போலிருக்கிறது. நாளடைவில் நானே அந்த வீட்டில் சுதந்திரமாகப் பழகலானேன்.

கோமளவல்லி அம்மாள் மாத்திரம் சற்று விலகியே இருந்தார். அவரைத் திருப்தி செய்ய நான் முயன்று வந்தேன். வீட்டு வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து வந்தேன். விதவிதமான பக்ஷணங்கள் செய்வேன். நான் முன்பு வந்திருந்த போது ஒரு அம்மாள் அங்கே சமையல் செய்து கொண்டிருந்தார். இப்போது அவருக்குப் பதில் ஒரு சமையல்காரன் இருந்தான். வயதில் சிறியவன். சமையல்காரன் தான் சௌகரியமாக இருக்கிறது என்று பத்மநாபன், ரமேஷ் இருவரும் அபிப்பிராயப் பட்டார்களாம். ஆகவே புதிதாக ஆள் நியமிக்கப் பட்டிருந்தான். மூத்துவுக்கு வக்கீல், ரமேஷ் இருவரையும் கவனிக்கவே நேரம் சரியாக இருந்தது. ரமேஷின் சிநேகிதர்கள் இரண்டு நாட்களுக்கொரு தடவை வீட்டில் விருந்து உண்பார்கள். அவர்களுக்கெல்லாம் தடபுடலாக உபசாரம் செய்வான் மூத்து. அதற்காக அவனுக்கு ஒன்றிரண்டு ரூபாய் அவர்கள் கொடுப்பார்கள் போல் இருக்கிறது என்று நான் எண்ணியதுண்டு.


மூத்துவுக்கு வெளி ஆடம்பரம் தெரிந்ததே தவிர உள்ளே ஒன்றையும் சுத்தமாக வைத்துக் கொள்ளத் தெரியாது. தெரியாதோ, அல்லது அலட்சியமோ நான் அறியேன். எனக்கு என் கவலைகளை மறக்க ஏதேனும் வேண்டியிருந்தது. ஆகவே சமையல் அறையையும், உக்கிராண அறையையும் சுத்தப்படுத்துவது, சாமான்களைச் சுத்தம் செய்ய வைத்து, எடுத்து வைப்பது போன்ற வேலைகளை நானாகவே செய்ய ஆரம்பித்தேன். இதனால் கோமளவல்லி அம்மாளுக்குப் பொறுப்பான வேலை ஒன்றும் இல்லாமல் சௌகரியமாக இருந்தது. அவர் அப்போது எட்டு மாத கர்ப்பிணி. அதனால் எனக்கு அவர்மீது அனுதாபம் உண்டாயிற்று. நான் போய் ஒரு மாதத்துக்குள்ளேயே கோமளவல்லி அம்மாள் செய்யக் கூடிய அத்தனை காரியங்களையும், அதற்கும் மேலும் கூடச் செய்து பழகிக் கொண்டு விட்டேன்.

சுலோசனாவும், மீராவும் நான் செய்யும் காரியங்களைப் பார்த்து வியந்து பாராட்டுவார்கள். மீரா விடுமுறை நாட்களில் என்னுடன் சமையலறையிலேயே காலங் கழிப்பாள். கோமளவல்லி அம்மாள் முதலில் சில நாட்களுக்கு "நன்றாக இருக்கிறது'' என்றோ, "அல்லது. சுத்தமாக வைத்திருக்கிறாய்'' என்றோ சொல்லிக் கொண்டிருந்தார். பிறகு "இதைச் செய். அதைச் செய்'' என்று உரிமையாகக் கூற ஆரம்பித்தார். பிறகு எதையாவது செய்ய மறந்து போய்விட்டேனால் அதட்டிக் கேட்க ஆரம்பித்தார். ஆனால் நான் அவைகளை அதிகமாகப் பொருட்படுத்துவதில்லை.

சுலோசனா, "இந்து! உனக்கென்று ஒரு அறையை இவ்வளவு அழகாக நான் தயார் செய்து வைத்திருக்கவே வேண்டியதில்லை. நீ இரவு பத்து மணிக்குத்தானே அந்த அறைக்குள் நுழைகிறாய்? எப்போது பார்த்தாலும் என்ன வேலை? மத்தியான வேளைகளில் சற்று நேரம் 'ரெஸ்ட்' எடுத்துக் கொள்ளக் கூடாதா? இப்படி நீ வேலை செய்தால் உடம்பு கெட்டுப் போய் விடும்'' என்றாள்.

இதைக் கோமளவல்லி அம்மாள் கேட்டுக் கொண்டே வந்தார். "ஆமாண்டி, ஆமாம். வேலைசெய்தால் உடம்பு கெட்டு விடும் என்று உங்க காலேஜில் சொல்லித் தருகிறார்களாக்கும். நான் இப்படித் திணறிக் கொண்டு சிரமப்படுகிறேனே. அது கண்ணில் படவில்லை? அவளை, அம்மாவுக்கு உதவியாக இரு என்று சொல்

இரண்டும் வாட்டர்புரூப் கடியாரங்கள்— அவை ரோலெக்ஸ் தயாரிப்புகளுந்தான்



ஆடவருக்கேற்றது டியூடர். அதன் வாட்டர் புரூப் கேஸ் உள்ளிருக்கிற நேர்மையான 17 ஜுவல் யந்திரத்தை தூசி, அழுக்கு, ஈரம் புகாமல் பாதுகாக்கின்றது. வெளியே அது வல்களுடைய பெண்மணிகளுக்கு டியூடர் ஆய்ஸ்டர் கடியாரத்தை சிபார்சு செய்வோம் — வருடக்கணக்கில் சேவைபுரியும். எமது டியூடர் கடியாரங்களின் எல்லா நிறுககளையும் வந்து பாருங்கள் — நேரில் வரமுடியாதவர்களுக்கு ஒரு இலவச காட்லாக் அனுப்புவோம்.

டியூடர்

கடியாரங்கள்

ஜெனிவா, ஸ்விட்ஸர்லாந்து, தயாரிப்புகள்

தென்இந்தியாவில் ஏக விகிபோகஸ்தர்கள்:

மெஸர்ஸ் பி. ஆர் & ஸன்ஸ் லிட்.,

மவுண்டு ரோட், மதராஸ்

R. 726

லத் துப்பு இல்லா விட்டாலும், ஒன்றும் செய்யாதே என்று சொல்லத் தெரிகிறதே. நல்ல குழந்தைகளைப் பெற்றிருக்கிறேன்! இந்த லக்ஷணத்தில் இன்னொன்று வேறே பிறக்கப் போகிறது. அது வேறு என்ன படுத்தப் போகிறதோ? ஈசுவரா!" என்று மூச்சு விடாமல் சத்தம் போட்டார்.

சுலோசனா திகைத்துப் போனாள். பாவம்! அவள் அப்படியா நினைத்தாள்? என் மனம் வருந்தப் போகிறதே என்று வேறு அவளுக்குக் கவலை. "அம்மா! அம்மா! என்ன இப்படிப் பேசுகிறாய்? நீ கஷ்டப்பட வேண்டுமென்று நான் நினைப்பேனா? இந்துமதி இளைத்துப் போயிருக்கிறாள், பார். அவளுக்கு உடம்புக்கு வந்து விட்டால் உனக்கு ரொம்ப சிரமமாச்சே என்று நினைத்துக் கொண்டு சொன்னேன். உனக்கு உடம்பெல்லாம் சரியாகும் வரையில் இன்னொரு ஆள் போட்டு விட்டால் போகிறது" என்றாள்.

"ஓ! ஒன்றென்ன இரண்டு ஆள் போட்டு விடலாம். பிள்ளை யில்லா விட்டுச் சொத்து கொள்ளை போகிறதல்லவா? மற்றவர்களெல்லாம் சோபாவிலே சாய்ந்து கொண்டு பத்திரிகை வாசித்துக் காலம் கழித்து விடலாம்" என்றார் கோமளவல்லி அம்மாள்.

நான் அந்தப் பேச்சை முடிக்க எண்ணி, "சுலோசனா! எனக்கு இங்கே என்ன சிரமம்? காரியங்கள் செய்யச் சொல்லி என்னை யாரும் வற்புறுத்தவில்லையே! நானாகத்தானே செய்கிறேன். என் வீடாக இதைப் பாவிப்பதனால்தான் என் இஷ்டம்போல் நான் நடந்து கொள்ளுகிறேன். உன் காரியத்தைக் கவனி போ! பரிக்ஷை இருக்கிறதென்று சொன்னாயே, இங்கே பேசி நேரத்தை யெல்லாம் வீணாக்காதே!" என்றேன்.

சுலோ என் குறிப்பை அறிந்து கொண்டு உடனே போய் விட்டாள். ஒருவாறு கோமளவல்லி அம்மாள் சமாதானம் அடைந்தார்.

ஆனால் அன்று என் அறைக்குச் சென்றதும் கண்ணீர் பொத்துக் கொண்டு வந்தது. கடுஞ் சொல்லையே கேட்டு அறியாத என் நெஞ்சம் விம்மித் துடித்தது. தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, "அம்மா! அம்மா!" என்று சொல்லிக்கொண்டே விசித்தேன்.

அத்தியாயம் 2

விளங்காத புதிர்

நான் சென்னை வந்து இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகி விட்டன. ஒரு நாள் இரவு என் அறைக்குச் சென்று நாற்காலியில் விழுந்தேன். அன்று என்ன காரணத்தாலோ மனத்தில் உற்சாகமே இல்லாமல் சோர்ந்து போயிருந்தது. அன்று மாலை வீட்டுக்குச் சில பெரிய மனிதர்களை அழைத்து வந்திருந்தார் பத்மநாபன். அவர்கள் முகத்தைப் பார்த்ததுமே எனக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் இருந்தபோது அநாவசியமாக இரண்டு தடவைகள் என்னைப் பத்மநாபன் கூப்பிட்டார். நான் உள்ளே வந்தபிறகு அவர்கள் என்னைப் பற்றி ஏதேனும் பேசுகிறார்களோ என்ற சந்தேகம் என் மனத்தில் உதித்தது.

இதனால் என் மனம் மிகவும் சோர்வடைந்திருந்தது. அருகில் கிடந்த பத்திரிகையை எடுத்துப் புரட்டினேன். புத்தகத்தில் மனம் செல்லவில்லை. இந்த மாதிரி சமயங்களில் நமது அன்புக்குப் பாத்திரமானவர்களைப் பற்றி அதிகமாக நினைக்கத் தோன்றுமல்லவா? ரங்கதுரையின் களை பொருந்திய அழகிய முகம் என் முன் தோன்றியது. 'அவரிடம் எப்படியாவது போய்விட வேண்டும். இனிமேல் காத்திருக்க முடியாது!' என்று உள்ளத்தில் ஒரு தாபம் பொங்கி எழுந்தது. வேதனை பொறுக்க முடியாமல் போகவே சுலோசனாவிடமாவது பேச வேண்டும் என்று தோன்றிற்று. சுலோசனாவின் அறைக்கும் என் அறைக்கும் நடுவில் ஒரு கதவு இருந்தது. அதைத் திறந்து கொண்டு உள்ளே சென்றேன்.

சுலோசனா கட்டிலின் மேல் சாய்ந்து கொண்டு படித்துக் கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும், "என்ன இந்து?" என்று கேட்டுக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள்.

"ஒன்றுமில்லை, சுலோ. ஏதோ மனம் ரொம்ப வேதனைப் பட்டது. அதனால் உன்னிடம் சற்றுப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போவோமே என்று நினைத்தேன்" என்று சொல்லிக் கொண்டே அவளருகில் உட்கார்ந்து கொண்டேன்.

சுலோ, என் தோளின்மீது கையைப் போட்டுக் கொண்டு, "ஏன் இந்து, உன் முகம் இவ்வளவு வாடி யிருக்கிறது?" என்று கனிவாகக் கேட்டாள்.

"நான் சொல்லுகிறேன். நீ தவருக நினைக்கக் கூடாது" என்றேன்.

"சே! என்னிடம் நீ இப்படிச் சொல்ல வேண்டுமாக்கும்? எதுவானாலும் சொல்லு, இந்து!"

"இன்று சாயங்காலம் யாரோ வந்திருந்தார்களே, அவர்கள் யார்?"

"அவர்கள் அப்பாவுக்குத் தெரிந்தவர்கள். ரொம்ப நாளாக அப்பா அவர்களுக்குப் பல கேசுகள் நடத்திக்கொண்டு வருகிருர். எதற்காகக் கேட்கிருய்?"

"எனக்கென்னமோ அவர்களைப் பார்த்தாலே பிடிக்கவில்லை."

"பிடிக்கா விட்டால் வேண்டாமே. இதற்கென்ன இவ்வளவு கவலை?"

"சுலோசனு! உன்னிடம் நான் எதையும் மறைக்க விரும்பவில்லை. என்னை அப்பா அநாவசியமாக அவர்கள் எதிரில் கூப்பிட்டுக் கொண்டே இருந்தார். ஏதோ என்னைப் பற்றித்தான் அவர்கள் பேசுகிருர்கள் என்று தோன்றிற்று. காசிலிங்கம் என்ற பெயர் என் காதில் விழுந்தது. அதிலிருந்து எனக்கு ரொம்பக் கவலையாக இருக்கிறது, சுலோ."

"இந்து! நீ அனுவசியமாக மனத்தை அலட்டிக் கொள்கிருய். உண்மையாகவே உன்னைப் பற்றி அவர்களிடம் அப்பா சொல்லியிருந்தால்கூட அதில் கவலைப் படுவதற்கு என்ன இருக்கிறது? அவர்கள் நீ புதிதாக இருக்கிருயே, யாரென்று விசாரித்திருப்பார்கள். அப்பாவும் சொல்லி யிருக்கலாம். இதில் என்ன அதிசயம் இருக்கிறது?"

"சுலோசனு! நீ சொல்வது சரி என்றே வைத்துக் கொள்வோம். நான் இன்று அந்தப் பக்கமே போகவில்லை. அப்பா என்னைக் கூப்பிட்டார். நான் அந்த அறையில் காலை வைத்ததும் அத்தனை பேரும் என்னை உற்றுப் பார்ப்பதை உணர்ந்தேன். ஐஸ் வாட்டர் கொண்டு வரச் சொன்னர் அப்பா. இதற்கு முத்துவைக் கூப்பிட்டிருக்கலாமே? என்னைக் கூப்பிட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லையே? நான் முத்துவிடம் தான் தண்ணீர் அனுப்பினேன். மறுபடியும் என்னைக் கூப்பிட்டு 'இவர்களெல்லாம் இன்றிரவு நம்ம வீட்டில் சாப்பிடுவார்கள்' என்ருர். இதைச் சொல்வதற்கும் என்னைக் கூப்பிட்டிருக்க வேண்டாமல்லவா?"

"போடி, அசடு. இதனுல் அப்பா உன்னை இந்த வீட்டுப் பெண்ணுகவே நினைக்கிருர் என்றுதான் அர்த்தம். நான் வேண்டுமானுல் அப்பாவிடமே கேட்டுவிடுகிறேன், வந்திருந்தவர்களிடம் இந்துவைப் பற்றி நீங்கள் என்ன சொன்னீர்கள் என்று?"

"வேண்டாம். நான் அதற்காகச் சொல்ல வில்லை. எனக்கு அப்பாவிடம் அவநம்பிக்கை இல்லை. அப்படி நினைத்தால் நான் நன்றி கெட்டவள் இல்லையா? என்னை எப்படிப்பட்ட நிலையிலிருந்து மீட்டிருக்கிருர்? எத்தனையோ ஜன்மங்களுக்கு நான் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனுல் இன்று வந்திருந்த மனிதரைக் கண்ட போதுதான் எனக்கு அருவருப்பாக இருக்கிறது. அவர் என்னைப் பார்த்த பார்வை! ஐயோ! இப்போது கூடப் பயமாக இருக்கிறது. பசித்திருக்கும் புலி மானை எப்படிப் பார்க்கும் என்பது எனக்குத் தெரியாது. ஆனுல் எனக்கு அவருடைய பார்வையைப் பார்த்த போது இந்த எண்ணம் தோன்றிற்று" என்றேன்.

"உனக்கு ஏற்கெனவேயே பட்டிருக்கும் துன்பங்களினுல் இப்படியெல்லாம் தோன்றுகிறது. உன்னை நிராதரவான நிலையில் கற்பனை செய்து கொண்டு கஷ்டப் படுகிருய். நாங்களெல்லாம் இருக்கிறோம். உனக்கு எந்தக் கஷ்டமும் நேரும்படி பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். நீ கவலைப்படாதே, இந்து."

"நீ சொல்லும் வார்த்தைகள் மனத்துக்கு ரொம்ப இதமாக இருக்கின்றன. ஆனுல் பாரம் மாத்திரம் குறைய வில்லை. இருக்கட்டும். நான் போய்ப் படுத்துக் கொள்கிறேன். நீ தூங்கு" என்று சொல்லி விட்டு எழுந்து என்னுடைய அறைக்கு வந்தேன்.

நித்திரா தேவியின் அன்புக் கரங்கள் என்னை வந்து அணைத்துக் கொண்டு ஆறுதல் அளித்தன.

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு யாராவது வந்திருந்தால் நான் அந்தப் பக்கமே செல்லுவதில்லை என்று தீர்மானித்திருந்தேன். என்னைக் கூப்பிட்டால் கூட முத்துவையே அனுப்புவேன். சுலோசனுவும், ரமேஷும் என்னை ரொம்பப் பரிகசித்தார்கள்.

என் அறையில் நானும் அம்மாவுமாக இருக்கும் ஒரு படத்தை மாட்டி வைத்திருந்தேன். அதன் அருகில் பகவான் ராமகிருஷ்ணரின் படம் ஒன்றும் மாட்டியிருந்தேன். அது என் தந்தை மந்திரமூர்த்தியினுடையது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரையும், அன்னை சாரதாமணி தேவியைப் பற்றியும் அப்பா எனக்கு நிறையச் சொல்லி யிருக்கிருர்.

காலையில் எழுந்த உடனே முதலில் நான் வீட்டை அழகு செய்து விடுவதை முதல் காரியமாகக் கொண்டிருந்தேன். பத்மநாபனுக்கு வீடு பளிச்சென்று அழகாக இருந்தால்தான் பிடிக்கும். காலை வேளைகளில் அவரைத் தேடி வருபவர்களுக்கு அப்போதுதான் ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்படும் என்பார்.

அவர் என்றோ வேலைக்காரனிடம் சொல்லிக் கொண்டிருந்தது தற்செயலாக என் காதில் விழுந்தது. ஆகவே வீட்டை அலங்கரிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன். விடியற் காலையில் எழுந்து தோட்டத்துக்குச் சென்று அறைகளில் அலங்காரமாக வைப்பதற்காகக் கொத்துக் கொத்தாய்ப் புஷ்பங்கள் பறித்து வருவேன். எனக்கே அது உற்சாகமளித்து வந்தது. எல்லா முக்கிய அறைகளிலுமுள்ள புஷ்பம் வைக்கும் கிண்ணங்களைச் சுத்தம் செய்து புத்தம் புதிய புஷ்பக் கொத்துகளை அழகாக அடுக்கி வைப்பேன். என் அறைக்கு வரும்போது ஏதேனும் இரண்டு அழகிய புஷ்பங்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு வருவேன். அநேகமாக ரோஜாவாகத்தான் இருக்கும்.

ரமேஷ் அதிகாலையில் எழுந்து விடுவார். அன்று நான் ரோஜா மலர்கள் இரண்டைக் கையில் பிடித்து அழகு பார்த்துக் கொண்டே மாடிப் படியேறி என் அறைக்குச் சென்று கொண்டிருந்தேன். நான் கடைசிப் படியில் காலை வைத்த போதுதான் அங்கே ரமேஷ் நிற்பது என் கண்களில் பட்டது. என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே அவர், "இந்துமதி, உன்னால் இப்போது இந்த வீடே ஒரு தனி சோபையுடன் அழகாக இருக்கிறது. நீ அழகு படுத்துவதை யெல்லாம் கவனித்து உனக்கு எப்படி இதெல்லாம் தெரிகிறதென்று நான் அதிசயப் படுகிறேன்!" என்றார்.

"இது என்ன பெரிய விஷயம்?"

"உனக்கு அது தெரியாது. தெரிந்தாலும் சொல்ல மாட்டாய். ஆனால் நாங்கள் உணர வேண்டாமா? நீ கவனித்துக் கொள்ள ஆரம்பித்த பிறகு வீடு எவ்வளவோ நன்றாக இருக்கிறது. நீ இங்கேயே இருந்து விட்டால் தேவலை."

நான் பயந்து போனேன். கடவுளே! இவரிடம் இப்படி மாட்டிக் கொண்டோமே, ஏதாவது சொல்லிவிடப் போகிறாரே என்று பயந்து கொண்டே, "அது எப்படி சாத்தியம்? என்னை ஏதேனும் கல்வி நிலையத்தில் சேர்த்து விடும்படி சுலோசனாவைக் கேட்டிருக்கிறேன்" என்றேன்.

"ஏன் இந்து? இங்கே உனக்கு என்ன அசௌகரியம்? உனக்கு இங்கே இருக்கப் பிடிக்கிறது என்றல்லவா நினைத்தேன்?" என்றார் ரமேஷ்.

"இப்போதுகூடப் பிடிக்க வில்லை என்றா சொன்னேன்? ரொம்பப் பிடிக்கிறது. ஆனால் எத்தனை நாட்கள் இன்னொருத்தர் வீட்டில் இருக்க முடியும்?"

"அடே! இந்த வீடு இன்னொருத்தர் வீடாக உனக்குப் படுகிறதென்று இது வரை எனக்குத் தோன்றவில்லை. நாங்களெல்லாம் உன்னுடைய மனிதர்கள் என்று நினைத்துக் கொள், இந்துமதி! நீ வேறு என்று நினைத்துக்கொண்டே இருக்காதே. நாங்கள் யாரும் அவ்விதம் மனத்தில்கூட நினைக்கவில்லை. சுலோசனாவை விட உன்னைப் பார்த்தால்தான் இந்த வீட்டுப் பெண்ணென்று தோன்றும்."

"உங்களுடைய பாராட்டுதலுக்கு என் மனமார்ந்த நன்றிகள்" என்று கூறிவிட்டு என் அறைக்குள் செல்ல முயன்றேன். வழியில் அவர் நின்றுகொண்டிருந்தார். பிறகு புஷ்பத்தைப் பார்த்தேன்.

"ஆமாம்! வீடு முழுதும் அத்தனை புஷ்பங்களை வைத்து அலங்கரிக்கிறாயே? உன் அறையில் ஏன் மலர்கள் நிறைய வைத்துக் கொள்வதில்லை? இரண்டு புஷ்பங்கள் மாத்திரம் எடுத்துக் கொண்டு போகிறாயே?" என்றார்.

"எனக்கு அவை யெல்லாம் அவசியமென்று தோன்றவில்லை. சற்று வழியை விடுங்கள், நேரமாகிறது" என்றேன். ரமேஷ் உடனே விலகி வழி விட்டார்.

அறைக்குப் போய்ப் புஷ்பங்களைப் படங்களின்மேல்பொருத்தினேன். ஆனால் எப்போதும்போல் அம்மாவின் நினைவு வந்து என் உள்ளத்தை உருக்க வில்லை. பரம ஹம்ஸரின் வாழ்க்கையும், உபதேசங்களும் நினைவுக்கு வரவில்லை. ரமேஷ் பேசிய விதம் எனக்குப் புதிராக இருந்தது. 'இப்படிப் பேசுவதன் மூலம் எதையேனும் குறிப்பாக அறிவிக்க விரும்புகிறாரோ? "நீ இங்கேயே இருந்து விட்டால் தேவலை!" என்று வேறு ஏதேனும் அர்த்தத்தில் சொன்னாரோ? அட, கடவுளே! யாரையும் சுலபமாகப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே? வாழ்க்கை, மனிதர்கள் எல்லாமே விளங்காத புதிர் தானா?' என்றெல்லாம் யோசித்தேன். (தொடரும்)



சேவைக்கும் பாதுகாப்பிற்கும்

PANDYAN INSURANCE COMPANY LIMITED


பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நெருப்பு - கப்பல் - விபத்து

ஆஸ்திகள் : ரூ. 1 கோடிக்கு மேல்

தலைமைக் காரியாலயம் : பாண்டியன் பில்டிங் : மதுரை

கிளைகள் : பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர்,
2 பெங்களூர், திருவனந்தபுரம், கோயம்புத்தூர், கொச்சி




மதிப்பில் முதன்மையானது

ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த பச்சை 'கோலினாஸ்'
. . . ஏனெனில் அது உங்கள் பற்களை சுத்தம்
செய்வது தவிர, மேற்கொண்டும் உதவுகிறது!

நீங்கள் உபயோகிக்கும் டூத்பேஸ்டு பற்களை பளபளப்பாக்குவதுடன் நிற்காமல், மேற்கொண்டும் உதவக்கூடியதாக இருக்க வேண்டும். இதோ தற்கால விஞ்ஞானம் உங்களுக்கு அத்தகைய டூத்பேஸ்டு ஒன்று வழங்குகிறது—அதுவும் அதிகப்படி செலவு ஏதுமின்றி! ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த பச்சைக் 'கோலினாஸ்' உங்கள் பற்களை வெண்மையாக்குவதுடன், பல் சிதைவிற்குக் காரணமான கிருமிகளை ஒழித்து, ஈறுகளை திடமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கிறது. இதன் இரகசியம் அற்புதமான 'கோலினாஸ்' நுரையில்தான் அடங்கியுள்ளது. அது ஆக்டிவ் க்ளோரோபில்லை வாயின் ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் எடுத்துச் செல்கிறது. உங்கள் சுவாசம் மணிக்கணக்கில் புதுமணத்துடன் விளங்குகிறது.

'கோலினாஸ்' அதிக நாள் வருகிறது ஈரமில்லாத பிரஷில் அரை அங்குல அளவே தேவை. ஆதலால்தான் ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த 'கோலினாஸ்' எவ்வளவோ அதிக மதிப்புடையதாக விளங்குகிறது! இன்றே இந்த நவீன டூத்பேஸ்டை உபயோகிக்கத் தொடங்குங்கள்.



CK. 1169



அழியாத பெயர்

சங்கர்

யாளியும் யானையும் போரிடும் நிலையில் செதுக்கப்பட்டிருந்த சயன கிருஹத்தின் தூணிலே சாய்ந்த வண்ணம் எதிரே இருந்த சலவைக்கல் சாளரத்தின் வழியே பார்வையைச் செலுத்தினான் மன்னர் மன்னன் சந்திரகுப்தன்.

செக்கர் வானில் உதித்தெழுந்த ஆதவனின் ஒளி வெள்ளம் அவன் பரந்த முகத்திலே வந்து விளையாடியது. நெஞ்சின் இருள் சற்று நீங்கவே இளவரசி பிரபாவைப் பார்க்க மிகவும் ஆவலுடன் சயன கிருஹத்தை விட்டு வெளியே வந்தான். அவன் வருகைக்காகப் பிரபாவின் சேடிகளில் ஒருத்தி வாயிலில் காத்துக் கொண்டிருந்தாள்.

"பிரபோ, ஒரு சந்தோஷ சமாசாரம். இளவரசி நேற்று முழுவதும் சுவாதீனத்தோடும் மகிழ்வோடும் இருந்தார்கள். ஆனால்......இரவு முழுவதும் தூங்கவே இல்லை!" என்று அறிவித்தாள் அவள். சந்திரகுப்தனுடைய செவிகளில் அமுத தாரையாக விழுந்தன இந்த வார்த்தைகள். மறு விநாடியே தன் அருமைக் குமாரியைக் காண விரைந்தான். தந்தையைக் கண்டதும் ஓடி வந்து அப்படியே கட்டிக் கொண்டாள் பிரபாவதி.

"குழந்தாய்! உடம்புக்கு எப்படியம்மா இருக்கிறது! நேற்று ராத்திரி தூங்கவே இல்லை போலிருக்கிறதே! அடடா! கண்கள் ஏன் இவ்வாறு சிவந்து போய் இருக்கின்றன!" என்று வாத்ஸல்யத்துடன் வினவிக் கொண்டே தன் மேனியில் துலங்கிய மெல்லிய ஆடையால் அவள் கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்தான்.

கடந்த நாலைந்து நாட்களாகச் சித்தப் பிரமையால் ஏதேதோ புலம்பிக்கொண்டும், யாரைக் கண்டாலும் இனந் தெரியாமல் மிரண்டு கொண்டும் இருந்தவள் இன்று சுய உணர்வோடு நடந்து கொண்டது, சந்திரகுப்தனுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சியையும் மனச் சாந்தியையும் கொடுத்தது. மகளை அணைத்தபடியே மெய்மறந்து நின்ற அவனை "அப்பா, இதோ பார்த்தீர்களா!" என்ற மதுரமான குரல் தட்டி எழுப்பியது.

"என்ன குழந்தாய்! என்ன சொன்னாய்!" என்றான், உணர்வு பெற்று.

"இதோ பாருங்கள், நான் நேற்று எழுதிய சித்திரங்கள். உங்களுக்குப் பிடித்திருக்கிறதா!"

"ரொம்பவும் அற்புதமாகத் தீட்டியிருக்கிறாய், கண்ணே! கலையின் அருள் உன் கையில் பூரணமாக இருக்கிறதென்று முன்பே நான் சொல்லவில்லையா!" என்று பள்ளி மாடத்தின் சுவரை மேலெழுந்த வாரியாக ஒரு கண்ணோட்டம் விட்டுக் கொண்டே கூறினான் சந்திரகுப்தன்.

"இந்தச் சித்திரங்களைப் பார்த்ததும் உங்களுக்கு வேறு ஒன்றுமே தோன்றவில்லையா, அப்பா!" என்று மெல்லச் சிணுங்கினாள் பிரபா. நின்றிருந்த வியாதி தொடர்ந்து விடப் போகிறதே என்று அஞ்சியவனாய், முழு உணர்வுடனும் சுவரைப் பார்த்தான் சந்திரகுப்தன். பிரபாவின் கண்களிலே ஒரு அபூர்வ லயம் பரபரத்துக் கொண்டிருந்தது. சந்திரகுப்தன் சுவரிலிருந்து பார்வையைப் பெயர்க்க முடியாமல் இப்போது திணறினான். சுவரெல்லாம் ஒரே குழந்தையின் உருவங்கள்! தவழும் குழந்தைகளின் பல்வேறு நிலைகளைப் பாவ பூர்வமாகவே தீட்டியிருந்தாள் அவள். சட்டென்று தன் அருமை மகளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். பருவத்தின் இளமெருகோடு தென்றலில் துவளும் பூங்கொடி போல நின்று கொண்டிருந்தாள் அவள். சந்திரகுப்தனின் வதனத்தில் சிந்தனைக் கொடி படர்ந்தது. மகளின் முகவாயைத் திருப்பிக் கொண்டே தெளிவான குரலில் சொன்னான்:

"குழந்தாய்! விந்தியப் போர் வெற்றிகரமாக முடியட்டும். உடனேயே உன் கல்யாணத்தை முடித்து விடலாமென்றிருக்கிறேன். அப்போது தான் எனக்கும் நிம்மதி. பிறகு என் அருமைப் பேரன் சுவரிலே தவழ வேண்டாம்; உன் மடியிலேயே தவழலாமல்லவா!"

திடீரென்று பிரபாவதியின் முக மண்டலம் இருளடைந்தது. பீதியும் கலவரமும் அவள் முகத்தில் பொங்கின. சந்திரகுப்தன் கூறிய வார்த்தைகளில் 'விந்தியப் போர்' என்ற சொல்லே அவள் காதில் திரும்பத் திரும்ப ஒலிப்பது போலிருந்தது. எதிர்பாராத இந்த நிலையைக் கண்ட சந்திரகுப்தன் பிரமித்து விட்டான்.

"அப்பா, போரிலே பகைவர் படைகள் என் குழந்தைகளை யெல்லாம் கொன்று போட்டுவிட்டால் நான் என்னப்பா செய்வேன்!" என்று கலவரத்துடன் கூறிவிட்டு அழ ஆரம்பித்து விட்டாள் பிரபாவதி.

"கண்ணே, இதற்காகவா கலங்குகிறாய்! இதோ பார், இதன் வலிமைக்கு இந்த வையகமே நடுநடுங்குகிற தென்பது உனக்குத் தெரியாதா!" என்று கூறியபடியே அரையில் தொங்கிய உடைவாளில் வலக்கரத்தை வைத்தான் மன்னன். அவன் கையை ஒரு நொடியில் விலக்கி விட்டுப் பளபளக்கும் வாளை உருவினாள் பிரபா.

"ஐயோ, கையை அறுத்துக் கொண்டு விடப் போகிறாய். அப்புறம் உன்னால் சித்திரம் வரையவே முடியாது" என்று சொல்லி விட்டு அவள் கையிலிருந்த வாளைப் பிடுங்கி உறையில் போட்டான் சந்திரகுப்தன். பிரபாவுக்கு ஒரே வருத்தம். தந்தையிடம், "அப்பா! உங்களுக்கு இந்தக் கொடு வாள் அவசியமா அப்பா!" என்றாள்.

சந்திரகுப்தன் கட கடவென்று சிரித்தான்.

"நல்ல கேள்வி கேட்டாய், அம்மா! உனக்குத் தூரிகை எவ்வளவு அவசியமோ அவ்வளவு அத்தியாவசியமானது எனக்கு இந்த வாள்!" என்றான்.

பிரபாவதி அவனை விடவில்லை. மேலும் அவனிடம் கேட்டாள்:

"அப்படியானால் என்னைப் போல் நீங்களும் இந்த வாளின் வீச்சிலே குழந்தைகளைச் சிருஷ்டி பண்ண முடியுமா, அப்பா!"

சந்திரகுப்தன் திடுக்கிட்டு விட்டான். ஒரு பயித்தியத்தோடு இத்தனை நேரம் பேச்சுக் கொடுத்ததே பெரிய பயித்தியக்காரத்தனம் என்று எண்ணினானோ என்னவோ! சேடிகளிடம் பிரபாவைக் கவனமாகக் கவனித்துக் கொள்ளும்படி சமிக்ஞை செய்து விட்டு வெளியேறினான்!

2

விந்திய சாக்தியின் பரம்பரையிலே வந்த வாகாடக மன்னன் இரண்டாம் ருத்ரசேனன் சிறந்த வீரன். இளைஞன் என்றாலும் வீரத்திலே எவருக்கும் இளைத்தவனல்ல. சிறு குன்றை மாமேரு எதிர்த்து நின்றதைப் போல ருத்ரசேனனை எதிர்த்து நின்றான் பேரரசன் சந்திரகுப்தன், சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்த எண்ணி. பழைய மரபின் பெருமையைக் காக்க எண்ணிய ருத்ரசேனனும் வருகிற பௌர்ணமியன்று சந்திர குப்தனின் சேனா வெள்ளத்தைக் கொண்டல் ஆற்றின் வடகரையிலே சந்திப்பதாக ஓலையனுப்பி இருந்தான். தளபதி நாகசேனனோ தன் திறமையைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததில் அகமகிழ்ந்து ஊக்கத்தோடு போர்ப் பயிற்சி அளித்து வந்தான்.

"நாகசேனா! நம்முடைய படைக்கலங்களெல்லாம் ஏராளமாகத் தயாராகி விட்டதல்லவா!" என்று கேட்டான்.

"ஆகா, எல்லாம் தயாராகி விட்டன, அரசே!"

"நாகசேனா! நம்முடைய ஆயுதங்களையும் ஏனையப் போர்க் கருவிகளையும் பிறநாட்டு ஒற்



றர்கள் அறிந்துவிடா வண்ணம் கமுக்கமாக ஓரிடத்தில் சேமித்து வைக்க வேண்டாமா!"

"அதற்காகத்தான் யோசித்து வருகிறேன், பிரபோ!" என்ற நாகசேனன், "வேந்தே, நமது சாந்தி துர்க்கத்துக்கு அருகிலுள்ள பாழ்மண்டபம் இதற்கு ஏற்ற இடம் என்று எண்ணுகிறேன்..." என்று பதிலளித்தான்.

"அப்படியானால் என் இஷ்டமும் அதுவே. இன்று இரவே இரண்டாம் ஜாமத்தில் திரையிட்டு மூடிய வாகனங்களில் நமது ஆயுதங்கள் பூராவையும் சாந்தி துர்க்கத்துக்கு எடுத்துச் செல்லுங்கள். நானும் வருகிறேன்" என்றான்.

தளபதி விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

அன்று நடுநிசியிலே அணி அணியாக ஆயுத வண்டிகள் சாந்திதுர்க்கத்திலே வந்து தயாராகக் காத்துக்கொண்டு நின்றன. சற்று நேரத்துக்கெல்லாம் தளபதி நாகசேனனும் அரசர் ருத்ரசேனனும் அவ்விடத்துக்கு வந்தனர். அவர்கள் இருவரையும் ஆயுத வண்டிகளோடு வந்த பதினொரு வீரர்களையும் தவிர்த்து வேறு ஈ, குருவிகூட அங்கே கிடையாது. தங்களுடன் இரண்டு வீரர்களை மட்டும் அழைத்துக் கொண்டு அரசனும் தளபதியும் பாழ்மண்டபத்தின் முகப்புக்கு வந்தனர். கையிலிருந்த தீவட்டியை வெளிச்சம் நன்றாகப் படும்படி தூக்கிப் பிடித்தான் வீரன். தூர்ந்து போன மண்டபத்தின் நுழை வாயிலில் தேக்கு மரத்தினால் செய்த பெரிய நிலைக் கதவு நிமிர்ந்து நின்றது. கதவின் கீழ்க் கோடியில்



இரண்டடி சச்சதுரத்தில் சிறிய கதவொன்று பொருத்தப்பட்டிருந்தது. அதில் கடாவியிருந்த ஆணிகளை சட்டியின் உதவியால் தென்னி யெடுத்துக் கதவைத் திறந்தனர் வீரர்கள்.

கையில் தீப்பந்தத்தை வாங்கிக் கொண்ட நாகசேனன் அவர்களை அங்கேயே இருக்கும்படி கையமர்த்தி விட்டு அரசரைப் பின்தொடர்ந்து உள்ளே நுழைந்தான்.

முதலில் குறுகலாக ஆரம்பித்த நுழைபாதை விசாலமானதொரு மண்டபத்தில் கொண்டு போய் விட்டது. பளபளப்பான தள வரிசை பாவியிருந்த தரையில் குதிங்கால் வரை இறங்கும் அளவுக்குப் புழுதி படிந்திருந்தது. சுற்று முற்றும் வியப்போடு பார்வையைச் சுழற்றிய நாகசேனன், "அரசே, ஆயுதங்களைச் சேமிக்க அருமையான இடம். இத்தனை வசதியாக அமையும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை" என்றான். ருத்ரசேனன் காதில் இவ் வார்த்தைகள் விழுந்ததாகத் தெரியவில்லை. "நாகசேனா, வெளிச்சத்தைக் கொஞ்சம் இப்படிக் கொண்டு வா" என்றான்.

தீவட்டியின் ஒளி குறட்டின் மேல் விழுந்தது. கல்லில் செய்யப்பட்ட பரந்த குழியம்மிகளும் குழவிகளும் தென்பட்டன.

"இதெல்லாம் என்ன ! பழங் காலத்தில் அரண்மனை வைத்தியர் குடியிருந்த இடமோ இது !" என்று எண்ணமிட்டவாறே கலுவத்தில் படிந்திருந்த தூசியை வாயினால் ஊதினான் மன்னன் ருத்ரசேனன். என்ன ஆச்சர்யம்! வான வில்லின் வர்ண ஜாலத்தைப் போல் குழியம்மியில் வண்ணக் குழம்பு காய்ந்து போயிருந்தது. ஒவ்வொரு கலுவத்திலும் ஒவ்வொரு வர்ணம் பளபளத்தது.

"வேந்தே ! இந்தப் பேழையைப் பார்த்தீர்களா ! எல்லாம் சுவடிகள். பழங்கால ஏடுகள் போல் தெரிகிறது" என்று கூறினான் தளபதி. பரபரப்புடன் அதனை வாங்கி வெளிச்சத்தில் கூர்ந்து பார்த்த ருத்ரசேனன் முகத்தில் மகிழ்ச்சிக் குறி தென்பட்டது.

"ஆகா ! ... நமக்கு ஒரு அரிய புதையல் கிடைத்திருக்கிறது, நாகசேனா! என்னைப் போல் அதிருஷ்டசாலி வேறு ஒருவரும் இருக்கமாட்டார்கள். காலத்தால் சிதையாத அமர ஓவியங்களை எழுதுவதற்கு உபயோகிக்கும் அழியாத வர்ணக் கலவைகளை எங்ஙனம் சேர்ப்பது என்னும் வித்தையை இந்த ஏடுகள் சொல்கின்றன" என்று கூறிக்கொண்டே அவைகளை எடுத்துக் கொண்டான் மன்னன்.

"ஓகோ ! இது தங்கள் முன்னோர்களின் சித்திர மண்டபம் என்று சொல்லுங்கள் !"

தீவட்டி வெளிச்சம் நாற்புறமும் உள்ள சுவர்களைத் துழாவியது. பார்வைக்கு எல்லாச் சுவர்களும் வெறுமையாகத்தான் காட்சி யளித்தன.

"அதோ !" என்று தெற்குச் சுவரைத் தூண்டிக் காட்டினான் நாகசேனன். அந்தச் சுவரில் மட்டும் புழுதிப் படலத்தை ஊடுருவிக் கொண்டு ஏதோ ஒரு வர்ணப் படம் மங்கலாகத் தெரிந்தது. நாகசேனன் இடுப்பில் கட்டியிருந்த கச்சையை அவிழ்த்துச் சுவரின் மேலுள்ள தூசி நீங்குமாறு உதறித் துடைத்தான். கண்ணைப் பறிக்கும் வண்ண ஓவியம் ஒன்று இன்றைக்குத் தீட்டியதைப் போன்று பளிச்சென்று தெரிந்தது.

"அடடா ! என்ன அழகு ! என்ன அழகு !" என்று கூவினான் நாகசேனன்.

"பார்த்தாயா, ஓவியத்தை !" என்று வினவும் பாவனையில் நாகசேனனை ஒரு முறை மௌனமாகத் திரும்பிப் பார்த்து விட்டு மீண்டும் சுவரில் பார்வையைப் பதித்தான் ருத்ரசேனன்.

யானை பிடிப்பதற்காக மலைப்பளிஞர்கள் வெட்டி வைத்த குழியில் யானை யொன்று தவறி விழுந்து விட்டது போலும்! அவ்வாறு குழியில் விழுந்த அந்த யானையை இன்னொரு காட்டானை வெளியிலிருந்து தன் துதிக்கையைக் கொடுத்து மேலே தூக்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் காட்சியைத்தான் சித்திரித்திருந்தது அந்தச் சுவரில் !

மேலிருந்து கை கொடுக்கும் யானையின் பேராண்மையும், இனத்தின் துயர் களையும் இறுமாப்பும், மீட்கப்படும் யானையின் கண்களிலே மிதக்கும் நன்றியுணர்வும், பிணைந்த துதிக்கைகளின் இணக்கமும் வர்ணக் குழம்பில் உயிர் பெற்று நின்றன அந்த ஓவியத்தில் !

ருத்ரசேனன் ஆவல்தோய்ந்த முகத்துடன் சித்திரத்தில் தன் முழு கவனத்தையும் செலுத்தினான்.

நாகசேனனோ ஒன்றும் புரியாமல் "ஆயுத வண்டிகள் வெளியே காத்துக் கொண் டிருக்கின்றன, அரசே! விடிவதற்குள் அவ்வளவையும் இங்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டாமா!" என்றான்.

"என்ன சொன்னாய்...... ! ஓ......படைக்கலங்களா ! கேள், நாகசேனா ! இந்த மண்டபத்துக்குள் இனி ஒரு துரும்பு கூட அடையக் கூடாது. நாளைக்கே நாலாம்படையெல்லாம் அடித்துத் துப்புரவாக்க வேண்டும்......"

"அப்படியானால் படைக்கலங்களை எல்லாம் எங்கே போடுவது அரசே !"—சற்று விசனத்துடனேயே கேட்டு விட்டான் நாகசேனன்.

"எங்கே போடுவதா! நாகசேனா ! ஒன்று விடாமல் அவ்வளவையும் கொண்டு போய் ஆழ் கடல் எறிந்து விடுங்கள் !"

இந்தப் பதிலைக் கேட்ட தளபதி நாகசேனன் ஒன்றும் புரியாமல் அப்படியே அயர்ந்து போய் விட்டான்.

3

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ருத்ரசேனன் சித்தம் ஒரு நிலையில் இல்லாமல் புத்தி பேதலித்தவனைச் சித்திர மண்டபத்தில் அடைக்கலம் புகுந்தான். திடீரென்று அரசனின் போக்கில் ஏற்பட்ட இந்த மாறுதலைச் சாமர்த்தியமாகச் சமாளித்தான் நாகசேனன். அரசனின் உடல் நலம் குறைந்த காரணத்தால் அவன் ஆணை பெற்றுப் போரை நடத்தித் திருவதென்று அறிவித்தான். வீரர்களும் தளபதியின் தலைமையின் கீழ் உற்சாகமாகப் போருக்குத் தயாராயினர்.

பௌர்ணமி தினத்தன்று சந்திரகுப்தன் பிரம்மாண்டமான சேனையுடன் கொண்டல் ஆற்றங்கரைக்கு வந்தான். ருத்ரசேனன் சார்பில் அம் மாபெரும் சைன்யத்தைத் துணிவுடன் எதிர்த்தது வாகாடகப் படை. இரண்டு நாட்கள் கோரமான போர் நிகழ்ந்தது. இரு சார்பிலும் ஏராளமான உயிர்ச்சேதம் ஏற்பட்டது.

மூன்றும் நாள் சந்திரகுப்தனின் குதிரைப்படை உத்வேகத்துடன் போராடிய விந்திய சைன்யத்தைக் கலங்க அடித்தது. அன்றையப் போரில் நாகசேனன் வலுக்கட்டாயப் படுத்தினதால் சித்தம் கலங்கியிருந்த மன்னன் ருத்ரசேனனும் கலந்து கொண்டிருந்தான். சந்திரகுப்தனை அவன் நேருக்கு நேர் எதிர்த்தபோது, அவனுடைய வீர பராக்கிரமத்தைக் கண்டு ஒரு கணம் வியப்படைந்தான் சந்திரகுப்தன்.

அதன் காரணமாக அன்று இரவு முழுவதும் அவன் மனக்கண் முன் ருத்ரசேனனின் வீர வதனம் தோன்றிக் கொண்டே இருந்தது.



இயற்கை எத்தனையோ அதிசயங்களைச் சிருஷ்டிக்கிறது! திருச்செங்கோடு தாலுக்காவில் கொங்கணாபுரம் கிராமத்திலுள்ள இந்த அதிசயத்தைப் பார்த்தீர்களா! நான்கு கிளைகளுடன் கூடிய ஒரு விசித்திரப் பனைமரம்!

ஆற்றின் பரந்த மணல் வெளியைக் கடந்து அக்கரையில் விந்தியப் பாசறையின் வேதனைக் குரலெல்லாம் அடங்கி நிம்மதியான தூக்கத்திலிருந்த சமயம். சந்திரகுப்தன் பாசறையிலும் வீரர்கள் கடுமையான அன்றையப் போருக்குப்பின் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் சந்திரகுப்தன் மட்டும் நிம்மதியின்றிக் குமுறிக் கொண்டிருந்தான். நித்ரா தேவி ஏனோ அவனை அணுக அஞ்சினாள். அப்பொழுது பாசறைக்கு வெளியே யானை பிளிறும் குரல் போலக் கேட்டது. மெதுவாகப் பாசறைக்கு வெளியே வந்து அந்த ஒலி எங்கிருந்து வருகின்றதென்று கவனித்தான்.

தூரத்தில் எதிர்க் கரையிலிருந்த வாகாடகப் பாசறையிலிருந்து கரிய குன்று ஒன்று தன்னை நோக்கி நகர்ந்து வருவதைப் போலத் தெரிந்தது.

மறு கணம் அதிசயமான சம்பவம் ஒன்று நடந்தது. சரசர வென்று வந்த அந்த வேழம் கொஞ்ச நேரம் திகைத்து நின்றது. பிறகு தென் திசையில் நகர்ந்து சென்று, தற்காப்புக்காகப் பாசறையைச் சுற்றி வெட்டப் பட்டிருந்த அகழியில் விழுந்து தவித்துக் கொண்டிருந்த இன்னொரு யானையைத் துதிக்கை கொடுத்து முண்டி இழுத்து முடிவில் வெளியே தூக்கி விட்டது! வெளியே வந்த யானை நன்றிப் பெருக்கால் ஒரு மாதிரியாகச் சப்தித்துக் கொண்டு துதிக்கையை உயரத் தூக்கி வளைத்து வணக்கம் செலுத்தியது. பதில் வணக்கம் செலுத்தக் கூட மறந்த பகைவன் யானையோ தன் பாசறையை நோக்கி விரைந்தது.

ஏதோ ஒரு ஆவேச உணர்வு உந்தித் தள்ளவே கூடாரத்தை விட்டு வெளியே வந்தான் சந்திரகுப்தன். அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக மற்றொரு மாபெரும் அதிசயம் நடந்து கொண்டிருந்தது!

அடையார் ஆர்ட் அகாடமி (ரிஜிஸ்டர்டு) :: அடையார், சென்னை

முதல் ஆண்டு விழா

1-4-55 வெள்ளிக்கிழமை மாலை 5-45 மணிக்கு விழா ஆரம்பம் - (காந்தி நகர் பள்ளிக்கூடத்தில்)

சென்னை நிதி மந்திரி கனம் ஸ்ரீ சி. சுப்ரமண்யம் அவர்கள் விழாவை துவக்கி வைப்பார்கள்

சென்னை மேயர் ஸ்ரீ எம். ஏ. சிதம்பரம் அவர்கள் தலைமை வகிப்பார்கள்

1-4-55 வெள்ளி மாலை 6 மணிக்கு	ஸ்ரீமதி எம். எல். வஸந்தகுமாரி & பார்ட்டி	... பாட்டு
2-4-55 சனி மாலை 6 மணிக்கு	குமாரி ஜயலக்ஷ்மி (கே. என். தண்டாயுதபாணியின் சிஷ்யை)	... பரதநாட்டியம்
3-4-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு	ஸ்ரீமதி கே ஸவி (A. I. R. புகழ்) & பார்ட்டி	...புல்லாங்குழல்
4-4-55 திங்கள் மாலை 6 மணிக்கு	விசா, பிரஹலாதா & சந்திரா - (தஞ்சாவூர் சகோதரிகள்)	பரதநாட்டியம் & ஜீயன்டல் நடனங்கள்

டிக்கட் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் : ஸ்பெஷல் ரூ. 4/- ஆர்டினரி ரூ. 2/-



இவைகளுக்கு குழந்தைகள், பெரியோர். வயோதிகர் யாவரும் பெர்டுஸின் உட்கொள்ளலாம். பெர்டுஸின் சகலவித இருமல்களுக்கும் மற்றும் இதையொட்டிய உபாதைகளுக்கும் யாதொரு கெடுதியுமின்றி துரிதநிவாரணம் அளிக்கிறது. ஆகவே பெர்டுஸின் வாங்குங்கள்!

infa

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கிறது.

இடாபா லிமிடெட், ஷான், லீஷென்ஸ்மன் ஸ்விஸ் கஸ்டம் அண்ட் இகனமிக் டெரிடெரி இவர்களின் அனுமதியின் பேரில் இன்பா லிமிடெட் தபால் பெட்டி 1041, பம்பாய் - 1 இவர்களால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

ILY-8-TAM



பிப்ரவரி 20உ. பம்பாய் – தாதர் ஜார்ஜ் மன்னர் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் பம்பாய் லிமிடெட் ஸ்தாபனத்தின் மானேஜர் திரு கே. எஸ். நாராயணன் அவர்களின் புதல்வி குமாரி எஸ். ஜயந்தின் பரதநாட்டியம் விமரிசையாக நடைபெற்றது. இதற்குப் பம்பாய் முனிஸிபல் கமிஷனர் திரு பி. ஆர். நாயக் ஐ. ஸி. எஸ். அவர்கள் தலைமை தாங்கினார். விழாவில் கலந்து கொண்ட திரு ஈ. கிருஷ்ணய்யர் குமாரி ஜயந்துக்குப் பரதநாட்டியம் பயிலுவித்த ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பரதநாட்டிய கலாநிலையத்தைப் பாராட்டிப் பேசினார்.

"என்ன! இளவரசி பிரபாவதி யல்லவா போகும் யானையைப் பின்தொடர்ந்து செல்கிறாள்!"

அவளைக் கூப்பிட்டு நிறுத்தப் புத்தி செல்லாமல் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான் சந்திரகுப்தன். அவள் கண்ணுக்கு மறைந்து வெகு நேரமாயிற்று. உணர்வு மீண்ட சந்திரகுப்தன் தன் குல விளக்கு காட்டிய வழியிலே அவள் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்தான்.

பகைவர் பாசறையில் ஒரே அமைதி. மங்கிய நிலவொளியில் பிரபாவதியை அங்குமிங்கும் தேடினான். மறு விநாடி மின்னல் பளிச்சிட்டதைப் போல் பல ஈட்டி முனைகள் அவனைச் சூழ்ந்து கொண்டன. கணப்பொழுதில் பாசறை விழித்துக் கொண்டது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவனைச் சங்கிலியால் பிணைத்து ருத்ரசேனன் முன் கொண்டு வந்தனர் வாகாடக வீரர்கள்.

அங்கே நடந்தது மூன்றாவது அதிசயம்! மஞ்சத்தில் ருத்ரசேனன் படுத்திருந்தான். அவன் பரந்த மார்பிலுள்ள காயங்களில், தைலத்தில் தோய்த்த பஞ்சினை ஒற்றியபடியே சிசுருஷை செய்து கொண்டிருந்தாள் பிரபாவதி.

சந்திர குப்தனுக்கோ பணி புரியும் மகளின் மெல்லிய வளைக்கரம் மறைந்து வலிய யானையின் துதிக்கையே காட்சியளித்தது.

4


மறு நாள் போர்க்களத்தில் சந்திக்க வேண்டிய அவ்விரு மன்னர்களும் மணவறையில் சந்தித்தனர். வீரப் படைகளின் ஆரவாரம் விண்ணைப் பிளந்தது. மங்கல வாத்தியங்களும் துந்துபிகளும் முழங்கின. மகத்தான பெரிய வெற்றிகளிலும் காண முடியாத ஒரு ஆத்ம திருப்தியை அடைந்தான் சந்திரகுப்தன். மகளின் சித்தப்பிரமையோடு அவனுடைய நெஞ்சின் இருட்டு மல்லவா இப்போது நீங்கி இருக்கிறது.

மனமுவந்து மகளைக் கொடுத்ததோடு நபதி நதிக்குத் தெற்கே அவன் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த பெரிய நிலப்பரப்பையும் ருத்ரசேனனுக்குச் சீதனமாக வழங்கினான் சந்திரகுப்தன். ஆனால் ருத்ரசேனனோ பெறற்கரிய பரிசான பிரபாவதியை அடைந்ததில் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். அவளைத் தன் சித்திர மண்டபத்துக்கு அழைத்துச் சென்று அரக்குப் பேழையிலிருந்த சுவடுகளை எல்லாம் காட்டினான். பிரபாவதியின் கலையுள்ளம் பெருவகை அடைந்தது. தளிர்விரல்கள் துடித்தன.

அந்தத் துடிப்பின் எதிரொலி அவளும் ருத்ரசேனனும் தென் பிரதேசத்துக்குக் கலைப் பயணம் சென்ற பொழுது 'அஜந்தா' என்னும் அற்புத சித்திரக் குகையை நிர்மாணித்தது. மறு வருடம் பிரபா பேரழகுடன் பெண் மகவு ஒன்றைப் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தையின் பிறந்த நாள் விழாவை வெகு விமரிசையாக அஜந்தாவில் வைத்துக் கொண்டாடினான் ருத்ரசேனன். அந்தக் கோலாகல வைபவத்தில் மன்னன் சந்திரகுப்தனும் கலந்து கொண்டு மகிழ்ந்தான்.

"அப்பா! தங்கள் அருமைப் பேத்திக்குத் தங்கள் வாயாலேயே பெயர் சூட்ட வேண்டும்" என்று குழந்தையை ஏந்தி நின்றாள் பிரபாவதி.

"ரொம்ப சந்தோஷம் குழந்தாய்! அப்படியே ஆகட்டும். உன்னுடைய முதல் கலைக்குழந்தையின் பெயரையே இந்த மகவுக்கும் சூட்டுகிறேன்" என்று சொல்லி விட்டு, "அஜந்தா! என் குல விளக்கு ஈன்ற சுடரமுதே, உன் நாமம் என்றென்றும் இப் புண்ணிய பூமியிலே நிலைத்து நிற்கட்டும்" என்று கூறியபடியே கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்கக் குழந்தையின் பட்டுக் கன்னத்தில் மெல்ல முத்தமிட்டான் மன்னன் சந்திரகுப்தன்!



சென்னையில் பிரபல போட்டோ கம்பெனியான ஆர். தாஸன் ஸ்டுடியோவின் பங்காளர் ஸ்ரீ ஈ. எம். கோபால சுவாமி முதலியார் குமாரன் சிரஞ்சீவி ஈ. ஜீ. வெங்கடேசனுக்கும், ஸ்ரீ வி. கன்னைரான் முதலியார் குமாரத்தி சௌ. கிருஷ்ணவேணிக்கும் 11-3-55 அன்று திருமலை திருப்பதியில் நடந்த திருமணத்திற்கும் அதை ஒட்டி 13-3-55-ம் தேதி சென்னையில் மணமகன் இல்லத்தில் நடைபெற்ற வரவேற்புக்கும் வந்திருந்து வாழ்த்திய அனைவருக்கும் ஸ்ரீ கோபாலசாமி முதலியார் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

வாழ்க மணமக்கள்!

ஆரோக்கிய வாழ்வு

சீதாலக்ஷ்மி குமாரசாமி

13. தண்ணீரின் முக்கியம்

ஆரோக்கிய வாழ்வுக்குத் தண்ணீர் மிகவும் இன்றியமையாதது என்று சொல்லத் தேவையில்லை. ஆனால் நாம் இதை நன்கு உணர்ந்து தண்ணீரை உபயோகிப்பதில்லை. அவ்வாறு அலட்சியமாக நடப்பதினாலேயே நாம் பலவிதமான நோய்களுக்கு உள்ளாகின்றோம்.

நாம் வசிக்கும் உலகம் முக்கால் பங்கு நீர்ப் பரப்பும், கால் பங்கு நிலப் பரப்பும் கொண்டது போல, நம் சரீரமும் முக்கால் பாகம் நீரால் ஆனது. கால் பங்குதான் மற்ற கனியங்கள், சதைகள், எலும்புகள் முதலியன கொண்டது. ஆனால் மகா சமுத்திரங்களைப்போல நமது உடலில் முக்கால் அளவு நீர் தேங்கியில்லா விட்டாலும், உடலின் ஒவ்வொரு இழையும், ஒவ்வொரு அணுவும் தம் தம் வேலைகளை ஒழுங்காய்ச் செய்யத் தண்ணீரானது எங்கும் பரவி வியாபித்து இருக்கிறது. நாம் சரிவரத் தண்ணீரை உபயோகிக்கவில்லையானால் உடலைப் பாதிக்கும்.

நாம் உண்ட ஆகாரத்தை ஜீரணிக்கவும் கழிவை வெளியேற்றவும் தண்ணீர் அவசியம். ஜீரணித்த ஆகாரச் சத்துக்களை இரத்தத்துடன் சேர்த்து அவ்விரத்தத்தை உடல் பூராவுக்கும் எடுத்துச் சென்று அவயவங்களுக்குப் போஷணை அளிப்பதும் தண்ணீரே! உடலாகிய தொழிற்சாலையில் பலவித வேலைகள் நடக்கும் போது கழிவுகள் ஏற்படுகின்றன அல்லவா! அவ் வேலைகள் நடக்கவும், கழிவுகள் உடனுக்குடன் வெளியேற்றவும் உதவுவது தண்ணீரே!

இக் கழிவுகள் வெளியேற்றும் வேலை மூன்று விதங்களாய் நடக்கிறது. குண்டிக்காய்கள் ரத்தத்திலுள்ள வேண்டாத வஸ்துக்களைப் பிரித்துச் சிறு நீராக வெளியில் தள்ளுகின்றன; குடல்கள் நாம் உண்ட ஆகாரத்தில் வேண்டிய சத்துக்களைக் கிரகித்து மீறிச் சக்கையைப் பலமாகத் தள்ளுகின்றன; சீதோஷ்ணமான நிலைமைக்குத் தக்கபடி நமது சருமத்திலுள்ள துவாரங்களின் மூலம் வியர்வையை உண்டாக்கி, சருமப் பாதுகாப்பளித்துச் சீதோஷ்ணத்தைச் சமமாக்குகின்றது. இல்லையானால் உடல் ஒரே உஷ்ணமாகி விடும். மல ஜலம் கழிக்கா விடில் என்ன நடக்கும் என்று சொல்லத் தேவையில்லை.



இம்மாதிரி உடலிலுள்ள அசுத்தங்களை அகற்றவும், மற்றும் எல்லா உடல் அவயவங்களின் காரியம் நடக்கவும் தண்ணீர் மிகவும் இன்றியமையாததாய் இருக்கிறது.

எனவே நாம் தண்ணீரை எவ்வளவுக்கு அதிகம் உபயோகிக்கிறோமோ அவ்வளவுக்கு நம் உடல் அவயவங்கள் அவற்றின் வேலைகளை ஒழுங்காகத் தங்கு தடங்கலின்றிச் செய்யத் துணை புரிந்தவர்களாவோம். இல்லையானால் பாதகம் செய்தவர்களாவோம். நாம் தினசரி சுமார் ஆறு முதல் எட்டு டம்ளர் தண்ணீர் உட்கொள்ள வேண்டும். இதில் உழைப்புக்கும், வயதுக்கும், சீதோஷ்ண நிலைமைக்கும், தக்கபடி உபயோகிக்க வேண்டியிருக்கும். சிறு குழந்தைகளுக்கும் தாகம் எடுக்கும், அழும். ஆனால் தாய்மார்கள் அதனை உணராமல் பசிக்கு அழுகின்றது என்று பால் ஊட்டுவார்கள். அதனால் தாகம் சிறிதளவு தான் தணியும். பின் மறுபடியும் குழந்தை அழும். சில தாய்மார்கள் 'பால் வயிறு நிறையக் கொடுக்கவில்லை; அதனால் குழந்தை அழுகிறது' என்று மறுபடியும் பால் கொடுப்பார்கள். சில குழந்தைகள் தாகத்தின் ஆவலுக்குப் பால் குடிக்கும்; சில குழந்தைகள் குடிக்காது. குடித்த குழந்தைக்கு வயிறு அதிகம் பருத்துச் சில நாட்களில் ஜீரண சங்கடங்கள் உண்டாகும். குடிக்காத குழந்தை மறுபடியும் அழும். வாய் இருக்கின்றதா சொல்ல! எனவே குழந்தைக்கு ஏதோ வயிற்றுச் சங்கடம் என்று பலர் பல வைத்தியங்கள் சொல்ல, பல வித வைத்தியங்களும் நடக்கும்.

குழந்தைக்கு எவ்வாறு பசி, தூக்கம் முதலியன இருக்கின்றதோ, அவ்வாறு தாகமும் இருக்கும் என்பதை அநேக தாய்மார்கள் மறந்தே விடுகின்றனர். சிலர் குழந்தைக்கு, தண்ணீர் கொடுத்தால் ஜலதோஷம் பிடித்து விடும் என்று பயப்படுகின்றனர். ஒருகாலும் ஜலதோஷம் பிடிக்கவே பிடிக்காது. ஜலதோஷம் இருந்தாலும் நிவர்த்தி செய்யும். ஆகையால் குழந்தைகளுக்கு மூன்று மணி நேரத்துக்கு ஒரு தடவை பால் உணவு கொடுப்பதுடன் நிறுத்திக் கொண்டு மற்ற வேளைகளில் அழுதால், காரணமறிந்து பரிகாரம் தேட வேண்டும். நம்மைப் போலவே குழந்தைகளுக்கும் பல உணர்ச்சிகள் உண்டு. தாகத்தினால் அழலாம், படுக்கை சூடேறி விட்டமையால் அழலாம், அவ்வாறே குளிர்ந்து விட்டமையினால் அழலாம். முதுகு சூடேறி விட்டமையால் அழலாம். அந்தந்தக் காரணங்களை நன்கு உணர்ந்து பரிகாரம் தேட வேண்டும். பொதுவாய்க் குழந்தைக்கு இரண்டு மூன்று தேக்கரண்டி அளவு கொதித்து ஆறிய ஜலத்தைத் தினசரி மூன்று அல்லது நாலு வேளைகள் கொடுப்பதால் குழந்தை ஆரோக்கியமாய் வளரும். வயிற்று வலிகள், தூக்கமின்மை முதலியன ஏற்படாது. இரவில் குழந்தை எழுந்து அழுதால், இரண்டு தேக்கரண்டி தண்ணீர் கொடுத்தால் குழந்தை நிம்மதியாகத் தூங்கி விடும். குழந்தைகளுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் இரவில் பால் கொடுக்கவே கூடாது.

தண்ணீர் உடல் அவயவங்களின் வேலைகளை ஒழுங்காகச் செய்யவும், கழிவுகளைக் கழிக்கவும் உதவுவதுடன் நோய்கள் வராமல் தடுக்கவும் உதவுகின்றது. பலவித நோய்க்கிருமிகள் நம் உடலில்

புகுந்து வரும்போது. அதனை எதிர்த்துப் போரிட இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள் அணி அணியாகப் புறப்பட்டு வந்து அவற்றுடன் போர் புரிகின்றன. அதற்குத் தண்ணீர் மிகவும் உதவி செய்கிறது. அதனால்தான் ஜுரம் வந்தவர்களுக்குத் தாகம் இயற்கையாய் எடுக்கின்றது. அப்பொழுது காய்ச்சி ஆறின தண்ணீரை வேண்டிய அளவு தாராளமாய்க் குடிக்கக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் இரத்த அணுக்கள் தத்தம் வேலைகளை ஒழுங்காகச் செய்ய முடியும். மற்றும் ஜுரம் வந்தவர்களுக்குக் குளிர்ந்த ஜலம் மிக்க அனுகூலமாய் இருக்கின்றது. குளிர்ந்த தண்ணீருக்கு நரம்புகளைச் சுருங்கச் செய்யும் குணமுண்டு. அதைப் போல வெந்நீருக்கு விரியச் செய்யும் குணமுண்டு. எந்தெந்த சமயத்தில் எவ்வித தண்ணீர் உபயோகிக்க வேண்டுமென்பதை அறிந்து உபயோகித்தால் தண்ணீரானது ஔஷதமாகவே உபயோகப்படும். ஜுரவேகத்தில் இரத்தம் வேகமாய் ஓடுவதால் சூடேறி நரம்புகள் புடைத்திருக்கும். அப்பொழுது குளிர்ந்த ஐஸ் கட்டி உடலில் தேய்த்தால் ஜுர வேகம் தணியும். முக்கியமாய் ஐஸ் கட்டிகளைத் தலைக்கு வைப்பார்கள். காரணம், மூளையை ஊடுருவிச் செல்லும் மிகப் பொடிய இரத்த நாளங்கள் சூடான, வேகமான இரத்தத்தால் புடைத்து வெடித்து விடாமல் இருப்பதற்கே ஆகும்.



பலவித வலிகளையும், நோய்களையும் ஒத்தடங்களினாலேயே போக்கலாம். சூடான ஒத்தடம் என்றும் குளிர்ந்த ஒத்தடம் என்றும் இருக்கின்றன. சில சமயம் மாறி மாறிக் கொடுக்க வேண்டியதாய் இருக்கும். வலிகள், சுளுக்குகள், இரத்த தேக்கம் போன்றவைகளைப் போக்க வெந்நீர் ஒத்தடம் சாலச் சிறந்தது. அதிக வேக்காடு, நரம்பு புடைத்து அதனால் ஏற்படும் வலிகள் போன்றவைகளுக்குக் குளிர்ந்த ஐஸ் ஒத்தடம் நல்லது.


இதைத் தவிர ஜுரம் வந்தவர்களுக்கு உடல் முழுதும் ஈரத் துணியைச் சுற்றி வைப்பார்கள். வீக்கம் முதலியனவும் போக ஈரத் துணி சுற்றுவதுண்டு. மற்றும் நீராவி பிடிப்பது ஒரு பழைய பாட்டி வைத்திய முறை. இதிலும் பலவிதமுண்டு. பல நோய்கள் இதில் குணமாகின்றன. ஆக, தண்ணீரைக் கொண்டு நோய்களைப் பரிகாரம் தேடுவதற்குத் தண்ணீர் சிகிச்சை என்று பெயர். இது ஒரு அபூர்வ கலை. இதனை நாம் படிப்படியாக மறந்து விடுகிறோம். தொட்டி ஸ்நானம், இடுப்பு ஸ்நானம், உப்பு நீர் ஸ்நானம், பனிநீர் ஸ்நானம், வெந்நீர் ஸ்நானம் முதலியவைகளெல்லாம் இந்த ஜல சிகிச்சையில் சேர்ந்ததே. இந்த ஜல சிகிச்சை ஏழை எளியவர்களுக்கு மிக உகந்தது. வரப்பிரசாதம் போன்றது. இந்தக் கலையும் மற்ற வைத்தியங்களைப் போலவே பேணுவாரற்று மறைந்து போயிற்று. ஏதோ ஓரிருவர் இதன் நுட்பங்களைத் தெரிந்தவர்கள் தற்போதும் இருக்கிறார்கள். இந்த ஜல சிகிச்சையைச் செயல் முறைக்குக் கொண்டு வருவார்களானால் பலவித நோய்களை அன்னிய நாட்டு மருந்தின் துணையின்றியே குணப்படுத்தலாம். அதனால் நமது நாட்டுப் பொருளாதாரமும் முன்னேற்றமடையும். நாட்டு வைத்தியக் கலையும் முன்னேறும்.

தண்ணீரை எப்பொழுதும் கொதிக்க வைத்து ஆற்றி வடிகட்டின பின்பே உபயோகிக்க வேண்டும். அப்பொழுதுதான் அதிலுள்ள வியாதிக் கிருமிகள் அழியும், எந்த நோய்களும் தொத்தாது.

தண்ணீரின் மூலம் க்ஷயம், காலரா, அம்மை, டைபாய்டு முதல் சகல தொத்து நோய்களும் பரவ வழியுண்டு. இவ்வாறு காய்ச்சிக் குடிப்பதினால் மேற்படி நோய்களைத் தடுக்கலாம்.

முன் காலத்தில் எல்லாம் செப்புத் தவலைகளைத் தினமும் பளபளக்கத் துலக்கி, குடிக்கவும், சமைக்கவும் தண்ணீரைப் பிடித்து வைப்பார்கள். இப்பொழுதெல்லாம் சிமிட்டித் தொட்டி, இரும்புத் தொட்டி, பித்தளைப் பாத்திரங்கள் உபயோகமாகின்றன. எங்காவது அபூர்வமாய்ச் செப்புப் பாத்திரம் உபயோகிக்கிறார்கள். செப்புப் பாத்திரத்தின் மகிமையை அறிந்தால் மற்ற உலோகங்களை உபயோகிக்கக் கூட மாட்டோம். செப்புப் பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி வைத்து அரை மணி நேரத்துக்குப் பின் பூதக் கண்ணாடியால் பரிசோதித்துப் பார்த்தால் எந்தவித நோய்க் கிருமிகளும் உயிருடன் இல்லாமல் சுத்தமாய் இருக்கும். காலராக் கிருமிகளை இவ்வாறு செப்புப் பாத்திரத்தில் விட்டதில் அவை அரை மணி நேரத்துக்குள்ளாம் மடிந்து விட்டனவாம்.

நம் பெரியோர்கள் தெரியாமலா செப்புப் பாத்திரத்தையே உபயோகித்தார்கள்! குடிக்கும் கமண்டலமாகவும் பூஜைப் பாத்திரங்களாகவும், தீர்த்த செம்புகளாகவும், அழகிய குடமாகவும் செய்து வைத்தார்கள். ஆனால் நாம் அவையெல்லாம் அநாகரிகமென்று வெள்ளியிலும், எவர் சில்வர் பாத்திரத்திலும் அலுமினியத்திலும் இறங்கி விட்டோம். மற்ற எதற்கும் எந்தப் பாத்திரத்தை உபயோகித்தாலும், குடிக்கும் ஜலத்துக்காவது செப்புப் பாத்திரத்தை உபயோகித்தால் நல்லது. காய்ச்சி ஆறின தண்ணீரைச் செப்புப் பாத்திரத்தில் வைத்து உபயோகித்தால் வியாதிக் கிருமிகள் வளராது. தண்ணீரைக் காய்ச்சாமல் உபயோகிக்கிறவர்களும் தண்ணீரை வடிகட்டிச் செப்புப் பாத்திரத்தில் வைத்து, செப்புப் பாத்திரத்தாலேயே குடிப்பது நல்லது. (தொடரும்)



பிரபல விளம்பர ஸ்தாபனமான D.J. கேமர் அண்டு கம்பெனியின் பம்பாய் காரியாலயத்தின் மீடியா மானேஜர் திரு கே. நாராயணசாமியின் சகோதரன் திரு கே. ராமச்சந்திரன் (பாபு) அவர்களுக்கும் செல்வி பத்மாவதிக்கும் மதுரையில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. வாழ்க, மணமக்கள்!



பண்டிகை

நாட்களிலும்

மற்றும் எல்லா நாட்களிலும்

துஷார்

விட்டமின் சேர்ந்த

வனஸ்பதி



துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்நூல்.

துஷார் சுத்திகரித்த எண்ணெயும் கிடைக்கும்



DIAPEPSIN

டயபெப்ஸின்


ஆகாரங்களை இலகு
வாக ஜீரணம் செய்ய
உதவும் ஓர் ஒப்பற்ற
சஞ்சீவி.

உங்கள் டாக்டரை கலந்தாலோசியுங்கள்.

யூனியன் டிரக் கம்பெனி லிட்.
மதராஸ் டிப்போ: 2, ஜோன்ஸ்லேன், மதராஸ்-1

போட்டி விற்பனை


ஒவ்வொன்றும் ஸ்விஸ் தயாரிப்பு
3 வருஷ உத்திரவாதம்



15 ஜுவல்ஸ் க்ரோம் 29/- ரோல்டுகோல்டு 31/-



15 ஜுவல்ஸ் க்ரோம் 27/8/- ரோல்டுகோல்டு 29/-
17 ஜுவல்ஸ் க்ரோம் 35/- ரோல்டுகோல்டு 38/-




15 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேக் 35/-
15 ஜுவல்ஸ் 8¾" சிறிய சைஸ் 40/-
17 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேக் 42/-

PRIMA WATCH CO. (X/2)
POST BOX NO. 983, CALCUTTA-1

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1907)



தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு, மதராஸ்-1

தென் இந்தியாவில் எல்லா முக்கிய இடங்களிலும், பம்பாயிலும்
புது டில்லியிலும் சப் ஆபீஸ்கள், கிளைகள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	57,80,000
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	76,50,000
டெபாஸிட்டுகள் (31-12-54-ல்)	...	ரூ.	24·85 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் செய்யப்படும்

என். கோபால அய்யர், *செக்ரடரி*



கலங்கிய வாழ்வு

✧ வி. சுப்பிரமணியன் நம்பூத்ரி ✧

மலையாளக் கதை ✧ மொழிபெயர்ப்பு ✧ ஜெயமணி

சேது வழக்கம் போல் அன்றும் வேலைக்காக அலைந்தான். ஆனால், வேலை கிடைக்கவில்லை.

வேலையற்றோர் கோஷ்டியில் சேது சேர்ந்து பல நாட்கள் ஆகி விட்டன. ஒவ்வொரு நாளும் அவன் வேலை தேடுவதற்காகக் காலையில் வீட்டிலிருந்து புறப்படுவான். வெறும் கையுடனே அல்ல, உளி முதலிய ஆயுதங்களடங்கிய பையுடனே தான். மாலை வரையில் அலைந்தும்கூட அவனுக்கு வேலை கிடைக்காது. கடைசியில் மிகுந்த ஏமாற்றத்துடன் வீட்டுக்குத் திரும்புவான்.

அது ரேஷன் காலம். சேதுவின் மனைவி மாலு குடிசைக்கு வெளியில் உள்ள மரத்தில் சாய்ந்து கொண்டு சேதுவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். அவன் வெறும் கையுடன் திரும்பி வருவதைக் கண்டதும் மாலு அவனைக் கண்டபடி பேசுவாள். அந்த மழை காலத்தில் ரேஷன் அரிசி வாங்குவதற்குக் கூட வழியின்றி அவன் திரும்பி வந்தால் அவளுக்குக் கோபம் வராமல் என்ன செய்யும்!

"உனக்குக் கிடைக்கும் சம்பாத்தியத்தை நீ காப்பி ஹோட்டலில் செலவழித்து விட்டு வெறும் கையுடன் வீட்டுக்கு வந்தால் நான் உனக்கு எதைச் சமைத்துப் போடுவது! வீட்டில் ஒரு மணி அரிசிகூட இல்லையே!" என்றாள் மாலு.

பகல் முழுவதும் வேலைக்காக அலைந்து விட்டு, கால் கடுக்க, உடல் சோர, பட்டினியாக வீட்டுக்கு வருபவனுக்கு இதுதானா வரவேற்பு! இருந்தாலும் சேது நிதானமிழந்து கோபம் அடையவில்லை. அவள் கூறுவதில் தவறு என்ன இருக்கிறது! அது உண்மைதானே. ரேஷன் அரிசி வாங்கினாலன்றி அவள் எப்படிச் சமைக்க முடியும்!

சேது கெஞ்சும் குரலில் மாலுவைச் சமாதானப்படுத்த முற்பட்டான்.

"நான் என்ன செய்வேன், மாலு! எங்கெல்லாமோ அலைந்து பார்த்தேன். வேலை கிடைக்கவில்லை. நாளை ஏதாவது வேலை கிடைத்தால், இந்த வார ரேஷன் அரிசியை வாங்கிவிடலாம்" என்றான்.

"இப்படித்தான் நீ தினசரி ஏதாவது சாக்குப் போக்கு சொல்லுகிறாய். நீ சம்பாதிப்பதைக் கொண்டு நீயே காப்பி வாங்கிச் சாப்பிட்டு விட்டால், வீட்டில் உள்ள 'மற்றவர்கள்' என்ன செய்வது! இப்படி என்றால் தினந்தோறும் பட்டினி கிடக்க முடியாது."

"நான் வேண்டுமென்று உன்னைப் பட்டினி போடுகிறேனா மாலு. எனக்கு வேலை கிடைத்தால் நான் இவ்விதம் வெறும் கையுடன் வீட்டுக்குத் திரும்பி வருவேனா!"

"சரி. அப்படியானால் நீ கல்யாணமே செய்து கொண்டிருக்கக் கூடாது. கல்யாணம் செய்து கொண்டு என்னையும் ஏன் இப்படிப் பட்டினி போட்டுச் சாகடிக்க வேண்டும்!"

"நான் என்ன செய்வேன்! எனக்கு வேலை கிடைத்த போதெல்லாம் எனக்குக் கிடைத்த சம்பளத்தை நான் அப்படியே உன்னிடம் கொண்டு வந்து கொடுக்கவில்லையா! அவ்விதமிருந்தும் நீ என்னிடம் இப்படியெல்லாம் பேசலாமா!" என்று கேட்டான்.

"'நான் என்ன செய்வேன்' என்கிறாயே? உனக்கு வெட்கமாக இல்லையா! மனைவியை ஆதரிக்க முடியாதவன் கல்யாணமே செய்து கொண்டிருக்கக் கூடாது என்றுதானே சொல்லுகிறேன்."

"இப்போது அதைப் பற்றி என்ன செய்வது! வேலையில்லாமல் இவ்விதம் கஷ்டப்படுவேன் என்று தெரிந்திருந்தால் நான் கல்யாணம் செய்து கொண்டிருக்க மாட்டேன். உன்னை இவ்விதம் கஷ்டத்துக்கும் உள்ளாக்கியிருக்க மாட்டேன். இந்த மழை காலம் போகட்டும். பிறகு எனக்கு ஒழுங்காக வேலை கிடைக்கும். இந்தக் கஷ்டமெல்லாம் தீர்ந்து விடும். இதற்கு முன் உன்னை எப்போதாவது பட்டினி போட்டிருக்கிறேனா!"

"மழை காலம் வரும் என்று உனக்குத் தெரியாதா! அப்போதே முன் ஜாக்கிரதையாக நீ ஏதாவது சேமித்து வைத்திருக்கக் கூடாதா! ஆடவர்களே இப்படித்தான். சம்பாதிப்பதையெல்லாம் செலவழித்து விட்டு, கடைசியில் தங்கள் மனைவி மக்களைப் பறக்க விட்டு விடுவார்கள். என்னை உனக்குப் பிடிக்காவிடில், தயவு செய்து என்னை விலக்கி விட்டு விடு."

மாலுவின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சேது திடுக்கிட்டான். அவனுக்குக் கண்களில் நீர் ததும்பியது. மாலுவை விலக்குவதா! அதை அவனால் நினைக்கவும் முடியவில்லை. மாலு மீது அவன் உயிரையே வைத்திருந்தான். அவளும் அவன்மீது மிகுந்த அன்பு வைத்திருந்தாள். இருந்தாலும் பட்டினி கிடந்து கஷ்டப்படுவதை அவளால் தாங்க முடியவில்லை. அதனால் அவள் கோபமடைந்து தன்னை யறியாமல் வாயில் வந்தபடி சொல்லி விட்டாள்.

எனினும், சேது கண்ணீர் விடுவதைக் கண்டதும் மாலுவின் மனம் இரங்கி விட்டது.

அவள், "அழுது ஆளை ஏமாற்றுகிறாயா!" என்று சொல்லிக் கொண்டே வேகமாகச் சமையலறைக்குள் சென்று விட்டாள்.

சேது வேலைக்குச் சென்றபின் மாலு வீட்டில் சோம்பேறியாக உட்கார்ந்திருப்பதில்லை. மரத் துண்டுகளைச் செதுக்கி அகப்பை முதலிய சாதனங்களைச் செய்வாள். பாய் முடைவாள். பனை

ஓலைகளால் கூடைகள் கட்டுவான். சாயங்காலம் வெளியே சென்று தெருக்களில் அவற்றை விற்று, பணத்துடன் திரும்பி வருவான்.

ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய சாமான்கள் வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றால், கடைக்காரர்கள் ஒன்றுக்கு இரண்டு விலை சொன்னாலும் வாங்கி விடுவார்கள். கஷ்டப்பட்டு சாமான்களைத் தூக்கிக் கொண்டு வீடு தேடி வருவோரிடம் ஒன்றுக்குப் பாதியாகவே விலை கேட்பார்கள் !

எனவே, மாலு தான் உற்பத்தி செய்த சாதனங்களைக் குறைந்த விலைக்கு விற்று விட்டு, மலிவாகக் கிடைக்கும் மரவள்ளிக் கிழங்கை வாங்கி வருவான். சேது வேலை கிடைக்காமல் திரும்பிவரும் நாட்களில், மாலு அதை வேகவைத்துக் கொடுப்பாள். அவன் வீட்டுக்கு வந்த உடனேயே கொடுக்க மாட்டாள். அவனுடன் வாக்குவாதம் செய்தபின் தான் கொடுப்பாள். அவன் வீட்டுக்கு வந்தவுடன் தாமதிக்காமல் தான் வேக வைத்த கிழங்கைக் கொடுத்து விட்டால், சேது சோம்பேறியாகி வேலைக்குச் செல்லுவதை நிறுத்தி விடுவான் என்பது அவளுடைய எண்ணம்.

***

சேது கண்ணீர் விடுவதைப் பார்த்து மனம் இளகிச் சமையல் அறைக்குச் சென்ற மாலு, ஒரு தட்டில் வேகவைத்த மரவள்ளிக் கிழங்குகளுடன் திரும்பி வந்தாள்.



"முழுப் பட்டினி கிடக்காதே. இதோ இந்தக் கிழங்கைச் சாப்பிடு. நான் ஏதோ கோபத்தில் உளறியதை யெல்லாம் மனத்தில் வைத்துக் கொள்ளாதே. மறந்து விடு."

மாலு இவ்விதம் சொல்லிக் கொண்டே சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். மாலுவின் அன்பினால் கட்டுண்ட சேது தன்னுடைய கஷ்டங்களை யெல்லாம் மறந்தான். உடல் சோர்ந்து, உள்ளம் நெகிழ்ந்து, பட்டினி கிடக்கும் அச்சமயத்தில் கூட, அவனுக்குத் தான் இன்ப உலகில் இருப்பதுபோல் தோன்றியது.

கள்ளமில்லாத மாலுவைப் பார்த்த சேதுவுக்கும் கண்ணீர் ததும்பியது.

"நீ ஒன்றும் சாப்பிட வில்லையா, மாலு !" என்று பரிவுடன் கேட்டான்.

"இதையெல்லாம் நீ சாப்பிடு. மீதி வைக்காதே. எனக்கு உள்ளே கொஞ்சம் வைத்திருக்கிறேன்."

இவ்விதம் மாலு கூறியது உண்மையல்ல. உள்ளே தனக்குக் கொஞ்சம் கூட வைத்துக் கொள்ளாமல் மாலு எல்லாவற்றையும் எடுத்து வந்து சேதுவினிடம் கொடுத்து விட்டாள்.

சேதுவுக்கு எல்லாவற்றையும் சாப்பிட மனமில்லை. தனக்குப் பசியாக இருந்தும் கூட பாதியை மாலுவுக்கு வைத்து விட்டான்.

பிறகு இருவரும் இந்த உலகத்தையே மறந்து ஆனந்தமாகத் தூங்கினர்.

இதற்கு முந்தியும், சேது வேலை அகப்படாமல் திரும்பி வந்த நாட்களில் எல்லாம் அது போன்ற நாடகமே நடந்து வந்தது. அவன் வெறும் கையுடன் திரும்பி வருவதைக் கண்ட மாலு அவன் மீது சீறி விழுவதும், பிறகு சேது கண் கலங்குவதும், கடைசியில் அவர்களுக்குள் சமரசம் ஏற்படுவதும் சகஜமாக இருந்தன.

***

வழக்கம் போல் சேது மறுநாள் காலையில் எழுந்ததும் வேலை தேடுவதற்காக வெளியே புறப்பட்டான். அன்றைக்கு நிச்சயமாக ஏதாவது வேலை கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டே சென்றான். அவன் வீட்டில் சோறு சமைத்துப் பல நாட்கள் ஆகி விட்டன. எத்தனை நாட்கள் அரை வயிற்று அரிசிக் கஞ்சிக்கும் வழியின்றி மரவள்ளிக் கிழங்கைத் தின்று கொண்டு ஜீவிப்பது !

சேதுவுக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. கஷ்டப்பட்டுச் சம்பாதித்து மாலுவை ஆதரிக்க வேண்டியது அவனுடைய கடமை யல்லவா ! அதற்கு மாறாக அவன் மாலுவின் சம்பாத்தியத்தில் வாழ

வேண்டியிருந்தது, அவனுக்கு மிகவும் வருத்தமாகவும் வெட்கமாகவும் இருந்தது.

மற்ற நாட்களைக் காட்டிலும் அன்று சேது அதிகமாக அலைந்தான். அவனது உடல் சோர்ந்தது; முகம் வாடியது; மனம் கலங்கியது; வயிறு பசியினால் பற்றி எரிந்தது.

அன்று அவன் இருட்டிய பின் வெறுங் கையுடன் வீட்டுக்குத் திரும்பி வந்தான். சோதனையாக அன்று மாலுவுக்கும் எதுவும் கிடைக்கவில்லை. அவள் செய்த மர அகப்பை ஒன்றும் அன்று விற்பனை ஆகவில்லை. எனவே, அவளும் அன்று வெறும் கையுடன் வீட்டுக்குத் திரும்ப நேர்ந்தது.

சேதுவின் முகத்திலிருந்தே அவன் அன்றும் வெறுங் கையுடன் திரும்பி வந்திருக்கிறான் என்பதை அவள் தெரிந்து கொண்டாள். எனவே, அவனைப் பார்த்ததும் அவளுக்கு ஆத்திரம் பொங்கியது. அவளுக்கு அன்று ஏதாவது கிடைத்திருந்தால் அவ்வளவு கோபம் ஏற்பட்டிராது. இரண்டு பேரும் பட்டினியாகக் கிடக்கும்படி நேர்ந்ததை அவளால் சிறிதும் சகிக்க முடியவில்லை.

"இனி உன்னுடன் நான் இவ்விதம் தினந்தோறும் பட்டினி கிடந்து வாழமுடியாது. என்னைத் தாமதிக்காமல் நாளைக்கே என் தாயாரிடம் கொண்டு போய் விட்டு விடு. இனி இங்கு நான் திரும்பி வரப் போவதில்லை" என்றாள்.

இவ்விதம் மாலு உரக்கக் கத்தி விட்டாள். ஒரு நாளுமில்லாமல் அவள் அவ்வாறு உரக்கக் கத்தியது சேதுவின் ஹிருதயத்தில் தைத்தது. அவனும் பொறுமை இழந்தான்.

"பேஷாகப் போய்விடு. நீ என்னை விட்டுப் போகக் கூடாது என்று நான் உன்னைக் கட்டியா வைத்திருக்கிறேன்! இன்றிலிருந்து நீ என் மனைவி அல்ல, நானும் உன் கணவன் அல்ல."

"நானா உன்னைத் தேடி வந்து கல்யாணம் செய்து கொண்டேன். நீதான் என்னைக் கல்யாணம் செய்து கொண்டு இங்கு அழைத்து வந்தாய். நீதான் இப்போது என்னை என் தாயார் வீட்டில் கொண்டு போய் விடவேண்டும்!"

மாலுவும் சேதுவுக்குச் சளைத்து விடக் கூடாது என்று உரக்கக் கத்தினாள்.

இருவரும் ஒருவரை யொருவர் கடுமையாகப் பேசவும் ஏசவும் தொடங்கினர். அவர்களுடைய வாய்ச் சண்டையிலிருந்து இனி சமரசத்துக்கு வழியில்லை என்பது தெளிவாகியது. கடைசியில், மறு நாள் காலை மாலுவை அவளுடைய தாயார் வீட்டில் கொண்டு போய் விடுவதாகச் சேது கோபத்துடன் ஒப்புக் கொண்டான்.

இருவரும் இரவு தூங்கவேயில்லை. சேதுவும் மாலுவும் கல்யாணம் செய்து கொண்டு ஒரு வருஷம்கூட ஆகவில்லை. அதற்குள் அவர்களுடைய வாழ்க்கைப் படகு பாறையில் மோதிச் சுக்கல் சுக்கலாகி விட்டது போல் தோன்றியது. இருவரும் கண்டு வந்த கனவுகள் எல்லாம் நிறைவேறுவதற்கு வழியின்றி கொடிப் பொழுதில் தண்ணீர் மேல் எழுத்துப் போல் மறைந்து விட்டன.

சேது இராமல் தான் எப்படி வாழ்வதென்று மாலு மனம் கலங்கினாள். மாலு இராத வாழ்க்கை சேதுவுக்கு ஒரே அந்தகாரமாகத் தோன்றியது.

"என்னை மன்னித்து விடு, மாலு" என்று சொல்லி அவளைச் சமாதானம் செய்யலாமா என்று எண்ணினான் சேது. அவள் தானே முதலில் கத்தி



னர். அவள் தன்னுடன் முதலில் பேசினால் போதும். தொடர்ந்து அவனைச் சமாதானப் படுத்தி விடலாம். இல்லாவிட்டால் நடப்பது நடக்கட்டும் என்று பேசாமல் இருந்து விட்டான்.

மாலுவின் மனவேதனையை வர்ணிக்க முடியாது. "சேது என்னிடம் எவ்வளவு அன்பு காட்டி வந்திருக்கிறான். நான் அவனைப் பல தடவை கடிந்து பேசியது உண்டு. ஆனால் அவன் ஒருநாள்கூட என் மனம் நோகும்படி பேசியதில்லை. அப்படியிருக்க இன்று அவனை நான் கண்டபடி பேசியது பெரும் தவறு. நியாயமாக நான்தான் அவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்."

இவ்விதம் எண்ணிய மாலு, "இந்தா, உன்னைத் தான், என்னை மன்னித்து விடு" என்று சொல்ல வாயெடுத்தாள். ஆனால் அந்த வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெளி வரவில்லை. "சேது முதலில் வாய் திறந்து பேசினால், நீ அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடலாம்" என்றது அவள் மனம்.

* * *

விடியற்காலம் மாலு எழுந்தாள். சேதுவும் விழித்துக் கொண்டான். இருவர் மனத்திலும் ஏககாலத்தில் ஒரே கேள்வி எழுந்தது. சமரசம் செய்து கொள்வதா அல்லது புனித இல்லற வாழ்க்கையைக் கத்தரித்துக் கொண்டு விடுவதா! ஆனால், யார் முதலில் பேசுவது! இருவரும் பரஸ்பரம் பேசிக்கொள்ள விரும்பினார்கள். எனினும் அர்த்தமற்ற கௌரவம் இருவருடைய மனத்தையும் கல்லாக்கி விட்டது.

வெகுநேரம் இருவரும் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். கடைசியில் மாலு தனக்குச் சொந்தமான சேலை முதலியவற்றை மூட்டையாகக் கட்டிக்கொண்டு வாய் திறவாமல் புறப்பட்டாள். சேதுவும் மௌனமாக அவளுக்கு முன் சென்றான்.

மாலுவின் தாய் வீடு அங்கிருந்து ஒன்றரை மைல் தூரம் இருந்தது. அந்த மௌனம் அவ்விருவருக்கும் சித்திரவதையாக இருந்தது. இருந்தாலும் யார் முதலில் பேசுவது!

"என்னை அவன் திரும்பிப் பார்த்தால் போதும். நான் பேசி விடுவேன்" என்று நினைத்தாள் மாலு.

மாலு ஏதாவது பேசமாட்டாளா என்ற ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் மௌனமாக நடந்து கொண்டிருந்தான் சேது.

மாலுவின் வீடு இன்னும் அரை மைல் தூரம் தானிருந்தது. இச்சமயத்தில் சேதுவுக்கு வெற்றிலை போட்டுக் கொள்ள வேண்டும்போல் இருந்தது. அவன் வெற்றிலையையும் புகையிலையையும் தொட்டு இரண்டு நாட்களுக்கு மேல் ஆகி விட்டன. அதற்குமேல் வெற்றிலை போட்டுக் கொள்ளாமல் இருக்க முடியாது என்று அவனுக்குத் தோன்றியது. மாலுவைக் கேட்டால் என்ன! வெற்றிலைக்காக மாலுவிடம் பேசுவது தன் கௌரவத்துக்குக் குந்தகமாகாது.

"மாலு, வெற்றிலைப்பாக்கு இருக்கிறதா உன்னிடம்" என்று கேட்டான் சேது.

மாலுவுக்குப் போன உயிர் திரும்பி வருவது போலிருந்தது. இன்னும் சிறிது நேரம் சேது பேசாமலிருந்தால் அவளே பேசியிருப்பாள்.

"இருக்கிறது" என்று சொல்லிவிட்டு, மாலு கீழே உட்கார்ந்தாள். தன் மூட்டையை அவிழ்த்து அதிலிருந்து வெற்றிலைப் பாக்கையும் புகையிலையையும் அவனிடம் எடுத்துக் கொடுத்தாள். அவளுக்கு உள்ளூற மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

சேதுவும் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டான். "நீயும் கொஞ்சம் வெற்றிலை போட்டுக் கொள், மாலு!" என்றான். உடனே மாலுவும் ஆட்சேபனை செய்யாமல் அவன் கொடுத்த வெற்றிலையைப் போட்டுக் கொண்டாள்.

வெற்றிலை போட்டு முடிந்தபின் இருவரும் தலை குனிந்த வண்ணம் உட்கார்ந்திருந்தனர். "ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்! போகலாம், புறப்படு" என்றாள் மாலு கடைசியாக.

"எங்கே!" என்றான் சேது.

"எங்கேயா! என் தாயார் வீட்டுக்குத்தான்."

"இனி என்னுடன் இருப்பதில்லை என்று உறுதியாக முடிவு செய்து விட்டாயா!"

"உனக்கு அதில் என்ன சந்தேகம் வந்தது!"

"சரி, உன் தாயார் வீட்டுக்குச் சென்றபின் நீ என்ன செய்வாய்!"

"என்ன செய்வாய் என்றால்..."

"இல்லை, நீ வேறு ஒருவனைக் கல்யாணம் செய்து கொள்வாயா!"

"ஆமாம், நான் தனியாக எப்படி இருக்க முடியும்! நீ என்ன செய்வாய்!"

"நானும் எவளையாவது கல்யாணம் செய்து கொள்ள வேண்டியது தான்."

சேதுவின் குரலில் சோகம் ததும்பியது. இருவரும் சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். அப்போது அவ்விருவருக்கும் பரஸ்பரம் விட்டுப் பிரிந்து செல்லுவது முடியாத காரியம் என்று தோன்றியது.

"மாலு, நீ வேறு ஒருவனைக் கல்யாணம் செய்து கொண்டு, நானும் வேறு ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டு கஷ்டப்படுவதைக் காட்டிலும், நாம் இப்போது மறுபடியும் புதிதாகக் கல்யாணம் செய்து கொண்டு புதிய இல்லற வாழ்க்கையை ஆரம்பித்தால் எவ்வளவு மேலாக இருக்கும்!"

சேதுவின் யோசனையைக் கேட்டதும் மாலுவுக்குப் புல்லரித்தது. அவள் சேதுவை அன்பு ததும்பப் பார்த்தாள்.

"அப்படியானால், இப்போது நீ ஏன் உன் தாயார் வீட்டுக்குச் செல்ல வேண்டும்!" என்று கேட்டான் சேது தொடர்ந்து.

"இது என்ன வெட்கக்கேடு! யார் என் தாயார் வீட்டுக்குப் போக வேண்டும் என்று சொன்னார்கள்! நாம் உடனே வீட்டுக்குத் திரும்பி விட வேண்டும். நம்மை இந்த இடத்தில் யாராவது பார்த்தால் கைகொட்டிச் சிரிப்பார்கள்" என்று அவசரப்படுத்தினாள் மாலு.

சேதுவும் மாலுவும் சந்தோஷமாகத் தங்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள்.


அவர்களை அப்பொழுது பார்த்தால் புது தம்பதிகளைப் போலவே இருந்தது. புதிதாக இல்லற வாழ்க்கை நடத்தும் தம்பதிகளின் முகத்தில் ததும்பும் ஆனந்தமும் எதிர்காலத்தில் நம்பிக்கையும் அவர்களுடைய முகத்தில் பிரதிபலித்தன. அவர்கள் தங்களுடைய சண்டையையும், கஷ்டங்களையும் பசியையும் மறந்தார்கள்.

"இனி நமக்குக் கஷ்டம் வராது, மாலு. இனி எத்தகைய இன்னல் நேர்ந்தாலும் கூட நாம் பிரிய மாட்டோம்" என்றான் சேது.

பெரு மழையினால் கலங்கிய ஏரி பின்னர் தெளிவடைவது போல், ஒரு சாதாரண சச்சரவால் கலங்கிய அவர்களுடைய இல்லற வாழ்வில் மறுபடியும் அற்புதமான அமைதி ஏற்பட்டது.

பிரசித்திபெற்ற பாண்ட்ஸ் க்ரீம்களின் உதவியால்

உங்கள் வதனத்தை மென்மையாகவும் நிர்மலமாகவும் வைத்திருங்கள்



ஒவ்வொருவருடைய சரும இயல்புக்கும் உகந்தவாறு இரண்டு மேன்மையான க்ரீம்கள்.

எழிலரசியாகத்திகழ எந்தப் பெண்மணியும் ஆசைப்படுவது சகஜமே! அதை உத்தேசித்தே பாண்ட்ஸ் க்ரீம்களின் தயாரிப்பாளர்கள், உங்களுக்கு உதவியாக இதோ இரண்டு அழகு சாதனங்கள் வழங்குகின்றனர். பாண்ட்ஸ் க்ரீம்கள், வரட்சி அல்லது நசநசப்பு மிகுந்த பிரதேசங்களில் உங்கள் சருமத்தைப் பாதுகாப்பதற்கென்றே தயாரிக்கப்பட்டவை; உலர்ந்ததோ, இல்லை எண்ணெய்ப்பசையுடையதோ ஆன எத்தகைய சருமத்திற்கும் பொருத்தமான வகையில் அமைந்தவை. உலகமுழுவதிலும் உள்ள எழில் நங்கையர்களைப் போல் நீங்களும் இந்த க்ரீம்களை பிரதிதினமும் உபயோகித்து, உங்கள் வதனத்தை புதுமலர்ப் புதுமையோங்க வைத்திருங்கள்!



உங்கள் முகப்பொலிவை பாழ்படுத்தும் வரட்சியான பிரதேசங்களில் — பாண்ட்ஸ் கோல்ட் கிரீம் உங்களுக்கு தேவை. அதிலடங்கிய செழிப்பான எண்ணெய்கள் சருமத்திற்கு சமனூட்டி, கடுமையான வெயில் மற்றும் வரட்சிக்காற்றிலும் அது வாடி வதங்காமல் காப்பாற்றுகின்றன.



வெப்பம், நசநசப்பு மிகுந்த பிரதேசங்களில் — அல்லது சருமம் இயற்கையாகவே எண்ணெய்ப்பசையுடையதாகும் — பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள். இம்மெல்லிய க்ரீம் சருமத் துவாரங்களில் படியும் பிசுக்கையும் செத்த ஜீவாணுக்களையும் வெளியேற்றி உங்கள் மேனிக்கு செளகியமான பாதுகாப்பு அளிக்கின்றது.

உங்களுக்கிஷ்டமான பாண்ட்ஸ் க்ரீமை கர்ன் தோறும் உபயோகியுங்கள். சொற்ப தினங்களில் உங்கள் வதனம் அன்றலர்ந்த மலர்போல் மென்மையாக, புதுமைப் பொலிவுடன் விளங்குவதைக் காண்பீர்கள்—உணரவும் செய்வீர்கள்!

உலகில் எழிலரசிகள் உபயோகிக்கும் க்ரீம்கள்

பாண்ட்ஸ்

கோல்ட் க்ரீம்

வானிஷிங் க்ரீம்



P. 9045

விவேகமுள்ள இல்லாள்-



ஆண்டு பூராவும் தன்குடும்பத்திற்கு அவள் 'ஓவல்டின்' கொடுக்கிறள்

ஆரோக்கியத்தையும், பலத்தையும் அளிக்கும் இதன் மதிப்பிட இயலாத தன்மையை உணர்ந்து, விவேகமுள்ள இல்லாள், தன் குடும்பத்திற்கு ஆண்டு பூராவும் ஓவல்டின் கொடுக்கிறள்

ஓவல்டின் எப்பொழுதும் வரவேற்கப்படுகிறது; குளிர்காலத்தில் ஒரு கப் சூடான ஓவல்டின் போன்ற சிறந்ததோர் சமனமூட்டும் பானம் இல்லை வெயில் காலத்தில், அது புத்துணர்ச்சி அளிக்கும் குளிர்ந்த பானமாகிறது.

இந்த ருசி மிகுந்த உணவு-பானம் ஆரோக்கியமான, அயர்ந்த நித்திரை கொடுப்பதோடு, உடலுக்கும், மூளைக்கும் போஷாக்கு அளிக்கிறது. இயற்கையின் சிறந்த உணவுச் சத்துக்கள், B & D வைட்டமின்கள் ஆகியவைகளிலிருந்து இது தயாரிக்கப்படுகிறது உங்கள் ஸ்டோரில் கேட்டுவாங்கிக் கொள்ளுங்கள்--ஆனால் அசல் ஓவல்டினை மட்டும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகஸ்தர்கள்: கிரஹாம்ஸ் ட்ரேடிங் கோ (இந்தியா) லிட்.



ஓவல்டின்

சூடான அல்லது குளிர்ந்த பானமாக கொடுக்கலாம்.

சனிக்கிழமைகளில் இரவு 8 முதல் 8-30 வரை ரேடியோ ஸிலோனில் ([illegible] 41·72 மீட்டர்கள்) ஓவல்டின் அமைச்சூர் நேரத்தை கேளுங்கள்

IV. 423

சக்கரவர்த்தித் திருமகன்

60. கோபம் தணிந்தது

ராஜாஜி

மழைக் காலம் முடிந்தது. ஆகாயம் மேகமும் மின்னலும் இல்லாமல் வெளுத்து விட்டது. பறவைகளும் பறந்து விளையாட ஆரம்பித்து விட்டன. மகா புத்திசாலியும் தர்மத்தினின்று என்றும் பிறழாத உள்ளத்தைப் பெற்றவனுமான ஹநுமான் தன் அரசனிடம் சென்றான்.

ராஜ காரியங்களையெல்லாம் மந்திரிகளிடத்தில் ஒப்புவித்து விட்டு, அந்தப்புர போகத்தில் மூழ்கிக் கிடந்த சுக்ரீவனிடம் சென்று வினயமாகப் பேசலானான். எத்தனை அறிவாளிகளும் நல்லவர்களுமானாலும் சுக போகத்தில் மூழ்கி விட்டால் கடமைகளை மறந்து விடுவது இயற்கை என்பது ஹநுமானுக்குத் தெரிந்த விஷயம்.

"முன்னோர்கள் அனுபவித்த ராஜ்யத்தை அடைந்து விட்டீர். புகழும் பெற்று விட்டீர். உம்முடைய அதிகாரம் ஸ்திரமாகி விட்டது. ஆனால் மித்திரர்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்து அவர்களுடைய சிநேகத்தைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டியது எஞ்சி நிற்கிறது. அதைச் செய்தால் அல்லவோ உம்முடைய புகழ் இன்னும் பெருகும். ராஜ்யமும் பலப்படும். தன் காரியங்களையும் சுகங்களையும் புறக்கணித்துங்கூடத் தன்னுடைய நண்பர்களின் காரியத்தை வாக்களித்தபடி செய்ய வேண்டும். அப்படிச் செய்து தீர்த்தால் அரசனுடைய பலமும் கீர்த்தியும் விருத்தியடையும். பிரதிக்ஞை செய்து கொடுத்த வாக்குறுதிப்படி, சொன்ன காலத்துக்கு முன்னாலேயே அதைச் செய்து தருவது விசேஷம். காலதாமதம் கூடாது. செய்ய வேண்டியதைக் கால தாமதம் செய்து விட்டு, பின்னால் செய்தாலுங் கூட அது பயன் தராது. மித்திரர்களுக்குச் செய்ய வேண்டியதை அவர்கள் அதைப் பற்றி ஞாபகப்படுத்துவதற்கு முன்பே செய்வது புத்திசாலித்தனம். தாமதப்பட்டுச் செய்வதில் குணக் குறைவு. இது உமக்குத் தெரிந்த விஷயமே. ராமன் நமக்குச் செய்த உதவியை நாம் நினைவில் வைத்து அவனுக்காக நாம் செய்ய வேண்டியதை அவன் நமக்கு நினைவூட்டுவதற்கு முன்னதாகவே நாம் ஆரம்பிக்க வேண்டும். மாரி காலம் முடிந்து விட்டது. இனி தாமதிக்கக் காரணமில்லை. சீதையைத் தேட வேண்டிய பெருங் காரியத்தை இனி ஒத்தி வைப்பது தகாது. ராமன் அதைப் பற்றி மிகப் பொறுமையாகவே இருந்து வருகிறான். ஆனாலும் இனி கொஞ்சமேனும் தாமதிக்கலாகாது. ராமன் உம்முடைய சத்துருவைக் கொன்றதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதிலுள்ள பெரிய அபாயத்தையும் பழியையும் கருதாமல் எவ்வளவு துரிதமாகச் சொன்னபடியே செய்து விட்டான். நாமும் அவ்வாறே வாக்குறுதியைச் சீக்கிரமாக நிறைவேற்ற வேண்டும். கால தாமதம் செய்வது கூடாது."

* * *

இவ்வாறு மிக வினயமாக நீதி முறையை எடுத்துக் காட்டி மாருதி சுக்ரீவனுக்கு யோசனை சொன்னான். சுக்ரீவனும் அது சரி என்று ஒப்புக் கொண்டு, சரியான காலத்தில் யோசனைகள் சொன்னதற்காக ஹநுமானுக்கு நன்றி செலுத்தி வானர சேனையைத் திரட்டச் சொல்லி நீலனுக்கு உத்தர விட்டான்.

"பூமி முழுதும் சுற்றித் தேடிப் பார்த்து சீதையைக் கண்டு பிடிக்க வேண்டும். திறமை வாய்ந்த வான

ர்களை உடனே வந்து சேரக் கண்டிப்பாக உத்தரவிடுவாய். வந்துசேராதவர்களுக்கு மறு விசாரணையின்றித் தண்டனை விதிக்கப்படும்'' என்று சொல்லி விட்டு சுக்ரீவன் தன் அந்தப்புரத்துக்குள் சென்றான்.

*　　*　　*

ராமனும் லக்ஷ்மணனும் தங்களுடைய குகையில் காலம் கழித்து வந்தார்கள். எப்போது மாரி காலம் முடிந்து வானர ராஜன் தன்னுடைய பணியைச் செய்வான் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மழை யெல்லாம் முடிந்து வனமும் வனத்தில் வசிக்கும் பிராணிகளும் மிகுந்த அழகுடன் பிரகாசித்து வருவதை ராமன் பார்த்து அரக்கன் கையில் அகப்பட்டுத் தவிக்கும் சீதையைப் பற்றி எண்ணி யெண்ணித் துயரத்தில் மூழ்கினான்.

"உலகமெல்லாம் சௌந்தரியமும் மகிழ்ச்சியுமாக இருக்கிறது. சீதை எங்கேயோ தவித்துக் கொண்டிருக்கிறாள். நானோ இங்கே நன்றி மறந்த வானர ராஜனுடைய தயவை எதிர்பார்த்துக் கொண்டு சும்மா கிடக்கிறேன். ஆஹா! நான் சென்ற தண்டகாரண்யத்தை ஒரு உத்யான வனமாகக் கருதி என்னுடன் முள் மேலும் கல் மேலும் துள்ளிக் குதித்து சந்தோஷமாக நடந்து வந்தாளே. அவள் இந்த சமயத்தில் என்ன கஷ்டப்படுகிறாளோ! இந்த வானர ராஜனோ மதுபானத்தில் மூழ்கி, பெண்களோடு கூடி கிராம்சிய சுகத்தில் ஈடுபட்டு எனக்குத் தந்த வாக்கை முற்றிலும் மறந்து விட்டான். இந்த வானர ராஜன் ஒரு கயவனாகத் தெரிகிறது. லக்ஷ்மணா! நீ உடனே கிஷ்கிந்தைக்குப் போய் வானர ராஜனைக் கண்டு சொல்: 'உன் அண்ணனை அனுப்பிய யமாலயத்தின் வாயில் திறந்து உனக்காகவும் காத்திருக்கிறது. தெரிந்து கொள். வாலி சென்ற வழி நீயும் போக விரும்புகிறாயா?' என்று நான் கேட்டதாக அவனுக்குப் பளிச்சென்று சொல்லி புத்தி புகட்டுவாய்.

"'செய்த உபகாரத்தை மறந்தவன் அழிந்து போவான். மித்திரனை ஏமாற்றப் பார்ப்பவன் கதி அதோகதியாகும். ராமனுடைய வில்லும் அம்பும் தயாராக இருக்கின்றன' என்று அவனுக்குச் சொல்.

"மாரி மாதங்கள் நான்கும் முடிந்து விட்டன. நான்கு மாதங்களும் ராமனுக்கு நான்கு யுகங்களாகக் கழிந்தன. நீயும் உனக்கு அடங்கியவர்களுமோ சந்தோஷமாக போகங்களை அனுபவித்து வருகிறீர்கள். ராமனுடைய கோபத்தை வளர்த்துவருகிறீர்கள். நாசமடைவதற்கு வழி தேடுகிறீர்கள்' என்று சொல்வாய்."

இப்படி ராமன் தன் கோபத்தையும் ஆத்திரத்தையும் சுக்ரீவனுக்குத் தெரியப் படுத்தச் சொல்லித் தம்பி லக்ஷ்மணனை அனுப்பினான்.

*　　*　　*

லக்ஷ்மணன் புறப்பட்டான். அண்ணனுடைய துயரத்தையும் நெருப்பைப் போன்ற கோபத்தையும் அப்படியே ஏற்று வாங்கிக் கொண்டு புறப்படப் போனான்.

உடனே ராமன் யோசிக்கலானான். லக்ஷ்மணனுடைய சுபாவமறிந்தவனானபடியால் இது அபாயத்தில் முடியும் என்று எண்ணித் தம்பியைக் கூப்பிட்டு மறுபடியும் ராமன் பேசலானான்.

"சுக்ரீவனிடம் என் கோபத்தைச் சொல்லும்போது கடுஞ் சொற்கள் உபயோகிக்க வேண்டாம். என்னவாயினும் அவனை நாம் சிநேகிதனாகக் கொண்டு விட்டோம். அவனுடைய தவற்றை மட்டும் எடுத்துக் காட்டு'' என்று எச்சரித்து அனுப்பினான்.

லக்ஷ்மணன் "அப்படியே!'' என்று சொல்லிச் சென்றான். ஆயினும் மகா கோபத்தோடேதான் கிஷ்கிந்தை வாயிலை அணுகினான்.

*　　*　　*

லக்ஷ்மணனுடைய கோபத்தோற்றத்தையும் கையிலிருந்த ஆயுதங்களையும் பார்த்து வானரக் காவலாளிகள் ஏதோ விபரீதம் நடக்கும் போலிருக்கிறது, கோட்டையை ஜாக்கிரதையாகக் காக்க வேண்டும் என்று அவர்களும் ஆயத்தமானார்கள்.

அவர்களுடைய இந்த நடவடிக்கையைப் பார்த்த லக்ஷ்மணனுக்கு இன்னும் கோபம் அதிகரித்தது.

சில வானரர்கள் ஒரே ஓட்டமாக ஓடி அந்தப்புரத்திலிருந்த சுக்ரீவனுக்கு விஷயத்தைச் சொன்னார்கள். "லக்ஷ்மணன் பெருங் கோபமாய் வில்லும் பாணமுமாக வந்து கொண்டிருக்கிறான். தடுத்தாலும் நிற்கவில்லை'' என்றார்கள்.

வானர ராஜனோ கள்ளும் ஸ்திரீகளுமாக அந்தப்புரத்தில் மயக்கத்தில் கிடந்தான். வானரர்கள் சொன்னது அவன் காதில் ஏறவில்லை.



ராஜ சேவகர்களுடைய உத்தரவின் பேரில் குகை வாயிலைச் சேனையாட்கள் பலமாக நின்று யாரும் உள்ளே பிரவேசிக்காமல் காவல் காத்தார்கள். இப்படி நிகழ்ச்சிகள் மேன்மேலும் இளைய பெருமானுக்குக் கோபம் மூட்டும் முறையில் வளர்ந்து கொண்டு போயின.

* * *

தடையை மீறி லக்ஷ்மணன் உள்ளே பிரவேசித்தான். முதலில் அங்கதனைக் கண்டான். வாலியின் குமாரன் அங்கதனைக் கண்டதும் லக்ஷ்மணனுடைய கோபம் ஓரளவு தணிந்தது.

“குழந்தாய்! போய் வானர ராஜனிடம் தெரியப் படுத்துவாய்! ராமசந்திரனுடைய துயரத்தால் தம்பி லக்ஷ்மணன் மிக வருத்தத்துடன் அரமனை வாயிலில் அரசனைப் பார்க்கக் காத்திருக்கிறான் என்று சொல்வாய்!” என்றான்.

அங்கதன் அந்தப்புரம் போய் சுக்ரீவனிடம் விஷயத்தை மிக வினயமாய்த் தெரிவித்தான்.

ஆனால் இராம்பிய போகத்தில் மூழ்கியிருந்த சுக்ரீவனுக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை. இதைக் கண்டு அங்கதன் மிகவும் வருத்தப் பட்டான். அந்தரங்க மந்திரிகளுடன் என்ன செய்வது என்று ஆலோசித்தான்.

ஹனுமான் உள்பட சில மந்திரிகள் உள்ளே சென்று சுக்ரீவனுக்கு விஷயங்களை நன்றாக எடுத்துக் காட்டி அவன் புத்தி தெளிவடையச் செய்தார்கள்.

“நான் ஒரு பிசகும் செய்யவில்லையே? என் நண்பர்களாகிய ராம லக்ஷ்மணர்களுக்கு என்மேல் ஏன் கோபம்? யாரோ விரோதிகள் கோள் சொல்லி அவர்களுடைய மனத்தைக் கெடுத்திருக்க வேண்டும்” என்றான் சுக்ரீவன்.

ஹனுமான் “அரசனே, நான் சொல்லக் கடமைப் பட்டவன், சொல்லுகிறேன். கோபித்துக் கொள்ளக் கூடாது. ராமனுக்கு நாம் செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றாமல் தாமதம் செய்து விட்டோம். ராமசந்திரனுடைய துயரத்தை நாம் மறந்து விட்டோம். இது நமக்கு அபாயமாக முடியும், ஆனபடியால் செய்ய வேண்டியதைச் செய்வீர். லக்ஷ்மணனிடம் மன்னிப்புக் கேட்டு இனி தாமதப் படுத்தாமல் ராமனுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்” என்றான்.

இதன்மேல் சுக்ரீவன் லக்ஷ்மணனை அழைத்து வரச் சொன்னான்.

லக்ஷ்மணன் சென்றான். கிஷ்கிந்தையின் அழகையும் உன்னத நாகரிக நிலையையும் பார்த்து வியந்தான். அழகிய தெருக்களின் வழிச் சென்று சுக்ரீவனுடைய அந்தப்புரத்துக்கு வெளியே நின்றான். உள்ளிருந்து மகிழ்ச்சி ஓசைகளும் ஆட்டமும் பாட்டும் கேட்டு இவர்கள் தங்கள் கடமையை முற்றிலும் மறந்து விட்டு இப்படி போகத்தில் மூழ்கி யிருக்கிறார்களே என்று கோபம் இன்னும் அதிகமாயிற்று. ஆயினும் ஸ்திரீகள் நிறைந்து கிடக்கும் அந்த இடத்துக்குள் போகக் கூச்சப்பட்டுத் தூர ஒருமூலையில் நின்று வில்லின் நாணை இழுத்து ஒலி யெழுப்பினான்.

அந்த ஒலி கிஷ்கிந்தா நகரத்தை நடுங்கச் செய்தது. நாண் ஓசையைக் கேட்டதும் சுக்ரீவன் பயந்து எழுந்து இளைய ராஜகுமாரன் உண்மையில் ஏதோ கோபமாக வந்திருக்கிறான் என்று அபாயத்தை உணர்ந்துகொண்டு தாரையைக் கேட்டுக் கொண்டான். அவளை முன்னதாகச் சென்று லக்ஷ்மணனைச் சமாதானப் படுத்தும்படி கேட்டுக் கொண்டான்.

* * *

தாரை லக்ஷ்மணனிடம் சென்றாள். அழகிலும் உலக விஷயங்களைப் பற்றிய சாமர்த்தியத்திலும் பேச்சு நயத்திலும் அவளுக்குச் சமானம் யாருமில்லை. அவள் லக்ஷ்மணனுக்குச் சொன்னாள்:

“வெகு நாட்கள் தரித்திரத்தையும் பகைவன் தொந்தரவையும் பொறுத்துக் கஷ்டப்பட்ட சுக்ரீவன் நீங்கள் சம்பாதித்துக் கொடுத்த ராஜ்யசுகங்களை அனுபவித்து வருகிறான். போகத்தில் புத்தி மயங்கி விட்டான். அவன் குற்றம் எனக்குத் தெரியாததல்ல. நீங்கள் அவன் மேல் கோபம் கொள்ளலாகாது. எல்லாம் தெரிந்த நீங்கள் பொறுமை யிழக்கலாகாது. மது பானத்திலும் பிராக்ருத போக மயக்கத்திலும் மூழ்கிய சுக்ரீவனைப் பூரண அறிவைப் பெற்ற நீங்கள் மன்னிக்க வேண்டும். அவன் உங்களுக்குச் செய்ய வேண்டியதை மறந்துவிடவில்லை. பல இடங்களிலுள்ள நம்முடைய வீரர்களை யெல்லாம் வந்துசேர உத்தரவு பிறப்பித்திருக்கிறான். அவர்கள் இன்றோ நாளையோ வந்து விடுவார்கள். பிறகு சீதையைத் தேடும் வேலையும் ராவணனை எதிர்த்து வெற்றி பெறும் வேலையும் நடைபெறும், சந்தேகப்பட வேண்டாம். அரசனைப் பார்க்க உள்ளே வரலாம்” என்று அழைத்துச் சென்றாள்.

லக்ஷ்மணன் கோபம் தணிந்து உள்ளே சென்றான்.

கோபம் தணிந்த நிலையில் வந்த லக்ஷ்மணனைப் பார்த்து சுக்ரீவன் மிகச் சந்தோஷப்பட்டு ஆசனத்தி லிருந்து இறங்கி வணங்கினான்.

"நான் எந்தக் குற்றம் செய்திருந்தாலும் மன்னிக்க வேண்டும். ராகவனுடைய சிநேகத்தாலும் வீரத்தாலும் அல்லவா நான் ராஜ்ய பதவியை அடைந்தேன். ராமன் செய்த உபகாரத்தை நான் மறப்பேனா? ராமனுடைய பராக்கிரமத்தை நான் அறிந்தவன் அல்லவா? என் துணையே இல்லாமல் பகைவர்களை நாசம் செய்யும் பலம் அவருக்கு உண்டு என்பது எனக்குத் தெரியும். நான் என் சேனைகளுடன் வெறுமனே அவரைப் பின்பற்றிச் செல்வேன். அவ்வளவே. நிச்சயமாக ராவணன் அழிவான். சீதையைத் தேடுவதற்கு ஏற்பாடுகள் உடனே செய்யப்படும், நான் செய்த தாமதத்தை மன்னிப்பீர்களாக" என்று சுக்ரீவன் சொன்னான்.

இதைக் கேட்ட லக்ஷ்மணன் மகிழ்ச்சி அடைந்தான்.

"உன்னைப் போன்ற வீரன் ராமனைத் தவிர வேறு யாருமில்லை. ரிச்யமூகம் வந்து ராமனைக் கண்டு அவன் துயரத்தைத் தணிக்கும் வார்த்தைகளைச் சொல்வாயாக" என்றான்.

• • •

ஒரே சிவிகையில் சுக்ரீவனும் லக்ஷ்மணனும் ஏறிச் சென்றார்கள். ஏற்கனவே செய்யப்பட்ட ஏற்பாடுகளையெல்லாம் ராமனுக்குச் சொல்லி அவனைத் திருப்திப் படுத்தினார்கள்.

ராமன் சந்தோஷமாகப் பேசினான்:

"உன்னைப் போன்ற நண்பன் உலகத்தில் வேறொருவனில்லை. மேகங்கள் மழை பெய்வதைப் போலும், சூரியன் இருட்டை நீக்குவதைப் போலும், சந்திரன் மக்கள் உள்ளத்தைக் குளிரச் செய்வதைப் போலும் யாருடைய ஏவுதலுமில்லாமல் உதவுவது உண்மை நண்பனுடைய சுபாவம். உன் நட்பை நான் சம்பாதித்தது என் பாக்கியம். இனி ராவணன் அவன் குலத்துடன் நிர்மூலமாவது நிச்சயம்."

இவ்வாறு ராமன் தன் நன்றியையும் மகிழ்ச்சியையும் சுக்ரீவனிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, பெருங் கூட்டமாக வானர வீரர்கள் தத்தம் சேனைகளுடன் சுக்ரீவன் அனுப்பி யிருந்த உத்தரவின்படி பல்வேறு காடுகள் மலைகள் சமுத்திரக் கரைகளி லிருந்து வந்து சேர்ந்து விட்டார்கள். அவர்கள் கிளப்பிய தூசியால் ஆகாயம் மறைந்து இருள் மூடி விட்டது.

பல்வேறு வடிவமும் நிறமும் கொண்ட வானரர்களும் கரடிகளும் கோடிக்கணக்காகக் குழுமி விட்டார்கள். இந்த மாபெரும் சேனைக்குச் சொல்ல வேண்டியதைத் தகுந்தபடி சொல்லி அவரவர்களுக்குத் தாற்காலிகமாக இருக்குமிடம் சுக்ரீவன் நியமித்தான்.

பிறகு யோசித்து சேனாதிபதிகளை எட்டு திக்குகளுக்கும் அவரவர்களுக்குச் சேர்ந்த



வானரக் கூட்டங்களோடு சென்று சீதையைத் தேட உத்தரவிட்டான்.

இவ்விடத்தில் ஒரு விஷயத்தை எடுத்துக் காட்டலாம். கம்ப ராமாயணத்தில் தாரையின் குணத்துக்குக் களங்கமோ குறையோ ஏதுமில்லாமல், வாலி இறந்தபின் அவளை விரதம் காத்தகற்பரசியாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. வால்மீகி ராமாயணத்தில் அப்படியில்லை. வாலி இறந்தபின் சுக்ரீவன் வசத்தில் ராஜ்யாதிகாரத்துடன் தாரை உள்பட அந்தப்புரம் முழுவதும் சேர்ந்து விட்டதாக வைத்துக் கொண்டு விஷயங்கள் சொல்லப்படுகிறது. சுக்ரீவன் கிராம்மிய சுக பரவசனாகிப் போய் மது பானத்திலும் மூழ்கி ராம காரியத்தை மறந்து கிடந்தபோது தாராதேவியையும் அதில் சேர்த்தே குறிக்கப்பட்டிருக்கிறது.

பழைய ராஜ குல சம்பிரதாயத்திலும் வேறு குலங்களிலும் அண்ணன் இறந்த பின் புருஷனை யிழந்த அண்ணன் மனைவியைக் குலத்துக்கு எஜமானனான தம்பி தன் மனைவியாகச் சேர்த்துக்கொள்ளும் வழக்கம் இருந்து வந்தது. அது அந்தக் காலத்து ஆசாரம். ஒரு காலத்து வழக்கத்தின் நன்மை தீமைகளை இன்னொரு யுகத்தில் ஆராய்ந்து உணர்வது கடினம். அதற்கு விசால நோக்கமும் கற்பனா சக்தியும் வேண்டும்.

இந்தக் காலத்துச் சூழ்நிலைகளை உத்தேசித்து ஆராய்ந்தாலும் ஒன்று வெளிப்படை. புருஷனில்லாத ஸ்திரீ ஒரு எஜமானனிடம் நெருங்கிப் பழகும் அவசியம் ஏற்பட்டால் அந்த ஸ்திரீயைப் பற்றி மக்களின் வாயை அடக்குவது கஷ்டம். விவாகம் செய்து கொண்டு விட்டால் இந்த அபாயமில்லை.

தவிர, வால்மீகி முனிவருடைய சித்திரத்தை வைத்துக் கொண்டாலும் நாம் தாரை பேரில் குற்றம் சாட்ட முடியுமா? அவள் பகா சாமர்த்தியசாலி; ராஜநீதியும் உலகப் போக்கும் நன்றாய் அறிந்தவள்: வரப்போகும் சுக துக்கங்களை முந்தியே தெரிந்து கொள்ளும் சக்தியைப் பெற்றவள். வாலி இறந்தபின் அங்கதனைப் பற்றியே அவளுடைய பெருங் கவலை. இந்தக் காரணத்தாலேதான் அவள் சுக்ரீவனுக்கு அடங்கிப் போனாள் என்று வைத்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய இக்காலத்து நடவடிக்கைகளைத்தான் பார்ப்போமே. மனைவியை யிழந்து அழுது புரண்டு அந்தரங்க சுத்தியுடன் துக்கப்பட்ட ஆண் மக்கள் எத்தனை பேர் மறுபடி விவாகம் செய்து கொள்வதைப் பார்க்கிறோமே! முன் காதலித்த மனைவியின் நினைவை நன்றாகக் குறைவின்றிக் கவுரவித்தே இப்படிச் செய்கிறதையும் பார்க்கிறோம். யோக்கியமாக இருப்பதையும் பார்க்கிறோம். அதில் யாதொரு தவறும் காண்பதில்லை. ஆண் மக்களின் நடவடிக்கைக்கு ஒரு தருமம் ஸ்திரீகளுக்கு வேறு தருமமா? தாரையை ஏன் குற்றம் சொல்ல வேண்டும்? கற்பு என்பது இரு பாலாருக்கும் ஒன்றே.

வாலி இறந்த பின் தாரை அந்தப்புரத்துக்கு எஜமானித் தாயாக விளங்கி சுக்ரீவனையும் அங்கதனையும் தன்னுடைய நுட்பமான புத்தியும் அறிவும் கொண்டு நன்றாகக் காப்பாற்றி வந்தாள். இது வால்மீகி ராமாயணத்தில் காணும் தாரை. கம்பருடைய தாரையோ விரதம் காத்து வந்த களங்கமற்ற விதவையாகவும் ராஜ மாதாவாகவும் விளங்குகிறாள். இது நம்முடைய மனத்துக்கு மிகப் பிடித்தமான புனிதச் சித்திரமாக இருக்கிறது. ஆனால் மற்றொன்றும் உலகானுபவத்துக்குப் பொருந்தியதாகத் தான் இருக்கிறது.

வால்மீகி ராமாயணத்திலும் பின்னால் ஒரு இடத்தில் கம்பனுடைய சித்திரத்துக்கு ரொம்ப இடம் தரும் வழியில் சொல்லப்பட்டிருக்கிறது. (சுந்தர காண்டம் 13:28) ஹனுமான் லங்கையில் தேடித் தேடி சீதையைக் காணவில்லை என்று துக்கத்தில் மூழ்கி இனி என்ன செய்யலாம், கிஷ்கிந்தைக்குத் திரும்பிப் போய் முயற்சி எல்லாம் வீணாயிற்று என்று தெரியப் படுத்தினால் என்னவெல்லாம் நேரிடுமோ என்று ஹனுமான் ஆராய்கிறான். அங்கே சொல்லப் படுகிறது வால்மீகி ராமாயணத்திலேயே: "சீதையைக் காணாமல் திரும்பினேனானால் சுக்ரீவன் இறப்பான். புருஷன் இறந்த பின் ருமை உயிர் வைத்திருக்க மாட்டாள். வாலி கொல்லப்பட்ட காலத்திலிருந்து துக்கத்தில் மூழ்கித் துரும்பாக இளைத்துப் போய் உயிரைத் துறக்கவே விரும்பி வரும் வானர அரசி தாரையும் உயிரை நீப்பாள்." இவ்வாறு வால்மீகி ராமாயணத்தில் சொல்லப்பட்டிருப்பது கம்பனுடைய சித்திரத்துக்குச் சரியாக இருக்கிறது. இதை வைத்தே கம்பன் தன் ஒப்பற்ற கற்பனா சக்தியைச் செலுத்தி முழுச் சித்திரத்தையும் அதற்குத் தகுந்தவாறு உண்டாக்கிக் கொண்டு சில விஷயங்களை மாற்றிச் சரிப்படுத்திப் பாடியதாக எண்ணுகிறேன்.

Ruby General Insurance Co., Ltd.

காலஞ் சென்ற "கல்கி" ஆசிரியர் ஸ்ரீ ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எங்கள் கம்பெனியில் எடுத்திருந்த ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகளை அவர் காலமான தேதியிலிருந்து இருபதே நாளில் பரிசீலனை செய்து தாமதமின்றி வெகு துரிதமாக மேற்படி பாலிஸிகளுக்குச் சேர வேண்டிய சுமார் ரூ. 42,000த்தைக் கொடுத்து பட்டுவாடா செய்ததைப் பாராட்டி ஸ்ரீ ராஜாஜி அவர்கள் எழுதிய கடிதத்தின் கையெழுத்துப் பிரதியை அடியில் காணலாம்.

Madras 23.1.55.

My dear Rajendran

I am very glad the Ruby General Insurance have so promptly cleared your father's insurance and have so very speedily sent you & your sister the cheque for the amount due. It is no consolation for your bereavement but it is a great thing to be without minor worries. Yours truly

C. Rajagopalachari

ரூபி ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(சேர்மன்: ஸ்ரீ பி. எம். பிர்லா)


தலைமை ஆபீஸ்: "என்" பிளாக், கன்னாட் சர்கஸ், புது டில்லி


தக்ஷிண பிராந்திய ஆபீஸ்: "பெரோஷ் மஹால்", 32/33, லிங்கிசெட்டித் தெரு, சென்னை


தந்தி: 'RUBINSURE' — த. பெ. கெ. 192 — போன்: 2337



கிளை ஆபீஸ்கள்: கோயமுத்தூர், பெங்களூர், விஜயவாடா, கொழும்பு, சிங்கப்பூர் மற்றும் இந்தியா முழுவதிலும் அயல் நாடுகளிலும்


ஹாஸ்யக் களஞ்சியம்



"என் மனைவியினுடைய ஞாபக சக்தி வர வர மோசமாக இருக்கு! என்ன பண்ணறது?"
"ஏன் மறதி அதிகமா யிருக்கா?"
"இல்லே! ஞாபக சக்திதான் அதிகமாகிக் கொண்டு வருகிறது!"


தலையில் ஊசி போட்டுக் குத்துகிற மாதிரி இருக்கு, டாக்டர்!
1
அப்பாடி! எவ்வளவு ஊசி! இனிமேல் சரியாகப் போய்விடும்.
2


ஏணியை இரவல் கொடுத்தால் இந்த மாதிரி அவஸ்தைதான்!



சாதாரண உபன்யாசம் என்றால்...!
சுண்டலும் உண்டு என்றால்...!
...சர்க்கரைப் பொங்கல் விநியோகமும் உண்டு என்றால்...!


சுட்டிக்காட்டும் விரல்களின் நூதன முறை
மிருகக் காட்சி சாலை
ஆஸ்பத்திரி
பாங்கி


"ஏன் இப்படிப் பசங்களெல்லாம் ஒளிந்து கொண்டு நம்மையே பார்க்கிறார்கள் ?"
"இந்தப் பரீட்சைக்கு நான் கேள்வித் தாள் தயாரிக்கிறேன் என்று அவர்களுக்கு எப்படியோ தெரிந்து விட்டது !"
"நீங்கள் உலாத்திக் கொண்டே சொல்லுகிறீர்கள் ! என் காதில் விழ மாட்டேன்கிறது ! அதுதான் இப்படிப் பின்னாலேயே கூட வந்து டைப் அடிக்கிறேன் !"
சாமா
தாத்தா வாலே சிரித்த முகமா இருக்க முடியாது.. நான் ஒரு யோசனை செய்கிறேன்
சபாஷ் முகமூடி யோசனை, பிரமாதம்..!
①
②
பச்சை குத்துபவர் சித்திரக் கண் காட்சி. டிக்கட் 0-1-0

5,00,000 கதிர்கள்

பருத்தி நூல்கள்

நெ. 80 வரை நூல்கள்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்., மதுரை

மில்கள் : **மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்**

○●○

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கான சகலவிதமான நூல்கள்

○●○

விசேஷ ரகங்கள் :

கயிறுகள், விழுதுகள், கித்தான்கள், நாடாக்கள் முதலியவைகளுக்கான விசேஷ நூல்கள்-தையல் நூல்-முறுக்கேற்றிய திரித்த சரடுகள் முதலியன

○●○

மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

பாண்டியன் பில்டிங்

போன் : 420 (4 லைன்) **மதுரை** *தந்தி :* **"ஹார்வி"**

ஆஸ்த்மா, பிரோங்கைட்டிஸ் இருமல் மற்றும் மூச்சுத் திணறல் 3 நிமிஷங்களில் ஒழியும்

உங்களுக்கு ஆஸ்த்மா அல்லது பிரோங்கைட்டிஸ் மிகக் கடுமையாகி, மூச்சுத் திணறி, தூக்கமின்றி தவிக்கிறீர்களா? உங்கள் வியாதி எவ்வளவு காள்பட்டதாயினும் சரி, மெண்டாகோ (MENDACO) புதிய நம்பிக்கையளிக்கும். மயக்க மருந்து, புகை, இஞ்செக்ஷன், ஆடமைஸர் ஒன்றும் தேவையில்லை. ருசியற்ற இரண்டு மெண்டாகோ வில்லைகளை போஜனத்துடன் உட்கொள்ளுங்கள், போதும். மெண்டாகோ (MENDACO) ரத்தத்துடன் பரவி 3 நிமிஷங்களில் திணறலுக்குக் காரணமான கபத்தைக் கரைத்து அகற்றி, சுவாசத்தை லகுவாக்கி, முதலிரவிலேயே சுக நித்திரை வரச் செய்யும். சீக்கிரத்தில் அநேக வருட இளமையும், வலுவும் பெறுவீர்கள்!

2 வருடங்களாக ஆஸ்த்மா இல்லை

ஸ்ரீ ஜே. ஆர். எடையில் 40 பவுண்டு குறைந்து, இருமலும் திணறலும் பிரதி இரவிலும் தூக்கத்தைக் கலைத்து, முடிவில் சாவை எதிர் பார்த்திருந்தார். மெண்டாகோ (MENDACO) முதலிரவிலேயே ஆஸ்த்மா இழுப்பை நிறுத்தியது.—பின்னர் நோய் திரும்பவே யில்லை.

பணம் வாபஸ் உத்தரவாதம்

மெண்டாகோ முதல் டோஸே ஆஸ்த்மாவின் விளைவுகளை ஒழிக்க இயற்கையுடன் உதவுகிறது. பயன் இல்லையேல், காலிப் பெட்டியைத் திருப்பி முழு விலையையும் திரும்பப்பெறலாம். இந்த உத்தரவாதம் உங்களுக்கான பாதுகாப்பு.

Mendaco

மெண்டாகோ

ஆஸ்த்மா ★ பிரோங்கைட்டிஸ் ★ குளிர் ஜுரம் இவைகளை ஒழிக்கிறது

BDS 301




27. பையில் என்ன ?

வீரப்பதேவன், அரசன் பீமவர்மன் தோட்டத்தில் நிகழ்ந்த அந்த இரகசிய சம்பவத்தைப் பிரபாகரனுக்குச் சொல்லத் தொடங்கினன்: "அந்த மந்திர சக்தி வாய்ந்த அம்புகளைக் கொடுத்தவள் வனதேவதை அல்ல. உங்களை இருட்டு அறையில் வைத்திருந்த அந்த வயல் காட்டுக் கிழவியேதான். உங்களை வில் போட்டியில் எப்படியாவது தோற்கடிக்க வேண்டுமென்ற தீய எண்ணத்துடன்தான் அவள் அப்படிச் செய்தாள். எங்கேயாவது தவறி அந்த அம்புகளை உபயோகித்துப் போட்டியில் தோற்று விடப் போகிறீர்களே என்று நான் அப்பொழுது பயந்தது உங்களுக்கு இப்பொழுது எப்படித் தெரியப் போகிறது? உங்கள் கைகளுக்கு அந்த அம்புகள் வந்தவுடன் உங்களுடைய நன்மைக்காக அந்த நந்தவனத்தில் ஒளிந்து கொண்டிருந்த நான் உங்களிடம் உண்மையைச் சொல்லி, அந்த அம்புகளைப் பிடுங்க எண்ணி இருந்தேன். நல்ல வேளையாக, நீங்கள் வில் போட்டிக்குப் போகும்போது எடுத்துக் கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் அந்த அம்புகளை ஓர் செடியின் மறைவில் வைத்து விட்டுப் போனீர்கள். அதுதான் சமயமென்று அந்த அம்புகளைத் தெரியாமல் எடுத்து உங்களுடன் போட்டியிட்ட வீரசிம்மனின் அம்புறாத் தூணியில் சேர்த்துவிட்டேன். அதை அறியாத அரசன் வில் போட்டியில் அந்த அம்பை உபயோகிக்கவே அரசன் விட்ட மந்திர சக்தி வாய்ந்த அம்பு வளைந்து வளைந்து சென்று அரசனைப் போட்டியில் தோற்கும்படி செய்தது. இல்லாவிட்டால்.."

வீரப்பதேவன் சொல்லியதைக் கேட்ட பிரபாகர், "ஐயா, நீங்கள் சொல்லுவதெல்லாம் உண்மைதானே? அப்படி என்றால் நீங்கள் எங்களுக்காக மறைவிலிருந்து உதவி செய்ததை நாங்கள் மறக்க மாட்டோம். ஏதோ உங்களைத் தவருக எண்ணி விட்டோம்" என்ருன்.

"இதில் மன்னிப்பு என்ன இருக்கிறது? முன்பின் தெரியாமல் நீங்கள் எப்படி என்னை நம்ப முடியும்? உண்மையைச் சொன்னால்தானே நம்பலாம். அந்த மந்திர அம்புகளை மாத்திரம் உபயோகிக்காமல் வீரசிம்மன் தன் அம்புகளை உபயோகித்திருந்தால் நீங்கள் அவரை ஒரு நாளும் ஜயிக்கவே முடியாது. போட்டியில் தோற்றதே வீரசிம்மனுக்கு மிகுந்த அவமானம். தான் அடைந்த அவமானத்தினால் உடனே மாயா மகேந்திர புரத்துக்குச் செல்லாமல் பீமவர்மன் அரண்மனையிலேயே இப்பொழுது தங்கி இருக்கிருர்" என்று வீரப்பதேவன் சொல்லவே, பிரபாகர் வீரப்பதேவன் மீது நம்பிக்கை கொண்டு அவனைத் தன் பக்கத்தில் உட்காரச் செய்தான்.



கன்றுக் குட்டி குதிரையாக மாறும், திருப்பிப்பாருங்கள்.

"என் பெயரையும் என் தங்கை பெயரையும் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். தங்களுடைய பெயர் என்னவோ?" என்று பிரபாகர் அவனைக் கேட்டான்.

"என்னை வீரப்பன் என்று அழைப்பார்கள். எனது முழுப் பெயர் வீரப்ப தேவன்."

"அப்படியா வீரப்ப தேவரே! மிகவும் சந்தோஷம். நாங்கள் ஒரு முக்கிய விஷயமாகக் கல்லறைத் தீவுக்குப் போக வேண்டும். இந்தப் பெரிய பாலைவனத்தைக் கடக்க வேண்டி இருப்பதால் எங்களுக்கு நாழிகை ஆகி விட்டது. நாங்கள் சென்று வருகிறோம்.

பிறகு சந்தர்ப்பம் ஏற்பட்டால் சந்தித்துக் கொள்ளலாம். நீங்கள் எங்களை முன்பின் தெரியா விட்டாலும் மறைமுகமாக இருந்து உதவி செய்ததற்கு மிகவும் வந்தனம்'' என்றான் பிரபாகர்.

ஆனால் உமா ஒன்றும் பேசவில்லை. அவளுக்குத்தான் வீரப்ப தேவனைக் கண்டாலே பயமாயிற்றே.

பிரபாகரன் சொன்னதைக் கேட்ட வீரப்ப தேவன், ''கல்லறைத் தீவுக்கு நீங்கள் எதற்காகப் போகிறீர்கள்? நான் உங்களைக் கேட்கவில்லை. அது உங்கள் சொந்த விஷயம். ஆனால் கல்லறைத் தீவிலிருக்கும் அபாயத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? தெரிந்தால் அங்கு போகப் பிரியம் கொள்ள மாட்டீர்கள்'' என்றான்.



''அங்குள்ள நாயின் அபாயத்தைப் பற்றித் தானே சொல்லுகிறீர்? அதைப் பற்றி நான் கவலைப்படவே இல்லை. எப்படியும் கல்லறைத் தீவை அடைந்தே தீருவோம்'' என்றான்.

''அப்படி என்றால் இந்தப் பாலைவனத்தை நீங்கள் எப்படிக் கடக்கப் போகிறீர்கள்?''

''எப்படியா? நடந்துதான்'' என்று கூறினான் பிரபாகரன்.

''பாலைவனத்தை நடந்து செல்லுவதாக எண்ணினால் அது முட்டாள்தனம். பாலைவனமோ பல மைல்கள் நீளம். நடந்து சென்றால் குறைந்தது ஒரு வாரமாவது ஆகும். அதுவும் மணலில் நடந்து செல்லுவது எளிதான காரியமல்ல. இரவில் துஷ்ட மிருகங்களின் தொந்தரவுகள் வேறு இருக்கும். நீங்கள் நடந்து போக வேண்டாம்.''

''நடந்து போகாமல் எங்களுக்கு வேறு வழி இல்லை!''

''ஏன் இவ்வூர் அரசனின் ஒட்டகம் இருக்கிறதே, அதில் ஏறிச் சென்றால் சீக்கிரம் கல்லறைத் தீவை அடைந்து விடலாம்!'' என்றான்.

''அரசனின் ஒட்டகம் இருந்து அதனால் எங்களுக்கு என்ன பிரயோசனம்?''

''அதென்ன அப்படிச் சொல்லுகிறாய்? உங்கள் நலனுக்காகப் பாடுபடும் இந்த வீரப்ப தேவன் இருக்கும்பொழுது நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம்! நீங்கள் பாலைவனத்தில் நடந்து போகிறது, அதை நான் பார்த்துக் கொண்டு பேசாமல் இருப்பதா? மாட்டவேமாட்டேன். உங்களை அந்த ஒட்டகத்தில் ஏற்றிக் கல்லறைத் தீவுக்கு அனுப்ப நான் ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் இப்பொழுது கல்லறைத் தீவுக்குப் போக வேண்டாம்! சற்று நேரம் கழித்துப் போகலாம். நான் உங்களை இவ்வூர் அரசன் மகேந்திர மன்னனிடம் அழைத்துப் போய் உங்களை அறிமுகப் படுத்துகிறேன். நீங்கள் வீரசிம்மனை வில்போட்டியில் தோற்கடித்ததைப் பற்றி என்னிடம் பெருமையாகப் பேசியிருக்கிறார். அரண்மனைக்கு வந்து சிற்றுண்டிகள் அருந்தி விட்டுத் தான் போக வேண்டும்'' என்றான் வீரப்ப தேவன்.

''ஐயா, வீரப்ப தேவரே! இப்பொழுது வேண்டாம். பிறகு வேறு ஒரு சமயம் பார்த்துக் கொள்ளலாம்!'' என்று கூறினான் பிரபாகர்.

ஆனால் வீரப்பதேவன் அவர்களை விடுவதாக இல்லை. ''உங்களை இவ்வூர் அரண்மனை ஒட்டகத்திலேயே ஏற்றிக் கல்லறைத் தீவுக்கு அனுப்பப் போகிறேன்'' என்று அவர்களிடம் பிடிவாதமாகச் சொன்னான்.

பிரபாகரனும், உமாவும் ஏதோ பேசிக்கொண்டார்கள். வீரப்ப தேவன் சொல்லிய வார்த்தைகளிலிருந்து அவன் நல்லவன் என்று கருதினார்கள் பிரபாகரனும், உமாவும். வீரப்பதேவனுடன் அரண்மனைக்குச் சென்று வர நிச்சயித்தார்கள்.

வீரப்பதேவன் சந்தோஷம் கொண்டான். வீரப்பதேவனின் மகிழ்ச்சிக்குக் காரணம், அவன் சூழ்ச்சி பலித்து விட்டதுதான். இனிமேல் தந்திரமாகப் பிரபாகரனையும், உமாவையும் மகேந்திர மன்னனின் அரண்மனைக்கு அழைத்துச் சென்று, அவர்களை இரகசியமாகக் கைது செய்து வீரசிம்மனிடம் ஒப்படைக்க வேண்டியது தானே அவன் எண்ணம். அப்பொழுது தானே பிரபாகரனையும் உமாவையும் கல்லறைத் தீவுக்குப் போக முடியாதபடி தடை செய்யலாம்.

மகேந்திர மன்னனின் அரண்மனை வாயிலை அடைந்தவுடன் அங்கே ஒரு ஒட்டகம் கட்டப்பட்டிருந்தது. யானை முதுகில் உட்கார்ந்து கொள்ளுவதற்காக அம்பாரியைக் கட்டுவது போல, ஒட்டகத்தின்மீது அம்பாரி கட்டி இருந்தது. ஒட்டகத்தின் பக்கத்திலேயே ஒட்டகத்தை ஓட்டிச் செல்லும் சிப்பந்தி உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் வீரப்பதேவன் வருவதைப் பார்த்து எழுந்து நின்று மரி



புதுமை பெறுங்கள்! முதலில் ஸ்நானம் செய்ததும் சார்மிஸ் டால்கம் பவுடரை உடல் முழுவதும் தூவுங்கள். எத்தகைய புதுமை உணர்ச்சி அது அளிக்கும் தெரியுமா?

மிருதுத்தன்மை பெறுங்கள்! உடலில் சுரணையுள்ள இடங்களிலும் பவுடரை நன்றாக தடவிவிடுங்கள். அது பட்டைப்போல படர்ந்து எரிச்சல் வராமல் பாதுகாக்கிறது.

நீடித்த இனிமையுடன் இருங்கள்! சார்மிஸ் டால்கம் பவுடரை தாராளமாக அடிக்கடி உபயோகியுங்கள். அது செலவில்லாமல் பெருவாழ்வு அளிக்கும் சாதனம். அழகிற்கும் காதல் கவர்ச்சிக்கும் இதுவே சிறந்த ரகசியம்.



சார்மிஸ்
டால்கம் பவுடர்

பரவசப்படுத்தும் மனோ ஹரமான
நறுமண முள்ளது.

உங்கள் நரம்புகள்!

வலுவுள்ளதாக உறுதியுடன் இருக்க வேண்டும் — அதுவும் ஓய்வில்லாத உழைப்பும் ஒழியாத கவலையும் நிறைந்த தற்கால வாழ்க்கையில்

அஸ்வான்

நீண்ட காலமாய் மனோ பலமும் தேக திடனும் வியர்த்தமாகி யிருந்தாலும் ஈடு கொடுத்து போஷாக்கு அளிக்கக் கூடிய ஒரு உயர்ந்த டானிக்

இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள். எப்போதும் கையிருப்பாக வைத்திருங்கள்



சிறியோர்
•
முதியோர்
•
நோயாளிகள்
யாவருக்கும்
உகந்தது

பெங்கால் கெமிகல்

கல்கத்தா : பம்பாய் : கான்பூர்

•

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள்

என். தேசாய் கௌண்டர் & கோ.
41, பந்தர் தெரு - சென்னை

ஆந்திர ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள்

சத்ய நாராயண பார்மஸி
குமரி தெரு, விஜயவாடா-1 & விஜயநகரம்



யாதை செய்தான். உடனே வீரப்ப தேவன் பிரபாகரனையும் உமாவையும் பார்த்து, "அரண்மனை ஒட்டகத்தில் ஏறி நீங்கள் கல்லறைத் தீவு போகலாம் என்று நான் சொன்னேனே, அந்த ஒட்டகம்தான் இது" என்று கூறினான். பிறகு ஒட்டகத்தை ஓட்டும் சிப்பந்தியைப்பார்த்து, "இவர்களை நான் அரசரிடம் அழைத்துச் செல்லுகிறேன். அதற்குப் பிறகு இவர்களை நீ ஜாக்கிரதையாகக் கல்லறைத் தீவுக்கு அழைத்துப் போக வேண்டும்" என்றான்.

"தேவரே! உங்களுடைய உத்தரவை நிறைவேற்றக் காத்திருக்கிறோம்!" என்றான் அந்தச் சிப்பந்தி.

வீரப்பதேவன் தங்களுக்குச் செய்யும் உதவியை நினைத்துப் பிரபாகரனும், உமாவும் பெருமை கொண்டார்கள்.

ஆனால் வீரப்பதேவன் ஒட்டகத்தை ஓட்டும் சிப்பந்தியிடம் சொல்லிய வார்த்தைகள் பிரபாகரனையும், உமாவையும் ஏமாற்றுவதற்காகக் கூறியவையே! வீரப்பதேவனின் திட்டப்படி அரண்மனைக்குள் சென்றதும் அவர்கள் இருவரையும் கைதிகளாக்க வேண்டியதுதானே. பிறகு எப்படி அவர்கள் ஒட்டகத்தில் ஏறுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும்? ஆனால் பிரபாகரனும், உமாவும் வீரப்ப தேவனுடைய கெட்ட குணங்களை எப்படி அறிவார்கள்?

அரண்மனையின் உள்ளே சென்றதும் மகேந்திர மன்னனும், அவனது மந்திரிகளும் கொலு மண்டபத்தில் உட்கார்ந்திருந்தார்கள். வேறு இரண்டு மூன்று அரண்மனைச் சிப்பந்திகளைத் தவிர அங்கு வேறு யாருமில்லை. வீரப்பதேவன் உள்ளே சென்றதும் தனியாகச் சென்று பிரதான மந்திரியின் காதில் ஏதோ இரகசியம் சொன்னான். அந்த மந்திரி அந்த ரகசியத்தை அரசனுடைய காதுகளுக்கு எட்ட வைத்தான். உடனே அரசன், "ஓஹோ, நீதானா என் சிநேகிதர் வீரசிம்மனை வில் போட்டியில் சூழ்ச்சி செய்து தோற்கச் செய்தது?" என்று பிரபாகரனைப் பார்த்துக் கேட்டான்.

அந்தக் கேள்வியை அரசனிடமிருந்து அவன் எதிர் பார்க்கவில்லை. திடுக்கிட்டு நின்றான். அப்பொழுதுதான் வீரப்ப தேவன் நயவஞ்சகமாகப் பேசி அவர்களுக்கு அங்கு அழைத்து வந்தது தெரிந்தது. இருந்தாலும் பிரபாகர் தைரியத்தைக் கை விடாமல், "அரசே! நான் என்ன தவறு செய்தேன்? தயவு செய்து தெரியப் படுத்துங்கள்" என்றான்.

"உனக்குப் பேச்சு வேறு! வீரசிம்மனிடமிருந்த உண்மையான அம்புகளை எடுத்து அதற்குப் பதிலாக மந்திர சக்தி வாய்ந்த அம்புகளை அடைத்தது உன்னைத் தவிர வேறு யார்? இல்லா விட்டால் வில் வித்தையில் தனக்கு நிகரில்லை என்று இருப்பவராகிய வீர சிம்மனை உன்னால் தோற்கடிக்க முடியுமா? நான் வீரசிம்மன் சொல்லி அனுப்பியபடி, அரசன் மீது சூழ்ச்சி செய்த குற்றத்துக்காக உன்னைக் கைது செய்து வீரசிம்மனிடம் ஒப்படைக்க வேண்டியது என் கடமை" என்றான்.

உமா, அரசன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுப் பிரமை பிடித்தவன் போல ஒன்றும் பேசாமல் விழித்தாள். உடனே வீரப்பதேவன் பிரபாகரனையும் உமாவையும் பார்த்து ஏளனமாகச் சிரித்தான். "என்ன உமா, உன் கையில் என்ன? ஏதாவது சிற்றுண்டிகளோ! கொண்டுவா, சாப்பிடலாம்!" என்றான். பிறகு உமாவின் கையிலுள்ள காகிதப் பையைப் பார்த்து, "அதற்குள் என்ன இருக்கிறது, பார்ப்போம்" என்று சொல்லிய வண்ணமாக இறுமாப்புடன் தன் கத்தியின் முனையால் அந்தக் காகிதப் பையைக் கிழித்தான். கிழித்த உடனே அதற்குள் இருந்த பச்சைத் திராக்ஷைப் பழங்கள் நாலா பக்கங்களிலும் சிதறி ஓடின. அந்தப் பழத்தின் பருமனையும், பளபளப்பையும், தோற்றத்தையும் கண்டு அந்தப் பழங்களைத் தின்பதற்கு யார்தான் தயங்குவார்கள்? அங்கிருந்தவர்களில் பிரபாகரனும், உமாவும் தவிர மற்றவர்கள் அவசர அவசரமாகக் கீழே விழுந்த பழங்களைத் தின்றார்கள். ஏன், அரசனும் இரண்டு திராட்சைப் பழங்களை எடுத்துத் தின்றான்! (தொடரும்)

EMPIRE'S ***FORWARD LEAP***

NEW BUSINESS

1954 (Exceeds)	...	Rs.	3,82,00,000
1953 ...	...	Rs.	3,22,00,000

This substantial increase is symbolic of the growing confidence of the insuring public in the strong financial position and satisfactory service of the Company.

The
EMPIRE OF INDIA
LIFE ASSURANCE CO., LTD.
(ESTD. 1897)

Head Office: EMPIRE HOUSE
D. NAOROJI ROAD, BOMBAY-1

BRANCHES ALL OVER INDIA

Applications For Agency invited

இதோ!ஒருமுறை பிரஷ்கொண்டுதேய்த்தால்
கால்கேட்டெண்டல்கிரீம்
சொத்தையும் துர்நாற்றமும் ஏற்படுத்தும்
பாக்டீரியா கிருமிகளை 85% ஒழிக்கிறது!



உயர் பதவிக்கு உகந்தவன்




ஸெவன் ஓ’க்ளாக் பிளேடுகளால் உங்களுக்கு என்ன அனுகூலம்

பணம் மிச்சமாகிறது. டீக்கான தோற்றம்.
க்ஷவரசுகம். பரிசுத்தத்தன்மை.
வெற்றிக்கான மார்க்கம்.

தினசரி ஸெவன் ஓ’க்ளாக் பிளேடுகளால்
க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்.

7 o’clock BLADES





46. சம நோக்கம்

பிரானலாலின் பேச்சைக் கேட்ட ரமேஷுக்குச் சுருக்கென்று மனத்தில் முள் குத்துவது போலிருந்தது. அவரும் ஜகதீஷையேதான் சந்தேகிக்கிறார் என்பதை ஒருவாறு உணர்ந்து கொண்டான். தனது உயிருக்குயிரான நண்பனைப் பற்றிப் பிறர் கூறும் அவச் சொல்லைக் கேட்க அவனுக்குச் சகிக்கவில்லை. எனவே, "என் நண்பன் எத்தனைதான் தலை போகிற சிரமம் வந்தாலும் திருட மாட்டான். இந்த விஷயத்தில் எனக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது!" என்று அவன் அடித்துச் சொன்னான்.

அவனது சொல்லில் தொனித்த அழுத்தத்தைக் கவனித்த சுகபால், "உன் நண்பன் என்ன? நீயே கூடச் சந்தர்ப்பம் நேர்ந்தால் திருடுவாய். மனிதனின் சுபாவத்தை இந்த உலகத்தில் யார் அப்பா சரியாகக் கண்டிருக்கிறார்கள்?" என்றான் இளக்காரமாக.

அதிகக் கோபப்படுவதனாலோ, தாபப்படுவதனாலோ பயன் இல்லை என்பதை அறிந்த ரமேஷ் மேலே பேச்சுக் கொடுக்காமல் மௌனம் சாதித்தான்.

போலீஸ்காரர்கள் வந்து சம்பவம் நிகழ்ந்த இடத்தைச் சோதனை போட்டார்கள். வாக்குமூலம் வாங்கிக் கொள்ள வேண்டியவர்களிடம் வாக்குமூலம் வாங்கிக் கொண்டார்கள். கையோடு கையாகச் சந்தேகாஸ்பதமானவர்களைப் பிடிப்பதற்கு உத்தரவும் போட்டார்கள்.

ரமேஷ் கடைசிவரை போலீஸ்காரர்களுடனேயே இருந்தான். ஜகதீஷ் பிடிபட்டால் அவன் உதவிக்கு இந்த உலகம் முழுவதும் தேடினாலும் தன்னைத் தவிர அவனுக்கு வேறு யாரும் அகப்பட மாட்டார்கள் என்றே ரமேஷ் எண்ணினான். அதோடு ஜகதீஷ் ஓடி ஒளிய மாட்டான். தன்னைத் தானே போலீஸில் கொண்டு வந்து ஒப்புவித்துக் கொண்டு விடுவான் என்றும் அவன் நிச்சயித்திருந்தான். அதனால் எந்தச் சமயம் எத்தகைய உதவி ஜகதீஷுக்குத் தேவைப்படுமோ, யார் கண்டார்கள்? எனவே அவன் கணமும் போலீஸைப் பிரியவில்லை.

ஆனால் அவன் நினைத்தது போல் அங்கே எதுவும் நடக்கவில்லை. போலீஸார் எத்தனை தேடியும் அவர்கள் முயற்சி பலன் அளிக்கவில்லை; ஜகதீஷ் அகப்படவில்லை.

ரமேஷுக்கும் புதுமையாகப் பட்டது. ஜகதீஷ் எங்கே போயிருப்பான்? இரவு பத்து மணிவரை அவனும் போலீஸ்காரர்களுமாகச் சேர்ந்து ஜகதீஷ் அகப்படுவான் என்று நினைத்த இடங்களில் எல்லாம் சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்து விட்டார்கள். என்ன தேடியும் கிடைக்காமற் போகவே, போலீஸார் ரமேஷைப் பார்த்து, "நாங்கள் சந்தேகத்தில் தேடும் ஆசாமி உன் நண்பன் தானே?" என்று கேட்டார்கள்.

"ஆம். என் நண்பன்தான்!" என்றான். உண்மையைக் கூறுவதில் என்ன தவறு?

"நீ எல்லா இடங்களையும் காட்டினாய். ஆனால் ஒரு இடத்தை மட்டும் காட்டவில்லையே! அதுவும் பார்க்க வேண்டிய இடமாயிற்றே!" என்றார் போலீஸ் அதிகாரி.

"எந்த இடம்?"

"நீ எங்கே இருக்கிறாய்?" என்று அவர் கேட்ட கேள்வி ரமேஷைத் தூக்கிவாரிப் போடச் செய்தது.

போலீஸ்காரர்கள் எதற்காக இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்? நம்மிடத்திலேயே சந்தேகமா அல்லது நமது நண்பனை ஜகதீஷ் நம் வீட்டில் வந்து ஒளிந்து கொண்டிருக்கலாம் என்று சந்தேகப்படுகிறார்களா?

சிந்தித்துப் பார்த்த ரமேஷுக்குப் போலீஸாரின் கேள்வியும் சந்தேகமும் சரியாகவே தோன்றின. அதைத் தொடர்ந்தாற் போல், 'ஜகதீஷ் நம் வீட்டிலேயே வந்து ஒளிந்து கொண்டிருந்தால் என்ன செய்வது?' என்ற பயம் வேறு அவனைப் பிடித்துக் கொண்டது. அது நடவாத காரியம் என்று அவன் தன் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டாலும் அது நடக்க முடியாது என்று சொல்லி விடுவதற்கில்லையே!

"நானா? ஸர் பிஹாரிலாலின் பங்களாவில்தான் இருக்கிறேன்!" என்றான்.

"எங்கே இருந்தால் என்ன? அந்த இடத்தையும் பார்த்துவிடவேண்டியதுதான். கெட்டிக்கார மனிதனாயிருந்தால், எந்த இடத்தில் சந்தேகம் குறைவோ, அந்த இடத்தில்

தான் ஒளிந்து கொள்ளுவான்!" என்று சொன்ன போலீஸ் அதிகாரி இரண்டு மூன்று போலீஸ்காரர்களை அழைத்துக் கொண்டு ஸர் பிஹாரிலாலின் வீட்டுக்குப் புறப்பட்டார். ரமேஷும் கூடவே சென்றான். போலீஸ் அதிகாரிக்கு உதவி செய்யும் சாக்கில், அவருடைய அனுதாபத்தைப் பெற்று ஜகதீஷுக்கு எந்த வழியில் உதவி செய்யலாம் என்பதில் அவன் கண்ணுயிருந்தான். ஆனால் சந்தேகத்துக்கு ஆஸ்பதமான ஜகதீஷ், ரமேஷுக்கு வேண்டியவன் என்று யாரோ கயிறு திரித்துவிட்டார்கள். உண்மை அதுவாகவே இருந்தாலும் போலீஸ் அதிகாரிக்கு அது தெரிந்திருக்க நியாயம் இல்லை.

போலீஸ் அதிகாரி அவனிடம் அநுதாபம் காட்டுவதற்குப் பதிலாகக் குற்றவாளியைக் கண்டு பிடிக்கும் விஷயத்தில் அவனையே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப் பார்த்தார்.

பங்களாவைச் சமீபித்த ரமேஷுக்கு அதன் ஒரு பகுதியில் புகை வருவதாகத் தோன்றியது. அதைக் காட்டிப் போலீஸ் அதிகாரியின் கவனத்தை அவன் கவர்ந்தான். அதைப் பார்த்த அதிகாரி, "சரிதான்! உன் திருடன் இதற்குள்தான் இருக்கிறான். ஒன்று பிடிபட்டு விடுவோமோ என்று அவன் ஒன்றிக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஸர் பிஹாரிலாலிடம் பழி வாங்கத் திட்டமிட்டுக் கொண்டிருக்க வேண்டும்!" என்றார். பிறகு தம் பக்கத்தில் நின்ற மூன்று போலீஸ்காரர்களையும் பார்த்து, "இருவர் வெளியிலேயே நின்று கொண்டிருங்கள். யாராவது வெளியே வந்தால் பிடித்துக்கொள்ளுங்கள். ஒருவர் என்னோடு வாருங்கள்!" என்றார். உள்ளே புறப்பட்டவர் மறுபடியும் ரமேஷைத் திரும்பிப் பார்த்து, "என்ன? என் சந்தேகம் ஊர்ஜிதம் ஆகி விட்டதல்லவா?" என்றார். அவருக்குத் தமது திறமையில் அவ்வளவு நம்பிக்கை. புகையைப் பார்த்ததும் அவர் சந்தேகம் இன்னும் பன்மடங்கு அதிகரித்து விட்டது.

ரமேஷுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. 'என்ன ஆகுமோ? ஜகதீஷை இங்கேயே பிடித்து விடுவார்களோ?' என்று பயந்தான். ஆனால், 'ஜகதீஷ் எதற்காகத் தீ வைக்க வேண்டும்? அவனுக்குப் பிஹாரிலாலிடம் என்ன விரோதம் இருக்க முடியும்?' என்பதுதான் யோசிக்க யோசிக்க அவனுக்குப் புரியவில்லை.

அதற்குள் புகைக்குப் பதிலாக இரண்டு மூன்று இடங்களில் வெளிச்சமே தெரிந்தது; பிறகு தீ ஜுவாலையே கூடத் தெரிந்தது. உடனே போலீஸ் அதிகாரியும் ரமேஷும் விவரத்தை அறிவதற்காக அந்தப் பக்கம் விழுந்து அடித்துக் கொண்டு ஓடினார்கள்.

ஸர் பிஹாரிலால் அன்று மிகவும் மனச் சஞ்சல முற்றிருப்பவராகத் தோற்றமளித்தார். பெண்ணின் பிறந்த நாளாக இருந்த பொழுதிலும் வருஷா வருஷத்தைப் போல் அவரிடம் உற்சாகம் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கவில்லை. பண்பும் ரஸனையும் நிறைந்த அவருடைய உள்ளம் பிராயத்துக்கேற்றவாறு சாந்தி மார்க்கத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

பொதுவாகவே நல்லியல்புகள் கொண்ட நூல்களிலும் ஆத்மானந்தத்தை அளிக்கும் நல்லிசைகளிலும் அவர் ஆர்வம் மிக்கக் கொண்டவர். அவற்றின் ரஸத்தைப் பருகுவதிலேயே அவர் தம் பெரும்பாலான பொழுதைப் போக்க முற்பட்டிருந்தார். சுருங்கச் சொன்னால், உலகப் பற்றைச் சிறுகச் சிறுக உதறி விட்ட ராஜரிஷியைப் போல் அவர் தமது வாழ்க்கையின் வழிகளை வகுத்துக் கொண்டிருந்தார். பிஞ்சில் பழுத்த வறட்டு வேதாந்திகளைப் போல் அவர் வீண் பிடிவாதத்துடனே விதண்டாவாதக் கொள்கைகளுடனே தம் வாழ்க்கையை அப்படி வகுத்துக் கொள்ளவில்லை. உலகத்துப் பொருள்களிடத்துக் காணக் கிடக்கும் சாரத்தையும்



சௌந்தரியத்தையும் கண்டு கேட்டு அனுபவித்து அதன் பின்னரே அவற்றிடமுள்ள சாரமின்மையை உணர்ந்து காலக்கிரமத்தில் இயல்பான போக்கில் ஒவ்வொன்றையும் விட்டு ஒழிக்கும் வானப் பிரஸ்தாசிரமத்தவர்களைப் போல அவர் தம் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக் கொண்டிருந்தார். சிற்சில சமயம் அவர் யோகத்தில் ஆழ்வது உண்டென்றும், பிரேதம், பிதுருக்கள் ஆகியவர்களை ஆவாகனம் செய்து அவர்களுடைய ஆவிகளுடன் உரையாடி மகிழ்வது உண்டு என்றும் கூட அவரைப் பற்றி விஷயமறிந்த வட்டாரங்களில் வதந்தி உலவி வந்தது.

ஆனால் அவருக்கு அவற்றினிடத்தில் எல்லாம் அவ்வளவாக ஈடுபாடு கிடையாது. இன்ப துன்பங்களோ சுக துக்கங்களோ அவரை ஆட்கொள்வதில்லை என்றும் சொல்லிவிட முடியாது. அவற்றுக்கு அவர் பன்முறை அடிபணிந்திருக்கிறார். ஆனால் ஒன்று; எத்தனை பெரிய சங்கடங்கள் நேர்ந்தாலும் அவர் தம் மனத்தை அரற்றிக் கொள்வதில்லை. பெரும் புயல் எழுந்து மரத்தை வேருடன் வெட்டிச் சாய்த்துச் சென்றால், அம் மரம் இருந்த இடம் எப்படி வெறிச்சிட்டுப் போய் விடும்? அப்படி அவர் தம் மன நிலையைப் போக விடுவதில்லை. எத்தனை பெரிய சங்கடம் நேர்ந்தாலும் மனத்தைச் சலிக்க விடாமல் ஒரு நிலையில் நிற்கும்படி பண்படுத்தி வைத்திருந்தார். கடலின் நடுவே நிமிர்ந்து நிற்கும் பாறை எத்தனை பெரும் பேரலைகள் எழுந்து தன்னை முழுக் காட்டினாலும் சலிக்காமல் சளைக்காமல் பழையபடியே நிலையாகத் தலை காட்டும் அல்லவா? அதுபோலத்தான் அவரது மனக் கடலில் எத்தகைய பேரலைகள் எழுந்த பொழுதிலும், உறுதி மட்டும் தளராமல் இருந்தது. சோகமும் சந்தோஷமும் சேர்ந்து அவரை வேர் பறித்துச் சாய்த்ததில்லை; அப்படியே சாய்க்க முயன்றாலும், அவர் விஷயத்தில் அவற்றின் ஜம்பம் சாய்ந்ததில்லை. அப்படி அவர் தமது உள்ளத்தைப் பண்படுத்திப் பக்குவப்படுத்தி வைத்திநந்தார்.

ஆனால் அன்று ஏனோ தெரியவில்லை, அவரையும் மீறி அவர் முகத்தில் கவலைக் குறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. அதைத் தெரியாமல் மறைக்க வேண்டும் என்பதற்காக அவர் எவ்வளவோ முயன்றார்.

குஸுமாவோ தன் பிறந்த நாளைப் பற்றிய கற்பனையிலும் கனவிலும் மூழ்கித் தன்னை மறந்த நிலையில் மகிழ்ந்திருந்தாள். அதனால் அவர் தமது கலவரக் குறியை அவளிடம் இலேசாக மறைக்க முடிந்தது. அவள் கருத்துடன் கவனித்திருந்தால் கண்டு பிடித்திருப்பாள்; அவரால் மறைக்க முடிந்திராது. எல்லோரும் ஆலைக்குச் சென்ற பிறகு அவர் மட்டுமே தனியாகத் தம் அறையில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அவர் முகத்தில் தாண்டவமாடிய பரபரப்பு வெகு தெளிவாகத் தெரிந்தது.

ரமேஷ் எல்லோருடனும் போகவில்லை. வேலை நிறுத்தம் சம்பந்தமான பேச்சு வார்த்தையில் பங்கு எடுத்துக் கொள்ளும்படி அவனிடம் யாரும் சொல்லவில்லை. அப்படியிருக்கும் பொழுது அழையா வீட்டுச் சம்பந்தியாக அவன் எதற்கு அவர்களோடு போகப் போகிறான்? சரியான சமயத்தில் வந்து அன்பளிப்புத் தொகையைத் தான் உபயோகப் படுத்தப் போகும் முறையைப் பற்றி அவனைப் பிரகடனப் படுத்துமாறு குஸுமா கேட்டுக் கொண்டிருந்தாள். அந்தச் சிறு காரியத்துக்காக அவன் அப்பொழுதே அவசரப்பட்டுக் கொண்டு அவர்களோடு போக வேண்டும் என்பதில்லையல்லவா? எனவே, மெதுவாகப் போனால் போயிற்று என்று எண்ணியவன், தனிமையில் அமர்ந்திருந்த ஸர் பிஹாரிலாலிடம் வந்து, "நீங்கள் சமா



தானைக் கூட்டத்துக்குப் போகப் போவ தில்லையா?" என்று கேட்டான்.

"இல்லை, எனக்கு அங்கே என்ன வேலை? சொல்ல வேண்டியதை யெல்லாம் நான் பிராணலாலிடம் சொல்லி விட்டேன். அவரே பார்த்துக் கொள்வார்!"

"நேற்று ஒரு புஸ்தகம் படித்துக்கொண் டிருந்தோமே! அதில் இன்னும் பாக்கி யிருக்கிறது. நீங்கள் படிக்கலாம் என்றால் படிக்கிறேன்!" என்றான் ரமேஷ். தினம் போல் ஸர் பிஹாரிலால் அன்று அமைதியாக இல்லை என்பதை அவரது முக பாவம் அவ னுக்குத் தெளிவாக்கியது.

"நேற்று என்ன அத்தியாயம் படித் தோம்?" என்று கேட்டார் ஸர் பிஹாரிலால்.

"'காட்டுமிராண்டி சாதியர்களிடையே நர பலி!' என்னும் அத்தியாயம். இன்று மேலே படிக்க வேண்டும்!" என்றான் ரமேஷ்.

ஸர் பிஹாரிலால் இலேசாகச் சிரித்தார். "காட்டுமிராண்டி சாதியினரிடையே நர பலியா? நாகரிக மக்களிடையே நரபலி என்று ஒரு அத்தியாயமும் இதோடு சேர்க் கப்படவேண்டும்!—அது போகட்டும். இன்று நீ ஒன்றும் படிக்க வேண்டாம். முதலில் ஆலைக்குப் போய்க் குஸுமா அளிக்க விருக் கும் நன்கொடையைப் பற்றித் தொழி லாளர்களிடையே பிரகடனப் படுத்தி விட்டு வா, போதும்!" என்றார்.

சரியென்று சொல்லி விட்டு ரமேஷ் அங் கிருந்து புறப்பட்டான். ஸர் பிஹாரிலால் மீண்டும் தனிமையில் விடப்பட்டார். அவர் தம் கண்களை இறுக மூடிக் கொண்டார். கிட்டத்தட்ட ஐந்து நிமிஷங்கள் அவர் தமது மூடிய கண்களைத் திறக்க வில்லை. கண்களைத் திறந்த பொழுது ஜுகல்கிஷோர் அவர் எதிரே நின்று கொண்டிருந்தான். இந்த நேரத்தில் அவருக்குப் பிடிக்காத மனிதன் அங்கே எதற்காகத்தான் வந்து சேர்ந்தானோ?

"ஏன், என்ன விஷயம்?" என்று அவனைப் பார்த்துச் சர்வ சாதாரணமாகவே கேட்டார் ஸர் பிஹாரிலால்.

"நாத் பாபா வந்திருக்கிறார். வழியில் அவரைப் பார்த்தேன். தம் வண்டியில் என்னை அழைத்துக் கொண்டு தங்கள் இல்லத்துக்குத் தான் விஜயம் செய்திருக்கிறார். தமது வர வைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்காக என்னை அனுப்பினார். அழைத்து வரட் டுமா?" என்று கேட்டான் ஜுகல்கிஷோர்.

"அப்படியா?—அதிருக்கட்டும், உனக்கு அவரைத் தெரியுமா? எத்தனை நாட்களாக?" என்று கேட்டார் பிஹாரி லால்.

"எனக்கு வெகு நாட்களாகவே அவரைத் தெரியும். இது வரை அவர் நகர்ப்புறத்துக்கு வந்ததில்லை. ஆமாம், உங்களுக்கு அவரை எப்படித் தெரியும்?" என்று திருப்பிக் கேட்டான் ஜுகல்கிஷோர்.

"அவர் பெயரைக் கேள்விப் பட்டிருக் கிறேனே யொழிய இதுவரை நான் அவரைத் தரிசித்ததில்லை. நிலபுலன்கள் வாங்குவது சம்பந்தமாக நான் நாட்டுப்புறத்துக்கு ஒரு சமயம் சென்றிருந்தேன். அவர் தரப்பில் பல குடியானவர்கள் விவசாயத்துக்கு நிலம் கேட்க வந்திருந்தனர். அப்புறம் அது சம்பந்தமாக அவர் எனக்கு இரண்டொரு கடிதங்கள்கூட எழுதி யிருந்தார்!"

"நீங்கள் ஏதோ யோகாப்பியாசங்கள் கற்றுக் கொள்ள விரும்புவதாக நாத் பாபா சொல்லிக் கொண்டிருந்தாரே!"

"ஆம். அவர் எனக்கு ஒரு புஸ்தகம் அனுப்பி யிருந்தார்! அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால் கற்றுக் கொள்ள லாமோ என்று ஆசைப் பட்டேன். சரி, அவரை அதிக நேரம் காக்க வைப்பது அழ கல்ல. அதனால் போய்ச் சீக்கிரமாக அவரை அழைத்து வா!" என்றார் பிஹாரிலால்.

ஜுகல்கிஷோர் வெளியே சென்றான். கட்டடத்துக் காம்பவுண்டுக்கு வெளியே ஒரு மூடி போட்ட மோட்டார் நின்று கொண் டிருந்தது. ஜுகல்கிஷோர் அதன் கதவைத் திறந்தான். பிறகு உள்ளே யிருந்த நாத் பாபாவின் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான். ஜன்னல் வழியாக இக்காட்சியைக் கவனித்த பிஹாரிலால் சிறிது நேரத்துக்கெல்லாம் தமது நாற்காலி யில் வந்து அமர்ந்து கொண்டார்.

நாத்பாபா காரிலிருந்து இறங்காமற் போகவே, ஜுகல்கிஷோர் காருக்குள் ஏறி னான். அவன் ஏறி உட்கார்ந்த ஐந்தாறு நிமிஷங்கள் கழித்து நாத்பாபா காரிலிருந்து இறங்கினார். கால்களில் அணிந்திருந்த கட்டை 'கடக், கடக்' என்று ஒலிக்க அவர் மட்டும் பிஹாரிலாலின் பங்களாவுக்குள் நுழைந்தார்.

தூரத்தில் துறவி வருவதைப் பார்த்ததுமே ஸர் பிஹாரிலால் மரியாதைக்காக எழுந்து நின்றார். அவரை வரவேற்று அழைத்து வருவ தற்காக வாசற்படியருகில் கூடச் சென்றார்.

துறவி குனிந்த தலை நிமிராமல் வந்து கொண்டிருந்தார். அதைக் கண்ட ஸர் பிஹாரிலால் தலை குனிந்து வணங்கினார். நாத்பாபா ஆசீர்வாதம் செய்யும் பாணியில் ஒரு கையைத் தூக்கி அமர்த்தி விட்டுப் பிஹாரிலாலைப் பார்த்தார். தலை வணங்கி நிமிர்ந்த ஸர் பிஹாரிலால் பேயையோ பிசா சையோ கண்டு விட்டவர் போல் கதிகலங்கித் துணுக்குற்று நின்றார். அவருக்கு நாக்குக் குழறிற்று. "ரஷ்மியா?" என்று பரபரப் பும் பயமும் தொனிக்கக் கேட்டார்.

"ஆம். ரஷ்மியேதான்! ஆவிகளை அழைத் துப் பேசும் உன் வித்தைக்கு இன்று வெற்றி கிட்டி விட்டது. ரஷ்மியின் ஆவிதான் இப் பொழுது உன் எதிரே நின்றுகொண் டிருக் கிறது. தெரிந்ததா?" என்றார் நாத் பாபா.

ஸர் பிஹாரிலால் தம்மைச் சிறிது சுதாரித் துக் கொண்டார். பிறகு, "வா! இங்கே வந்து இப்படி அருகில் உட்கார்!" என்று வரவேற்றுப் பக்கத்தில் கிடந்த நாற்காலி யில் நாத்பாபாவை உட்காரச் செய்தார்.

"நான் ரஷ்மிதானா இல்லையா என்னும் விஷயத்தில் நீ இன்னும் ஒரு தீர்மானத்துக்கு வர முடியவில்லை. இல்லையா?" என்று தம்மையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கும் ஸர் பிஹாரிலாலைப் பார்த்துக் கேட்டார் நாத் பாபா.

"இல்லை. எப்படி வர முடியும்? நீயே சொல்லு. கடந்த இருபது ஆண்டுகளாக நீ அக்ஞாத வாசம் செய்திருக்கிறாய். இன்று வரை உன்னைப் பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை. அதனால்......!"

"அதனால் இதனால் என்பதெல்லாம் எனக்குத் தேவையில்லை. இத்தனை ஆண்டுகளும் நான் உங்கள் மத்தியிலேயே தான் வளைய வளைய வந்திருக்கிறேன். அப்படியும் உங்களால் என்னை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. பேஷ்! என் வேஷம் பலித்து விட்டது!" என்றார் நாத் பாபா.

"எங்கள் மத்தியிலேயேதான் இருந்தாய் என்றால் ஏன் இத்தனை நாட்களும் உன் உண்மைச் சொரூபத்துடன் நீ நடமாடவில்லை?" என்று கேட்டார் பிஹாரிலால்.

"நான் ஏன் ஓடினேன், ஏன் ஒளிந்து வாழ்ந்தேன் என்பதைப் பற்றியெல்லாம் உனக்கு ஏதாவது தெரியுமா?"

"தெரியுமாவாவது? உன் முட்டாள்தனம் தான் காரணம்!"

"பேஷ், சரியாகச் சொன்னாய்! அதே முட்டாள்தனம்தான் என்னை இத்தனை நாட்களும் ஒளிந்து வாழச் செய்தது!"

"இப்பொழுதுதான் இத்தனை நாட்கள் கழித்து நீ உருவத்தைக் காட்டி விட்டாயே! அதனால் இப்பொழுது ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லு. உன் பழைய முட்டாள்தனமெல்லாம் இப்பொழுதாவது பறந்து போய் விட்டதல்லவா?"

"இன்னும் போகவில்லை. ஆனால் இன்றைக்குள் போய் விடும்!"

"இன்றைக்குத்தான் போகப் போகிறதா? இத்தனை நாட்கள் கழித்துத்தான் அதற்கு நல்ல நாள் கிடைத்ததா, என்ன?" என்று இலேசாகச் சிரித்துப் பரிகாசம் தொனிக்கக் கேட்டார் ஸர் பிஹாரிலால்.

"ஆமாம். இன்றுதான் அதற்கு நல்ல நாள் கிடைத்தது. எனக்கு மிக மிகப் பிரியமான இரண்டு நபர்களின் உயிரை வாங்கப் போகிறேன். எனது இவ்விரு கைகளுக்கும் இடையில் மாட்டிக் கொண்டு அவர்களிருவருடைய உயிரும் ஊசலாடப் போகிறது. அவர்களது உயிரோடு எனது முட்டாள்தனத்தின் பெரும் பகுதியும் பறந்து விடப் போகிறது. அதனால் நான் வந்திருக்கும் இந்த நாள் நல்ல நாள்தானே?" என்று கேட்ட நாத்பாபாவின் முகம் மிகப் பயங்கரமாகக் காட்சி அளித்தது.

"இரண்டு நபர்களின் உயிரை வாங்கப் போகிறாயா? அந்த இரு நண்பர்களும் யார் யார் என்று எனக்குச் சொல்லலாமா?"

"பிஹாரி, உனக்கு ஒரு வேளை நினைவு இராது. இருபது வருஷங்களுக்கு மேல் ஓடி விட்டனவே! எப்படி நினைவு இருக்கும்? ஒரு வேளை நீ எல்லாவற்றையும் மறந்தே கூடப் போயிருப்பாய். அதோடு எதைப் பற்றியும் அதிகமாகக் காதில் போட்டுக் கொள்ள உனக்கு நேரமும் இருந்திராது. சென்றதை மறப்பதில் அசட்டு மனிதனுக்கு ஈடு அசட்டு மனிதன்தான் என்று சொல்வார்கள். ஈவு இரக்கமற்றவனையும் கூட அந்தக் கோஷ்டியில் சேர்ப்பது சம்பிரதாயம். இவ்விஷயத்தில் நான் ஒரே ஒரு சின்னஞ்சிறு சீர்திருத்தம் செய்ய விரும்புகிறேன். எதையும் இலகுவாக மறப்பதில் முதல் தாம்பூலம் சாந்தாவுக்கும் அடுத்த தாம்பூலம் உனக்கும்தான் கொடுக்க வேண்டும். தெரிந்ததா?" என்றார் நாத் பாபா.

"தெரிந்தது, தெரிந்தது! முதலில் என் உயிரை வாங்கப் போகிறாயா, அல்லது சாந்தாவின் உயிரை வாங்கப் போகிறாயா?"

"இந்த அசட்டுக் கேள்வி எதற்கு? நான் இங்கே வந்திருப்பதிலிருந்தே தெரியவில்லையா? முதலில் உன் முறைதான். உன்னைத் தீர்த்துக் கட்டியதும் சாந்தாவிடம் போய் இந்தச் செய்தியைச் சொல்வேன். அப்பொழுது அவள் படும் அவஸ்தையையும் சாவதற்கு முன்னால் அவள் புழுவாகத் துடித்து மரிப்பதையும் நான் எனது இந்தக்

இளநரை மீன்றி, கூந்தல் செழிக்க
காஷ்மீர்-குஸும்
உங்கள் எண்ணெயில் ஊறவைக்க

T. A. அப்துல் ரஹீம், தஞ்சாவூர்
சேவல் மார்க்கு ஊதுபத்திகள் வாசனைகள்
கஸ்தூரி பத்தி, ப்ளவர்டஸ்ட்

நஞ்சன்கூடு-பல்பொடி மற்றும் 54 குடும்ப மருந்துகள்
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை கர்ஜன் கோரோஜனை மாத்திரை பாலக்ஸ் பேதியாக மாத்திரை

அரிய அருள் நூல்கள் விரிவுரைகள்
அமிர்தவசனி
தெய்வீக மாதப் பத்திரிகை
பூஜைக்கும் பார்த்துக்கும் உகந்த படங்கள்
சித்திரை-பங்குனி வருட சந்தா ரூ. 2-4-0 அனுப்பவும். (வி. பி. இல்லை) மாதிரி பிரதி அணா 4
திருப்புகழ் மாலை, கந்தக் கதம்பம், கந்தர் அனுபூதி, கந்தர் கலிவெண்பா
சோல் ஏஜண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, சென்னை-1 (மதுரை, கோவை, பம்பாய்)

கண்களாலேயே கண்டு ஆனந்தம் அடைவேன். அப்பொழுதுதான் என் மனத்துக்கு நிம்மதி ஏற்படும்!" என்றார் நாத்பாபா.

நாத்பாபாவின் அறியாமையை நினைத்துப் பார்த்த பிஹாரிலால் இலேசாக ஒரு முறை பொருள் பொதிந்த புன்னகை ஒன்று புரிந்தார். பிறகு, "ரஷ்மி! நீ உன் வாழ்க்கையை எப்படி வீணாக்கிக் கொண்டு விட்டாய், தெரியுமா? கடுகு மலையான கதையாக ஒரு சிறு தவறு எத்தனை பெரிய விபரீதத்தை விளைவித்து விட்டது என்பதை இன்னும் நீ சரியாக உணரவில்லையே!" என்றார்.

"தவறா? எது தவறு?" சர் பிஹாரிலாலை அப்படியே அரைத்து விழுங்கி ஏப்பம் விட விரும்புபவர் போலப் பாய்ந்தார் நாத்பாபா. "கண்ணால் பார்த்ததையும் காதால் கேட்டதையும் நீ தவறு என்றா சாதிக்கிறாய்?" என்று அவர் கூவியபொழுது அந்த அறை முழுவதுமே கிடுகிடுத்தது.

"ஆத்திரப்படாதே, ரஷ்மி! நீ எதைக் கண்ணால் பார்த்தாய்? எதைக் காதால் கேட்டாய்? புரியும்படி விவரமாகச் சொல்லு!"

"என்ன பார்த்தேனா? உன் காதல் நாடகத்தைப் பார்த்தேன்! நீ புரிந்த காதல் கேளிக்கைகளைக் காதால் கேட்டேன். நான் காதால் கேட்டதை ஏழேழு பிறவி எடுத்தாலும் என்னால் மறக்க முடியாது. 'இந்தக் குழந்தையின் முகம் உன்னைப் போலிருந்தால் எப்படி இருக்கும்?' என்று சாந்தா உன்னைக் கேட்டாளே, அந்தச் சொற்கள் இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றன. ஒரு வேளை உனக்கு நினைவு இல்லையோ, என்னவோ?" என்றார் நாத்பாபா.

"சரியாகப் போயிற்று! அதையா சொல்கிறாய்? அதிருக்கட்டும், அந்தக் குழந்தையின் முகம் யாரைப் போலிருக்கிறது என்று நீ இப்பொழுதாவது கவனித்துப் பார்த்தாயா?"

"அப்படியானால் உன் முகத்தைப் போல் இல்லை என்றா சொல்லுகிறாய்?" என்று தயங்கியவாறே நாத்பாபா கேட்டார்.

"மனிதனுக்கு ஒரு பிரமை ஏற்பட்டு விட்டால் அது இலேசில் நிருவதில்லை. பொரிந்து வெடித்துப் பெயர்ந்து போன சுவரின் பாளங்களைக்கண்டு, தான் நினைக்கும் மனிதன் தான் நிற்கிறானே என்று சந்தேகிப்பான். அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று சொல்கிறார்களே, அது முற்றிலும் உண்மை. அந்தப் பழமொழியில் நம்பிக்கை இல்லாதவன் கூட உன் நிலையைப் பார்த்தபின் நம்பி விடுவான். ஏனெனில் உன் கதை அந்தக் கணக்காக இருக்கிறது. இதை நான் சொன்னால் உனக்கு மூக்குக்கு மேல் கோபம் வரும்!" என்று குத்தலாகப் பதில் அளித்தார் பிஹாரிலால்.

"என்ன? எனக்குப் பிரமையா?"

"ஆமாம்! இதில் சந்தேகம் வேறா? ஆனால் உனக்கு ஏற்பட்ட அந்தப் பிரமைக்குக் குற்றம் முழுவதையும் உன்மீதே சுமத்திவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை!"

"ஏன்? குற்றம் முழுவதும் என்னுடையது தான் என்றே சொல்லி விடேன்! உன்னை யார் எதிர்த்துக் கேட்கப் போகிறார்கள்?"

"அதற்காக நான் எதற்கு ஒரேயடியாகப் பொய் சொல்ல வேண்டும்? சாந்தா உண்மையில் என்னை நேசித்தாள்!"

"நீ மட்டும் அவளை நேசிக்கவில்லையாக்கும்?"

"இல்லை என்று சொல்ல எனக்கென்ன பைத்தியமா? என்னை நேசித்தவர்களை நானும் நேசித்தால் அதில் என்ன தவறு? ஆனால் நீ நினைப்பது போல எனது அந்த நேசம்......"

"அடிக்குப் பயந்து உளறுகிறவன் கதையாக இருக்கிறதே, நீ பேசுகிற பேச்சு! சாவு சமீபித்து விட்டதே என்ற பயத்தில் இம்மாதிரி எல்லாம் சாக்குப் போக்குச் சொல்லத் தோன்றுகிறதா? பேஷ், பேஷ்! நீ பலே கைகாரன் தான் அப்பா!" என்றார் நாத்பாபா. அவரது அச்சொற்களில் ஏளனமும் வெறுப்பும் வெடித்துக் கொண்டு வெளி வந்தன.

"ரஷ்மி! நான் சாவுக்குச் சிறிதும் அஞ்சவில்லை. வார்த்தைக்கு வார்த்தை விபரீதப் பொருள் கொள்ளவும் பேச்சுப் பிரமையில் உழன்று தவறான பாதையில் செல்லவும் நானும் என்ன நீயா? உன்னையும் என்னையும் ஒன்று சேர்க்க முயலாதே! உனக்கும் எனக்கும் ஏணி வைத்தாற் கூட எட்டாது. நீயோ பெரிய சந்தேகப் பிரகிருதி. கரம் பற்றிய மனைவி மேல் சந்தேகம்! உயிருக்குயிரான நண்பன் மேல் சந்தேகம்! அண்டை அயலார் மீது சந்தேகம்! ஊர், உலகம் எல்லாவற்றின் மேலுமே சந்தேகம்! உள்ளங்காலிலிருந்து உச்சந் தலை வரை ஒரே சந்தேகம்! உன்னைப் போல் எனக்கு இம்மாதிரி இல்லாத சந்தேகங்கள் எல்லாம் எழாது. உண்மையை உணராமல் அடிக்குப் பயந்து உளறுகிறவன் என்று குற்றம் சாட்டுகிறாயே! நான் எல்லோரையும் சம நோக்குடன் பார்ப்பவன். இன உணர்ச்சிக்கு இடம் அளிக்காமல் நான் சாந்தாவுடன் சம நோக்குடன்தான் பழகினேன். ஏன்? நீ சொல்லும் இந்தச் சாவையும்கூட நான் சம நோக்குடன் வரவேற்கிறவன். ஆகா! வாழ்க்கையின் அந்தக் கடைசிக் கணங்கள் எனக்கு எத்தனை இன்பமாகத் தோன்றுகின்றன, தெரியுமா?" என்றார் பிஹாரிலால்.

"இன்பமாகத் தோன்றுகின்றனவா? அப்படியானால் இப்பொழுதே உனக்கு அந்த இன்ப ரசத்தை அளிக்கிறேன்! ஆனந்தமாகப் பருகு! யாரும் கையைப் பிடித்துத் தடுக்க மாட்டார்கள். ஆனால் அதற்கு முன்னால் நான் கேட்கும் இரண்டொரு கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லிவிடு. உன் மகள் குஸுமாவை மனோஹருக்கு மணம் செய்து வைக்க உனக்குச் சம்மதமா, இல்லையா, சொல்!" என்றார் நாத்பாபா. (தொடரும்)



நீங்கள் இன்று
புரோடெக்ஸ்
உபயோகித்தீர்களா?
நீங்கள் நாள் முழுதும் புதுமையுடனும்
வாசனையுடனும் இருக்க, உயர்ந்த,
புதிய புரோடெக்ஸ் ஆல்-பர்பஸ் டாய்லட்
பவுடர். மென்மையும், நறுமணமும்
சேர்ந்த புரோடெக்ஸ் குடும்ப முழுதுக்கும்
வெப்பத்தில் குளுமையும்
இனிமையும் தருகிறது.
ஸ்நானத்துக்குப் பின்
வாசனைப் பூஷணம். ஈரத்தை
உறிஞ்சி புதுமை தருகிறது.
குளுமை! குதூகலம்!
கோடையின் கொடுமையில்
நேர்த்தியும் மென்மை!
யும்-குழந்தைக்கு ஏற்றது.
மிக எடுப்பானது
உங்கள் வதனத்தை அழகு
படுத்தும் பவுடர்.
புதிது!
PROTEX
All Purpose
TOILET POWDER
PROTEX
All Purpose
TOILET POWDER
புரோடெக்ஸ்
ஆல் பர்பஸ்
டாய்லட் பவுடர்
கால்கேட்டின் புதிய
சிறந்த தயாரிப்பு

மீண்டும் ஒரு கடிகாரம் இனாம்:

ஒரே தடவையில் ஏதாவது மூன்று கடிகாரங்கள் வாங்குபவர்களுக்கு ஒரு கைக் கடிகாரமும், இரண்டு கடிகாரங்கள் வாங்குபவர்களுக்கு ஒரு பாக்கெட் கடிகாரமும் ஒரு கடிகாரம் வாங்குபவர்களுக்கு ஒரு கோல்ட் கேப் பவுண்டன் பேனாவும் இனாமாக அளிக்கப்படும்

புகழ்பெற்ற ஸ்விஸ் தயாரிப்பு ஒவ்வொன்றும் 5 வருஷ உத்திரவாதம்

No. 288A
Size 8½"




17 ஜுவல்ஸ் பின் லிவர் குரோம் 42/-
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு 48/-

No. 71
Size 7½"



15 ஜுவல்ஸ் வளைவு ரோல்டு கோல்டு 37/-
15 ஜுவல்ஸ் டோனோ ரோல்டு கோல்டு 39/-

No. 9968 Size 10½"



15 ஜுவல்ஸ் சிறிய செகன்டு ரோ.கோ. 30/-
15 ,, சென்டர் செகன்டு ரோ.கோ. 33/-



பாக்கெட் கடிகாரம்
(அன்ஸோனியா)

சாதா டயல் 12/-
ரேடியம் டயல் 15/-
15 ஜுவல்ஸ் 35/-

NO. 500A
Size 10½"



15 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப் ரேடியம் 42/-
17 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப் ரேடியம் 48/-

No. 6042 Size 10½



சிறிய ரோல்டு கோல்டு பிராஜ் 22/-
ரோல்டு கோல்டு டைம்ஸ் 24/-

PIONEER WATCH CO., Post Box No. 11428, CALCUTTA - 6

பாதத்திலுள்ள புண்கள் நான்கு நாட்களிலேயே குணமாகின்றன

குத்து வலியும் நமைச்சலும் 7 நிமிஷங்களில் நிறுத்தப்படுகிறது

உங்கள் பாதங்கள் அதிகமாக வெறுப்படையுமாறு நமைச்சல் எடுக்கிறதா? வெடித்துக் காயமடைகின்றனவா? பாதங்களின் மேலும் விரல்களுக்கிடையிலும் கொப்பளித்து வெந்திருக்கிறதா? மேலும் கொப்புளங்களை உண்டாக்குகின்றனவா? ரத்தம் கசியும்படி பாதங்கள் புண்ணாகின்றனவா? இது ஏதோ கிருமி அல்லது தோலில் ஏற்படும் அழுகல் என்பதையும் இவற்றை ஒழித்தாலன்றி, உபாதைகளிலிருந்து விடுதலை பெற முடியாதென்பதையும் நீங்கள் உணர வேண்டும்.

மூலகாரணத்தையே அழிக்கிறது

களிம்புகளோ தைலங்களோ அதிக குணத்தை அளிப்பதில்லை. உபாதைக்கு மூல காரணத்தை அவை கொல்லுவதோ வெல்லுவதோ கிடையாது. அதிர்ஷ்டவசமாக, டாக்டர்கள் சிபார்சு செய்யும் நிக்ஸோடெர்ம் (Nixoderm) இருக்கிறது. ஒரு பிரபல ஆங்கில சரும நிபுணர் தயாரித்தது; பிரபல மருந்து வியாபாரிகளால் இறக்குமதி செய்யப்படுவது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) உங்கள் பாத உபாதையைப் போக்கிவிடும் என்பதற்கு உத்தரவாதம். அதன் மூன்று முக்கிய குணங்களாவன: (1) பாதங்களில் ஏற்படும் உபாதைக்கும், படைக்கு மூல காரணமான கிருமிகளையும், அவற்றை வளர்க்கும் இதர புழுக்களையும் கொன்றுவிடுகிறது. (2) நமைச்சலை நிறுத்தி சருமத்தை ஏழே நிமிஷங்களில் குளிர்வுறச் செய்து




இதமளிக்கிறது. (3) சருமத்தைச் சுத்தமாகவும் வழுவழுப்பாகவும் மிருதுவாகவும் செய்கிறது.

பரிசீலனைக்கு உத்தரவாதம்

இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். இன்றிரவே போட்டுப் பார்த்தால் மறு நாள் காலை அற்புதமான தேர்ச்சி ஏற்படும். நாலு நாட்களில் பாதத்தில் ஏற்படும் உபாதைகளும் தீர்ந்து விடும். சருமம் சுத்தமாகவும், வழுவழுப்பாகவும் மிருதுவாகவும் ஆகும். தொடர்ந்து மூன்று நாள் போட்டும் பாதங்களில் ஏற்படும் நமைச்சல், கொப்புளங்கள் குணமடையா விட்டால் நிக்ஸோடெர்ம் (Nixoderm) மதிப்பை இழந்ததாகிறது. இந்த உபத்திரவத்தின்பேரில் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். ஏழு நாட்களுக்கு நிக்ஸோடெர்ம் (Nixoderm) போட்டுப் பரீட்சை செய்து பாருங்கள். திருப்தி ஏற்படாவிடில் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்தால் பணத்தைத் திரும்பப் பெறுவீர்கள். உங்கள் மருந்து வியாபாரியிடம் இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதற்கு அளிக்கப்பட்டிருக்கும் உத்தரவாதமே உங்களைப் பாதுகாக்கும்.

BD 19



வைத்திய வசதி !

கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களின் குடும்பத்தினருக்கு ஆஸ்பத்திரியில் இலவச வைத்தியம் சர்க்காரில் செய்வதாகவும், வெளியில் பிரத்தியேகமாக டாக்டரிடம் காண்பித்தாலும், அந்த வைத்தியர் பில்லுடன், ஒரு சர்ட்டிபிகேட்டும் சேர்த்து அனுப்பினால் பணம் சர்க்கார் கொடுத்து விடுவார்கள் என்றும் அரசாங்க உத்தரவு இருக்கிறதாம்.

அதன்படி என் குழந்தைக்கு 'டிப்தீரியா' வந்து சேலம் ஜில்லாவில் உள்ள எடப்பாடியில் இருந்து ஈரோடு எடுத்துச் சென்று, ஒரு டாக்டரிடம் காட்டி ரூ. 200 செலவாயிற்று. மருந்து ரசீதும் டாக்டர் சர்ட்டிபிகேட்டும் வாங்கி அனுப்பினால் பணம் கொடுக்க மறுக்கிறார்கள். அரசாங்கம் அங்கீகரித்த வைத்தியரிடமே செல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் சர்க்கார் அங்கீகரித்த ஒரு டாக்டர் இருப்பதாகவும் அவரிடம் காட்டினால்தான் பணம் திருப்பிக் கொடுக்கப்படுமெனவும் பதில் வந்தது. உடல் நலமில்லை என்றால் அவரவர்கள் ஊரின் சமீபத்தில் உள்ள இடத்துக்கு எடுத்துச் செல்வார்களா? அல்லது சர்க்கார் அங்கீகரித்த டாக்டரைத் தேடிக்கொண்டு நோயாளியை எடுத்துச் செல்வார்களா! அதற்குள் நோயாளியின் நிலைமை என்ன ஆவது! சர்க்காரின் கண் துடைப்பு வேலைகளில் இதுவும் ஒன்று!

எடப்பாடி
3—3—55

ஒரு என். ஜி. ஓ. மனைவி

●

ஆரம்ப ஆசிரியர்கள் துயரம்

சில மைனர் பஞ்சாயத்து சபைத் தலைவர்கள் தங்களுக்குக் கீழ் உள்ள பஞ்சாயத்துச் சபைப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குப் புதிதாக நியமனம் கொடுக்கும்போது மேற்படி ஆசிரியர்களிடத்தில் வாய்ப்பேச்சு மூலமாகவே ஓர் உள் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். "ஓர் ஆண்டு வரையில் 25 + 19 என்று தான் சம்பளம் கொடுப்பேன்; ஆனால் நீர் சம்பளப் பட்டியலில் 30+19-க்குத் தான் கையெழுத்திட வேண்டும். ஓர் ஆண்டு முடிந்த பிறகு 30+19 என்று கொடுப்பேன். அதற்குச் சம்மதமா!" என்று கேட்டு, இந்த வாய்ப் பேச்சுக்கு உடன்பட்ட ஆசிரியர்களுக்கே நியமனம் கொடுக்கிறார்கள்.

வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வாடி வதங்கும் ஆரம்ப ஆசிரியர்கள், ஓர் ஆண்டு வரையில்தானே ஐந்து ரூபாய் பிடிபடும், பிறகாவது ரூ. 30+19 என்று கிடைக்காதா என்ற நம்பிக்கையில் வேலையை ஒப்புக் கொள்கிறார்கள்.

பிறகு ஓர் ஆண்டு சென்றதும் ஆசிரியர்கள் தலைவர்களிடம் "தாங்கள் சொன்ன பிரகாரம் இந்த ஜனவரியிலிருந்து 30+19 என்று முழுச் சம்பளமாகக் கொடுங்கள்" என்று கேட்டு விட்டாலோ அப்படிக் கேட்ட ஆசிரியர்களின் மீது பஞ்சாயத்துச் சபைத் தலைவர்கள் பலவித விபரீத குற்றங்களைச் சுமத்துகிறார்கள். அதோடு அவர்களுக்கு மூன்று மாத நோட்டீஸும் கொடுத்துப் பாடசாலையை விட்டு நீக்கி விடுகிறார்கள்.

சென்ற ஆண்டில் அரசாங்கம் இரண்டு மூன்று மைனர் பஞ்சாயத்துச் சபைகளுக்கு ஓர் நிர்வாக அதிகாரி வீதம் நியமிக்கப் போவதாகச் சட்டம் இயற்றியதை உடனே அமுலுக்குக் கொண்டு வந்தால், அநேக பஞ்சாயத்துச் சபைத் தலைவர்களால் அவதியுறும் ஏழை ஆரம்ப ஆசிரியர்களின் துயரம் தீரும் என்று துணிந்து கூறலாம்.

முதலைமடு
25—2—55

சா. தேவநாதன்

●

அமெரிக்க நெய்

அமெரிக்க நெய் இறக்குமதியானால் நம் கிராமங்களில் நெய் தயாரிக்கும் குடிசைத் தொழில் பாதிக்கப்படும் என்பது வியப்பல்லவா!

எங்கள் கிராமத்தில் சுமார் ஆறு மாதங்களுக்கு முன் நெய் படி ஒன்றுக்கு ரூ. 24 ஆக வாங்கினோம். எங்கள் தேவை அத்தனை அவசியமாக இருந்ததால் அந்த விலை கொடுத்தோம். இப்போது 12 ரூபாய். பாளையங்கோட்டைக்கு இரண்டரை ரூபாய் பஸ் செலவு கொடுத்துப் போனால் அங்கு நல்ல நெய் ரூபாய் ஐந்துக்குக் கிடைக்கிறது.

சில வேளைகளில் வெண்ணெயாக வாங்கி வீட்டில் உருக்கினால் மாவு இருக்கிறது மண்டியில்! சில வெண்ணெயில் கொழுப்பு கலந்திருக்கிறது. சிலவற்றில் டால்டா!

நம் நாட்டில் நெய் பற்றாக் குறையான ஒரு பொருள். அதனால்தான் இந்த அநியாய விலையும் கலப்படமும். நெய் சத்து நிரம்பியது. சத்துள்ள பொருள் சாப்பிடாததால் நிறைய வியாதிகள் வருவதாக வைத்திய வல்லுநர்கள் கூறுகிறார்கள். எட்டாதபடி நெய் விலையாயிருந்தால் ஏழைகளும் மத்தியதர வகுப்பாரும் எப்படி வாங்க முடியும்!


அமெரிக்க நெய் நம் நாட்டு நெய்யைவிட எத்தனையோ மடங்கு சிறந்ததாக இருக்கும். அமெரிக்க பசுக்களையும் நம் நாட்டு பசுக்களையும் ஒரே ரகம் என்று சொல்லி விடுவோமா! புல் வெளிகளில் மனம் போல் மேய்ந்து கொழுகொழுவென 10, 12 படி கறக்கும் மாடுகளின் பாலில் எடுக்கும் வெண்ணெய் எங்கே! விலா எலும்புகளை எண்ணும்படி, நடக்கவும் முடியாது, காய்ந்த தட்டைகளையும் தண்ணீரையும் குடித்து உயிரை வைத்துக் கொண்டு அரைப் படி, கால் படி கறக்கும்மாடுகளின் பாலிலுள்ள வெண்ணெய் எங்கே!

ஏராளமாக நெய் இறக்குமதியானால் நம் நாட்டு நெய்யும் நியாயமான விலைக்குக் கலப்படமில்லாமல் கிடைக்கும். இறக்குமதி நெய்யும் குறைந்த விலைக்கு—எல்லாரும் வாங்கக் கூடிய விலைக்கு—கிடைக்கும்.

சர்க்கார் அமெரிக்க நெய்யை இறக்குமதி செய்ய உத்தேசித்திருப்பது சந்தோஷப்பட வேண்டிய விஷயம். அது ஒன்றும் கவலை தரும் பிரச்னையல்ல.

முதலூர்
1-3-55

சி. ஜெயபால்



கோவிந்தனும்,

கோவிந்தனும், வீரப்பனும் அண்டை வீட்டுக்காரர்கள். வாழ்க்கை நிலைமையில் ஏறக்குறைய எல்லா விஷயங்களிலும் அவர்கள் ஒத்திருந்தார்கள்.

கோவிந்தனுக்குப் பருத்தி ஆலையில் வேலை; வாரம் ஆறரை ரூபாய் சம்பளம். வீரப்பனுக்கு ரயில்வே ஒர்க்ஷாப்பில் வேலை; அவனுக்கு வாரம் ஏழு ரூபாய் சம்பளம். மனைவியும் இரண்டு குழந்தைகளும் கோவிந்தனுக்கு உண்டு, வீரப்பனுக்கும் அப்படியே. கோவிந்தன் வாரத்துக்கு முக்கால் ரூபாய் வாடகை கொடுத்து ஐந்தாறு குடித்தனங்கள் உள்ள ஒரு சின்ன அறையில் குடியிருந்தான். வீரப்பன் இதேமாதிரி அடுத்த வீட்டில் குடியிருந்தான்.

ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் இருந்தது. வீரப்பன் ஒர்க்ஷாப்பிலிருந்து வீட்டுக்கு வரும் வழியில் ஒரு சாராயக் கடை உண்டு. அவன் அந்தக் கடை வழியாகத்தான் வீட்டுக்கு வருவது வழக்கம். கோவிந்தன் ஆலையிலிருந்து வரும் வழியிலும் கள்ளுக்கடை, சாராயக் கடை, பீர்க்கடை எல்லாம் உண்டு. ஆனால் அவன் குறுக்கு வழியாகச் சந்து பொந்துகளில் புகுந்து வீட்டுக்கு வருவது வழக்கம்.

இந்தச் சிறு வித்தியாசத்தினால் அவர்களுடைய வாழ்வு முறையில் சேர்ந்த பெரும் வேற்றுமையைச் சொல்கிறேன், கேளுங்கள்.

சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்குக் கோவிந்தனுக்கு ஆலையில் சம்பளம் கொடுத்தார்கள். ரூபாய் ஆறரையும் அவன் வாங்கிப் பத்திரமாய் முடி போட்டுக் கொண்டு குறுக்கு வழியாக வீடு வந்து சேர்ந்தான். அவன் மனைவி சுந்தரமும், மகன் நடராஜனும் சந்தோஷத்துடன் அவன் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். நடராஜன் திம் திம் என்று குதித்துக் கொண்டு "அப்பா! சமுத்திரம் பார்க்கப் போக வேண்டும். சமுத்திரம் பார்க்கப் போக வேண்டும்" என்று கூச்சலிட்டான்.

பிறகு கோவிந்தனும் அவன் மனைவியும் உட்கார்ந்து கணக்குப் பார்த்தார்கள், பின் வருமாறு செலவு ஜாபிதா போட்டார்கள்:


	ரூ.	அ.	பை.
வீட்டு வாடகை	0	12	0
அரிசி	1	8	0
பருப்பு, உப்பு, புளி சாமான்கள்	0	8	0
மோரும், நெய்யும்	0	8	0
எண்ணெய்	0	4	0
கறிகாய் முதலிய சில்லறைச் செலவுகள்	0	8	0
	4	0	0

வழக்கமாக சேவிங்ஸ் பாங்கியில் போட்டு வந்த முக்கால் ரூபாயையும் சேர்த்து ரூ. 4-12-0 தனியாக எடுத்து வைத்தார்கள்.

பாக்கி செலவு செய்வதற்கு ரூ. 1-12-0 கையில் இருந்தது.

"சரி, சமுத்திரக் கரைக்குப் போகலாம், புறப்படு!" என்றான் கோவிந்தன்.

சுந்தரம் மகனுக்குச் சொக்காயெல்லாம் போட்டு





வீரப்பனும்

கல்கி

நெற்றியில் பொட்டு வைத்தான். தானும் முகம் கழுவிக் கண்ணாடி பார்த்துக் குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டாள். பிறகு கைக் குழந்தைக்குக் கம்பளிச் சட்டை போட்டு இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு கிளம்பினான். வழியில் கோவிந்தன் காலணாவுக்குப் பெப்பர்மிண்ட் வாங்கித் தன் அருமை மகனுக்குக் கொடுத்தான்.

கடற்கரையில் காற்று வாங்கப் பெரிய பெரிய மனிதர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். ஆனால் பெரிய மனிதர், சின்ன மனிதர் எல்லாருக்கும் ஒரே காற்றுதான் அடித்தது. கோவிந்தனும் சுந்தரமும் அலையோரத்தில் உட்கார்ந்து ஆனந்தமாய் அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். மோட்டாரில் வந்தவர்களை விட இவர்கள் அனுபவித்த இன்பந்தான் அதிகமென்று சொல்லலாம். நடராஜன் துள்ளிக் குதித்து விளையாடினான். அலைமோதிக்கொண்டு வரும்போது கரைக்கு ஓடுவதும், அலை திரும்பிச் செல்லும்போது அதைப் பிடிக்க ஓடுவதும் அவனுக்குச் சலிக்காத அற்புதமான விளையாட்டா யிருந்தது.

இந்த சமயத்தில் தூரத்தில் பட்டாணிக் கடலை முறுக்கு விற்பவன் போய்க் கொண்டிருந்தான். நடராஜன் ஓடிச் சென்று அவனை அழைத்து வந்தான். அரையணாவுக்கு முறுக்கும் முக்காலணாவுக்குக் கடலையும் வாங்கினார்கள். நடராஜனுக்குத் தலைகால் தெரியவில்லை. திரும்பி வீடு போய்ச் சேரும் வரையில் தனக்குக் கிடைத்த பங்கைத் தின்று கொண்டிருந்தான்.

பொழுது போனதும் அவர்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள். மத்தியானமே சமைத்து வைத்திருந்த சாப்பாடு தயாரா யிருந்தது. எல்லாரும் சாப்பிட்டு விட்டுக் கவலையின்றித் தூங்கினார்கள். கடற்கரைக்குப் போய் வந்ததற்காகக் கோவிந்தனுக்கு ஆன செலவு மொத்தம் ஒன்றரை அணாத்தான்.

மறு நாள் ஞாயிற்றுக் கிழமை காலையில் எழுந்ததும் இன்றைக்கு என்ன செய்யலாமென்று யோசித்தார்கள். பீபிள்ஸ் பார்க்குக்குப் போக வேண்டுமென்று தீர்மானமாயிற்று. சுந்தரம் அவசரம் அவசரமாய்ச் சமையல் செய்தாள். கோவிந்தன் மார்க்கெட்டுக்குப் போய்க் கறிகாய் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விட்டு வேஷ்டி சொக்காய்களுக்குச் சவுக்காரம் போட்டுத் துவைத்தான். பிறகு குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தான். நடராஜன், வீட்டில் போடுவதற்கு வாத்தியார் கொடுத்திருந்த கணக்குகளைப் போட்டான்.

எவ்வளவோ அவசரப்படுத்தியும் கிளம்புவதற்கு மணி ஒன்றாகி விட்டது. சுந்தரம் சிற்றுண்டிக்காகக் கொஞ்சம் அப்பம் செய்து ஒரு பொட்டலத்தில் கட்டி எடுத்துக் கொண்டாள். புரசைவாக்கம் வரையில் அவர்கள் நடந்து சென்று அங்கிருந்து டிராம் வண்டியில் போனார்கள். மாலை நாலு மணி வரையில் பீபிள்ஸ் பார்க்கைச் சுற்றிச் சுற்றி வேடிக்கை பார்த்தார்கள். நடராஜனுக்குக் குரங்குகளை விட்டுப் பிரிந்து வருவதற்கு மனமே இல்லை. மூர்மார்க்கெட்டில் காதல்



வாங்கித் தருவதாய்ச் சொன்னதின் பேரில் தான் அவன் வந்தான்.

இது வரை டிராம் சத்தம் ஒன்றரையணாவும், பீபிள்ஸ் பார்க் டிக்கட் மூன்றணாவும் ஆக நாலரை அணா செலவாகி யிருந்தது. மூர்மார்க்கெட்டில் அவர்கள் பின் வரும் சாமான்கள் வாங்கினார்கள் :—

கோவிந்தனுக்குப் பித்தளை டிபன் பாக்ஸ்	0	11	0
சுந்தரத்துக்கு ஒரு தந்தச் சீப்பு	0	2	6
நடராஜனுக்கு ஒரு ஊதலும் ஒரு பெல்டும்	0	3	0
குழந்தைக்கு ஒரு ரப்பர் பொம்மை	0	2	6

சாயங்காலம் ஐந்து மணிக்கு அவர்கள் வீடு போய்ச் சேர்ந்தார்கள். போகும்போது டிராம் சத்தமும் சேர்ந்து ரூ. 1-9-0 செலவாயிற்று. நேற்று 1½ அணா செலவழிந்தது. ஆக ரூ 1-10-6 போக, பாக்கி நின்ற 1½ அணாவை ஒரு சிமிழில் போட்டு வைத்தார்கள், சுந்தரத்துக்குச் சேலை வாங்குவதற்காக. இந்த மாதிரி ஏற்கெனவே ரூ 2-8-0 வரையில் சேர்ந்திருந்தது.

மறு நாள் திங்கட்கிழமை காலையில் சுந்தரம் புதிய தந்தச் சீப்பினால் தலையை வாரி முடிந்து, நெற்றியில் குங்குமம் இட்டுக் கொண்டாள். சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டு சுறுசுறுப்பாக வீட்டுக் காரியங்களைச் செய்தாள். ஏழரை மணிக்குள் கோவிந்தனுக்குச் சோறு போட்டு மத்தியானத்துக்கும் பலகாரம் பண்ணிக் கொடுத்தாள். கோவிந்தன் ஸ்நானம் செய்து, சுத்தமான வேஷ்டியும் சொக்காயும் அணிந்து



"கோடி வீட்டிலே கிழிசல் துணி ஒண்ணு கொடுத்தாங்க......"
"அதற்கு என்னை என்ன பண்ணச் சொல்கிறாய்? அதைத் தைத்துக் கொடுக்கச் சொல்கிறாயா?"

புதிய டிபன் பாக்ஸைக் கையில் எடுத்துக் கொண்டு உற்சாகத்துடன் ஆலைக்குப் புறப்பட்டான். நடராஜன் இடுப்பில் புதிய பெல்ட் போட்டு அதில் ஊதலைத் தொங்க விட்டுக் கொண்டு குதூகலத்துடன் பள்ளிக்கூடம் கிளம்பினான். குழந்தை கையில் ரப்பர் பொம்மையை வைத்துக் கொண்டு ஆனந்தமாய் விளையாடிக் கொண்டிருந்தது.

* * *

இனி, அடுத்த வீட்டில் வீரப்பனுடைய குடும்பத்தார் சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமையை எப்படிக் கழித்தார்களென்று பார்ப்போம்.


சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு வீரப்பனுக்கு ஏழு ரூபாய் கிடைத்தது. அவன் அதை வாங்கி அலட்சியமாய்த் தன் கந்தல் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். வழியில் பீர்க் கடையைக் கண்டதும் ஒரு நிமிஷம் நின்று தயங்கினான். அப்போது உள்ளிருந்து ஒருவன் "அண்ணே! ஏன் நிற்கிறாய்? வா!" என்றான். வீரப்பன் கடைக்குள் நுழைந்தான்.

முதலில் ஒரு சீசா குடித்து விட்டுக் கிளம்பி விடலாமென்று நினைத்தான். ஆனால் ஒரு சீசா குடித்ததும் இன்னொரு சீசா குடித்தால் தான் தாகம் தணியுமென்று தோன்றிற்று. ஆனால் தடுத்துக் கொண்டான். ஒரு ரூபாய் கொடுத்துச் சில்லறை கேட்டான்.

சில்லறை கொடுக்கச் சற்று நேரமாயிற்று. இதற்குள் சில சிநேகிதர்கள் வந்தார்கள். அவர்கள் குடிக்கும் போது, தான் சும்மா யிருக்கக் கூடாதென்று இன்னொரு சீசா கேட்டான். அதையும் குடித்த பிறகு "இன்று இரண்டு சீசா பீர் குடித்தாகி விட்டது. நாளைக்கு வரக் கூடாது. ஆகையால் சாராயக் கடையில் ஒரு டிராம் வாங்கிக் குடித்து விடலாம்" என்று யோசித்து அப்படியே சாராயக் கடைக்குப் போனான். ஒரு டிராம் வாங்கிக் குடித்து விட்டுப் பிறகு இன்னொரு அரை டிராம் போடச் சொன்னான். கடைக்காரன் கொடுத்த சில்லறையில் ஒரு அரைக்கால் ரூபாய் செல்லாப் பணம். வீரப்பனுக்குப் போதை நன்றாக ஏறி யிருந்தபடியால் அது தெரியவில்லை. கடைக்காரன் கொடுத்த சில்லறையை எடுத்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். அவற்றில் நல்ல இரண்டணா ஒன்று சட்டைப் பையில் விழாமல் தரையில் விழுந்தது. அதை அவன் கவனிக்கவில்லை. ஆகவே, சாயங்காலம் ஆறு மணிக்கு நல்ல பணம் ரூ. 5-12-0-ம், செல்லாப் பணம் இரண்டணாவும் எடுத்துக் கொண்டு அவன் வீடு போய்ச் சேர்ந்தான்.

வீட்டில் அரிசி, பருப்பு சாமான் ஒன்றும் கிடையாது. அன்று காலைச் சாப்பாட்டுக்கே நாகம்மாள் அரிசி கடன் வாங்கிச் சமைத்திருந்தாள். எனவே மிகுந்த எரிச்சலுடன் அவள் வீரப்பன் வரவுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். வந்ததும் சண்டை பிடிக்கத் தொடங்கினாள். வீரப்பன் தன்னிட

குறைந்த செலவில் நெடுநாள் உழைக்கும் வசீகரமான காங்கிரீட் வீடுகள்



காங்கிரிட்டினால், விசாலமானதும், வாழ்க்கை வசதிகளுடன் வேலை மேம்பாடுடைய வீடுகளை கட்டி. அடிக்கடி செப்பனிட வேண்டிய தொல்லை இல்லாது. குறைந்த வருடாந்தரச் செலவில் வீட்டு வசதியைப் பெறுங்கள்.

நீலகிரி பிராண்ட்

இந்த புகழ்பெற்ற ஏ சி சி சிமெண்ட் காலமெனும் சோதனையில் தேறியது.

ஏ சி சி

தி சிமெண்ட் மார்க்கடிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்.

9, மௌண்ட் ரோடு, மதராஸ். 4/12, ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர். [illegible] கம்பெனி பில்டிங், பங்களூர்.



"போன தடவை நீங்க செய்த ஒரே வித்தையில் எல்லோரும் மறைந்து போய் விட்டார்களாமே! அடுத்த வித்தைக்கு யாருமே இல்லையாமே...!"

யிருந்த பணத்தை அவள் முகத்தில் வீசி எறிந்து விட்டுத் தானும் கூச்சல் போட்டான். அவர்கள் மகன் ராமன் ஏழு வயதுப் பையன், பயந்து வாசல் புறம் ஓடிப்போனான்.

நாகம்மாள் அதற்குப் பிறகு கடைக்குப் போய்ச் சாமான் வாங்கிக் கொண்டு வந்து சமையல் செய்தாள். சாப்பிட்டு முடிய இரவு பத்து மணியாயிற்று. இன்னும் அரை மணி நேரம் அவர்கள் காட்டுப் பூனைகள் போல் சண்டை போட்டுக் கொண்டிருந்து விட்டுத் தூங்கிப் போனார்கள்.

* * *

மறுநாள் காலையில் கறிகாய் வாங்கி வருவதற்காக வீரப்பன் பணம் கேட்டான். நாகம்மாள் செல்லாப் பணம் இரண்டணாவைக் கொண்டு வந்து கொடுத்தாள். வீரப்பன் உடனே சண்டை பிடிக்கத் தொடங்கினான். முதல் நாள் இரவு கடை சாமான் வாங்கியபோது நாகம்மாள் ஏமாந்து செல்லாப் பணம் வாங்கி வந்திருக்க வேண்டும் என்று சொன்னான். "குடி வெறியில் நீதான் வாங்கிக் கொண்டு வந்தாய்" என்றாள் நாகம்மாள். இந்தச் சண்டையின்போது ராமன் நடுவில் வந்து, "கோட்டு பென்சில் வேண்டும்" என்றான். அவனுக்கு ஒரு அறை கிடைத்தது. நாகம்மாள் போட்டிக்குக் கைக் குழந்தையை அடித்தாள். ஏக ரகளையாயிற்று. வீரப்பனுக்கு வேஷ்டி துவைக்க நேரங் கிடைக்கவில்லை.

இத்தனை தொந்தரவுகளுக் கிடையில் நாகம்மாள் சமைத்தபடியால் குழம்புக்கு உப்புப் போட மறந்து போனாள். சாப்பிடும் போது வீரப்பன் குழம்புச் சட்டியைத் தூக்கி நாகம்மாள் மேல் எறிந்தான். அது குழந்தை மீது விழுந்தது. மறுபடியும் ரணகளந்தான்.

இன்று பீர்க் கடைக்குப் போக வேண்டாமென்று முதல் நாள் தீர்மானித்திருந்தான். ஆனால் மாலை மூன்று மணி ஆனதும் இந்தத் தொல்லைகளையெல்லாம் மறந்து சற்று நேரம் "குஷி"யாக இருந்து வரலாமென்று தோன்றிற்று. ஆகவே முழு ரூபாய் ஒன்று எடுத்துக் கொண்டு கிளம்பினான். சாராயக் கடையைத் தேடிச் சென்றான்.

சாராயக் கடையில் பன்னிரண்டணா தொலைந்தது. அடுத்த சந்தில் சூதாடும் இடம் ஒன்று உண்டு. வீரப்பன் அங்கே போனான். பாக்கி நாலணாவையும் தொலைத்தான். இருட்டிய பிறகு வீட்டுக்குக் கிளம்பினான். வழியில் குடிமயக்கத்தில் விளக்குக் கம்பத்தில் முட்டிக் கொண்டான். வீட்டுக்குப் போனதும் படுத்துத் தூங்கிப் போனான்.

நாகம்மாள் சாயங்காலமெல்லாம் ஒரு மூலையில் படுத்து அழுது கொண்டிருந்தாள். இரவு சமைக்கவில்லை. ராமன் மற்ற பிள்ளைகளுடன் தெருவிலும் சாக்கடையிலும் விளையாடி விட்டு இரவு ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்தான். நாகம்மாள் மத்தியானம் மீதியிருந்த சோற்றை அவனுக்கும் போட்டுத் தானும் சாப்பிட்டாள். அவள் தன் கணவன் வீரப்பனை எழுப்பிச் சோறு போடவில்லை.

* * *

திங்கட் கிழமை காலையில் வீரப்பனுக்குத் தலை நோவு பலமாயிருந்தது. புருவம் வீங்கி ஒரு கண் மூடிப் போயிற்று. முணுமுணுத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான். நாகம்மாள் மெதுவாகத்தான் எழுந்திருந்தாள். முதல் நாள் அழுது அழுது இப்பொழுது அவள் முகம் பார்க்க முடியாத கோரமாயிருந்தது. தலைமயிர் ஒரே பரட்டை. முனகிக் கொண்டே குழம்பும் சோறும் செய்தாள். வீரப்பன் அவசரம் அவசரமாய் அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு மத்தியானச் சோற்றுக்காகச் சண்டை போட்டு இரண்டணா எடுத்துக் கொண்டு அழுக்குச் சட்டையும் கந்தல் வேஷ்டியுமாக ஓடினான்.

ராமனுக்கு அன்று காலை இரண்டு மூன்று தடவை அடி விழுந்திருந்தது. கணக்குப் போடவில்லையாகையால் பள்ளிக்கூடத்துக்கும் போய் அடிபட வேண்டுமே யென்று அவன் கண்ணைக் கசக்கிக் கொண்டே பள்ளிக்கூடம் புறப்பட்டான்.

கைக் குழந்தையைக் கவனிப்பார் யாருமில்லை. படுத்து அழுது கொண்டிருந்தது.


வீரப்பன் மட்டுமில்லை. அவனைப் போன்ற எத்தனையோ ஏழைத் தொழிலாளிகளின் வாழ்க்கை கள்ளு, பீர், சாராயக் கடைகளினால் பாழாகியதுண்டு.

(ராஜாஜி நடத்திய
'விமோசனம்' பத்திரிகையிலிருந்து)

Printed and Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram


ஒவ்வொரு தினமும் நீங்கள் அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத் துக்குள்ளாகலாம்.
இந்தக் கிருமிகளை லைப்பாய் சோப்பினால் கழுவிக்களைந்து தினமும் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.
லைப்பாயின் ''பாதுகாக் கும் நுரை'' உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றுகிறது.
லைப்பாய்
சோப்
தினசரித் தொல்லையான அழுக்கிலிருக்கும் கிருமிகளி லிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.
LIFEBUOY SOAP
LIFEBUOY SOAP
இந்தியாவில் தயாரித்தது.
L. 251-50 TM

REGISTERED NO. M. 4392
Registered as newspaper in Ceylon





வாரம் ஒரு அணா செலவிற்கு பற்களுக்கு முழுப் பாதுகாப்பளிக்கிறது!

சாம்பல், கரிபோன்ற கரக்ரப்பான பொருள்கள் பற்களில் கீறல் விழச் செய்கின்றன. இந்த கீறல் வழியாக பாக்டீரியா புகுந்து கெடுதல் விளைவிக்கிறது. பற்கள் பூரண ஆரோக்கியத்தோடு இருக்க விஞ்ஞான முறையில் தயாரித்த ஒரு பல் துலக்கும் வஸ்து உங்களுக்குத் தேவை. ஆகையால் கிப்ஸ் டென்டிபிரிஸ் வாங்குங்கள். பற்களுக்கு பூரண ஆரோக்கியத்தைத் தரும் எல்லா பொருள்களையும் ஒன்று சேர்த்து கெட்டியாகச் செய்ததுதான் கிப்ஸ். அன்றியும் ஒரு டூத்பேஸ்ட் செய்யும் எல்லா வேலைகளையும் அதன் பாதி விலைக்குச் செய்கிறது. இதை உபயோகிப்பது மிகவும் சுலபம். புரஷையோ அல்லது விரலையோ தண்ணீரில் நனைத்துக் கொண்டு கட்டியின்மேல் தேய்க்கவும். அதன் சுவையை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள். அன்றியும் அதன் மிருதுவான ஊடுருவிப்பாயும் நுரை உங்கள் பற்களை பளிச்சென்று வெண்மையாக இருக்கச்செய்யும்!



உங்களுக்குப் பிரியமான கிப்ஸின் க்ளோரோபில் சேர்ந்திருக்க விரும்பினால் கிப்ஸ் க்ளோரோபில் டென்டிபிரிஸ் கேளுங்கள். எல்லா இடங்களிலும் விற்கப்படும் வெள்ளை டப்பாவில் பெயரை கவனித்து வாங்குங்கள்.



நீலம், சிவப்பு, பச்சை டப்பிகளில்

கிப்ஸ் டென்டிபிரிஸ்

GD. 37-50 TM டீ அன்ட் டபிள்யூ. கிப்ஸ் லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.